T. 4807

# தமிழ்க்கலை

தமிழியல் காலாண்டு ஆய்விதழ்

தமிழ் 7, கலை 1, 2 மார்ச்சு, சூன் 1989

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் — 613 001
தமிழ்நாடு — இந்தியா

# பொருளடக்கம்


தமிழ்-தமிழ் அகராதி அமைப்பு
- மு. சண்முகம் பிள்ளை 1

சதுரகராதியின் சிறப்புக் கூறுகள்
- சூ. இன்னாசி 12

பாவாணர் நோக்கில் சொற்பிறப்பியல் அகரமுதலி
- இரா. மதிவாணன் 21

தமிழில் சிறப்பகராதிகள்
- மு. சதாசிவம் 30

பயிற்றகராதி
- சு. இராசாராம் 35

இடப்பெயர்த் தொகுப்புகள் (பட்டியல்கள், அகராதிகள்)
- கி. நாச்சிமுத்து 44

தொல்காப்பிய உரியியல்: ஓர் அகராதியியல் கண்ணோட்டம்
- க. பாலசுப்பிரமணியன் 56

அகராதித் தொகுப்பில் எழும் சில சிக்கல்கள்
- பா.ரா. சுப்பிரமணியன் 66

அகராதிச் சொற்கள்
- பெ. மாதையன் 74

பலபொருள்சொற்கள் - பொருள்தன்மையும் பெயர்ப்பன்மையும்
- எச். சித்திரபுத்திரன் 88

சோழர்காலக் கல்வெட்டுகளில் புதிய சொற்களும் அகராதியும்
- சி. கோவிந்தராசனார் 98

பெரியபுராணச்சிறப்புப் பெயரகராதியில் ஒரு பதிவு
- தா.வே. வீராசாமி 108

தொகுப்பியலில் வைணவச் சொற்கள்
- சு. வேங்கடராமன் 115

அகரா்தியில் மீட்டுருவம் - ஒரு குறிப்பு
- வ.அய். சுப்பிரமணியம் 123

கூட்டுவினைகளும் பொருண்மையும்
- ஆ. கார்த்திகேயன் 127

அகராதிப் பணியில் சில மொழிபெயர்ப்புச் சிக்கல்கள்
- அ.அ. மணவாளன் 132

மானுடவியல் மொழிபெயப்புச் சொற்களை அகரவரிசைப் படுத்தும்போது நேரும் சிக்கல்கள்
- க.ப. அறவாணன் 140

அக்ராதி ஆக்கப்பணியில் கணிப்பொறி
- கா.செ. செல்லமுத்து 146

தமிழக வரலாற்று உருவாக்கம் _ சில சிந்தனைகள்
_ கு.வெ. பாலசுப்பிரமணியன் 156

## கட்டுரையாளர்கள்

க.ப. அறவாணன்
தமிழியல் துறைத்தலைவர்
புதுவை மையப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி.

ச். இராசாராம்
இணைப் பேராசிரியர்
அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சூ. இன்னாசி
பேராசிரியர்-தலைவர்
கிறித்துவத் தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஆ. கார்த்திகேயன்
விரிவுரையாளர்
அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பேராசிரியர் சி. கோவிந்தராசனார்
கரந்தை
தஞ்சாவூர்.

மு. சண்முகம் பிள்ளை
தமிழ்ப் பேராசிரியர்
சென்னை.

மு. சதாசிவம்
தமிழ்ப் பேராசிரியர்
வாசவிக் கல்லூரி
ஈரோடு.

எச். சித்திரபுத்திரன்
விரிவுரையாளர்
தொகுப்பியல்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

வ.அய். சுப்பிரமணியம்
முன்னைத் துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பா.ரா. சுப்பிரமணியன்
பதிப்பாசிரியர்
க்ரியா வெளியீட்டகம்
சென்னை.

கா.செ. செல்லமுத்து
பேராசிரியர்
கணிப்பு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கி. நாச்சிமுத்து
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
கேரளப் பல்கலைக்கழகம்
காரியவட்டம்
திருவனந்தபுரம்.

க. பாலசுப்பிரமணியன்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

கு.வெ. பாலசுப்பிரமணியன்
இணைப் பேராசிரியர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

அ.அ. மணவாளன்
இணைப் பேராசிரியர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

இரா. மதிவாணன்
அகர முதலித்திட்ட இயக்ககம்
சென்னை.

பெ. மாதையன்
விரிவுரையாளர்
தொகுப்பியல்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தா.வே.வீராசாமி
பேராசிரியர் - தலைவர்
தொகுப்பியல்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சு. வேங்கடராமன்
இணைப் பேராசிரியர்
தமிழியல்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

தமிழ்க் கலை
தமிழ் 7, கலை 1, 2

# தமிழ்-தமிழ் அகராதி அமைப்பு

மு. சண்முகம்பிள்ளை

**முதல் தமிழ்-தமிழ் அகராதி** : தமிழ்ச் சொற்களுக்குத் தமிழிலேயே பொருள் விளக்கம் தரும் அகராதியை 'ஒரு மொழி அகராதி' என்பர். தமிழோடு பிறமொழிகளிலும் விளக்கம் தரும் அகராதிகள் 'இருமொழி அகராதி', 'பன்மொழி அகராதி' என்று வழங்கப்படும். பிறமொழியாளரும் பயன்படுத்தும் வகையில் அமைக்கப் பெற்ற இருமொழி அகராதிகள் ஒருமொழி அகராதிக்குப் பின்னரே தோற்றமாயின. முதல் முதலாகத் தமிழில் பிறந்த ஒருமொழி அகராதி வீரமாமுனிவர் எனப் போற்றப்பெறும் பெஸ்கி பாதிரியார் தொகுத்து அளித்த சதுரகராதியே. இது கி.பி. 1732-இல் முனிவர் இயற்றி முற்றுவித்த போதிலும் கி. பி. 1824-இல் தான் முழுமையும் அச்சுருப்பெற்று வெளிவந்தது.

**உரைநடை அகராதி** : வீரமாமுனிவர் உரைநடையில் அகராதியை அமைப்பதற்குமுன் சொற்பொருள் விளக்கத் தமிழில் வழிவழி வந்த கருவி நூல்கள் உரிச்சொற்பனுவல் எனப்பெற்ற நிகண்டு நூல்களாம் திவாகரம், பிங்கலம், உரிச்சொல் நிகண்டு, பாரதி தீபம், கயாதரம், அகராதி நிகண்டு, சூடாமணி நிகண்டு முதலியனவாகப் பல நிகண்டுகள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டுத் தொடக்கமாகப் பல்வேறு காலங்களில் வெளிவந்தன. இவையெல்லாம் நூற்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம் முதலிய பா வகைகளில் அமைந்து காணப்படுகின்றன. சொற்பொருள்களையெல்லாம் ஒரே இடத்தில் தொகுத்துத் தராமல் பல்வேறு தொகுதிகளாக அவை பாகுபடுத்தப் பெற்றிருக்கின்றன. மேலும் பாடல் வடிவில் தரப் பெற்றுள்ள சொற்பொருள் விளக்கங் களைப் பிரித்து அறிதலும் எளிதாயிருக்கவில்லை. இத்தகு சிரமமின்றிச் சொற்களை எல்லாம் அ, ஆ, முதலிய நெடுங்கணக்கு வரிசையில் அமைத்துப் பொருள்தரும் உரைநடை அகராதி பிறந்தது.

**சதுரகராதி விளக்கம்** : வீரமாமுனிவர் தாம் தொகுத்த உரைநடை அகராதிக்குச் 'சதுரகராதி' என்று பெயர் சூட்டினார். காரணம் இந்த அகராதி பெயரகராதி, பொருளகராதி, தொகையகராதி, தொடையகராதி என நான்கு பகுதிகளாக அமைக்கப்பட்டிருப்பதுதான். நிகண்டுகளில் பல்வேறு தொகுதிகளில் விவரிக்கப்பட்டிருந்த பொருள்களை

வகைப்படுத்தி முனிவர் நான்கு கூறாக அமைத்தார்.

திவாகரம் முதலிய நிகண்டுகளில் தெய்வப்பெயர் முதலாக வகுத்துரைத்த பத்துத் தொகுதிகளில் காணும் பொருள்களைத் தொகுத்துப் 'பொருளகராதி' என அமைத்தார். பதினொன்றாம் தொகுதி ஒரு சொற் பல பொருள் சுட்டும் பகுதியாய் அகராதிகளின் தன்மை படைத்துக் காணப்படுகிறது. இத்தொகுதியுள் காணப்பட்ட சொற் பொருள்களைப் பெயரகராதி என முதற்கண் அமைத்தார். இப்பகுதியில் தான் எல்லாச் சொற்களின் பொருளும் நிரம்பிக் காணப்படும். எனவே இப்பகுதிதான் ஒரு மொழி அகராதிகளுக்கு எல்லாம் அடிப்படையாகியது. பதினொன்றாம் தொகுதியில் எதுகைத் தொடையாகக் காணப்பெற்ற பெயர்களைத் தொகுத்துத் ' தொடை அகராதி' என அமைத்தார். பன்னிரண்டாம் தொகுதியாகிய பல்பொருள் கூட்டத்து ஒருபெயர் என்னும் தொகுதியில் விவரிக்கப்பட்ட தொகைப் பொருள்களைத் தொகை அகராதியாக அமைத்துள்ளார். 1876-இல் வெளிவந்த சதுரகராதிப் பதிப்பில், 'அச்சிற் பதிப்பின் வரலாறு' என்னும் பகுதியில், "இரேவணாத்திரியர் ஒரு பொருட் பெயர், இருபொருட்பெயர் முதலாக முறை தெரிந்து இங்ஙனம் நூற்பாவாற் செய்த பெயரகராதி போலாது யாவர்க்கும் விளங்கச் சொற் சொல்லாகத் தமிழ்ப் பெருங்கடற்கோர் மரக்கலனாகத் தந்த சதுரகராதி" என இந்த அகராதியைச் சிறப்பித்துள்ளார்.

**சதுரகராதியில் எழுத்து வரிசை :** சதுரகராதியில் அகராதிகள் அமைந்துள்ள எழுத்து வரிசை முறையை முதலிற் பார்ப்போம். அகராதியில் அ, ஆ முதலிய நெடுங்கணக்கு (உயிரெழுத்துள்) வரிசை முதலில் அமைவது போல அடுத்துவரும் மெய்யெழுத்துகளும் அம்முறையிலேயே நிரல்பட அமைதல் வேண்டும். ஆகவே ககரம் முதலாக னகரம் ஈறாகப் பதினெட்டு எழுத்துகளும் அடைவே அமைகின்றன. ககரம் முதலிய ஒவ்வொரு வருக்கத்திலும் மெய்வடிவும் மெய்யுடன் பன்னிரு உயிர்களும் இணைந்துவரும் உயிர்மெய்களும் அமையும். இந்த மெய், உயிர் மெய்களில் இரண்டாவதாக வரும் எழுத்துகளில் மெய்வடிவை உயிர்மெய் வடிவுகளுக்குப் பின் அமைப்பது முந்திய முறை, மெய்யுருவை முதலில் வைத்து அடுத்து உயிர்மெய் வடிவங்களை வைப்பது பிந்திவந்த வழக்கமாகும். சதுரகராதியில் உயிர்மெய் எழுத்து வருக்கம் முற்றுப்பெற்றபின் மெய் வடிவுபெறும் சொற்களை அடைவு செய்யும் முறை காணப்படுகிறது. யாழ்ப்பாணம் நா. கதிரைவேற் பிள்ளையின் தமிழ்ச் சொல்லகராதிக்கு முன் வெளிவந்த தமிழ்-தமிழ் அகராதிகள் எல்லாம் சதுரகராதி வகுத்த முறையையே தழுவியுள்ளன. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் முதலியோர் தாம் பதிப்பித்த நூல்களில் வெளிப்படுத்திய செய்யுள் முதற்குறிப்பு அகராதி முதலியவற்றிலும் சதுரகராதி தந்த முறைமையே பின்பற்றப் பட்டிருக்கக் காணலாம்.

சொற்களின் அடைவுமுறை இவ்வாறாகச் சொற்களுக்குத் தரப் படும் பொருள்களுக்குரிய பல பெயர்களையும் அகராதி அடைவி

லயே தந்துள்ளார். பெயரகராதி, பொருளகராதி, தொடையகராதிப் பகுதிகளில், இம்முறை தழுவப் பட்டுள்ளது. ஆயின் தொகை அகராதியில் மட்டும் தொகைப் பொருள்களை மரபுவழிச் சுட்டும் முறைமை பின்பற்றப்பட்டுள்ளது. இந்த ஒரு பகுதியில் மட்டும் விளக்கப் பகுதியில் அகராதி அடைவு இல்லை.

**சொற்களை இனம் பிரித்தல்** : சதுரக ராதியில் நால்வகைச் சொற்களும் அமைந்துள்ள முறைமையும் தனிப்பட நோக்கத்தக்கதாம். இவ் வகராதியில் வினைச்சொற்களை நிகண்டுகளிற் போலவே தொழிற் பெயர் வடிவிலேயே தந்துள்ளார். சிற்சில இடங்களில் ஏவல், வினைமுற்று, வினையெச்சம், வியங்கோள் முற்று முதலியவை இனம் சுட்டியும் காட்டப்பட்டுள்ளன. என்றாலும் வினைவடிவங்கள் எல்லாவற்றையும் தரவில்லை. இது பற்றிய பொதுக் குறிப்பு ஒன்று சதுரகராதியில் முதலில் தரப்பெற்றிருக்கிறது. அது வருமாறு:

"பெயரகராதி, தொடையகராதி களில் ஏவல், வினைமுற்று, வினையெச்சம், வியங்கோள் முற்று எனக் காட்டியிருக்கும் சிலவற்றை வழியாகக் கொண்டு இலக்கண நூல்களில் வினைச் சொற்குக் கூறிய இறுதி நிலைகளையுடைய ஏனைய சொற்களையும் அவ்வச்சொல்லெனக் கண்டு கொள்க"

இக்குறிப்பினால் இலக்கண நூலிற் போல வினை வடிவ விகற்பங்கள் எல்லாவற்றையும் அகராதியுள் புகுத்திக் காட்டுதல் இயலாது என்பதும் வெளிப்படக் காணலாம்.

**உதாரணம் காட்டும் தன்மை** : இலக்கணக் குறியீட்டுச் சொற்களுக்கு விளக்கம் தந்திருப்பதோடு உதா ரணமும் எடுத்துக்காட்டியுள்ளார்.

அஃறிணைப் பன்மை ஈறு, உம்: வாழ்ந்தன;
பெயரெச்ச விகுதி, உம்: வாழ்ந்த;

செய என் வினையெச்ச விகுதி, உம்: வர;

ஆறாவதன் பன்மையுருபு, உம்: நின தாள்கள்;

சாரியை, உம்: நினக்கு;
சுட்டு, உம்: அவன்.

**கண்** - இடம், ஏழனுருபு, உம்: மணிக்கணொளி;

**கொல்** - அசைச்சொல், உம்: வருவர் கொல் வயங்கிழாஅய்

ஐயக்கிளவி, உம்: இவ்வுரு குற்றிகொல் மகன்கொல்: கொல்லென்னேவல்.

இவ்வாறாக இவர் காட்டிய இக் குறிப்புகள், எல்லாச் சொற்களுக்கும் மேற்கோள் தரும் வழக்கத்தைப் பின்னாளில் அகராதியாளர் கொள்ள வழிகாட்டின போலும்.

**தொடையகராதியின் தன்மை**

தொடையகராதி என்பது நிகண்டு களில் பதினொராந் தொகுதியில் இடம் பெற்ற சொற்களைக் கொண்டு அமைக்கப் பெற்றது. இதில் குறிற்கீழெதுகை, நெடிற்கீழெதுகை என இருபகுதி உண்டு. அருவம், உருவம்,

கருவம், பருவம் என்றாற் போல வருவன குறிற்கீழெதுகை எனப்படும். கார், கூர், சார், சீர் என்றார் போல வருவன நெடிற்கீழெதுகை எனப்படும். இப் பகுதி சூடாமணி, அரும்பொருள் விளக்கம் முதலிய நிகண்டுகளில் ககர எதுகை முதல் னகர எதுகை வரையிலும் சொற்களை எதுகை அடைவில் தந்து பொருள் விளக்கம் தந்திருப்பது போல உள்ளமை நோக்கத்தக்கது. இத்தொடையகராதி யில் தமிழ் நூல்களில் இடம் பெற்றுள்ள எதுகைச் சொற்கள் எல்லாம் அடங்கியுள்ளன என எண்ணுதல் கூடாது. எடுத்துக் காட்டாகத் தந்த ஒரு சிறு பகுதியே இந்தத் தொடையகராதி. இதனை இந்த அகராதியின் ஈற்றில் தந்துள்ள ஒரு குறிப்பு நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

"ஈண்டுக் காட்டிய பற்பல தொடைப்பதழின்றி அடைமொழி யானும் ஈரெச்சத்தானும் அறுதொகையானும் முற்றுவினை யானும் வினைக்குறிப்பானும் வேற்றுமை முதலிய உருபானும் சங்கிருதம் முதலிய எழுத்துத் திரிபானும் ஓரளவின்றிச் சிறப்புளதொடைப் பதமாக வேண்டுவனவெல்லாம் கூட்டிக் கொள்க. அங்ஙனம் சிந்தாமணி கம்பராமாயண முதற் பல இலக்கியங்களில் வரும்படி, . . . . . . இங்ஙனம் ஈண்டுக் கூறியவற்றைப் பற்றுக் கோடாகக் கொண்டு புத்திவழியாற் கூறாதனவும் உணர்வது அறிவோர் கடனே.

என்னை?

எந்நூற்சூட்டினும் எத்துறை
காட்டினும்
அந்நூற்கு எல்லாம் அறிவாதி
எனவே-

- என்று தம் நூலை நிறைவு செய்கிறார் வீரமாமுனிவர். அகராதி முறை வளர்ச்சிக்கு இவர் கால்கோள் செய்துள்ளதோடு அது வளர்நிலையுறு மாற்றையும் சுட்டியுள்ளார். பின்வந்த அகராதிகளுக்கு எல்லாம் தாயாக வந்த முதல் அகராதி சதுரகராதியேயாம்.

**மானிப்பாய் அகராதி** : சதுரகராதிக்கு அடுத்துவந்த அகராதி 1842-இல் வெளிவந்த யாழ்ப்பாணத்து அகராதி என்னும் மானிப்பாய் அகராதி. இந்த அகராதி யாழ்ப்பாணத்துக்குச் சேர்ந்த மானிப்பாய் அமெரிக்க மிசியோன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றமை ஏதுவாக ஊர்ப்பெயரால் மானிப்பாய் அகராதி என வழங்கப்பட்டது. முதலில் இது அமெரிக்க மிஷன் பாதிரிமார் முயற்சியால் தொகுக்கப் பெற்றது. இத்தொகுப்பை ஆதார மாகக் கொண்டு சந்திரசேகர பண்டிதர் இதனை உருவாக்கினார். இதற்கு அவர் சூட்டிய பெயர் 'பெயரகராதி' என்பதே. சதுரகராதியின் முதலில் இடம்பெற்றுள்ள பெயரகராதியின் விரிவாதலின் இப்பெயர் பெற்றது. இதில் ஏறத்தாழ 58,500 சொற்கள் இடம் பெற்றுள்ளன. இது சதுரகராதியைவிட நான்கு மடங்காகும். இந்த அகராதியில் "தமிழில் நூல் வழக்கிலாவது உலக வழக்கிலாவது பயின்றுள்ளனவா என்று நோக்காமல் வடமொழி அகராதிகளினின்று சொற்களைத் தாராளமாய்ச் சேர்த்துவிட்டனர்" என்றும், "இதனை ஒரு பெருங்குறை என்றே சொல்ல வேண்டும்" என்றும்

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை யவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் (இலக்கியச் சிந்தனைகள் பக். 147–8). அகராதி அடைவுமுறையும் சொற் பொருள் விளக்கும் முறையும் சதுரகராதியின் அமைப்பை ஒத்தே காணப்படுகின்றன.

**மானிப்பாய் அகராதி விரிவுறல்:** இந்த மானிப்பாய் அகராதிக்கு ஓர் அனுபந்த அகராதியைக் களத்தூர் சாமி வேதகிரி முதலியார் சேர்க்கலாயினர். இச்சேர்ப்பில் கிட்டத்தட்ட 6,500 சொற்கள் உள்ளன. இதில் பொருள், தொகை, தொடை அகராதிகள் முதற்பதிப்பில் தரப்பட வில்லை. பின்வந்த பதிப்புகளில் சதுரகராதியில் உள்ளபடி இம்மூன்று பகுதிகளையும் உடன் சேர்த்துப் பதிப்பித்துள்ளனர்.

**பேரகராதி** : இதனை அடுத்து வந்தது காஞ்சிபுரம் இராமசாமி நாயுடுவின் பேரகராதி. இவர் மானிப்பாய் அகராதியுடன் களத்தூர் வேத கிரியார் சேர்த்த அனுபந்த அகராதியையும் உடன் இணைத்தார். தாமும் பற்பலப் புதுச் சொற்களை உடன் சேர்த்தார். 1893–ஆம் ஆண்டுக்குள் இஃது இரு பதிப்பு களைப் பெற்றுள்ளது.

**தமிழ்ப் பேரகராதி** : 1899–இல் யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி வித்துவான் நா. கதிரைவேற் பிள்ளை 'தமிழ்ப் பேரகராதி' என்னும் பெரு நூலைத் தந்தார். இதனை இராமசாமி நாயுடு வெளியிட்ட பேரகராதியின் விரிவு என்றே கொள்ளவேண்டும். இவர் முந்திய அகராதிகளில் இடம் பெறாத புதுச்சொற்களைப் பல நூல்களிலிருந்து தேடி உடன் சேர்த்தார். தாம் சேர்த்த புதுச் சொற்களுக்கு உடுக்குறியிட்டுக் காட்டியுள்ளார். இவருடைய அகராதி சதுரகராதி, மானிப்பாய் அகராதிகளை அடியொற்றியதாகும். இது குறித்து இவர் தந்துள்ள குறிப்புகள் வருமாறு:

"இதுகாறும் வெளிப்படுத்தப்பட்டி ருக்கிற சதுரகராதி, யாழ்ப் பாணத்து மானிப்பாய் அகராதி, விரிவகராதி முதலிய அகராதி களில் அடங்கியிருக்கிற சொற்க ளோடு நூதனமாக அரிய பெரிய இலக்கியங்களினின்றும் எடுக்கப் பட்ட அநேகம் சொற்களை முறைப்படி சேர்த்தும் அவ்வாறு சேர்க்கப்பட்ட சொற்களுக்கு நட்சத்திரப் புள்ளிகள் அமைத்தும் பெயரகராதியில் பெயரெச்சம், வினையெச்சம். வினைமுற்று, ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினை முற்று, குறிப்பு வினைமுற்று, உரிச் சொல் முதலிய வேறுபாடுகளை மாணவர்கள் எளிதினுணருமாறு அடியிற் குறித்த குறியீடுகள் அமைத்தும் வெளியிடப் பட்டுளது.

| | |
|---|---|
| பெயரெச்சம் | + |
| வினையெச்சம் | $ |
| வினைமுற்று | ± |
| ஏவல்வினைமுற்று | O |
| வியங்கோள்வினைமுற்று | ?/ |
| குறிப்பு வினைமுற்று | ÷ |
| உரிச்சொல் | ʘ |

இங்ஙனமாகப் பெயர்ச் சொற்கள் தவிரப் பிற சொற்களைக் குறியீடுகளால் குறித்துக் காட்டிய முறை இவ்வகராதியில்தான் முதன்முதல் காணப்படுகிறது. இஃது முந்திவந்த தமிழ்–தமிழ் அகராதிகளை

விடவும் மிக விரிவு பெற்ற பெரிய அகராதியே செந்தமிழ் நாட்டு வழக்கு மொழிகள் பலவும் சேர்க்கப்பெற்ற புதுமையும் உடையது இத் தமிழ் பேரகராதி.

**தமிழ்ப் பேரகராதி பெற்ற மாற்றம்:** இவரே தாம் தொகுத்து 1899-இல் வெளியிட்ட தமிழ்ப் பேரகராதியை மேலும் புதுக்கி விரிவுபடுத்தி 1901-இல் மீண்டும் வெளியிட்டார். இதனைப் பதிப்பித்து வெளியிட்ட பி. வே. நமசிவாய முதலியார் 1911-இல் நாகலிங்க முதலியாரைக் கொண்டு மேலும் புதுக்கினர். பெயரையும் அவர் விருப்பப்படி, 'தமிழ்மொழி அகராதி' என மாற்றினார். முன் பதிப்புகளில் வினைச்சொல், உரிச் சொல் முதலியவற்றை இனங் கண்டறியும்படிக் குறித்திருந்த குறியீடுகள் இப்பதிப்பில் நீக்கப்பட்டன. மேன்மை தங்கிய ஐந்தாம் சார்ச்சு மன்னரும் மேரி அரசியாரும் அந்த ஆண்டு தில்லியில் முடிசூடிக் கொண்டதை நினைவுகூரும் வண்ணம் காரனேசன் தமிழ் டிக்ஷனரி (The Coronation Tamil Dictionary) என்றும் பெயரிட்டார். இங்ஙனமாக இந்தத் தமிழ்ப் பேரகராதி விரிவும் செம்மையும் உடையது. இதன் ஆறாம் பதிப்பை அப்படியே படப்பதிப்பாகத் தில்லி ஆசியன் பதிப்பகத்தார் ஐந்தாண்டுகளுக்கு முன் (1980) வெளியிட்டுள்ளனர்.

**இருபதாம் நூற்றாண்டுத் தமிழகராதி:** இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்கராதி (Twentieth Century Tamil Dictionary) என்பது 1909-இல் வெளிவந்தது. இதனை இயற்றியவர் பி. இராமநாதன் என்பவராவர். இதில் யாழ்ப்பாணம் நா. கதிரைவேற் பிள்ளையின் தமிழ்ப் பேரகராதி முதலிய முந்திய அகராதிகளில் இடம்பெறாத 10,000 சொற்களை மிகுதியாகச் சேர்த்து உள்ளார். சதுரகராதிக்குப் பின்வந்த அகராதிகள் போலப் பொருள், தொகை, தொடை அகராதிகளையும் உடன் சேர்த்துள்ளார். இவற்றில் இவர் சதுரகராதியில் தந்தவற்றைக் காட்டிலும் மிகுதியான சொற்களைச் சேர்த்ததோடு விளக்கப்பகுதிகளிலும் மாறுதல்கள் செய்துள்ளார். மேலும் பொருள் விளக்கும் முறையிலும் தெளிவு காணப்படுகிறது. பொருள் விளக்கமான சிறிய படங்களையும் அங்கங்கே தந்திருப்பது இந்த அகராதியின் தனிச்சிறப்பாகும்.

**தமிழ்ச் சங்க அகராதி** : தமிழ்-தமிழ் அகராதிகளுள் மிகவும் பெரியது மதுரைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட 'தமிழ்ச் சொல்லகராதி'. இதனைத் தொகுத்தவர் யாழ்ப்பாணத்தில் நீதிபதியாயிருந்த நா. கதிரைவேற் பிள்ளையாவர். இவர் பல்லாண்டுகள் உழைத்து இப் பேரகராதியை ஆக்கினார். சதுரகராதி, மானிப்பாய் அகராதி, சென்னை அகராதிகள், வின்சுலோ அகராதி, வைத்திய அகராதி என்னும் இவற்றில் இல்லாத புதுச் சொற்களும் இவர்தம் அகராதியில் உண்டு. அகர முதற் சொற்களை மட்டும் 1904-இல் வெளியிட்டார். ஏனைய பகுதிகளைத் தொடர்ந்து வெளியிடுமுன் இவர் மறைந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவிய பெருமகனார் பாண்டித் துரைத் தேவர் அவர்கள் நீதிபதி கதிரைவேற்பிள்ளை ஆக்கிய அகராதி யின் சிறப்பினை நன்கு தெரிந்தவர். அகராதிப்படிகளை அவருடைய குமாரர் திரு. க பாலசிங்கம் என்பாரிடமிருந்து தேவர் அவர்கள்

பெற்றார். மதுரைத் தமிழ்ச் சங்க வித்துவான்களைக் கொண்டு அச்சிட்டு விற்கச் செய்தார். எனவே, 'தமிழ்ச் சொல்லகராதி' என்னும் பெயர் பூண்ட இந்த அகராதி சங்க அகராதி என வழங்கப்பெறலாயிற்று. இது மூன்று பெருந்தொகுதிகளாக 1910, 1912, 1923-ஆம் ஆண்டுகளில் வெளிவந்தது

**தமிழ்ச் சொல்லகராதியின் அமைப்பு:** நீதிபதி நா. கதிரைவேற் பிள்ளை அகராதியில் சதுரகராதி தொடக்கமாகப் பின்வந்த அகராதி களில் இடம்பெற்று வந்த பொருள், தொகை, தொடை அகராதிப் பகுதிகள் இல்லை. எல்லாப் பொருள்களையும் ஒருங்கிணைத்து ஒரு பேரகராதியாக இதனை உருவாக்கியுள்ளார். இவருடைய அகராதியில் முந்திய அகராதிகளில் இல்லாத சிறப்புக் கூறுகள் பலவாகும். அவை வருமாறு:

1. அகராதி வரிசையில் உயிர்மெய்க்கு முன் மெய் வருமாறு சொற்களை அடைவு செய்துள்ளார்.

2. சொற்களின் பொருள்களையும் முந்திய அகராதிகளிற் போல அகர வரிசையில் தந்துள்ளார். ஆயினும் ஒன்றுக்கு மேற்பட்டு வரும் பொருள்களை 1, 2, 3, என்று எண் குறியிட்டுக் காட்டியுள்ளார்.

3. வடமொழி வழி வந்த சொற்களுக்குப் பொருள் தந்தபின் மூலமான அந்த வட சொற்களை இரு மருங்கிலும் பகர அடைப்பிட்டுக் கிரந்த எழுத்திலும் சேர்த்துள்ளார்.

4. சொற்களின் பொருள்களை வரையறுத்து விளங்கிக் கொள்வதற்கு உதவியாகப் பல நூல்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துத் தந்துள்ளார். அவற்றை உதாரணம்(உம்) என்று குறிப்பிட்டு, அவை காணப் பட்ட இடங்களையும் சுட்டியுள்ளார். முதன்முதலாகச் சொற் பொருளுக்கு ஆதாரமான மேற் கோள்களைப் பல நூல்களிலிருந்து தேடித்தந்த பெருமை இவரையே சாரும்.

5. முன் அகராதிகளில் னகர வருக்கத்தில் சேர்க்கப்பட்டிருந்த வடசொற்களை இவர் நகர வருக்கத்திலும் சேர்த்துத் தந்துள் ளார்.

6. பெரும்பாலான சொற்களின் மூலம் முதலியவற்றையும் பொருளுரை களின் பின் சேர்த்துள்ளார்.

7. ஒருமை வடிவிலேயே சொல்லை அமைத்து அதன்வழிப் பன்மையும் காண்க என்று குறிப்பிட்டுள்ளார் எனினும் சில இடங்களில் பயன்பாடு கருதி இருவகை வடிவங்களையும் கொடுத்துள்ளார்.

8. வினைச் சொற்களைத் தொழிற் பெயர் வடிவில் தந்துள்ளார். எனினும் சில இடங்களில் எச்ச வினைகளுக்கும் தனிப்படப் பொருள் உரைக்கின்றார்.

9. முதனிலையிலும் இறுதி நிலையிலும் வாரா என வரையறுக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் முதல் இறுதிகளில் வருதலும் இடைநிலையில் வேற்றுநிலை மயக்கமாய் வாரா என விலக்கப்பட்டவை மயங்கி வருதலும் இவ்வகராதிச் சொற்கள் சிலவற்றில்

காணப்படுகின்றன. ஆனால், அவை வடநூலார் வியாகரணத்தில் விதித்தபடித் தமிழ் நூல்களிலும் சிறுபான்மை வரக் கண்டமையின் அவ்வாறு கொடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

10 இந்துஸ்தானிச் சொல், தெலுங்குச் சொல் ஆகியவற்றை 'இந்துஸ்', 'தெலுங்கு' என்று இனம் சுட்டி அறிவித்துள்ளார். உலக வழக்கிற் கண்ட சொற்களை, 'வழக்கு' என்று குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

11. இவர்தம் அகராதியில் எடுத்தாண்ட நூல்கள் ஏறத்தாழ 340. இவற்றைச் சுருக்கக் குறியீடு தந்து அகராதியில் பயன்படுத்தியுள்ளமை பற்றி ஓர் அட்டவணையும் சேர்த்துள்ளார்.

இவ்வாறாக ஓர் அகராதியில் இடம்பெற வேண்டிய இன்றியமையாத சிறப்புக் கூறுகளையெல்லாம் கொண்டு அமைந்தது இந்தத் தமிழ்ப் பேரகராதி.

**தமிழ்ச் சொல்லகராதியில் ஒரு குறை :** இத்தகு சிறப்புடைய இத் தமிழ்ச் சங்க அகராதியில் நேர்ந்த ஒரு குறைபாட்டினைப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் பின் வருமாறு எடுத்துரைத்துள்ளார்கள்.

"இதில் நூற்றுக்கணக்கான வட சொற்கள் புதியனவாகச் சேர்க்கப் பட்டன. பல தமிழ் இலக்கியங்களி னின்றும் தக்க மேற்கோள்கள் கொடுக்கப்பட்டன. சொற்களின் வடமொழி மூலங்களும் காட்டப் பட்டன. வடசொற்கள் அனைத் தையும் சேர்த்தாலன்றித் தமிழகராதி பூர்த்தியாகமாட்டாது என்ற கொள்கையுடையவர் நீதிபதி கதிர்வேற்பிள்ளை. இதனால வடமொழிச் சொற்கள் ஏராளமாய் நுழைந்து இவ்வகராதிக்கு ஒரு குறையை உண்டாக்கிவிட்டன. ஆங்கில அகராதியில் இலத்தீன் சொற்கள் அனைத்தையும் புகுத்தினால் அகராதி முறைமையோடு முரணுமல்லவா? (இலக்கியச் சிந்தனைகள் பக்.146).

பேராசிரியர் அவர்களின் இத்தகு மதிப்பீடு தமிழ்-தமிழ் அகராதியில் வடமொழி முதலிய பிறமொழிச் சொற்களை எந்த அளவு சேர்க்கலாம் என்பது பற்றிச் சிந்திக்க வைக்கிறது. இருவகை வழக்கிலும் இடம் பெறாத சொற்களை அகர முதலிகளில் இடம்பெறச் செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என்பது அவர்களுடைய கருத்து என்பது தெளிவாகிறது.

தமிழ்ச் சங்க அகராதி, இதுவரை வெளிவந்த தமிழ்-தமிழ் அகராதிகளில் எல்லாம் மிக விரிந்தது. சொற்களை அதன் மூலச் சொற்களாலும் சொற்பொருளை உதாரண முகத்தாலும் தெளிவுறுத்தியமை இந்த அகராதியின் தனிப்பெருஞ் சிறப்பு. சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட தமிழ் லெக்சிகன் என்னும் தமிழ்ப் பேரகராதியில் தமிழ்ச்சங்க அகராதியிலிருந்தும் சொற்பொருள் எடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த அகராதி வெளிவந்த கால எல்லைக்குள் தனிநோக்கில் தொகுக்கப்பெற்ற சிறப்புப் பெயர் அகராதி, இலக்கியச் சொல்லகராதி என்னும் சிறப்பகராதிகள் இரண்டு வெளிவந்தமையும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

**சிறப்புப்பெயர் அகராதி** : மேலே சுட்டிய சிறப்பகராதிகளுள் முதலில் குறிப்பிடத்தக்கது ஈக்காடு இரத்தின வேலு முதலியார் 1908-இல் வெளியிட்ட சிறப்புப்பெயர் அகராதி, (A Tamil Dictionary of Proper Names). இதில் தெய்வம், மக்கள், இடம் முதலிய பொருட்தொடர்பாக வரும் சிறப்புப் பெயர்களை அகராதி அடைவில் அவை பற்றிய விளக்கங்களுடன் தந்துள்ளார். இது மேலும் வளர்ச்சியும் செம்மையும் பெறத்தக்க ஓர் அகராதியாகும்.

**இலக்கியச் சொல்லகராதி** : இலக்கியச் சொற்களை விளக்கும் இந்த அகராதியைச் சுந்நாகம் அ. குமார சாமிப் பிள்ளையவர்கள் தொகுத்து 1914-இல் வெளியிட்டார். இதில் இலக்கியச் சொற்களின் பொருள்கள் ஏற்ற மேற்கோள்களுடன் விளக்கப் பட்டுள்ளன. சொல்லுக்குப் பொருள் தருவதிலும் முந்திய அகராதிகள் தழுவிய அகராதி முறையினை இவர் விடுத்துள்ளார். ஏற்புடைய நேரான முதற்பொருள் முன்னரும், தொடர்பு பற்றி வரும் சார்புப் பொருள்கள் அதனை அடுத்தும் வருமாறு அமைத்தது இந்த அகராதியின் தனிச் சிறப்பாகும். வரலாற்று முறைக்கு ஒத்த நிலையும் இதுவாகும். இலக்கியச் சொற் களுள்ளும் வெளிப்படப் பொருள் விளங்குவனவற்றை விடுத்து அருஞ் சொற்களையே எடுத்துக் கொண்டுள்ளார். நிகண்டு நூல் களிலும் இலக்கியங்களிலுமிருந்தும் ஆயிரத்தைந்நூற்றுக்கும் மேற்பட்ட புதிய சொற்களைத் தொகுத்துள்ளார். புதியனவாகச் சேர்க்கப் பெற்ற சொற்களின் தலைப்பில் உடுக்குறி சேர்த்துள்ளார். தாம் செய்த அகராதியின் அமைப்பும் பயன் பாடும் குறித்துக் குமாரசாமிப் பிள்ளை உரைப்பன வருமாறு:

"இவ்வகராதியிலே இலக்கியத்தில் வரும் பெயர்ச்சொற்களே பெரும் பாலும் வரும். வினைச்சொற்கள் வாரா. வினைச் சொற்பொருள் வேண்டுவோர் ஈண்டு வரும் தொழிற் பெயர் நோக்கி அறிக. ஒருவி, ஒருவ, ஓல்கி, ஓல்க; அமைந்து, அலமர; அட்டு, அட முதலிய வினைச் சொற்களின் பொருள்களை வேண்டுவோர் ஒருவுதல், ஓல்குதல், அலமரல், அடுதல் முதலிய தொழிற் பெயர்களை நோக்கி அவைகளை அறிக. இடைச் சொற்களும் இங்கே வாரா. அவற்றை நன்னூல் முதலிய இலக்கணங்கள் நோக்கி அறிக. உரிச்சொற்களுள்ளும் அரியனவாய திரி சொற்கள் சிலசில வரும்".

"பெயர்ச் சொற்களுள்ளும் உலக வழக்கிலும் நிகழ்ந்து வெளிப்பட்டு நிற்கும் இயற்சொற்களும் இங்கே வாரா. 'வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா' என்று ஆசிரியர் தொல்காப்பியரும் கூறுவர். சிவன், விட்டுணு, பிரமன், சேரன், சோழன், பாண்டியன், யானை, புலி, கரடி, பனை, பலா முதலிய இயற்சொற்களையும் அகராதி நோக்கி அறிய வேண்டுமா? சிவன்-ஒரு கடவுள், சேரன்-ஓரரசன், யானை-ஒரு மிருகம் என்று இன்னோ ரன்னவாய் இவைகளையும் எழுதிப் பொருளும் கூறுவர். இவற்றால் அகராதி விரிவடைதலன்றிப் பயனுமுண்டா? இவையன்றி இயற்கையிலே ஒரு நிலையும் சற்றே வேறுபட்டு வேறொரு நிலையுமாக இருவகை நிலையால் நின்று ஒரு

பொருளை உணர்த்தும் சொற்களும் பற்பல. அவைகளும் தனித்தனி இங்கே வாரா. 'சொற்றவற்றியலான் மற்றைய பிறவும் தெற்றென உணர்தல் தெள்ளியோர் கடனே' என்பதனை அநுசரித்து அவைகளை அறிக".

- (இலக்கியச் சொல்லகராதி - உபக்கிரமணிகை. பக். 15).

மேற்காணும் குறிப்புகளால் புலவர் அவர்கள் எத்தகைய அடிப்படை நோக்கங்கள் கொண்டு அகராதியை ஆக்கியுள்ளார் என்பது புலனாகும்.

**லெக்ஸிகன் நிறைவை ஒட்டிவந்த சில அகராதிகள்** : இதுவரை விவரிக்கப் பெற்ற தமிழ்-தமிழ் அகராதிகளைத் தழுவிச் சிற்சில மாறுதல்களுடன் வெளிவந்தவை சில உள. 'ஜூபிலி தமிழகராதி' என்னும் பெயரில் ஓர் அகராதியை நெல்லை எஸ். சங்கரலிங்க முதலியார் 1935-இல் வெளியிட்டார். இதில் சோதிட மருத்துவ நூல்களிற் பயின்றுவரும் சொற்கள் மிகுதியாகச் சேர்க்கப் பட்டுள்ளன.

1935-இல் வெளிவந்த ஆனந்த விகடன் அகராதி 2040 பக்கங்கள் கொண்ட ஒரு பேரகராதியே யாகும். இதில் பேச்சுவழக்குச் சொற்கள், மரூஉச் சொற்கள் முதலியன மிகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளன. சுருக்கெழுத்துப் போட்டிகளில் விடை கண்டறிவதற்கு ஆதாரமாக இந்த அகராதி அமைக்கப்பெற்றது.

இதேபோன்று எஸ். குப்புசுவாமி என்பார் தொகுத்துத் தந்த 'விக்டோரியா தமிழகராதி'யும் போட்டிகளுக்குப் பயன்படும் நோக்கில் அமைந்ததே. இதில் ஓரெழுத்துச்சொல், ஈரெழுத்துச் சொல் முதலியனவாகப் பாகுபடுத்திப் பொருள் விளக்கம் தந்துள்ளார். பொருள் விளக்கத்திற்கான படங்களும் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன.

1937-இல் மதுரை இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனார் பண்டிதர் பலர் உதவியால், 'மதுரைத் தமிழ்ப் பேரகராதி' என்னும் பெருந்தொகுதியை வெளியிட்டார். இஃது முந்திய அகராதிகளைப் பயன்படுத்திச் சதுரகராதி போல நான்கு வகையான அகராதிப் பகுப்புகளைக்கொண்டு அமைக்கப் பட்டுள்ளது.

**மாணவர் பொருட்டு வந்த அகராதிகள்** : இவ்வாறாகப் பொதுப் படையான தமிழ்-தமிழ் அகராதிகளேயன்றி மாணவர்களுக்கெனவே ஆக்கப்பெற்ற சிற்றகராதிகளும் பலவாகும். சட்டைப் பையில் அடங்கும் வகையில் கோ. விசயரங்க முதலியார் 1883-இல் வெளியிட்ட அகராதிச் சுருக்கம் முற்படக் குறிப்பிடத்தக்கது. மாணவர்களுக்கென இருபதாம் நூற்றாண்டில் வந்த சிற்றகராதிகளுள் முற்படக் கூறத்தக்கது எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை தொகுத்து 1921-இல் வெளியிடப்பெற்ற 'மாணவர் அகராதி'. இதன் பின் பவானந்தபிள்ளை முதலியோர் சிற்றகராதிகள் வெளியிட்டுள்ளனர். என்னால் தொகுக்கப் பெற்று அண்மையில் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள 'தமிழ்-தமிழ் அகர முதலி' ஆயிரம் பக்கங்களுக்கு மேற்பட அமைந்த ஒரு

பேரகராதியாகும். இவையெல்லாம் அவரவர் நோக்கிற்கு ஏற்ற வண்ணம் தொகுக்கப்பெற்றனவாகும். சொற் பொருள்களைச் சுருக்கித் தருவதற் கான வகையில் ஒவ்வோர் அகராதி யிலும் ஒவ்வொரு வகையான நய முடைமை காணலாம்.

**தமிழ்-தமிழ் அகராதிகளின் வளர் நிலை :** வீரமாமுனிவர் தொடங்கி வைத்த நால்வகையான அகராதிகளுள் பெயரகராதியின் வளர்நிலை கண்டோம். தொடையகராதி, பாடல் களில் எதுகைச் சொற்களின் அமைப்பை விளக்கும் நோக்குடன் அமைந்தது. புலவர்கள் பாடிய பாடல்களில் உள்ள எதுகைச் சொற்களை எல்லாம் வகைப்படுத்தி உரைத்தல் எளிதன்று; அதனால் பெரும்பயனும் இல்லை. எனவே தொடை அகராதியில் வளர்நிலை தோன்றவில்லை.

தொகை அகராதியைச் சீர் செய்து புதுச்செய்திகளும் சேர்த்துக் கருப்பக்கிளர் சு. இராமசாமிப் புலவர் 1969-இல் தொகையகராதியைத் தனிப் பட வெளியிட்டுள்ளார்.

பொருளகராதியை யாரும் போற்றி வளப்படுத்தியதாகத் தெரிய வில்லை. ஒரு பொருளுக்குத் தமிழில் வழங்கும் எல்லாப் பெயர்களையும் ஒருசேர அறிவதற்கு இது பெரிதும் பயன்படும். ஆங்கிலத்தில் இவ்வகை யான அகராதித் தொகுப்பைத் தெசாரஸ் (Thesaurus) என்பர். தமிழிலும் பொருளகராதியை விரிவாக நாளது வரை வழங்கும் சொற்கள் எல்லாம் அடங்க அமைப்பதற்கு இடமுண்டு. பெயரகராதி போலப் பொருளகராதியும் விரிவு பெறுதல் இன்றியமையாததே.

**இன்றைய முயற்சிகள் :** தமிழ்-தமிழ் அகராதிகளில் வரவரப் பல சிறப்புக் கூறுகள் அமையப் பெற்று மேற்கோளுடன் பொருளைத் தெளிவு படுத்தும் முறை வேரூன்றி வளம் பெற்றுவருகிறது. அகராதியாக்கத்திற்கு அடிப்படையான கருவிநூல்களும் இந்நாளில் பலவாக வெளிவந்துள்ளன.

வரலாற்று முறையில் சொற் பொருள்களையும் மேற்கோள்களையும் அமைக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. 'இலக்கியச் செல்வம்' என்னும் வரிசை சங்கநூல் முதலாகச் சிற்றிலக்கியம் வரை 64-நூல்களைப் புதுமுறையில் வெளியிட்டுப் பரப்பிய சென்னை மர்ரே எஸ். இராஜம் வரலாற்றுமுறை அகராதியாக்கும் பணிக்கு ஆக்கம் தந்து வருகிறார். 1960-ஆம் ஆண்டில் வரலாற்றுமுறை அகராதிப் பணியைத் (Historical Tamil Dictionary) தொடங்கித் தக்க புலவர்களைக் கொண்டு அடிப்படைப் பணிகளைப் பல ஆண்டுகளாக முறைப்படச் செய்வித்து வருகின்றார்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ்ப் பேரகராதித்துறையைத் தோற்றுவித்து (Greater Tamil Lexicon) பத்துத் தொகுதிகளில் தமிழ்-தமிழ் அகராதி யை ஆக்கி வருகிறது. இதுவும் வரலாற்று அடிப்படையில் அமைக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

தமிழ்-தமிழ் அகராதிகள் காலத்திற்கேற்ற கோலம் பூண்டு பல்வேறு வகையில் வந்து தமிழுலகிற்குப் பயன்தருவனவாக.

தமிழ்க்கலை
தமிழ் 7, கலை 1, 2

# சதுரகராதியின் சிறப்புக் கூறுகள்

சூ. இன்னாசி

**முதல் தமிழ் அகராதி:** முழுமையான அகர நிரல்முறை கொண்ட முதல் தமிழ் அகராதி சதுரகராதி. இது கி. பி. 1732-இல் கான்ஸ்டண்டைன் ஜோசப் பெஸ்கி என்னும் பெயரிய வீரமாமுனிவரால் ஆக்கப்பட்டது. நிகண்டுகள் என்னும் அடித்தளத்தில் இலக்கண இலக்கியங்களாகிய செங்கற்களைக் கொண்டு, மேனாட்டு அகராதி வளர்ச்சி என்னும் சுண்ணாம்பால் படைக்கப்பட்டது.

**நிகண்டுகளும் சதுரகராதியும் :** சொற்களுக்குப் பொருள் விளக்கம் தரும் கூறு தமிழுக்குப் பழமையே. பொருள்கூறும் முறையும் தமிழில் படிப்படியாக வளர்ந்து வந்துள்ளது. அவ்வளர்ச்சி ஓர் ஆற்றைப் போன்றது. வான் வழங்கும் சிறுசிறு துளிகள் பலவாகிச் சிற்றோடையாகி, அவையே பின்னர்ப் பேராறாகிப் பயன் தருகின்றன. அப்பேராற்றின் பயனைப் பழுதின்றிப் பெற வேண்டுமாயின் அவ்வாற்றில் அணை வேண்டற்பாலது. அப்பொழுதுதான் வேண்டும் விளை நிலத்திற்கு வேண்டும் காலத்து, அணையில் அமைந்த மதகுகளின் வழியாக நீரைப் பெற இயலும். தொல்காப்பியமாகிய வான் வழங்கியுள்ள சொற்பொருள் துளிகளே உரியியல் என்னும் சிற்றோடையாகிப் பின்னர் நிகண்டுகள் என்னும் பேராறுகள் ஆயின. உரிய சொல்லை உரிய நிரலில் தந்து பொருள் விளக்கும் சதுரகராதி செவ்விய பயன் தரும் அணையாக அமைந்தது.

**சதுரகராதியின் பதிப்புகள்:** சதுரகராதியின் சிறப்பும் பயனும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நன்கு உணரப்பட்டன. அந்நூற்றாண்டில் மட்டும் ஒன்பது பதிப்புகள் அச்சில் வெளிவந்துள்ளன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒன்பது பதிப்புகளைக் கண்டுள்ள நூல் இஃதொன்றே. முதற்பதிப்பு முழுமையாக கி. பி. 1824-இல் வெளிவந்தது. பின்னர் 1827, 1835, 1845, 1848, 1860, 1872, 1875, 1876 ஆகிய ஆண்டுகளில் பல பதிப்புகள் வெளிவந்தனவாகத் தோன்றுகின்றன. இந்நூற்றாண்டில் 1928-இல் ஒரு பதிப்பும் 1978-இல் கட்டுரையாளர் பதிப்பும் வெளிவந்துள்ளன.

**பதிப்பாசிரியர்களின் மதிப்பீடு:** பதிப்பித்தோரின் மதிப்பீடுகளும் சதுரகராதியின் சிறப்பியல்புகளைப் புலப்படுத்தும். முதற்பதிப்பின் முன்னுரை, "நூற்பாவாற் செய்த பெயரகராதி போலாது யாவர்க்கும்

விளங்கச் சொற்சொல்லாகத் தமிழ்ப் பெருங்கடற்கோர் மரக்கலனாகத் தந்த சதுரகராதி" எனச் சுட்டுகிறது. 1928 ஆம் ஆண்டில் வெளிவந்த பதிப்பில், "கணக்கெழுதிப் பாராமலே வியாபாரம் நடத்தி வருகின்ற வர்த்தகன் ஒருவனுக்குப் பின்னர்க் கணக்குமுறை கிடைத்தாற் போன்றும் கருங் கடலைக் கடந்து கரை காண்பேனெனக் கையானீந்திச் செல்லும் ஒருவனுக்கு ஒரு கவின் மரக்கலம் கிடைத்தாற் போன்றும் இவர் வெளியிட்ட இந்நூல் நந்தமிழ் நாட்டிற்கு உதவி வருகிறது" எனக் குறிப்பிடப்படுகிறது. சதுரகராதி பதிப்பித்தோரேயன்றிப் பிற அகராதி கள், நிகண்டுகளின் ஆய்வுகள், பதிப்புகளில் ஈடுபட்ட அறிஞர் கூற்றுகளும் சிந்திக்கத்தக்கன. பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, "இவ்வகராதி நம் நாட்டுப் பழமையான பொருள் கூறும் முறைகளை முற்றிலும் மாற்றிவிட்டது. பொருட்டெளிவை விடப் பொருள் மயக்கமே தருமாறு அமைந்திருந்த தொடக்க கால நிகண்டுகளின் செய்யுள் நடை, வேண்டுமென்றே ஒதுக்கப்பட்டதெனக் தொடக்கப்பாடல் அறிவிக்கிறது. சரியாக அகராதி நிரன் முறை பின்பற்றப்படுகிறது. பொருள் கூறுவதிலும் கடின சொற்களுக்கு மட்டும் பொருள்கூறும் பழமையான மரபு, முதன் முறையாக நீக்கப்பட்டு பல எளிய சொற்களும் சேர்க்கப்பட்டுள்ளன" என்பர்.

**சதுரகராதியின் பகுப்பு முறை:** பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு பகுதிகளைக் கொண்டமையான் சதுரகராதி என்னும் பெயர் பெற்றது. இவ்வகையான புகுப்பு முறைக்கு முன்னைய நிகண்டுகள் தூண்டுதல் தந்தன; மேனாட்டு அகராதியியல் வளர்ச்சியும் துணைநின்றது. எனினும் தமிழின் முன்னைய நிகண்டுகளிற் காணாத சில சிறப்புக் கூறுகளைக் கொண்டுள்ளது.

**பெயரகராதியின் சிறப்புக் கூறுகள்:** முதற் பகுதியான பெயர்ப் பகுதியில் அமைந்துள்ள சிறப்புக் கூறுகளாகப் பின்வருவனவற்றைக் கொள்ளலாம்.

1. பெயரகராதி எனப் பெயரிடப் பட்டிருப்பினும் அப்பகுதியில் இடம் பெறுவனவனைத்தும் பெயர்ச் சொற்களல்ல. இடை, உரி போன்ற பிற சொற்களும் இடம் பெறுகின்றன. எனவே பெரும் பான்மை நோக்கியும் நிகண்டுகளின் வழக்கு நோக்கியும் பெயரகராதி எனப் பெயரிட்டதாகத் தெரிகிறது.

2. பொருள் தரும் சொற்களின் எண்ணிக்கை மிகுதியாயின. பெயரக ராதிக்கு நிகரனவாகிய திவாகர நிகண்டின், ஒரு சொல் பல்பொருட் பெயர்த்தொகுதியில் 376 சொற் களும் பிங்கலத்தின் ஒரு சொல் பல்பொருள் வகையில் 1077 சொற்களும் சூடாமணியின் ஒரு சொல் பல்பொருள் பெயர்த் தொகுதியில் 1575 சொற்களும் அகராதி நிகண்டில் 3310 சொற் களும் இடம் பெற பெயரகராதியில் 12, 187 சொற்கள் இடம் பெறுகின்றன. ஏறத்தாழ திவாகரத்தைவிட 32 மடங்குகட்கு மேலும், பிங்கலத்தை விட 11 மடங்குகட்கு மேலும், சூடாமணி யினும் 7 மடங்குகட்கு மேலும் உள்ள சொற்களுக்குப் பொருள் தருகிறது. அகராதி நிகண்டிற்கும்

சதுரகராதிக்கும் உள்ள கால இடைவெளி 134 ஆண்டுகளே யாயினும் சொற் பெருக்கமோ ஏறத்தாழ நான்கு மடங்குகள் ஆகும்.

3. சொல்லுக்கான பொருள்களைத் தருவதிலும் பெயரகராதி வளர்ச்சி கண்டிருக்கிறது. 'அரி' என்னும் சொல்லுக்குத் திவாகரம் 23 பொருள்களும் பிங்கலம் 41 பொருள்களும் சூடாமணி 47 பொருள்களும் அகராதி நிகண்டு 46 பொருள்களும் கூறச் சதுரகராதி 55 பொருள்களைக் கூறுகிறது. அவற்றுள் அடர்பு, சிங்கராசி, சிலம்பு, செம்மறியாட்டுக்கடா, நெருக்கம், மழைத்தூவல், விட்டுணு ஆகியன சதுரகராதி சுட்டும் புதுப் பொருள்களாம்.

4. அகரநிரன்முறை, உயிரெழுத்துகளில் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ ,ஐ, ஒ, ஓ, ஔ எனத் தற்காலத்தைப் போன்றே பின்பற்றப்பட்டுள்ளது. மெய்ம்முறையில் ககரத்தையடுத்து ஆய்தம் இடம்பெறுதல் சிந்தனைக் குரியது. அகரமுதற் சொற்களில் அகரம் முதலாவதாகவும் ககரம் இரண்டாவதாகவும் உடைய சொற்களில் இறுதிச்சொல் அக்கோ என்பதாம். அதனையடுத்து ஙகரம் இரண்டாவதாக வரும் அங்கசன் என்னும் சொல்லுக்கு முன் அஃகல், அஃகுல்லி, அஃபோதம் ஆகிய சொற்கள் இடம் பெறுகின்றன. எகர முதலாகவுடைய சொற்களில் ககரமெய்யை இரண்டாவதாகக் கொண்டுள்ள இறுதிச் சொல்லாகிய எக்களித்தல் என்பதனையடுத்து எஃகம், எஃகல், எஃகு முதலிய சொற்கள் இடம் பெற்ற பின்னரே ஙகர முதலாகவுடைய எங்கு என்னும் சொல் இடம் பெறுகிறது. ககர முதலான சொற்கள் இரண்டாவதாகக் ககரத்தைக் கொண்ட கக்கல் என்ற சொல்லையடுத்துக் 'கஃசு' என்னும் சொல் இடம் பெறுகிறது. இம்முறையே-அஃதாவது ககரத்தை யடுத்து ஆய்தம், அதன் பின்னர் ஙகரம் என்னும் முறையே- பின்பற்றப்படுகிறது. இவ்வாறு ககரத்திற்கும் ஙகரத்திற்குமிடையில் ஆய்தம் இடம் பெறுவதற்குக் ககரத்தின் மெதுவொலி ஆய்தம் எனக் கொண்டமையே காரண மாகலாம்.

5. மொழி முதலாம் எழுத்துகளின் வழக்காற்றினை அறியத் துணை செய்கிறது. இலக்கணங்கள், எல்லா உயிர்களோடும் சேர்ந்து மொழி முதலாகும் எனச் சுட்டும் நகரம் ஔகாரத்தோடு இணைந்த சொல் ஒன்றுகூட இடம் பெற்றிலது. இலக்கணங்கள் சுட்டாத இகரத்தோடிணைந்த ஞகர முதற் சொற்களாகிய ஞிமிர், ஞிமிறு போன்ற சொற்கள் இடம் பெறுகின்றன. இவை கொண்டு சொற்களின் வழக்காற்றினை உணர முடிகிறது.

6. பொருளை விளக்கமாகத் தருவதும் எடுத்துக்காட்டுகள் கொடுப்பதும் சிலவிடங்களில் காணப்படுகின்றன. 'அகலவுரை - இலக்கணமும் இலக்கியமுமெடுத்துக் காட்டிப் பொருள்விரித்தல்', அண்டசம்- முட்டையிற் பிறப்பன, அவை யாவன: அரணை, ஆமை, இப்பி, உடும்பு, ஓணான்,' 'அந்தராளன் அநுலோமத் தந்தைக்கும் பிரதிலோமத் தாய்க்கும் பிறந்த

பிள்ளை' போன்றவை விளக்கங்களாக அமைந்தவற்றுட் சில. கீழ் என்னும் சொல்லுக்கு ஏழு பொருள்கள் தரப்படுகின்றன. அவற்றுள் ஏழனுருபு என்பதும் ஒன்று. அதற்குக் காட்டாக, 'ஆலநீழற் கீழன்றொரு நால்வருக்கும் நெறியுரைத்தானை' என்னும் தொடர் காட்டப்படுவது போன்ற பல மேற்கோள்கள் தரப்படுகின்றன. இத்தகைய விளக்கங்களையும் மேற்கோள்களையும் அரும்பத வுரையாசிரியர் போன்ற உரை யாசிரியர்கள் தங்கள் இலக்கண இலக்கிய உரைகளில் கையாண்டு உள்ளார்கள். அம்முறையே சதுரகராதியில் கையாளப் பட்டுள்ளது எனக் கொள்ளினும் தம் படைப்பிற்குள்ளேயே குறுக்கு நோக்கீடு (Cross Reference) காட்டும் முயற்சியும் காணப்படுவது சிறப்பாகக் கொள்ளத்தக்கது. "அரும்பாலை - ஓரிராகமதை யெழுபாலையில் காண்க" எனக் கூறி, எழுபாலை என்னும் சொற்பொருளைக் காணுமாறு குறிப்புத் தரப்படுகிறது.

7. திருக்குறள் அனைத்துச் சமயத்திற்கும் பொதுவான நூல் என்னும் கருத்துக் கொண்டவர் வீரமாமுனிவர் என்பதனைச் சில பெயர்கட்கு அவர் தரும் பொருள்களால் அறியலாம். அருளாழிவேந்தன், அறவாழி யந்தணன், எண்குணன் ஆகிய பெயர்களை அருகனுக் குரியவாகத் திவாகரம் கூறுகிறது. பிங்கலமும் சூடாமணியும் அருளாழி வேந்தன், எண்குணம் ஆகியவற்றை மட்டும் அருகனுக்குரியனவாகச் சுட்டு கின்றன. இவற்றுள்ளும் பிங்கலம் மட்டும் எண்குணம் சிவனுக்கும் உரியதெனச் சுட்டும். இப்பெயர்கள் அரிக்கு உரியவென அந்நிகண்டுகள் கூறவில்லை. இப்பெயர்களுள்ள அறவாழி அந்தணன், எண்குணன் என்பன திருக்குறள் தொடர்களை அடியொற்றியன. வீரமாமுனிவர் சதுரகராதியில் பொருள் கூறுங்கால் அறவாழி வேந்தன் என்பதற்குக் கடவுள் என மட்டும் பொருள் தருகிறார். அறவாழி அந்தணன் என்பதற்கு அரன், அரி, அருகன் என முச்சமயக் கடவுளரைக் கூறுகிற வீரமாமுனிவர் எண்குணன் என்பதற்கு அருகன், சிவன் என நிகண்டுகள் கூறும் பொருள் களோடு கடவுள் என்னும் சமயப் பொதுமைப் பெயரையும் இணைத்துக் கூறுகிறார்.

பொருளகராதியின் சிறப்புக் கூறுகள்:

1. நிகண்டுகளின் ஒரு பொருள் பல்பெயர்த் தொகுதியே பொரு ளகராதியாக அமைந்தது. சது ரகராதியின் பெயர், தொகை, தொடைப் பிரிவுகளில் அமைந்து கிடக்கும் சொற்கள், அவற்றிற்குரிய பொருள், பெயர்த் தன்மைக்கேற்பப் பொருளகராதியில் உள்ளன. பா என்னும் சொல், பெயரகராதியில் 'பா - ஓரெழுத்து, வெண்பா முதலிய பா' என்றும் தொகையகராதியில், 'பா 4, வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பாவொன்று கூட்டியைந் தென்பாருமுளர்' என்றும், தொடையகராதியில், "பா-ஓரெழுத்து, பாவென்னேவல், வெண்பா முதலிய பா" என்றும் பொருள் கூறப்படுகிறது.

பொருளகராதியில், "பாடகவி, கவிதை, செய்யுள், தமிழ், தூக்கு, தொடர்பு, பாட்டு, யாப்பு, அன்றியுந் தனிப்பாவாய் வருவது முத்தகம்; பல பாவாற் பொருள் முடியும் பாக்கள் குளகம், இருபத்தாறெழுத்தடி நான்குள பா சந்தப் பாட்டு; அதின்மிகும் பா தாண்டகம்" எனக் கூறப்படுகிறது.

2. வீரமாமுனிவரின் பல்சமய நோக்கும் அறிவும் சில சொற்களால் அறியக் கிடக்கின்றன. திவாகரம் கடவுளர் பொதுப் பெயர்களாகப் பண்ணவர், பகைவர், தீர்த்தர், பட்டாரகர், புங்கவர் ஆகியவற்றைக் குறிக்கிறது. பிங்கலமும் அவற்றையே கூறுகிறது. சூடாமணி கடவுளர் பொதுப்பெயர் கூறவில்லை. சதுரகராதி கடவுளுக்குரிய பெயர்களாக அகண்டாகண்டன், அகநிலை, அகாரி, அசலன், அச்சயன், அச்சுதன், அழகன், அதிகுணன், அதுலன், அத்தன், அந்தாதி, அபயன், அமலன், அருட்குடையோன், அருளாழி வேந்தன், அரூபி, அறக்கொடியோன், அறவாழி மன்னன், அறுகுணன், அனகன், அனந்தஞானி, அனந்த லோசனன், அனந்தன், அனாதி, ஆதி, ஆதிபுங்கவன், இறையோன், ஈசன், ஈச்சுரன், ஈறிலி, உளவழிகடந்தோன், உள்ளத்துறைவோன், எண்குணன், ஏகதேவன், ஏகன், ஐ, ஐம்புலத்தடங்கான், கருணாலயன், கருத்தா, குணநிதி, குணபத்திரன், சகநாதன், சகலவியாபி, சச்சிதானந்தன், சதானந்தன், சயம்பு, சருவேச்சுரன், சாமி, சீபதி, சோதி, தற்பரன், தனிக்கோலான், தாபரன், தேவன், தேவாதி, நாயகன், நிதானன், நித்தன், நிமலன், நிரஞ்சனன், நிரம்பரன், நிராமயன், நிர்நாமன், நிருமலன், நிருபன், நீதிபரன், பகவன், பகாப்பொருள், பரஞ்சோதி, பரதுக்கதுங்கன், பரப்பிரம்மன், பரமம், பரமேசுரன், பரம், பராபரம், பிதா, பிரமம், பிரான், பிறப்பிறப்பில்லான், புங்கவன், பூரணன், மகேச்சுரன், மாசேனன், முக்குற்றங்கடிந்தோன், முதலோன், முத்தொழிற்பகவன், முழுதொருங்குணர்ந்தோன், முன்னூற்கேள்வன், முன்னோன், மூவுலகாதாரன், மூவுலகாளி, மூவுலகேகபதி, விதித்தோன், விமலன், வினைவிநாசன், வேதன், வேதா, வேதாந்தன், வேதாந்தம், வேதார்த்தன் என நூறு பெயர்களைக் கூறுகிறது.

**தொகையகராதியின் சிறப்புக் கூறுகள்:**

1. நிகண்டுகளின் பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதியின் அடிப்படையிலேயே சதுரகராதியின் தொகையகராதிப் பிரிவு படைக்கப் பட்டது. தொகைச் சொற்களின் எண்ணிக்கை, நிகண்டுகளில் காணப்படுவதிலும் மிகுதியாகும். திவாகரத்தின் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி 130 சொற்களுக்குப் பொருள் கூறுகிறது. சூடாமணியின் தொகுதி 160 சொற்களுக்குப் பொருள் கூறுகிறது. பிங்கலம் அத்தகைய தொகுதியை அமைத்துக் கொள்ளவில்லை. எனினும் ஐ வகைப் பிரிவிலும் பிற பிரிவுகளிலும் 171 சொற்களை விளக்குகிறது. சதுரகராதியின் தொகையகராதிப் பிரிவோ 298 சொற்கட்குப் பொருள் கூறுகிறது.

2. எண்ணிக்கை மிகுதி வேறுபாடு மட்டுமின்றிப் பொருள் கூறும்

முறையிலும் நிகண்டுகட்கும் சதுரகராதிக்கும் வேறுபாடுண்டு. தொகைச் சொற்கட்குத் தனிப்பிரிவு கொண்ட நிகண்டுகள் சிற்றெண் தொடங்கிப் பேரெண் முறையில் சொற்களுக்குப் பொருள் கூற, தொகையகராதி அம்முறையினின்றும் மாறி அகரநிரல் முறையினைப் பின்பற்றுகிறது.

3. அகரநிரல் முறையில் சதுரகராதியின் பிற பிரிவுகளோடு ஒப்பிடுங்கால் சிறு வேறுபாடு தோன்றுகிறது. சொற்களுக்குரிய பொருள்கள் பலவாக இருப்பின் அவற்றையும் அகரநிரன் முறையில் தருமுறை பிற பிரிவுகளில் பின்பற்றப்பட, தொகையகராதியில் வகைப் பொருள்கட்கு அகர நிரன் முறை பின்பற்றப்படவில்லை. சான்றாகத் தமிழ் என்னும் சொல், 'தமிழ்-3: இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என விளக்கப் பட்டிருக்கிறது. அகரநிரல் முறைப்படி அவ்வகைகள் இசைத் தமிழ், இயற்றமிழ், நாடகத்தமிழ் என அமைய வேண்டும். இவ்வாறு அமைக்காமைக்கு வழக்கில் பயிலும் முறையே பின்பற்றப்படவேண்டும் என்னும் கருத்தாகலாம்.

4. தொகையகராதியின் இறுதியில் இலக்கத்தொகை முறை கொடுக்கப்பட்டிருப்பது இப்பிரிவில் குறிப்பிடற்குரியது. சிற்றெண் தொடங்கிப் பேரெண் முறையாக ஒவ்வோர் எண் தொகையிலும் என்னென்ன தொகைச் சொற்களுக்குப் பொருள் வகைகள் விளக்கப்பட்டுள்ளன என்பதனைக் காட்டும் பட்டியலாக அஃது அமைந்துள்ளது. தொகையகராதியின் வகைப் பொருள்களில் அகரநிரல் முறை பின்பற்றப்படாதிருக்க, இலக்கத்தொகை முறையில் எண்கள் சுட்டும் தொகைச் சொற்களுக்கு அகரநிரல் முறை பின்பற்றப் பட்டிருக்கிறது.

5. சில தொகைச் சொற்களின் வகைகளை விளக்கும்பொழுது புராணக் குறிப்புகளையும் சதுரகராதி தருகிறது. திருமாலவதாரம், பத்தென்றும் பதினைந்தென்றும் இருவகையாக விளக்கப்படுகிறது. பத்துவகை அவதாரங்களை நிகண்டுகளும் குறிக்கின்றன வெனினும் பெயர்களை மட்டும் சுட்டுகின்றன. தொகையகராதியோ, "திருமாலவதாரம் பத்து: மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலபத்திரன், கண்ணன், கற்கி. இவற்றிற்குக் காரணம், வேதத்தைத் திருடிக் கடலிலொளித்த சோமுகாசுரனெனும் இராக்கதனைக் கொல்ல மச்சாவதாரம், கடலைக் கடையும்போது மந்தர மலையைத் தாங்கக் கூர்மாவதாரம், பூமியைப் பாயாக இரணியாக்கன் சுருட்டினதை விரிக்கவும் அவனைக் கொல்லவும் வராகாவதாரம், இப்பழிவாங்கி சருவதேவ வணக்கம் விலக்கின வவன்றம்பி யிரணிய கசிபனைக் கொல்ல /நரசிங்காவதாரம், இந்நான்கவதாரத்திற்கும் தாயாரில்லை; மாவலியை யடக்கக் காசிபனும் திதியும் தந்தை தாயாக வாமனாவதாரம், அரசராற்றாழ்த் தப்பட்ட பார்ப்பார் நிமித்தம், அவ்வரசரைக் கொல்லச்/சமதக்கினியு மிரேணுகையும் தந்தை தாயாகப் பரசுராமாவதாரம், இராவணன் முதலிய விராக்கதரைக் கொல்லத்

தசரதனுங் கௌசலையுந் தந்தை தாயாக விராமாவதாரம்" என்றாற் போன்று பிற அவதாரங்களையும் விளக்குகிறது.

6. அகராதியின் பிற பகுதிகளில் தாம் சார்ந்த கிறித்தவச் சமயம் சார்ந்த கருத்துக்களைக் கூற முயன்றிராத வீரமாமுனிவர் தொகையகராதியில் சிலவிடங்களில் கூறுகிறார். ஈச்சுரன் முக்கிய குணம்_6 என்னும் தொகையில் ஆறனைக் கூறிப்பின், "அன்றியும் தன்வயத்தனாதல், முதலிலனாதல், உடம்பிலனாதல், எல்லா நலமுமுளனாதல், எங்கும் வியாபகனாதல், எவற்றிற்குங் காரணனாதல்" என மேலும் விளக்கந் தருதல், "வானோர் கணம்_9 அக்கணத்தோராவார், பத்திச் சுவாலகர், ஞானாதிக்கர், யத்திராசனர், நாதகிருத்தியர், சத்துவகர், பலவத்தர், பிராதமிகர், அதிதூதர், தூதர். இவையே நவவிலாச சபையாம்" எனக் குறித்து மேலும் ஒவ்வொரு கணத்தையும் பற்றி விளக்கந் தரல் போன்றன அத்தகைய குறிப்புக்களாம்.

7. பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்பது தமிழ் வழக்கு அவை எவை யென முதன் முதல் வரையறுத்தது சதுரகராதியின் தொகையகராதிப் பிரிவேயாம்.

**தொடையகராதியின் சிறப்புக்கூறுகள் :**

1. நிகண்டுகளுள் முதலில் எதுகைத் தொடைக்குத் தனிச்சிறப்பளித்து, அதற்கெனத் தொகுதிகளுள் ஒன்றனை வகுத்தது சூடாமணி யேயாகும். அதன் பதினோராம் தொகுதியில் கூறும் சொற்களைப் பதினெட்டு மெய்களின் அடிப் படையில் பகுத்துக் கூறுகிறது. எனினும் ஒரே மெய்யின் எதுகைக்குள் அடங்கும் சொற்களைக் கூறுங்கால் முறை யான அகரநிரன் முறையினைப் பின்பற்றவில்லை. சதுரகராதியின் தொடையகராதி, எதுகையமையும் சொற்களை அகரநிரல் முறைப்படி யமைத்துப் பொருள் தருகிறது.

2 தொடையகராதியின் தொடக்கப் பாடல் சில குறிப்புக்களைத் தரு கிறது. முதலெழுத்து ஒலியளவான் ஒத்து நிற்கப் பிற எழுத்து ஒன்றி அமையும் எதுகைச் சொற்கள் கூறப்படும் என்றும் அவற்றுள்ளும் முதலெழுத்துக் குறிலாக அமைவன முன்னரும் நெடிலாக அமைவன பின்னரும் தரப்படும் என்றும் ஒரே சீரில் கூறப்படும் சொற்கள் இடம்பெறுமென்றும் அடி தொடையாக அமைவனவும் தலையாகு எதுகையாகச் சிறப்புப் பெறுவனவும் கூறப்படும் என்றும் அக்குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

3. தொடையகராதியின் இறுதியில், நெடிற்கீழெதுகைச் சொற்கட்குப் பின்னர்ச் சிறப்புள, தொடைப் பதங்களாக 11 சொற்றொகுதிகள் உள்ளன. அத்தொகுதிகட்கு முன்," ஈண்டுக் காட்டிய பற்பல தொடைப்பதமின்றி யடைமொழி யாலு மீரெச்சத் தாலு மறு தொகையாலு முற்றுவினையாலு முற்றுவினையாம் வினைக் குறிப் பாலும் வேற்றுமை முதலிய விகுதியுருபாலுஞ் சங்கிருத முதலிய வெழுத்துத் திரிபாலு மோரள வின்றிச் சிறப்புள தொடைப்பதமாக வேண்டுவன வெல்லாங் கூட்டிக் கொள்க.. அங்ஙனம் சிந்தாமணி

முதற் பலவிலக்கியங்களில் வரும்படி" என்னும் குறிப்புத் தரப்படுகிறது. இக்குறிப்பினின்று, அடைமொழி யோடு சேர்ந்தமைந்த சொற்களை யும் இலக்கியங்களின்று கண்டு ணர்ந்து அவற்றில் அமைந்த தொடை நயத்தை உணர வேண்டும் எனப் பெறப்படுகிறது. அதற்குக காட்டாகச் செந்நீர்ப்பவளம், முந்நீர்ப் புணரி, அந்நீர்ப்பதுமம், பைந்நீர்க் கதலி, வெந்நீர்க் கடமா ஆகிய தொடைப் பதங்கள் முதலில் தரப்படுகின்றன. இவற்றுள் செந்நீர், முந்நீர், அந்நீர், பைந்நீர், வெந்நீர் ஆகியவை குணத்தொகையாகவும் அடை மொழியாகவும் அமைந்து, எதுகைத் தொடைகளாவன. அவற்றின் பின்வரும் பவளம், புணரி, பதுமம், கதலி, கடமா, ஆகியவை எதுகையாய் அமையா விடினும் அடையும் பெயருங்கலந்த அச்சீர்களை எதுகைத் தொடை யுடையனவாகக் கருதவேண்டும் என்பதே கருத்தாகும். முன்னர்க் குறிற்கீழெதுகை, நெடிற் கீழெதுகையில் குறிப்பிட்டன வெல்லாம் ஒரு சொல் ஒரு சீராய் அமைவனவாதலின் இரு சொற்கள் ஒரு சீராயமைமயினும் ஒரு சொல்லிலமைந்த தொகை கொண்டு அச்சீரினை எதுகைத் தொடை நயமுடையதாய்க் கொள்ள வேண்டுமெனச் சுட்ட அவை தனிப்பட்ட தொடைப்பதம் என்னும் தலைப்பில் காட்டப் பட்டனவாகக் கொள்ளலாம்.

**சதுரகராதியின் செல்வாக்கு:** சதுரகராதிக்குப் பின்னர்த் தோன்றிய அனைத்து அகராதிகளுக்கும் மூலமாகச் சதுரகராதி அமைந் துள்ளது. அவற்றைப் பதிப்பித் தோரும், பாயிரம் பாடியோரும் இதனைக் குறிப்பிட்டுக் காட்டி யுள்ளார்.

சொற்களுக்குப் பொருள் கூறும் எளிய முறை கொண்ட அகராதிகள் தோன்றிய பின்னரும் செய்யுள் நடைகொண்ட நிகண்டுகள் படைக்கப் பட்டன. அவையும் சதுரகராதியை மூலமாகக் கொண்டுள்ளமை அதன் செல்வாக்கைப் புலப்படுத்தும். பதினெட்டாம் நூற்றாண்டில் பிற் பகுதியில் சாமிநாதக் கவிராயர் இயற்றிய அரும்பொருள் விளக்க நிகண்டு, 1856-ஆம் ஆண்டிற்குப் பின்னர்த் தோன்றிய நானார்த்த தீபிகை, 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிவசுப்பிரமணியக் கவிராயரால் இயற்றப்பட்ட நாமதீப நிகண்டு ஆகியவற்றில் சதுரகராதியின் செல்வாக்குக் காணப்படுவதைச் சதுரகராதி ஆராய்ச்சி என்னும் நூல் குறிப்பிடுகிறது.

சொற்களுக்குப் பொருள் தருவதில் இந்நிகண்டுகள் சது ரகராதியின் செல்வாக்கைப் புலப்படுத்துகின்றன. சதுரகராதியை மூலமாகக் கொண்டது போன்ற நிகண்டும் தோன்றியுள்ளது. குடுமியா மலையைச் சார்ந்த சுப்பிரமணிய பாரதியால் இயற்றப்பட்ட பொருட்டொகை நிகண்டு அத்தகையது. இந்நிகண்டின் காலம் அறியப்படவில்லையாயினும் 18-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் எனக் கருதுவர். சதுரகராதியையும் பொருட்டொகை நிகண்டையும் ஒப்புநோக்கின், சதுரகராதிக்குப் பின் இந்நூல் எழுந்தது என்னும் உறுதி பெறலாம்.

தொகையகராதியை நிகண்டு வடிவில் ஆக்கித் தந்தது போன்றே இந்நிகண்டு அமைந்துள்ளது. முன்னை நிகண்டுகளிற் காணப்பெறாத தொகையகராதியில் மட்டும் காணப்பெறும் - எண் தொகைகள் அனைத்தும் இந்நிகண்டில் இடம் பெறுகின்றன. தமிழ்நாடு 13, உலகம் 14, திதி 15, சைவம் 16, முத்துச்சணிப்பு 20, மங்கலச் சொல் 22, நட்சத்திரம் 27, தேயம் 56, வருடம் 60, கலைஞானம் 64, பிரபந்தம் 96 ஆகியன தொகை யகராதியினின்று எடுக்கப்பட்டன வேயாம்.

தொகையகராதியினின்று தான் இவை எடுக்கப்பட்டன என்பதற்குப் பொருட்டொகை நிகண்டின் உள்ளே அகச்சான்று உள்ளது. அந்நிகண்டு தொண்ணூற்று ஆறு பிரபந்த வகைகளைக் கூறி முடித்த பின் அவற்றுள் முதலாவதாகக் குறிப்பிடப் பெறும் சாதகம் என்பதற்கு மட்டும் இலக்கணம் கூறுகிறது. இவ்விலக்கண மும் தொகையகராதியில் இடம் பெறுவதே. அவ்விலக்கணங் கூறியபின் ஏனையவற்றின் இலக்கணத் தொகை யெல்லாம், " இயற்றமிழ் நூலிலும் அகராதியினும் அறைந்தன காண்கவே" எனக் கூறுகிறது. அகராதி எனச் சுட்டுவது, அந்நிகண்டு சுட்டும் தொகைகளையும் பொருள்களையும் அதற்கு முன்னரே கொண்டமைந்த சதுரகராதியையே என உறுதி பெறலாம்.

**துணை நூல்கள்**

இன்னாசி, சூ. சதுரகராதி (ஆய்வுப் பதிப்பு), 1978 வீரமாமுனிவர் ஆய்வுக்கழகம், பாளையங்கோட்டை.

சதுரகராதி ஆராய்ச்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

தமிழ்க் கலை
தமிழ் 7, கலை 1, 2

# பாவாணர் நோக்கில் சொற்பிறப்பியல் அகரமுதலி

இரா. மதிவாணன்

அகராதியை அகரமுதலி என்றழைத்தார் பாவாணர். அகரமுதலி தொகுப்பது இந்நூற்றாண்டில் இணையற்ற பணியாக உலகெங்கும் நடைபெற்று வருகிறது. மொழியைக் கற்பவர்களும் மொழி வளர்ச்சிப் பணிகளும் மொழியாராய்ச்சித் துறைகளும் விரிவுற்று வருவதே இவற்றுக்கு அடிப்படை எனலாம்.

**சொற்பிறப்பியல் அகரமுதலியின் அமைப்பு:** சொல்லுக்குப் பொருள் விளக்கம் தருவதோடு அதன் வேரும் வரலாறும் காண்பது சொற்பிறப்பியல் அகரமுதலியின் சிறப்புக்கூறு. ஆதலின், சொற்பிறப்பியல் அகரமுதலியைச் சிறப்பு அகரமுதலி வகைகளுள் ஒன்றாகக் கருதுகின்றனர். சொல்மூல வரலாறு காண்பதன் வாயிலாக அச்சொல்லோடு தொடர்புடைய பொருளின் வரலாறு விளங்குகிறது. மொழி என்பது மக்களின் வாழ்வைப் படம் பிடிக்கும் கண்ணாடி. குறிப்பிட்ட மொழியினரின் தொன்று தொட்டு வளர்ந்து வந்த வாழ்வுச் சூழலை முழுமையாகக் காட்ட வல்லது மொழி. வாழ்வுச்சூழல் என்று பொதுவாகக் குறிப்பிடினும் அஃது, அம்மக்களின் அறிவு வளர்ச்சி, கலை வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி, பல்வகைத் தொழில் நலங்கள், கலை நலங்கள், அரசியல் மாற்றங்கள் வரலாற்று மூலங்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்க வல்லது.

உலகில் பல்வேறு மொழிகளில் சொற்பிறப்பியல் அகரமுதலிகள் வெளியிடப்பட்டுள்ளன. ஆங்கிலத்தில் மட்டும் ஐந்து சொற்பிறப்பியல் அகரமுதலிகள் வெளிவந்துள்ளன. இசுகீற்று (Skeat) பெருமகனார் தாம் ஒரு மடலமாக எழுதிய ஆங்கிலச் சொற்பிறப்பியல் அகரமுதலிக்கு இரு மடலங்களில் சொற்பிறப்பியல் நெறிமுறைகளை வடித்துத் தந்துள்ளார் (Principles of English Etymology). மேனாட்டுப் பெருமக்கள் ஒரு சொல்லின் மூலம் காணுங்கால் அச்சொல்லின் பழைய எழுத்துச் சான்றான வடிவத்தையே மூலமாகக் கருதினர் (the earliest recorded word is taken to be the etymology). சொல்லின் பழைய எழுத்துச் சான்றான மூல வடிவும் அது காலப்போக்கில் பெற்ற திரிபுமே சொல்லின் வரலாறாகக் கருதப்பட்டது.

வடமொழி வல்லுநர்கள் சொல்லின் பகுதிகளைச் செயற்கையாக

வரையறைப்படுத்தி அவற்றையே வேர்மூலங்கள் அல்லது தாதுக்கள் எனப்பெயரிட்டுக் கொண்டனர். வட மொழியாளர் எச்சொல்லுக்கு வேர் மூலம் தேவைப்படினும் ஏற்கெனவே வரையறுக்கப்பட்டுள்ள வேர்மூலங் களுள் பொருத்தமானவற்றோடு இணைத்துக் காட்டிவிடுகின்றனர்.

**புதுமுறை ஆய்வு:** இதுகாறும் சொல்லின் முந்தைய வடிவத்தைக் காண்பது மட்டும் சொற்பிறப்பியலின் நோக்கமாகக் கருதப்பட்டது. அம்முந்தைய வடிவங்கள் ஒலிப்பிலும் பொருளிலும் வரலாற்று வழி பன்மொழிகளில் ஒத்திருந்தால் அவ்வொப்புமை அவற்றின் பொது மூல மொழியமைப்பைக் காண உதவும் என்பது இன்றைய நோக்கமாகக் கருதப்படுகிறது. இத்துறையில் காலூன்றி உலக மொழிகள் பல வற்றிலும் சொற்பிறப்பியல் அகரமுதலி செய்வார் எண்ணிக்கை பல்க வேண்டும் என்று சோவியத்து வரலாற்று ஆய்வாளர் திரு. கோந்தர தோவ் கருதுகிறார். இப்பணி ஒன்றே வரலாற்று மொழியியலும் ஒப்பீட்டு மொழியியலும் நன்கு வளர வழிவகுக்கும்.

**பிற குடும்ப மொழிகளில் இனச் சொற்றொகுப்பு:** இதற்கு மிக மிக அடிப்படையானது ஒரு சொல்லுக்கு இனச்சொல் காணுதல். அவ்வாறு காணுங்கால் ஒரு குடும்ப மொழிகளுக்குள் மட்டும் இனச்சொல் தொகுக்காமல் பிற குடும்ப மொழிகளிலும் இனச்சொல் காணக் கிடைக்கின்றனவா என்று ஆய்ந்து தொகுக்க வேண்டும். இத்தகு முயற்சி உலகமொழிகளில் பின்பற்றப்பட வில்லை. இம்முயற்சியில் இறங்கியோர் யாழ்ப்பாணம் தவத்திரு ஞானப் பிரகாசர், மொழிஞாயிறு பாவாணர் ஆகிய இருவரே எனலாம்.

பொதுவாகச் சொற்கள் பல்வகைக் குடும்ப மொழிகளிலும் வணிக சமய அரசியல் அறிவியல் தொடர்புகளால் ஊடாட்டம் பெறும். ஆயின், அடிப்படைச் சொற்களில் ஊடாட்டம் இருப்பின் அத்தகு ஊடாட்டம் மூலத்தாய் மொழியி லிருந்து வந்ததா என ஆராய இடம் கொடுக்கும்.

அதனாற்றான் ஒரு மொழியி லுள்ள சொல் வளத்தை (1) படைப்புச் சொல் வளம் (Coined Vocabulary), (2) திரிபுச் சொல்வளம் (Corrupted and derived Vocabulary) (3) கடன் கொள் சொல்வளம் (borrowed Vocabulary) என முத்திறப்படுத்துதலோடு உடன் கொண்ட சொல்வளத்தையும் (Carried Vocabulary) சேர்த்து நான்காகப் பகுத்துப் பார்த்தல் வேண்டும். உடன் கொண்ட சொல்வளம் என்பது மூலத்தாய் மொழியிலிருந்து பல்வேறு காலகட்டங்களில் பிரிந்து திரிந்து, மொழிகள் இதுகாறும் காத்துவரும் அடிப்படைச் சொல்லாட்சிகள் சொற்பிறப்பியல் வல்லுநர் ஒவ்வொரு மொழியிலும் உடன்கொண்ட சொல் வளத்தைப் (Carried Vocabulary) பிரித்தறிய வேற்றுக் குடும்ப மொழி களில் இனச்சொல் காணும் முயற்சியில் வெற்றியடைய வேண்டும். பாவாணர் வகுத்துத் தந்த இச் சொற்பிறப்பியல் நெறி மிகவும் புதுமையானது மட்டுமன்றி சொற் பிறப்பியல் ஆய்வின் புதுத் திருப்பத்தை ஏற்படுத்த வல்லது. உலகச் சொற் பிறப்பியல் ஆய்வாளர்களிடை இக்

கருத்து நன்கு பரப்பப்படவேண்டும்.

**சொற்களின் காலக்கணிப்பு**: (Chronology of Words) தொல்பொருளாய்வுத் துறையினர் பழங்கால அழிபாடுகளிலிருந்து கண்டெடுத்த பொருள்களின் கால வரையறையை அறிவியல் அணுகுமுறைகளின் துணை கொண்டு நன்கு வரையறுக்கின்றனர். இது போன்றே சொற்களின் கால வரையறை நன்கு கணிக்கக் கூடுமாயின் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு இடங்களுக்கு மக்கள் பிரிந்து சென்ற இடப் பரவல்களைச் செவ்வனே கணிக்க இயலும். மக்கள் கடல் கடந்து செல்லும்போது மொழியும் கடல் கடந்து செல்கிறது. நிலவியல் வரம்புகளைத் தாண்டிச் சொல்லாக்கங்கள் வேரூன்றி விடுகின்றன. சொற்களின் காலக்கணிப்பை நன்கு வரையறுப்பதற்கு மொழி நூலறிஞர்கள் எவரும் செவ்விய வழிமுறைகளை இதுவரை வகுக்கவில்லை. ஆயினும், பாவாணர் வேர்ச்சொல்லாய்வு இப்பணிக்குப் பெரிதும் துணை புரிகிறது.

சான்றாக, 'கவுண்டன்' என்னும் சொல் 11-ஆம் நூற்றாண்டில் தான் தோன்றியதென வரையறுக்கப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டலாம். 'சமம்' என்பது போர்க்களம். 'சாமன்' என்பது போர்வீரனைக் குறிக்கும் சொல். 'சாமந்தன்' - படைத்தலைவன். பிற திரவிட மொழியினர் இச்சொல்லைச் 'சாமுண்டன்' என வழங்கினர். பிறகு, இது 'காமுண்டன்' எனத் திரிந்து 'கவுண்டன்' என ஆயிற்று. 'நன்னி காமுண்டன்' என்னும் சொல் முதன்முதல் 11-ஆம் நூற்றாண்டு கல்வெட்டில் காணப்படுகிறது. பிற மொழித் தாக்கங்களால் ஒரு சொல்லின் ஒலிப்பு எவ்வாறு பன்மடித் திரிபடைகிறது என்பதற்கு இது வரலாற்று அடிப்படையான சான்றாக அமைகிறது.

இவ்வாறு உலக மொழிகள் அனைத்திலுமுள்ள சொற்களுக்குச் சரியான வேர்மூலம் காணும் முயற்சி மேற்கொள்ளப்படின் ஒவ்வொரு சொற்றிரிபும் எந்த மூலச்சொல்லிலிருந்து திரிந்ததெனக் கண்டறியக் கூடும். மூலச்சொல்லிலிருந்து திரிந்த காலத்தை வழக்கூன்றிய சொற்றிரிபுக் காலமாக மிகத் தெளிவாக வரையறுக்கலாம். இவ் ஆய்வு மொழியின் தோற்ற வரலாற்றையும் மக்களின் இடப் பெயர்ச்சிகளையும் வரையறுக்கும் ஆய்வுக்குப் பெரிதும் துணைபுரியும். சொற்பிறப்பு அகரமுதலிகளை உருவாக்குவது வரலாற்று ஆசிரியர்களுக்கும் பண்பாட்டு ஆய்வு வல்லுநர்களுக்கும் மிகப் பெரிய துணைக் கருவியாகுமென்பதைப் பாவாணர் பன்முறை வலியுறுத்தியிருக்கிறார்.

**வேர் முதல்கள்**: சொல்லின் நோக்கம் பொருளுணர்த்துவது. சொல்லின் வேர் பல பொருள்களுக்கும் கருத்துகளுக்கும் பொதுவாயிருத்தலின் பேசுவோன் கேட்போனிடைக் குறித்த பொருள் புலப்பட சொல்லின் சூழல், அல்லது தொடராட்சி உதவுகிறது. இதனைப் "பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின்" (தொல். 386), "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே" (தொல். 387) என்று தொல்காப்பியரும் குறிப்பிடுகிறார். பேசுவோனின் மொழிச்சூழல் கேட்போனுக்குப் பழக்கப்பட்டதாக இருப்பின் பொருள் திரிபில்லை

என்பது உண்மையாகும். உணர்ச்சி தொடர்பான கூற்றுகள் மாந்தர் பொது உணர்வுக் கூறுகளாதலின் பேசுவோனின் மொழிச்சூழல் கேட்போனுக்குப் பழக்கப்படாததாயினும் மொழியின் வெளிப்படைப் பாங்குகளே பேசுவோன் கருதிய உணர்வைக் கேட்போனிடத்து உண்டாக்கிவிடும்.

ஆதலின், சொற்களை இயல்பாக உணரப்படும் நிலையிலுள்ள உணர்வு சுமந்த சொற்கள் என்றும் பேசுவோன் மொழிச் சூழலில் பழக்கப் பட்ட கருத்தைச் சுமந்த சொற்கள் என்றும் இருவகைப்படுத்த வேண்டும்.

மொழியின் தலைமைக் கூறுகளாக விளங்குபவை சுட்டொலிப் பகுதியில் வளர்ந்த கருத்தைச் சுமந்த வேர்ச்சொற்களே. இவற்றையே சிறப்பாக வேர் முதல்கள் என்கிறோம்.

காலங்கண்ணிய வேர்முதல் வினை முதனிலையாகவும் தன்மை கண்ணிய வேர்முதல் பெயர் முதனிலையாகவும் புடைபெயரும் ஆற்றல் பெறும். குறிப்பொலிச் சொற்கள் இடைச் சொற்களாகிப் பெயர்வினைத் தன்மைகள் எய்தவும் பெறும்.

கிளவியத்தின் அடிமனையாகவும் உயிர்நிலையாகவும் உள்ள வினைச் சொல் காலங்கண்ணுவதால் பெறும் தொடர்புகளை எண்வகைத் தொழின் முதனிலைகளாகத் தொல்காப்பியர் வகுத்தோதினார் (தொல். சொல். 108).

சொல்லின் அகத்துறுப்பாகிய வேர்முதல் எண்வகைப் பெருங்கருத்து வேர்ச்சொற்களாக விரிவதைப் பாவாணர் கண்டறிந்தார். அதனைத் தமிழ் வரலாற்றில் விரித்துரைத்தார். மொழி என்பது ஒலிப்பு வடிவில் புலப்படினும் ஒலிப்பு வடிவங்களுக்கு அடிப்படையான உள்ளக் கருத்துகளே உண்மையான மொழியாகும். ஆதலின், வேர்முதல் சுட்டும் கருத்துகளே மொழி. அக்கருத்துகள் மாந்தரின் அகத்துறுப்பு.

**மொழி மாந்தரின் அகத்துறுப்பு:** உண்மையான மொழி என்பது மனமும் அறிவுமே. மேலும் சுருங்க உரைப்பின் மொழியென்பது நினைப்பாற்றல். இவற்றின் செயற்பாட்டுப்புற வெளிப் பாடே ஒலிப்பு வடிவமுற்ற மொழி ஊடகம்.

ஐம்பொறிகளைப் புறத்துறுப்பு கள் என்கிறோம். மனம், அறிவு ஆகிய கருவிகளால் ஆகும் மொழி மாந்தரின் அகத்துறுப்பாக விளங்குகிறது. என் வீடு, என்நாடு என்றாற்போல் என்மொழி என மொழியைப் பிறிதின் கிழமையாகக் கூறவியலாது. செவியும் நாக்கும மொழிக்காகவே உடம்பின் புறத்துறுப்புகளாகச் செயற்பட்டு வருதலானும் மனமும் அறிவும் மொழி யென்னும் நினைவுப் பதிவுக் கருவி வளர்ச்சியால் பயன்மிகும் வகையில் செம்மையாக இயக்கப்படுதலானும் மொழி மாந்தரின் அகத்துறுப்பாகி விட்டது. ஆதலின், மொழிநலன், மொழிவளர்ச்சி என்பவை மாந்தரின் நலனையும் மாந்தனின் வளர்ச்சியையும் குறித்தனவாகும்.

ஆதலின், மொழியின் சொற் பொருள் வளர்ச்சியை ஆராயும் வேர்ச்சொல் ஆய்வு என்பது, மனமும் அறிவும் செயற்படும் பாங்குகளின் ஒத்திசைவைப் பொருள் புலப்பாட்டு வகைமைகளுடனும் சொல் வளர்ச்சி

நிலைகளுடனும் நன்கு தொடர்புறுத்தி விளக்குகின்ற புதிய முயற்சி.

மாந்தரின் எண்ண அலைகள் புறத்தே வரத் துடிக்கின்றன. வாய்ச்செய்கை, கைச்செய்கைகளால் எண்ணம் முழுவதையும் உணர்த்த வியலாத நிலையில் நாவை இயக்கி மொழிப்படுத்தியபோது சொற்கள் உருவெடுத்தன. அச்சொற்கள் எண்ண அலைகளின் ஒலிவடிவமான புறத்து வீச்சு. அகத்தே எண்ணிய கருத்துக்கும் புறத்தே நாவசைப்பால் எழுந்த ஒலிப்புக்கும் நெருங்கிய தொடர்புண்டு. சங்கிலித் தொடர்போல் கருத்து வளர்ந்த போது அதற்கிணையாகத் தொடர்பறாச் சொற்களும் வளர்ந்தன.

சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பு வரையறைக்குட் படாதது என்றே இதுகாறும் மொழிநூலறிஞர் . கருதினர். மேனாடுகளிலும் வழக்கூன்றிய சொல் வடிவின் பயன்பாடே பொருளை வரையறுக்கிறது. (Word form usage) என்னும் கொள்கையினர் ஒருபாலும் பேசுவோன் வெளியிடக்கருதிய பொருளே சொல்லின் பொருளை வரையறுக்கிறது. (Semantics) என்னும் கொள்கையினர் ஒருபாலும் தத்தம் கொள்கையே சரியானது என எதிராடுகின்றனர்.

பேசுவோன் எண்ணிய கருத்தைச் சுமந்து வெளிப்படும் ஊடகம் வரி வடிவ எழுத்தாயினும் ஒலி வடிவமான சொற்களாயினும் இறுதியில் கேட்போனைச் சென்று சேர்வது கேட்போனின் கருத்துகளே. பேசுவோனிடமிருந்து கேட்போனுக்கு அனுப்பப்படும் கருத்து ஒழுங்காக முழுமையாகப் போய் சேர்வதற்கு (தொலைவரியில் செய்தியனுப்பக் கம்பி பயன்படுத்துவதுபோல) மொழியென்னும் ஊடகம் (Medium) பயன்படுகிறது. எனவே, மொழியென்னும் ஊடகம் மட்டும் மொழியெனக் கொண்ட இருதிறத்தாரும் குழம்புகின்றனர். மொழியென்பது எண்ணக் கோவையான கருத்துகள் எனத் தெளிவுபடுத்திக்கொண்டால் இச்சிக்கல் எழாது.

இதனை நன்கு தெளிவுபடுத்துவதற்காக வேர்ச் சொற்கட்டுரைகளில் வேர்ச் சொல் சுமந்துவரும் கருத்துகளைப் பாவாணர் விளங்கச் செய்தார். உண்மையில் மொழியென்பது எண்ணங்களின் கோவையே. ஒலிவடிவமும் வரிவடிவமும் வெறும் ஊடகங்களே. ஊடகமின்றி எண்ணக் கோவையை பிறர்க்குப் புலப்படுத்த லாகாமையால் கருத்தையும் சொல்லையும் இணைத்து மொழி என்று குறிப்பிட்டு வருகிறோம். கருத்து வளர்நிலைகளை அடிமனையாகக் கொண்டு சொல்வடிவ வளர்நிலைகளை ஆராய்வதே பாவாணர் வகுத்த நெறி. ஒரு சொல் குறிப்பிட்ட ஈறு பெற்றிருப்பதால் 'இப்பொருளினதாக வேண்டும்' என்று சொல்வடிவம் நோக்கிப் பொருளைச் சிறப்பிக்க வியலாது. வரலாற்றுப் போக்கில் வளர்ந்த கருத்துகள் இன்னின்ன சொல்வடிவங்களில் இதுகாறும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என நிறுவிக்காட்டுதற்காகவும் வேர்ச்சொல் கட்டுரைகளை வரைந்தார். இறுதியாக அறுதியிடின் பாவாணர் ஒரு கருத்துமுதல் கொள்கையாளர். கருத்து இயற்கையானது. மொழியென்னும் ஊடகம் செயற்கையானது.

**சொல்லின் வேர்மூலம் எது?** சொல்லின் வடிவங்களை வடிவ மீட்டமைப்புகளின் வாயிலாக பின்னுக்குத் தள்ளிக்கொண்டுபோய் ஓரசை வடிவிலான சொன்மூலம் காண்பதை விடுத்து, சொற் பொருள்களைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டுபோய் அவற்றின் மூலக்கருத்தில் நிறுத்தி ஒரு வடிவும் மூலக்கருத்துமாக வேர்மூலங்களை வேர்முதல் வடிவில் வகைப்படுத்தினார் பாவாணர்.

**சுட்டடிக்கொள்கை:** அ, இ, உ என்னும் முச்சுட்டுகளிலிருந்தே மொழி தோன்றியது என்பது பாவாணர் கொள்கை. உகரச் சுட்டிலிருந்தே பெரும்பான்மைச் சொற்கள் வளர்ந்திருப்பதை அவருடைய ஆய்வு காட்டுகிறது. முன்வருதல், தோன்றுதல் ஆகிய கருத்துக்களை மாந்தர் வெளியிடத் துணையாக இருந்தது உகரச்சுட்டு. ஒரு கருத்தை வெளியிடுவது என்பது செயற்பாட்டுக் காகவே. ஆதலின், சுட்டடிச்சொற்கள் வரை வினைக்கருத்தே முதன்மை யானது. அதன் வழியடிச் சொற்கள் பல்வகைப்பெயர், இடை, உரிச் சொற்களாக விரிகின்றன.

ஒன்றைச்சுட்டிப் பேசும் நிலை ஒரு தொழிலில் ஈடுபடுங்கால் நேர்கிறது. ஒரே மாந்தன் தனித்து வாழ்ந்தால் மொழிபேசவேண்டிய சூழல் உருவாகாது. பலரொடு கூடித் தொழிலாற்றும் சூழலில் கருத்தை வெளிப்படுத்த மொழி உருவாகிறது. தொழில் செய்யும் சூழலில் வினைச் சொற்கருத்தை முகந்து வேர்ச்சொற்கள் வெளிப்படுகின்றன. வினைக்கருத்தே மொழித்தோற்றத்தின் தொடக்கம்.

பிரடரிக்கு ஏங்கல்சு (1974) பெருமகனாரின் "உழைப்பிலிருந்து உழைப்போடு மொழி தோன்றியது என்னும் விளக்கம் விலங்குகளுடன் ஒப்புநோக்குங்கால் நிறுவப்படுகின்றது" (Dialectics of Nature - p.173) என்னும் கூற்றும் இதனை உறுதிப்படுத்துகிறது.

வினைக்கருத்து சங்கிலித் தொடர்போல் பல்வேறு கருத்துக் கோவைகளை உருவாக்குகிறது.

**சொற்களின் பொருள்களுக்குக் காரணம் உண்டு:** உண்மையான மொழி யாக விளங்கும் மாந்தரின் கருத்துக்கோவை காரண அடிப் படையில் ஏரண வளர்ச்சி பெற்றுள்ளது. எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன வாயினும் சிலவற்றுக்குக் காரணம் வெளிப்படத் தோன்றாது என்னும் தொல்காப்பியர் கருத்துக்கு விளக்கமளித்த சேனாவரையர் (தொல், உரி. 394: சேனா) "பொருளோடு சொற்கியைபு இயற்கை" எனக் குறிப்பிட்டிருப்பது சொல் சுமக்கும் பொருளே மொழியாவதல்லது சொல், மொழி யாகாது என்னும் கருத்தை வலியுறுத்துகிறது. சொல் சுமக்கும் பொருளுக்கு வித்தான கருத்துக் கோவை எவ்வாறு மொழியில் நேர்ந்துள்ளது என உள்ளது உள்ளபடி பட்டியலிட்டுக் காட்டும் பணியே பாவாணரின் வேர்ச்சொல்லாய்வு. பின்வரும் நான்கு நிலைகளில் மொழியின் பொருட்பாங்கு வளர்க்கும் கருத்துக்கோவைகளை ஆய்ந்தார்.

## 1. சுட்டொலிக் காண்டம்

விதைச்சொல்

முளைச்சொல்

சுட்டுச்சொல்

அ(ல்) வேர்ச்சொல் | உ(ல்) வேர்ச்சொல் | இ(ல்) வேர்ச்சொல்

## 2. வேர் வளர் காண்டம்

ஆணிவேர்

பக்கவேர்

சல்லிவேர்

## 3. குறிப்பொலிக் காண்டம்

உணர்வொலிகள்

ஒப்பொலிகள்

ஆடொலிகள்

பாடொலிகள்

## 4. திரிநிலைக் காண்டம்

அகநிலைத் திரிவுகள் - (தாய்மொழித் திரிபுகள்)

புறநிலைத் திரிவுகள் - (பிறமொழித் தாக்கத் திரிபுகள்)

---

**இன்றைய மொழியியல் ஆய்வுகள் :** இன்றைய மொழியியல் ஆய்வுகள் வண்ணனை மொழியியலை அடிப்படையாகக் கொண்டவை. "வண்ணனை மொழிநூல் பிறமொழித் தொடர்பு நோக்காது ஒரு மொழியை வண்ணிப்பது மட்டும் செய்வதால், உண்மையில் இலக்கணத்தின் பாற்படுவது (வண். வழு. 90). வரலாற்று மொழியியலும் ஒப்பியல் மொழியியலும் வளரின் உண்மையான மொழியாய்வுக்குத் துணை செய்யும்

என்று பாவாணர் கருதுகிறார். வண்ணனை மொழி நூலாரின் அடிப்படைத் தவறுகளாக இருப்பதையும் நெறிமுறைத் தவறுகளாகப் பன்னிரண்டையும் பாவாணர் குறிப்பிடுகிறார் (வண். வழு. 71-10).

பாவாணரின் கருத்துப்படி வண்ணனை மொழிநூல் எழுத்து வழக்கிலுள்ளன இல்லாதனவுமாகிய ஆங்கிலந் தவிர்ந்த உலக மொழிகளுக்கு ஆங்கிலம் வாயிலாக இலக்கணம் கூற முற்படுகிறது என்றும் உண்மையான மொழியாய்வு என்பது ஒருமொழி அதன் தொடக்க கால வரலாற்றிலிருந்து அதன் இனமொழிகள் அனைத்துடனும் ஒப்பிட்டுச் சொல்லாய்வு செய்வதே என்றும் பொருளாகிறது.

வண்ணனை மொழிநூலார் எல்லாச் சொற்களையும் இடுகுறித் தொகுதிகளாக்கிக் கொள்வர். பாவாணர் "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன" என்னும் தொல்காப்பிய மரபியல் ஊற்றங் கொண்டு அனைத்துச் சொற்களுக்கும் வேர்மூலம் காண்பவர்.

வண்ணனை மொழிநூலாரிடை பொருட்பாட்டியல் (Semantics) தனித்த மொழிநூல் பிரிவாக வளர்க்கப்படவில்லை. பாவாணரின் மொழியாய்வு ஒவ்வோர் வேர்ச் சொல்லுக்கும் அடிப்படையான கருத்தைக் கொண்டு நிற்பதால் பொருட்பாடின்றிச் சொல்லில்லை என்பது அடிப்படைக் கொள்கையாகின்றது.

அண்மைக்கால அமெரிக்க நாட்டு மொழியியலாரிடை சோம்சுகி என்பாரின் பொருட்பாட்டுக் கொள்கைகள் பரவலாகி வருகின்றன. அவர் சொற்களில் அல்லது சொற்றொடர்களில், வெளிப்படைப் பொருட்பாடுகளும் உட்கிடைப் பொருட்பாடுகளும் (explicit grammar and implicit grammar) புதைந்துள்ளன் என்கிறார். பேசுவோன் கேட்போனிடை புலப்படும் இவ்விரு கூறுகள் எம்மொழிக்கும் இயல்பு என்கிறார்.

"ஒரு கருத்திலிருந்து மற்றொரு கருத்து தோன்றும்போது ஒரு சொல்லிலிருந்து மற்றொரு சொல் தோன்றுகிறது" என்று பாவாணர் வகுத்த நெறி சோம்சுகி கண்ட பொருட்பாட்டுக் கொள்கைக்கு நேர்முக விளக்கம் எனலாம்.

ஒரு கருத்திலிருந்து மற்றொரு கருத்து தோன்றுகிறது என்பது உட்கிடை (implicit) இலக்கணம். ஒரு சொல்லிலிருந்து மற்றொரு சொல் தோன்றுகிறது என்பது வெளிப்படை (explicit) இலக்கணம்.

'வளை' என்பது வளைத்தல் என வினையாகலாம். எலிவளை போன்ற பொந்தாகலாம். வளையலின் (ஈறு குறைந்த) முதனிலை ஆகலாம். ஒலிப்பளவில் அல்லது வரிவடிவில் பொருள் மயக்கமுள்ள இச்சொல் தொடராட்சியில் பேசுவோன் கேட்போனிடைத் தெளிவாக உணரத் தக்க பொருளைச் சரியாக உணர்த்திவிடுகிறது. இச்சொல்லின் வரிவடிவமும் ஒலிவடிவமும் வெளிப் படைப் பாங்கே; சரியான பொருள் உட்கிடைப்பாங்கு. வெளிப்படைப் பாங்கிலிருந்து உட்கிடைப்பாங்கறிவது மேனாட்டார் பாங்கு. உட்

கிடைப்பாங்கிலிருந்து (வேர்ச்சொல் வளர்ச்சியிலிருந்து) வெளிப்படைப் பாங்குகளான சொல் வளர்ச்சிகளை அறிவது பாவாணர் முறைமை.

**வேர்ச்சொல்லாய்வின் நோக்கமும் பயனும்** : வேர்ச்சொல்லை அகழ் வாராய்ச்சி செய்வது வேர்ச் சொல்லாய்வு எனப்படும். சொல்லை அகழ்ந்தாய்வதன் நோக்கம் சொல்லின் வரலாற்றையும் அதன் வாயிலாக மொழியின் வரலாற்றையும் அம் மொழியாளர்களின் பண்பாட்டுக் கூறுகளின் பரவலையும் நுணித்தறிவது. இவற்றை நுணித்தறியும் கணிப்புக்குப் பாவாணர் வகுத்துக்காட்டிய சொல்லாய்வு முறைகள் பெரிதும் பயன்படுகின்றன.

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன எனக் கண்டறிவது வேர்ச்சொல்லாய்வின் பயன்.

"பொருட்குப் பொருள்தெரியின் அதுவரம்பின்றே" (தொல். சொல். 391) என்னும் தொல்காப்பியர் கூற்றுக்கு இந்நூற்றாண்டில் முற்றுப்புள்ளி வைத்துப் பொருட்குப் பொருள் தெரியின் அதற்கும் வரம்புண்டு எனக் காட்டியவர் பாவாணர். சொற்கள் குறிக்கும் பொருள்கள் வேர்ச்சொல் கருத்திலிருந்து முகிழ்த்தவை. வேர்ச் சொல்லின் அடிப்படைக் கருத்தில் நூற்றுக்கணக்கான சொல் விரிவுகளும் ஆயிரக்கணக்கான கூட்டுச் சொற்களும் பொருள் வளர்ச்சிகளும் ஒடுங்கி விடுகின்றன. பொருட்குப் பொருள் தெரிவோர், சொல்லின், ஆணிவேரைக் காணின் அதன் அடிப்படைக் கருத்தில் சொற்பொருள் அடிவரம்பைக் காண லாம்.

உண்மையான பொருளுணர்ந்து பேசப்படும் சொற்கள் தெளிவு மிகுப்பவை. மொழியின் உறுப்பாகிய சொற்களின் பொருளாட்சியில் தெளிவு பெறுவதே வேர்ச்சொல்லாய்வின் முழுமையான பயன்பாடு. வரலாற்று நோக்கிலும் ஒப்பீட்டு நோக்கிலும் உலகமொழிகளை ஆய்வார்க்கும் மாந்தர் இனத்தின் பரவலையும் நாகரிகக் கொள்கொடைகளையும் சொல்லாய்வு வழி காண்பார்க்கும் வேர்ச்சொல்லாய்வு பெரிதும் பயன் படும்.

தமிழ்க்கலை
தமிழ் 7, கலை 1, 2

# தமிழில் சிறப்பகராதிகள்

மு. சதாசிவம்

**எது சிறப்பகராதி ?** 'அகராதி' என்ற சொல்லைக் கேட்டவுடனே பெரும்பாலோருக்குக் கடின சொற்களுக்குப் பொருள்கூறும் தமிழ்-தமிழ் அகராதியோ அல்லது ஆங்கிலம்-தமிழ் அகராதி போன்ற இருமொழி அகராதியோதான் உள்ளத்தில் தோன்றும். கடினச் சொற்களுக்குப் பொருள்கூறும் அகராதிகளே (Glossaries) உலக மொழிகளுள் முதன் முதல்ல் தோன்றிய சிறப்பகராதிகளாகும். தொல்காப்பியர் உரியியலில் இலக்கிய அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறியுள்ளார். உரியியலே தமிழகராதிகளின் முன்னோடி. ஆனால் உரியியலில் கூறப்பெறும் சொற்கள் அகரவரிசையில் அமையவில்லை.

தமிழில் 'அகராதி' என்ற சொல், முதன் முதலாக 16-ஆம் நூற்றாண்டில்தான் வழக்கிற்கு வந்தது. அதற்கு முன்பு 'நிகண்டு' என்ற பெயரில்தான் அகராதிகள் உலவின. திவாகர நிகண்டு, சூடாமணி நிகண்டு, பிங்கல நிகண்டு, ஆசிரிய நிகண்டு ஆகியவை குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்த நிகண்டுகளாகும். தமிழில் இதுவரைக் கிடைத்துள்ள 32 நிகண்டுகளில் பெரும்பாலானவை செய்யுள் வடிவத்திலேதான் உள்ளன. சொற்பொருள்களை மனத்தில் இருத்திக் கொள்வதற்கு முற்காலத்தில் செய்யுள் நடையே ஏற்றதாயிருந்தமையின் இவை செய்யுள் நடையிலேயே தோன்றின. அதனால் இவை அகரவரிசையில் அமைக்கப் பெறவில்லை.

அகராதி என்ற சொல்லின் பொருள் இப்போது விரிவடைந்துள்ளது. அகரவரிசையில் அமைந்துள்ள சொற்கள் அல்லது சொற்றொடர்கள் யாவும் 'அகராதி' என்றே இக்காலத்தில் அழைக்கப் பெறுகின்றன. ஒருமொழியில் வழங்கும் எல்லாச் சொற்களையும் தொகுத்துக் கூறும் ஒருமொழி அகராதியும் அவற்றிற்குப் பிறமொழிகளில் இணைச் சொல் கூறும் இரு மொழியகராதியும் 'பொது அகராதிகள்' எனப்பெறும். மற்றவை யாவும் 'சிறப்பகராதிகள்' என்று குறிப்பிடப்பெறும். இச்சிறு கட்டுரையில் தமிழில் வெளியிடப் பெற்றுள்ள எல்லாச் சிறப்பகராதிகளின் பெயர்களையும் சுட்டுதற்கு இயலாது; வகைக்குச் சில அகராதிகளின் பெயர்களே எடுத்துக் கூறப்பெறும்.

1983-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில், இங்கிலாந்திலுள்ள எக்சீடாப பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற உலக அகராதி மாநாட்டில் அந்த மாநாட்டின் அமைப்பாளர் முனைவர் ஹார்ட்மன் என்பவர் வருங்காலத்தில் சிறப்பகராதிகளுக்கே ஏற்றமும் பெருமையும் ஏற்படும் என்று அங்குக் குறிப்பிட்டார்.

19-ஆம் நூற்றாண்டுவரை உலக மொழிகளில் எல்லாம் ஒருமொழி, இருமொழி அகராதிகளே பெரும்பான்மையாக இயற்றப்பட்டு வந்தன. 20-ஆம் நூற்றாண்டில்தான் எண்ணிலாத சிறப்பகராதிகள் தோன்றி வருகின்றன. ஒவ்வோர் அறிவியல், கலைத் துறைகளுக்கும் தனித்தனி அகராதிகள் தோன்றி வருகின்றன. அகரவரிசையில் அமைந்த நூலில்தான் எந்தப் பொருளைப் பற்றியும் எளிதில் கருத்துகளை அறிந்துகொள்ள முடியுமாதலின் ஒவ்வொரு துறையைப் பற்றிய கருத்துகளும் அகரவரிசையில் வடித்துத் தரப்பெற்று வருகின்றன. எதிர்காலத்தில் இவ்வாறு தமிழிலும் ஒவ்வொரு துறையிலும் சிறப்பகராதிகள் தோன்றும் என்பது திண்ணம்.

சிறப்பகராதிகளுள் அருஞ்சொற்பொருளகராதி (Glossaries), சொல்லடைவுகள் (Word lists indexes), சொல்லாட்சித் தொடர்கள் (Concordances), கலைக் களஞ்சியங்கள் (Encyclopaedias), ஒவ்வோர் அறிவுத் துறையையும் விளக்கும் அகராதிகள் முதலியன அடங்கும். எனினும் ஒரு நூலின் இறுதியில் கொடுக்கப்பெறும் செய்யுள் முதற் குறிப்பகராதி, நூலின் உள் தலைப்புகள் அல்லது பொருள்களைக் கூறும் பொருளடக்க அகராதி ஆகியவை ஈண்டுச் சிறப்பகராதிகளாகக் கருதப்பெறவில்லை.

**குறிப்பிடத்தக்க சிறப்பகராதிகள்:** அண்ணாமலை, சென்னை, கேரளப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்களால் சங்க இலக்கியங்கள் முழுமைக்கும் சொல்லடைவுகள் தொகுக்கப் பெற்றுள்ளன. இவற்றிற்கு முன்னோடிகளாக முனைவர் உ.வே. சாமிநாத அய்யர் அவர்கள், தாம் பதிப்பித்த அனைத்து நூல்களினிறுதியிலும் கொடுத்துள்ள "அரும்பொருள் முதலியவற்றின் அகராதிகள்" விளங்குகின்றன. அய்யரவர்களைப் போலவே சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரும் உரையுடன் வெளியிட்டுள்ள சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் ஆகியவற்றின் ஈற்றில் அருஞ்சொல்லகராதிகளைத் தந்துள்ளனர். இவற்றுட் சில அருஞ்சொல்லகராதிகளில் பொருள்கள் தரப்பெறவில்லை. இவற்றிற்கும் பொருள்கள் கொடுக்கப்பெறுமாயின் அவை ஆராய்ச்சியாளருக்கு இன்னும் மிக்க பயனை நல்குவனவாயிருக்கும்.

புதுவையிலுள்ள பிரெஞ்சுப் பண்பாட்டுக் கழகம்; சங்க இலக்கியம், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகியவற்றின் சொற்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளது. பழந்தமிழ் நூற் சொல்லடைவு' என்ற பெயரைப் பெற்ற இந்நூலில் எத்துணையோ சங்க இலக்கியச்சொற்கள் விடப்பட்டுள்ளன. மேலும் இத்தொகுப்பு நூலில் சொற்களுக்கும் தொடர்களுக்கும் பொருள்கள் குறிப்பிடப் பெறவில்லை.

அகராதிகளில் சொற்றொடர்களும் போதிய அளவில் இடம்பெற வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக இந்நூல் இலங்குகிறது.

திருக்குறளுக்குச் சொற்பொருளக ராதிகள் மூன்று வெளிவந்துள்ளன. திவ்வியப் பிரபந்தச் சொற்பொருள் களைத் தொகுத்து மூன்று அகராதிகள் வெளிவந்துள்ளன. கம்ப ராமாயணத்திற்கு நான்கு அகராதிகள் வெளியிடப் பெற்றுள்ளன.

புறநானூற்று அகராதியை முனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் புதிய முறையில் வெளியிட்டுள்ளார். புறநானூற்றுச் சொற்களுக்குத் தமிழிலும் ஆங்கி லத்திலும் பொருளும் இலக்கணக் குறிப்பும் தந்துள்ளார். இதுபோலவே சிலப்பதிகாரச் சொற்களைத் தொகுத்து முனைவர் ச.வே. சுப்பிரமணியம் அவர்கள் ஆராய்ச் சிக்குப் பயன்படும் அகராதி ஒன்றைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொருள் கொடுத்து வெளியிட்டுள்ளார். இவ்வாறே பிற சங்க இலக்கியங் களுக்கும் காப்பியங்களுக்கும் சொல் லடைவுகள் வெளிவந்துள்ளன.

திரு ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் தாம் தொகுத்த 'சங்க இலக்கியச் சொற்களஞ்சியம்' முதற் பகுதியைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் மூலம் வெளியிட்டுள்ளார். பிற்பகுதி ஏனோ வெளிவரவில்லை. மர்ரே கம்பெனியார் வெளியிட்ட 'பாட்டும் தொகையும்' என்பது கடினமான சங்க இலக்கியச் சொற்களுக்குப் பொருள் தருவ தாயினும் அச்சொற்கள் பயிலும் நூல்களின் பெயர்கள் குறிப்பிடப் பெறாமையின் அஃது ஆராய்ச்சி யாளருக்குப் பெரிதும் பயன் படாமலிருக்கிறது.

முனைவர் வ.சு. செங்கல்வராய பிள்ளையவர்கள் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின்வழி வெளி யிட்டுள்ள பல சைவத் திருமுறை களுக்குரிய 'ஒளிநெறிகள்' சொற் பொருளடைவு நூல்களாகத் திகழ் கின்றன.

தமிழ் இலக்கியங்களையும் புலவர்களையும் பற்றிய செய்திகளை அறிந்து கொள்வதற்காக ந. சி. கந்தையா பிள்ளையவர்கள் தமிழ்ப் புலவர் அகராதி, தமிழ் இலக்கிய அகராதி, காலக்குறிப்பகராதி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். 'தமிழ்ப் புலவர் அகரவரிசை' என்ற பெயரில் கழகம் ஏறக்குறைய 1600 புலவர்களைப் பற்றிய செய்திகளைத் தொகுத்துப் பல தொகுதிகளில் வெளியிட்டுள்ளது. பாலூர் கண்ணப்ப முதலியார், மு. சண்முகம் பிள்ளை ஆகியோரும் இலக்கியங்களைப் பற்றிய அகராதி களைத் தொகுத்துள்ளனர்.

கார்த்திகேயினி புதுமுறை அகராதியில் ன-ண, ற-ர, ல-ழ-ள ஆகிய இன எழுத்துகளை வேறுபடுத்திப் பொருள்கள் கூறப் பட்டுள்ளன.

'சிலேடை அகரவரிசை' கழகத்தின் மூலம் வெளியிடப் பெற்றுள்ளது. ஆட்சிச்சொல் அகர வரிசை, உவமை அகரவரிசை, பழமொழி அகரவரிசை முதலிய அகராதிகளைக் கழகம் வெளி யிட்டுள்ளது.

'உரையாசிரியர்கள் கண்ட சொற்பொருள் நுண்மை விளக்கம்' என்ற அகராதியைப் புலவர் திரு இளங்குமரன் அவர்கள் தொகுத்துக் கழக வழி வெளியிட்டுள்ளார். தொகையகராதி, சிறப்புப்பெயரகராதி, மக்கட்பெயர் அகரவரிசை, மரபுத் தொடர் அகரவரிசை, இல்லப்பெயர் அகரவரிசை முதலியனவும் கழகத்தின் மூலம் வெளிவந்துள்ளன. சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியை 1938-இல் ஞானப்பிரகாச அடிகளார் அவர்கள் வெளியிட்டார். மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் செந்தமிழ்ச் சொற்பிறப்பு அகர முதலியின் முதன் மடலத்தை மட்டும் தொகுத்திருந்தார். அந்நூல் அண்மை யில் வெளியிடப் பெற்றுள்ளது.

அபிதான சிந்தாமணி தமிழில் முதன்முதலில் தோன்றிய கலைக் களஞ்சியமாகும். பின்னர், அதன் கலைக் களஞ்சியம், சிறுவர் கலைக் களஞ்சியம் ஆகியவை வெளிவந்துள்ளன.

சுன்னாகம் அ. குமாரசாமி பிள்ளை அவர்கள் 1914-இல் இலக்கியச் சொல்லகராதியை வெளியிட்டார். ஆனால் அதில் வரும் சொற்கள் என்னென்ன நூல்களில் பயின்று வந்துள்ளன என்றறிய நூல்களின் பெயர்கள் கொடுக்கப் பெறவில்லை.

ஏ.சி. கிலேய்டன் என்பவர் பைபிள் செய்திகளை அகரவரிசைப் படுத்திப் 'பைபிள் அகராதி' என்று 1923-இல் வெளியிட்டார்.

யாழ்ப்பாணம் சா. சுப்பிரமணிய சாத்திரி வெளியிட்ட 'சொற்பொருள் விளக்கம் என்னும் தமிழகராதி' அருஞ்சொல்லகராதிகளுள் ஒன்று.

நிகண்டுகள் யாவும் சிறப் பகராதிகளே. 1934-இல் சா.வை. சுவாமி ஐயர் வெளியிட்டுள்ள 'மணி அகராதி' ஒருபொருள் பலபெயர்களைக் கூறு கின்றது. ஊத்தங்கரை அப்பாய் செட்டியார் எதுகை அகராதியை வெளியிட்டுள்ளார்.

கலைச் சொல்லகராதியைத் திருநெல்வேலி, சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டது. ஆங்கிலம்-தமிழ் அறிவியல், கலைச் சொல்லகராதியைத் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

திரு சு.அ. இராமசாமிப் புலவர் எழுதிய 'மேற்கோள் விளக்கக் கதை அகரவரிசை'யைச் சைவசித்தாந்தக் கழகம் வெளியிட்டுள்ளது. தமிழகச் சட்டத்துறை ஆட்சிமொழி ஆணைக் குழு 1968-இல் சட்டச்சொல் அகராதியை வெளியிட்டுள்ளது.

இக்கட்டுரையாசிரியராகிய நான் அடுக்கு மொழியகராதி, ஒலிக்குறிப் பகராதி, ஐம்பொறியகராதி, எதிர்ப்பத அகராதி, பெண்ணின் பெயர்கள் முதலிய சிறப்பகராதிகளை வெளி யிட்டுள்ளேன். நிகண்டுகளில் காணப்பெறும் தெய்வப் பெயர்த் தொகுதியை விரிவாக்கி 'அருட்செல்வம்' என்ற தலைப்பில் பல அகராதிகளை வெளியிட்டுள்ளேன், மன அகராதி, பலபொருள் ஒருசொல் அகராதி, ஒருபொருட் பன்மொழி அகராதி, காரணப்பெயரகராதி, இலக்கியச் சொல்லகராதி, உருவக அகராதி, அழகுத்தொடர் அகராதி, வடசொற்றமிழ் அகர முதலி, வட்டார

வழக்கு அகராதி, நயமொழி அகராதி, மேற்கோள் அகராதி, இலக்கியச் சொற்றொடர் அகராதி, விகுதி அகராதி முதலிய பல சிறப்பகராதிகளைத் தொகுத்து வைத்துள்ளேன்.

இன்னும் வெளியிடப் பெற வேண்டிய சிறப்பகராதிகள்: ஆங்கிலம், பிரெஞ்சு, செருமன், உருசியன் முதலிய உலகப் பெரு மொழிகளில் காணப்பெறுவது போலக் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றிய சிறப்பகராதிகள் தமிழிலும் வெளிவரவேண்டும். கலைகள், கல்வி, நூலகவியல், மருத்துவம், கட்டடங்கள், வணிகம், வங்கி, சமயம், சட்டம், கணிதம், கப்பல், வாணிகம், தத்துவம், உளவியல், வானொலி, விண்ணியல், தொலைக்காட்சி, விலங்கியல், ஆட்சித்துறை, இயற்பியல், வேதியியல், பொறியியல், மின்பொறியியல், பொருளாதாரம், திரைப்படம், ஊர்திகள், விளம்பரம், வரிகள், மின்னியல் கருவிகள், பணம், மீன்பிடிப்பு, செடி, கொடி, மரங்கள், உடலியல், திறனாய்வு, தொல்பொருள், வானூர்தி, காடுகள், நிலவியல், உலோகங்கள், அணிகள், சுரங்கம், தாதுப்பொருள்கள், எண்ணெய், வண்ணம், எந்திரங்கள், கப்பல்துறை, அச்சகத்துறை, வழக்கு மன்றம், விளையாட்டுகள், சமையல், கைத்தறி, நகரமைப்பு, தொழிற்சாலை, கால்நடை அறிவியல், குற்றவியல், பிறப்பியல், மரப்பொருள்கள், தொழிற்கருவிகள், செய்திப் போக்குவரத்து, நிழற்படம், இலக்கியக் குறியீடுகள், கண்ணாடித் தொழில், துணியியல் முதலிய எண்ணற்ற துறைகளைப் பற்றிய சிறப்பகராதிகள் வெளிவரவேண்டும்.

முடிப்புரை:

உலகப் பெருமொழிகளோடு ஒப்பிடும்போது தமிழில் அகராதித் துறை மிகவும் பின்தங்கிய நிலையிலே உள்ளது. மாணவர்கள் தமிழ் அகராதிகளைப் பயன்படுத்துவதில்லை. நிகண்டுகளை மனப்பாடம் செய்து வந்த வழக்கம் மறைந்தது. நூல்களைப் படிப்பதைப்போல அகராதிகளைப் படிக்கும் வழக்கம் இன்னும் தோன்றவில்லை.

பள்ளி, கல்லூரிப் பாடத் திட்டங்களை வகுப்பவர்கள் அவற்றில் அகராதிக்குத் தக்க இடம் கொடுக்க வேண்டும். அகராதிகளைப் பயன்படுத்தும் முறைபற்றித் தமிழாசிரியர்கள் மாணவர்களுக்கு எடுத்து விளக்க வேண்டும். 'சொல்வளம், அறிவுவளம், பெறுவதற்கு அகராதிகளே சிறந்த வழி' என்பதை மாணவர்கள் உணருமாறு செய்ய வேண்டும்.

கடைசியாக, 'வளரும் தமிழ்' என்ற நூல்ல் திரு. சோமலெ அவர்கள் கூறிய கருத்தை ஈண்டு வழிமொழிய விழைகின்றேன்.

"இன்றைய நிலையில் ஆட்சியைத் தமிழில் நடத்தவும் அறிவியல் நூல்களைத் தமிழில் கற்பிக்கவும் பயன்படக்கூடிய புதிய அகராதி தேவையாக இருக்கிறது. பல மொழிகளிலிருந்து தமிழில் நூல்களை மொழிபெயர்க்க வேண்டியிருப்பதால் ஐரோப்பிய மொழிகளிலிருந்தும் முக்கியமான இந்திய மொழிகளிலிருந்தும் நேர்மொழி பெயர்ப்பாகத் தமிழ் அகராதிகள் வெளிவர வேண்டும்."

தமிழ்க்கலை
தமிழ் 7, கலை 1, 2

# பயிற்றகராதி

சு. இராசாராம்

மொழியியல் ஒரு மொழியின் இலக்கணத்தையும் அதன் அகராதிச் சொல்லையும் தனித் தனிக்கூறுகளாக ஆராய்கிறது. இதன் பொருள், இலக்கணமும் அகராதிச் சொல்லும் தனித்தனியானவை என்பது அன்று. இவையிரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடையவை; ஒன்றையொன்று சார்ந்து நிற்பவை. அகராதிச் சொல்லிற்கென ஒரு கொள்கையை உருவாக்குவதற்கென்றே மொழியியல் இவ்விரண்டையும் ஒரு மொழியின் தனித்தனிக் கூறுகளாகப் பிரித்துக் கொண்டது எனலாம். ஆனால் மொழியியல் கொள்கை வளர்ச்சியில் ஒரு காலகட்டம் வரை இலக்கண விளக்கத்திற்கு மட்டுமே பல கொள்கைகள் தோன்றின. இவை அகராதிச் . சொல்லைப்பற்றி அவ்வளவாக விளக்கவில்லை. இதன் விளைவால் இலக்கணத்திற்கும் அகராதிச் சொல்லிற்கும் இடையே நிலவிய இடைவெளி வெகு காலமாக நிரப்பப்படாமலே இருந்தது. 1965-இல் நோம் சோம்சுகியின் மாற்றிலக்கணக் கொள்கை ஒரு மொழியின் சொற்களஞ்சியத்தை (Lexicon) விரிவாக விளக்க வழிவகுத்தது. இது மொழிகற்பித்தல் நோக்கில், மொழியியல் கொள்கை வளர்ச்சியில் ஏற்பட்ட முக்கியமான மாற்றம். ஒரு மொழியின் இலக்கணத்தில் சொற்களஞ்சியத்தின் பங்கை இவ்விலக்கணக் கொள்கை விவரித்த அளவிற்கு வேறு எந்த இலக்கணக் கொள்கையும் விளக்கவில்லை.

மொழியியல் கொள்கைகளின் வளர்ச்சியையொட்டி அவற்றைப் பயன்படுத்திக் கற்பிக்கும் முறைகளும் உத்திகளும் வளர்ந்து வந்தன. ஒரு மொழியைக் கற்பிப்பதில் இலக்கண-மொழிபெயர்ப்பு முறை தொடங்கிப் பல்வேறு மொழியியல்- கொள்கைகளைக் கற்பிக்கும் மொழியின் இலக்கணக் கூறுகளுக்கேற்பப் பயன்படுத்திக் கொள்ளும் இன்றைய பன்னோக்குத் திரட்டு (eclectic) முறை வரை மொழியியல் கொள்கைகளின் ஆதிக்கத்தைப் பார்க்கிறோம். இவ்வாறு மொழியியல் கொள்கைகள் மொழிகற்பித்தலில் பயன்படுத்தப்பட்டு வந்த முறை கொள்கை மொழியியலின் வளர்ச்சியை அப்படியே பயன்பாட்டு மொழியியலிலும் (Applied Linguistics) பிரதிபலித்து வந்தது. இதன் விளைவாக, அகராதிச் சொல்லைத் தவிர்த்த அதே நேரத்தில் இலக்கணத்தை மட்டுமே விளக்கி வந்த மொழியியல் கொள்கைகள் மொழி

கற்பித்தலிலும் அகராதிச் சொல் தொடர்பான ஆராய்ச்சிக்கு வழி வகுக்கவில்லை. இதன் காரணமாக, மொழி கற்பித்தலில் ஒரு மொழியின் இலக்கணம் கற்பிக்கப்பட்ட அளவிற்கு அம்மொழியின் அகராதிச் சொல் கற்பிக்கப்படவில்லை. இதனால் மொழியைக் கற்றவரின் சொற் களஞ்சியப் பெருக்கு குறைவாக இருந்ததோடு மொத்த மொழி யமைப்பில் ஓர் அகராதிச் சொல்லின் இடமோ, அதன் இலக்கண இயல்பு களோ கற்பவர்க்குச் சரியாகத் தெரியாமற் போயின.

கொள்கை மொழியியலில் சோம்சுகியின் சொற்களஞ்சியம் அகராதிச் சொல்லைப் பற்றிய ஆராய்ச்சிக்கு வழிவகுத்தது என்று பார்த்தோமல்லவா? இவ்வாராய்ச்சி மொழிகற்பித்தலில் எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்றே கூற வேண்டும். இந்நிலையில் மொழியியல் கொள்கைகளைப் பயன் படுத்தி மொழியைக் கற்பிப்பதற்கெனப் பல பயிற்று இலக்கணக் கொள்கைகள் (Pedagogical Grammars) பயன்பாட்டு மொழியியலில் தோன்ற ஆரம்பித்தன. இப்பயிற்று இலக்கணங்களைப் பற்றிய சில கருத்துகள் இக்கட்டுரை அறிமுகப் படுத்துகிற பயிற்றகராதியின் அமைப்பைப் புரிந்து கொள்ள உதவும்.

ஓர் அன்னிய மொழியின் இலக்கணத்தைக் கற்பிப்பதற்காக எளிய பயிற்று விதிகளைக் கையாளும் ஒரு வகை நடைமுறை இலக்கணத்தைப் பயிற்று இலக்கணம் எனலாம். இத்தகைய பயிற்று இலக்கணத்திற்குப் பல அறிவியல் இலக்கணங்கள் (Scientific Grammars) ஆதாரமாக அமையலாம். ஆனால், அடிப்படையில் பயிற்று இலக்கணத்தின் நோக்கமும் ஓர் அறிவியல் இலக்கணத்தின் நோக்கமும் வெவ்வேறாகும். அறிவியல் இலக்கணம் ஒரு மொழியைப் பேசுகின்றவரின் மொழித்திறனை ஓர் ஒழுங்கான அமைப்பில் விளக்க முற்படுகிறது. பயிற்று இலக்கணமோ ஒரு மொழியைக் கற்பவரின் மனத்தில் அம்மொழியின் இலக்கணத்திறனையும் பரிமாற்றத்திறனையும் வளர்க்க முயல்கிறது. இதற்கென பல உத்திகளைக் கையாளுகிறது.

அறிவியல் இலக்கணம் ஒரு மொழியின் மொத்த மொழியமைப்பை விளக்குவதை மட்டுமே தன் நோக்கமாகக் கொள்ள, பயிற்று இலக்கணமோ ஒரு மொழியைக் கற்பவரின் மொழித் தேவையை அடிப்படையாகக் கொண்டு கற்பவர்க்கென்றே எழுதப்படுகின்றது. இவ்வாறு கற்பிக்கும் மொழியின் இலக்கண விதிகளை எளிதாகக் கற்பிப்பதைப் பயிற்று இலக்கணம் நோக்கமாகக் கொண்டிருப்பதால் பல அறிவியல் இலக்கணங்களின் கூறுகளை கற்பிக்கும் மொழியின் இலக்கணக் கூறுகளுக்கேற்றவாறு தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. எனவே, பயிற்று இலக்கணம் மொழி கற்பதை எளிமைப்படுத்தும் பொருட்டுப் பல அறிவியல் இலக்கணங்களிலிருந்து பொருத்தமான கூறுகளைப் பொறுக்கி எடுத்துப் பயன்படுத்துகிற பன்னோக்குத் திரட்டு முறையைக் கொண்டது எனலாம்.

அறிவியல் இலக்கணமின்றி ஒரு பயிற்று இலக்கணத்தை எழுத இயலாது. அறிவியல் இலக்கணம் தரும் ஒரு மொழியின் விரிவான விளக்கத்தை அம்மொழியைக் கற்பிப்பதற்காக

மொழியாசிரியர் பயன்படுத்திக் கொள்கிறார். ஒரு பயிற்று இலக்கணம் இவ்வாறு உருவாகும் நிலையில் அறிவியல் இலக்கண விதிகளுக்கு இணையாகப் பயிற்றுவிதிகள் உருவாக்கப்படுகின்றன. இப்பயிற்று விதிகளின் கூட்டு வடிவம் பயிற்று இலக்கணமாகும். பயிற்று இலக்கணம் எழுதப்படும்போது அறிவியல் இலக்கணம் தன் கொள்கையை அப்படியே ஆரம்பம் முதல் முடிவு வரை காப்பாற்ற வேண்டும் என்பதில்லை. பயிற்று இலக்கணத்தின் பொருட்டு அறிவியல் இலக்கணத்தை எப்படி வேண்டுமானாலும் கையாள் வதற்கு ஒரு மொழியாசிரியர்க்கு உரிமை உண்டு.

இவ்வாறு பல அறிவியல் இலக்கணங்களின் அடிப்படையில் பயிற்று விதிகளின் மூலமாக உருவாகும் பயிற்று இலக்கணம் கற்பவரின் மனத்தில் பொருத்தமான கற்கும் உத்தி முறைகளை (Learning Strategies) வளர்க்கிறது. பயிற்று இலக்கணத்தின் முடிவான நோக்கம் இதுவேயாகும்.

இனி, பயிற்றகராதியின் அமைப்பு முறைக்கு வருவோம். பயிற்று இலக்கணத்தைப் போலவே பயிற்ற கராதியும் கற்பிக்கப்படும் மொழியின் இலக்கணப் பயிற்று விதிகளை அகராதிச் சொல் அமைப்போடு தொடர்புபடுத்திக் காட்டுகிறது. இதன் மூலம் கற்பவரின் மனத்தில் மொழியைக் கற்கும் உத்தி முறைகளை விருத்தி செய்ய முயற்சிக்கிறது.

பயிற்று இலக்கணத்தைப் போல் பயிற்றகராதியும் மொழியாசிரியரை மையப்படுத்தி எழுதப்படுகின்ற ஒரு பாடநூல். இருந்தாலும் மொழியைக் கற்பதில் கற்பவர்க்கு உண்டாகும் சிக்கல்களைத் தீர்க்கும் வகையில் அவரை மனத்தில் கொண்டு இவ் வகராதி எழுதப்படுகின்றது. இலக்கணத்திற்கும் அகராதிச் சொல்லிற்கும் இடையேயுள்ள உறவு நிலையை மையமாகக் கொண்டு இவ்வகராதி எழுதப்படுவதால் ஏனைய வழக்கமான அகராதிகளைப் போலல்லாமல் மொழியைக் கற்பதில் கூடிய செயற்பாடு உடையதாக விளங்குகிறது. மேலும் ஒவ்வோர் இலக்கணப் பயிற்று விதியையும் ஒவ்வோர் அகராதிச் சொல்லோடும் தொடர்புப்படுத்திக் காட்டுவதால் இப்பயிற்றகராதி எல்லா மொழி யமைப்புகளையும் முழுமையாக விளக்குவதோடு ஒரு தொடர்நிலையில் ஒன்றன்பின் ஒன்றாக அவற்றைக் கற்பவர் தம் மனத்தகத்தே உட்படுத்திக் கொள்ளவும் உதவுகிறது.

இக்கட்டுரையில் முன்னரே குறிப்பிட்டபடி சோம்சுகியின் சொற்களஞ்சியக் கருத்து பயிற்ற கராதியின் ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. சோம்சுகியின் சொற்களஞ்சியமும் ஒரு வகை அகராதியே. இதில், விளக்கப்படுகின்ற மொழியின் சொற்களும் சொற் பகுதிகளும் அடங்கும். ஒவ்வொரு சொல்லின் அக ஒலியனமைப்பு (Phonological representation), பிற உருபன்கள் வரிசையாகத் தொடர்ந்து வரும் முறைமை, அதன் இயல்பான தொடரியல் கூறுகள் (Syntactic features) மற்றும் பொருண்மைக் கூறுகள் (Semantic features) ஆகிய செய்திகள் இச்சொற் களஞ்சியத்தில் அடங்கும். சோம்சுகியின் இச் சொற்களஞ்சிய அமைப்பு மாற்றிலக்கணக் கொள்கை

வளர்ச்சியில் பல்வேறு மாற்றங்கள் அடைந்து வளர்ந்துள்ள போதிலும் அவரது 1965-ஆம் ஆண்டுக் கருத்தே ஏற்றதாகக் கொள்ளலாம்.

இனி, சோம்சுகியின் சொற்களஞ்சியத்தில் ஒரு சொல் இடம் பெறும் வகையைப் பார்ப்போம். எடுத்துக்காட்டாக, 'அங்கு' என்ற அகராதிச் சொல்லை எடுத்துக் கொள்வோம். இச்சொல் சொற்களஞ்சியத்தில் /aṅku/ என்ற அதன் ஒலியனமைப்போடு பதிக்கப்படுகிறது. இவ்வாறு பதிக்கப்பட்ட பின்னர் இவ்வகராதிச் சொல்லின் ஒலியமைப்பைச் சொற்களஞ்சியம் விளக்கும்.

இச்சொல்லின் ஒலியமைப்பு சில குறியீட்டுக் கூட்டுகளால் (bundle of features) குறிக்கப்படுகிறது. இவ்வொலியமைப்புப் பற்றிய விளக்கம் ஒலியனியல் விதிகளால் (phonological rules) பெறப்படுகிறது. இதனைக் கீழ்வருமாறு காட்டலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| சொல் பதிவு | *a* | *ṅ* | *k* | *u* |
| ஒலியன் விதி | | (+மெய்)<br>(+ மூக்கு)<br>(+ குரல்) | (+ மெய்)<br>(+ அடைப்பு)<br>(– குரல்) | |
| ஒலி அமைப்பு | | | (+ மெய்)<br>(+ அடைப்பு)<br>(+ குரல்) | |
| */aṅku/* | [ Λ ] | [n] | [g] | [t] |
| | | [Λngt] | | |

(+ அடைப்பு), ( _ குரல்) ஆகிய கூறுகளைக் கொண்ட ஒலிகள் மொழியிடையில் மூக்கொலியைத் தொடர்ந்து வரும்போது (+ குரல்) பெற்று வழங்கும் என்பது இங்குக் கூறப்படும் ஒலியன் விதி.

இவ்வாறே ஒவ்வொரு சொல்லும் பயிற்றகராதியில் பதிக்கப்பட வேண்டும் என்பதில்லை. பொதுவான இவ்வொலியன் விதிகளைப் பயிற்று இலக்கணத்திலோ அல்லது பயிற்று அகராதியின் முன்னுரையிலோ குறிப்பிடலாம். ஒவ்வொரு சொல்லும் அதன் ஒலியமைப்போடு கொடுக்கப்பட்டால் போதுமானது. அதாவது, 'அங்கு' என்ற சொல் 'அங்கு (aṅku)' என்று பயிற்றகராதியில் இடம் பெற்றால் போதுமானது.

ஓர் அகராதிச் சொல் மொழிச் சூழலில் எவ்வாறு வழங்குகிறது என்பதை அதன் பொருண்மைக் கூறுகள் இயல்பாய் நமக்குக் காட்டும். சோம்சுகியின் சொற்களஞ்சியம் ஒவ்வொரு அகராதிச் சொல்லிஃ

பொருண்மைக் கூறுகளையும் விளக்க மாகக் காட்டும் முறையை எந்த மொழியாசிரியரும் ஏற்றுக் கொள் வதில்லை. ஏனெனில், மொழியைக் கற்பிப்பவருக்கும் கற்பவருக்கும் இப் பொருண்மைக் கூறுகள் பாரமாக அமைகின்றன. பெரும்பாலும் சூழ் நிலையைப் பொறுத்து இப் பொருண்மைக் கூறுகளைக் கற்பவர் புரிந்து கொள்ள முடிவதால் இவற்றைப் பயிற்றகராதியில் தவிர்க்கலாம். மேலும், பொரு ளமைப்பைப் பற்றிய பல ஆய்வுகள் 'பொருண்மைக் கூறுகள் ஒரு மொழிக்கு மட்டுமே உரியன அல்ல' என்றும் 'அவை எல்லா மொழிகளுக்கும் பொருந்தும் பொதுமைக் கூறுகளே' (universal features) என்றும் தெளிவுபடுத்தியுள்ளன. எனவே, ஒரு மொழியைக் கற்க ஒருவர் முற்படும் போதே எவ்வித வெளிப்படையான குறிப்பும் இன்றி இயல்பாகவே இவற்றை உணர்ந்து கொள்ளவியலும். அதனால் ஒரு சொல்லின் பொருண்மைக் கூறுகளைச் சோம்சுகி யின் சொற்களஞ்சிய அமைப்புப்படித் தராமல் அச் சொல்லின் விளக்கத்தைத் தரலாம்.

இவ்வாறு விளக்கம் மட்டுமே கொடுப்பதில் வழக்கமான ஓர் அகராதியிலிருந்து பயிற்றகராதி எந்த வகையிலும் மாறுபடவில்லை என்பது உண்மையே. இருந்தாலும், ஒரு மொழியைக் கற்கும்போது மொழிச் சூழலோடு சமூகச் சூழல் பற்றிய அறிவு கற்பவர்க்கு இருப்பதாலும் இதன் மூலம் மொழியைப் புரிந்து கொள்ளும் ஆற்றலை இயல்பாகவே அவர் கைவரப் பெற்றிருப்பதாலும் இப் பொருண்மைக் கூறுகளைப் புரிந்து கொள்வது அவ்வளவு கடினமாக இருப்பதில்லை. மேலும், ஒரு மொழியாசிரியர் ஒரு மொழியைக் கற்பிக்கும் போது பொதுமை இலக்கணத்தில் (universal grammar) எந்தப் பகுதி கற்பிக்கின்ற மொழியில் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதைக் கற்பித்தலின் ஒரு பகுதியாக விளக்கி வருவதால் பொருண்மைக் கூறுகளைக் கற்பவரால் எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். எனவே, பயிற்றகராதியில் பொருண்மைக் கூறுகளைச் சுட்டிக் காட்டுவதற்குப் பதிலாக அகராதிச் சொல்லின் பொருளை விளக்கமாகத் தந்தால் போதுமானது.

பயிற்றகராதியில் ஓர் அகராதிச் சொல் பதியப்படும் முறையை விளக்குவதற்கு முன் இதன் பொதுவான அமைப்பைப் பற்றிய ஒரு கருத்தை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். வழக்கமான அகராதியைப் போல் அகரத்தில் தொடங்கி மொழியிலுள்ள எல்லாச் சொற்க ளையும் பயிற்றகராதி பதிவு செய்து கொள்ள வேண்டும் என்பதில்லை. கற்பிப்பதற்கும் கற்பதற்கும் கடினமாக இருக்கும் ஒரு குறிப்பிட்ட இலக்கணப் பகுதிக்கு மட்டுமெனப் பயிற்றகராதி எழுதப்படலாம். வழக்கமான அகராதியைப் போலல்லாமல் கற்கின்ற மொழியில் தகுந்த கற்கும் உத்தி முறைகளை உருவாக்குவது பயிற்றக ராதியின் நோக்கமாகையால் குறிப்பிட்ட ஓர் இலக்கணக் கூறுக்காக வும் (Grammatical Category) இவ்வகராதி எழுதப்படலாம். எடுத்துக்காட்டாக, தமிழை அயல்மொழியார்க்குக் கற்பிக்கும்போது வினைச்சொல் அமைப்பைப் புரிந்து கொள்ளக் கற்பவர்க்குச் சிறிது கடினமாக இருக்கும். குறிப்பாக, வினைச்

சொற்களின் இறந்த கால இடைநிலைகள் கற்போர்க்கு எப்போதும் சிக்கலாகவே இருக்கும். இதற்கு மூன்று முக்கியமான காரணங்களைக் குறிப்பிடலாம். ஒன்று, இறந்தகால இடைநிலைகளின் எண்ணிக்கை மிகுதி; இரண்டு, பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இறந்தகால இடைநிலைகளிடையே காணப்படும் வேறுபாடு; மூன்று, தமிழில் வினைப் புடைபெயர்ப்பின் இயல்பு . தமிழில் மொத்தம் எட்டு இறந்த கால இடைநிலைகள் உள்ளன. இவை வினையடிகளில் வந்து வழங்கும் இயல்பில் ஓர் ஒழுங்கு இல்லை. எடுத்துக்காட்டாக, அழு, தொழு, உழு போன்ற வினைகள் -த்- என்ற இறந்தகால இடைநிலையை எடுக்க, எழு, விழு என்பன -ந்த்- என்ற இறந்த கால இடைநிலையை எடுக்கின்றன. இதனால், தமிழை அன்னிய மொழியாகக் கற்பிக்கும்போது *அழுந்தான், *தொழுந்தான், *உழுந்தான் என்ற பிழையான வினைமுற்றுகளை மாணவர் எழுது வதைத் தவிர்க்க முடியாது. இதைப்போலவே, *எழுதான், *விழுதான் என்ற பிழைகளும் மாணவர் எழுதும் கட்டுரைகளில் மலிந்து காணப் படுகின்றன. இவ்வினைகளைத் தவிர ஏனைய வினைகளோடு பிற இறந்த கால இடைநிலைகளைச் சேர்க்கும் நிலையிலும் மாணவருக்கு இத்தகைய குழப்பநிலை உள்ளது.

இரண்டாவதாக, தமிழ் இருநிலை வழக்குள்ள மொழி (diglossia). பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே எல்லா இலக்கண நிலைகளிலும் மிகுந்த வேறுபாட்டைப் பார்க்கிறோம். பேச்சு மொழியில் -ஞ்ச்- என்ற இறந்த கால இடைநிலைகள், எழுத்து மொழியிலுள்ள இரண்டு இறந்த கால இடைநிலைகளுக்குப் பொதுவாக வழங்குகின்றது.

எடுத்துக்காட்டு:

| | | | | |
|---|---|---|---|---|
| குனி/ | குனிஞ்சான் | - | குனிந்தான் | -ந்த- |
| பெய்/ | பெய்ஞ்சுது | - | பெய்தது | -த்- |

பேச்சுமொழியைக் கற்று, பின்னர் எழுத்து மொழியைக் கற்கும்போது -ஞ்ச்- என்ற இறந்த கால இடைநிலை எழுத்துகள் மொழியில் -ந்த்- மற்றும் -த்- என்ற இரண்டு இறந்த கால இடைநிலைகளைக் குறிக்கின்றன என்பதைத் தமிழைக் கற்கும் அயல் நாட்டு மாணவர் எப்படி அறிவார்? இவ்வறியாமையால் எழுத்துத் தமிழில் ஏற்படும் பிழைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

மூன்றாவதாக, தமிழில் வினைப் புடைபெயர்ப்பைப் பொறுத்த வரையில் இறந்த கால இடைநிலைகளுக்கு முக்கியமான பங்கு உண்டு. இறந்தகால இடைநிலைகள் என்ற பொருளைத் தவிர வேறு வினைச்சொல் வகைகளிலும் இவை இடம் பெறுகின்றன. எடுத்துக் காட்டாக 'கொடு' என்ற வினை 'கொடுத்தால்', 'கொடுத்தாலும்' 'கொடுத்து (கொடுத்துப்பார்)' என்பன போன்ற வினைச் சொற்களில் இறந்த காலப் பொருளைத் தரவில்லை யென்றாலும் இவற்றை மேலே குறிப்பிட்டவாறு ஒரு வினையைப்

பயன்படுத்திப் புடைபெயர்க்கவும் இறந்தகால இடைநிலைகளைப் பற்றிய தெளிவான அறிவு தேவைப்படுகிறது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக வினைப் புடைபெயர்ப்பே தமிழில் வினையாலணையும் பெயர் மற்றும் பெயரெச்ச வகைகளை உருவாக்கு கின்றது. ஆங்கிலத்திலோ பிற இந்திய-ஐரோப்பிய மொழிகளிலோ இவ்வியல்பு இல்லை. எனவே மொழி கற்பித்தலில் தமிழின் வினை உருபனியல் (Verb morphology) முக்கிய பங்கு வகிக்கிறது எனலாம். ஆகவே வினைச்சொல்லிற்கென் ஒரு பயிற்றக ராதியை உருவாக்கிக் கொள்ள வேண்டியது தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் அவசியம். மொழி கற்பித்தலில் ஒரு பயிற்றகராதியின் தேவை இவ்வாறே உணரப்படுகிறது. வினைச் சொற்களைப் பொறுத்த வரையில் தமிழைக் கற்கும்போது பிழைகள் நேரா வண்ணம் அவ் வப்போது இவ்வகராதியை நோக்கு நூலாகப் பயன்படுத்திக் கொள்ளவும் ஒவ்வோர் அகராதிச் சொல்லைத் தொடர்ந்து வரும் இலக்கணக் குறிப்புகளின் உதவியால் கற்கும் உத்திமுறைகளை விருத்தி செய்து மொழித்திறனை வளர்க்கவும் இப் பயிற்று அகராதி மாணவருக்கு உதவும்.

இனி, வினை உருபனியலை விளக்குவதற்கென ஒரு பயிற்றகராதி எழுதப்படுமானால் அதன் அமைப்பு முறை எவ்வாறிருக்க வேண்டும் என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம். பயிற்று இலக்கணத்தைப் போலவே பயிற்றகராதியை எழுத முற்படும் போதும் பல அறிவியல் இலக்கணங்கள் ஆதாரமாக அமையலாம் என்று பார்த்தோம்.

சோம்சுகியின் சொற்களஞ்சிய அமைப்பை இவ்வகராதியின் ஆதார மாகக் கொண்டாலும் வினை உருபனமைப்பைத் தெளிவாகத் தருவதில் விளக்க மொழியியல் கொள்கை பெரிதும் பயன்படும். எனவே, அக்கொள்கையையும் பயிற்றக ராதிக்குப் பயன்படுத்திக் கொள்ள லாம். வினைப் பயிற்றகராதியின் சில மாதிரிப் பதிவுகள் கொடுக்கப் பட்டுள்ளன (காண்க : பின்னிணைப்பு).

வழக்கமான அகராதிக்கும் பயிற்றகராதிக்குமிடையே உள்ள வேற்றுமைகள் பல.

முதலாவதாக, நோக்கம், குறிக்கோள் ஆகியவற்றோடு அகராதி அமைப்புமுறையிலும் உத்தியிலும் பயிற்று அகராதி வேறுபட்டது. எல்லாச் சொற்களையும் கூறாமல் பயிற்றகராதி சிக்கலான இலக்கணக் கூறுகளை விளக்குவதற்குத் தேவையான சொற்களை மட்டுமே தருகிறது. அதாவது பயிற்றகராதியின் அமைப்பு பெயர், வினை எனப் பல்வேறு இலக்கணக் கூறுகளாக அமைந்து ஒவ்வொன்றின் கீழும் சொற்கள் அகரவரிசையில் இடம்பெறுகின்றன. ஓர் இலக்கணக் கூறுக்கென்று தனியாகவும் பயிற்றகராதி எழுதப் படலாம். வழக்கமான அகராதியைப் போலல்லாமல் ஒவ்வோர் இலக்கணக் கூற்றைப் பற்றிய விரிவான இலக்கணம் பயிற்றகராதியின் முன்னுரையாக அமையும். ஒவ்வோர் அகராதிச் சொல்லமைப்பும் மொழியின் மொத்த அமைப்போடு தொடர்பு படுத்தப் படுவதால் பயிற்றகராதி நோக்கு நூலிற்கு மேலாக ஒரு பாட நூல் என்ற முறையிலேயே மொழி கற்றலில் பயன்படுகிறது.

பயிற்று அகராதியின் பயனைச் சற்று ஆழமாக அளவிட்டுப் பார்க்கும் போது அதன் பயன்பாட்டு எல்லை வழக்கமான அகராதியை விடக் குறைவு என்பது புலனாகும். கற்கும் மொழியில் எல்லா நிலைகளிலும் தேர்ச்சி பெற்ற பின் ஒரு மாணவருக்கு இத்தகைய அகராதியின் பயன் மிகக் குறைவே. இதன் பொருள் ஒரு மொழியில் நன்றாகத் தேர்ச்சி பெற்ற பின்னர் முழுவதுமாகப் பயிற்று அகராதி பயன்படாது என்பதன்று. எல்லா வகையிலும் ஒரு வழக்கமான அகராதியைப்போல் பயிற்று அகராதியும் நோக்கு நூலாக உதவும். எனவே வழக்கமான அகராதிக்கும் பயிற்று அகராதிக்கும் இடையே காணப்படும் மற்றொரு முக்கியமான வேறுபாடு காலமும் அக்காலத்தில் பயிற்று அகராதியின் பயனளவும் (utility) ஆகும். கற்கும் மொழியில் தேர்ச்சி பெறப்பெற இவ்வகராதியின் பயனளவு குறைந்து கொண்டே வரும். இதுவே பயிற்றகராதியின் பயன்பாட்டு எல்லை.

பயிற்றகராதி இருமொழி அகராதி வகையைச் சார்ந்தது. மேலும் கூறினால், ஒரு குறுகிய எல்லைக்குட்பட்ட அகராதி வகையைச் சார்ந்தது எனலாம். ஒரு மொழியைக் கற்கும் சூழ்நிலையில் சிக்கலான மொழியமைப்பு உடையதும் தொடர்ந்து பிழைகள் நேருவதற்குக் காரணமாக அமைகின்றதுமான ஓர் இலக்கணக்கூற்றை மட்டுமே கருத்தில் கொண்டு இப்பயிற்றகராதி எழுதப்படுவதால் இது வரையறுக்கப் பட்ட (restricted) அகராதி வகை என்பது பொருத்தமாகும். வழக்கமான அகராதி வகையிலிருந்து இவ்வகராதி வேறுபட்டு நிற்பதும் இவ்வியல்பினாலேயாகும்.

சுகுசுதா (1971), Pedagogical Dictionary என்ற கலைச்சொல்லின் கீழ்க்கற்பவர் அகராதியைக் (Learner's Dictionary) குறிப்பிடுகிறார். ஓரளவிற்கு இவ்வகராதியின் தன்மையில் - ஆனால் நோக்கு நூலாகவே மட்டுமன்றிக் கற்பவர் மனத்தில் தகுந்த கற்கும் உத்தி முறைகளை உருவாக்குவதும் இப்பயிற்று அகராதியின் நோக்கம் என்பதைப் பார்க்கும்போது சுகுசுதாவின் Pedagogical Dictionary என்பதிலிருந்து இது வேறுபட்டது என்பது தெளிவாகும். இதனை நோக்குநூல் என்பதற்கு மேலாக நோக்குந்தோறும் மொழியைக் கற்பிக்கும் பண்பு மிகுந்து நிற்கும் பயிற்றுநூல் என்பதே பொருந்தும்.

**உதவிய நூல்கள்**


Noblitt, James S. (1972) "Pedagogical Grammar: Towards a Theory of Foreign Language Materials Preparation", International Review in Applied Linguistics Vol. X No.4.

Rajaram, S. (1985) "On Writing Pedagogical Dictionaries" Working Papers in Applied Linguistics, Pondicherry: International School of Dravidian Linguistics.

--------- (1986) English-Tamil Pedagogical Dictionary, Thanjavur, Tamil University.

Zgusta, Ladislav (1971). Manual of Lexicography, The Hague : Mouton.

## பின்னிணைப்பு

blanch: to whiten by removing colour; bleach *vellaiyakku* (< *vellaiyaku*, 3) (vellaiyakki) Tr,3.

blandish: to coax or influence by gentle flattery; cajole koncu (konji) Tr,3; *pasappu* ( pasappi) Tr,3.

blanket 1. to cover with *marai* (*marai*,2) (marai) Tr, 6. 2. to cover as with blanket mutu (muri) Tr,3.

blare 1. to emit a loud raucous sound *ekkalamitu (ekkalamiri)* Intr, 4a. 2. to sound loudly *mulanku* (> *mulakku*, 3) (mulangi) Intr,3.

blast: to ruin, destroy *sampalakku* (<*sampalaku*, 3) (sambalakki) Tr, 3; *suttuk karukku* (< *suttuk karuku*, 3) (suttikkarikki) Tr,3.

bleach: to make whiter or lighter in colour *velira sey* (velira sey) Tr, la.

blear: to make (the eyes or sight) dim, as with tears or inflamation *mankalakku* (< *mankalaku*, 3) (mangalakki) Tr,3.

bleed: as blood *kasi* (kasi) Intr,2.

blend: to mix smoothly and inseparably together kala - (kala) Tr, 7.

bless: *asirvati* (asirvadi) Tr,6; *valttu* (valtti) Tr,3.

blind: *kurutakku* (< *kurutaku*, 3) (kurirakki) Tr,3.

blindfold: to cover the eyes of with a cloth, bandage, or the like, to keep from seeing *kannaikkattu* (kannaikkatti) Intr,3.

blink: *imai* (imai) Tr,6.

blister: to become blistered *punnakku* (> *punnaku*,3) ( punnakki) Tr, 3.

---

English - Tamil Pedagogical Dictionary by S. Rajaram.

தமிழ்க் கலை
தமிழ் 7, கலை 1, 2

# இடப்பெயர்த் தொகுப்புகள்
## (பட்டியல்கள், அகராதிகள்)

கி. நாச்சிமுத்து

**அகராதிகள், கலைக் களஞ்சியங்களில் இடப்பெயர்கள்:** இடப்பெயர்கள் பெயர்ச் சொற்களாயினும் காலப் போக்கில் அவை சிறப்புப் பெயர் களாக மாறிவிட்டவை; இடங்களைச் சுட்டும் வெறும் அடையாளக் குறிகளாக நிற்பவை. எனவே, ஏனைய பெயர்ச்சொற்களுக்கு ஏற்படுவது போன்ற அளவில் வழக்கு வேறுபாடு, பொருள் விரிவு முதலியன அவற்றிற்கு இல்லை. இக்காரணத்தால் தான் அகராதியிலார் இடப் பெயர்கள், ஆட்பெயர்கள் முதலிய சிறப்புப் பெயர் கள் எல்லாவற்றையும் வழக்கமான மொழி அகராதியில் கொடுப்பதில்லை.

இத்தகைய பெயர்களில்

(1) மரபுச் சொற்களாக மாறி விட்டவை (கும்பகோணம், ஐயம் பேட்டை, மதுரை, சிதம்பரம்)

(2) பண்பாட்டோடு நெருங்கிய தொடர்புள்ளவை (கெட்டும் பட்டணம் சேர், குமரி ஆடப் போந்தேன், கங்கை, காவிரி, இமயம், தில்லை)

(3) ஒரு பொருள் பல பெயர்களாகி வருகின்றவை (கச்சி — காஞ்சி, உறையூர் — கோழி, காவிரிப் பூம்பட்டினம் — புகார், கூடல் — மதுரை, வஞ்சி — கருவூர்)

(4) மரூஉ வடிவங்கள் (தஞ்சை, கோவை, வீரை)

(5) ஆகு பெயர்களாக அமைபவை (தக்கோலம், கிடாரவன், அரு மணவன், சீனம், சீனி)

முதலியவற்றை மட்டும் தேர்ந்தெடுத்து அகராதிகளில் கொடுப்பது மரபு.

நம்முடைய பழைய நிகண்டுக ளான திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி முதலியவற்றிலும் பிற்கால அகராதிகளிலும் இம்முறையைப் பார்க்கலாம். பிங்கலம் 91 இடப் பெயர்களையும் சூடாமணி 54 இடப் பெயர்களையும் குறிப்பிடுகின்றன. இவற்றுள் ஒரு பொருள் பல பெயர்களாக அமைவனவே மிகுதி. சில ஆங்கில அகராதிகள் சில முக்கிய இடப்பெயர்களைத் தொகுத்துப் பின்னிணைப்பாகத் தருகின்றன.

இடப்பெயர்கள் இடம்பெறும் அடுத்த முக்கியமான தொகுப்பு நூல்கள், கலைக் களஞ்சியங்களாம்.

கலைக்களஞ்சியங்கள் இட்பெயர்களின்கீழ் வரலாறு, பண்பாடு ஆகிய செய்திகளையே மிகுதியும் தருகின்றன. எனினும் இவற்றில் எல்லாம் அனைத்து இடப்பெயர்களும் இடம் பெறுவதில்லை. எனவே மொழியின் சொல் தொகுதியைச் சேர்ந்த இடப்பெயர்களைப் பட்டியல் வடிவத்திலும் அகராதி வடிவத்திலும் தனித் தனியாகத் தொகுப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

**தொடக்க முயற்சிகள்:** இடப் பெயர்களைத் தொகுப்பது மொழி ஆராய்ச்சிக்கு மட்டுமின்றி அரசியல் நிருவாகம் நடத்துவதற்கும் வாணிபத்திற்கும் மற்றும் பல துறைகளுக்கும் தேவையானதாகும். தொடக்க காலத்தில் அரசர்கள் தங்கள் நாடுகளிலிருந்து இடப்பெயர்களையும் மற்றும் பல புள்ளி விவரங்களையும் ஏதோ ஒரு வகையில் திரட்டியிருக்க வேண்டும். சங்க காலத்தில் பாரியின் பறம்பு நாட்டில் முந்நூறு ஊர்கள் இருந்தனவாகச் சங்க இலக்கியம் குறிப்பிடுகின்றது (புறம். 110.3). உம்பற் காட்டிலிருந்த ஐந்நூறு ஊர்களைக் குமட்டூர்க் கண்ணனாருக்கு இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் கொடுத்த தாகப் பதிற்றுப்பத்தில் இரண்டாம் பதிகம் கூறுகின்றது. இதிலிருந்து பழங்காலத்தில் ஊர்ப்பெயர்த் தொகுப்புகள் இருந்திருக்கும் என ஊகிக்கலாம். ஆனால் அத்தகைய பழைய தொகுப்புகளுள் ஒன்றுகூட இன்று நமக்குக் கிடைக்கவில்லை. பழந்தமிழ் இலக்கியத்தில் காணப்படும் திணைப் பாகுபாடு, திணைக்குரிய ஊர்ப்பெயர்கள் ஆகியவை பற்றிய குறிப்புக்களைப் பார்க்கும்பொழுது அக்கால மக்கள் ஊர்ப்பெயர்களைத் தொகுத்து நோக்கி இருப்பதை அறியலாம். பக்திக் காலத்தில் சைவ வைணவத் தலங்கள், புகழ்பெற்ற சேத்திரக்கோவை, திருப்பதிக் கோவை, அப்பருடைய சேத்திரக்கோவை, சம்பந்தருடைய சேத்திரக்கோவை, சுந்தரருடைய ஊர்த்தொகை, திரு நாட்டுத் தொகை முதலியவற்றில் இறைவனமர்ந்த இடப்பெயர்களை விகுதி அடிப்படையில் தொகுத்துப் டுகிறார்கள். ஐயடிகள் காடவர் [illegible] பாடிய சேத்திர வெண்பா, உமாபதி சிவம் பாடிய திருப்பதிக் கோவை, திருவேங்கடநாதர் பாடிய 108 திருப்பதி அந்தாதி முதலியவை இறைவன் கோயில் கொண்ட கோயில்களின் தொகுப்புகளாக அமைகின்றன. தல புராணங்கள், சதக இலக்கியங்கள், தூது நூல்கள் முதலியவை வெவ்வேறு நோக்கத்தில் இடப்பெயர்களைத் தொகுத்துத் தருகின்றன. அண்மைக் காலத்தில் பயண வழிகாட்டி நூல்களாக அகரவரிசை அமைப்பில் சிவத்தல மஞ்சரி போன்ற நூல்கள் எழுந்துள்ளன. கொங்குமண்டல சதகத்தின் பின்னிணைப்பாகக் காணப் படும் கொங்குமண்டல ஊர்த் தொகை (18-ஆம் நூற்றாண்டு) கொங்கு நாட்டிலுள்ள பழமையான இடப் பெயர்களை நாடு வாரியாகத் தொகுத்துத் தருகிறது.

சோழர், பாண்டியர் முதலியோர் ஆட்சியிலும் நிலவருவாய்க் கணக்குக் காக இடப்பெயர்ப் பட்டியல்கள் இருந்தனவாகத் தெரிகிறது. மைசூர்ப் பகுதியில் எண்களோடு தொடர்பு பட்டு வழங்கி வரும் இடைதுறைநாடு ஏழாயிரம், வனவாசிப் பன்னீராயிரம் முதலிய வற்றில் வரும் எண்ணிக்கைகள் அப்பகுதியிலிருந்த ஊர்களின் தொகைகளைக் குறிப்பதாகக் கருதுகிறவர்களும்

உண்டு.

ஆங்கில ஆட்சி ஏற்பட்ட பின் நிலப்படம் வரைதல், நில வருவாய்க் கணக்கீடு முதலியவற்றுக்காக இடப் பெயர்களைத் தொகுக்கும் முயற்சிகள் நடந்தன. மெக்கன்சியினுடைய தொகுப்பில் பல இடங்களைப் பற்றிய வரலாறுகள் தொகுக்கப்பட்டுள்ளன. பின்னர் மாவட்ட நிருவாகக் கையேடுகளாக எழுந்த டிஸ்ரிக்ட் மானுவல்கள், கெஜட்டியர்கள் முதலியவற்றில் முக்கிய ஊர்களைப் பற்றிய விவரங்கள் தொகுத்துத் தரப்பட்டன. அதே காலத்தில் மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் துறையினரும் கிராமங்கள், சிற்றூர்கள் முதலிய இடங்கள் பற்றிய புள்ளி விவரங்களைத் தொகுத்து வெளியிட்ட தொகுப்புகள் தொடர்ச்சியாகக் கிடைக்கின்றன. அதே போன்று நிருவாகத்தினருக்காக, மாவட்டம் தோறும் அவ்வம் மாவட்டங்களிலுள்ள சிற்றூர், பேரூர்களின் தொலைவு, தங்கும் வசதி முதலியன அடங்கிய தொலைவுப் பதிவேடுகள் (டிஸ்டன்ஸ் ரிஜிஸ்டர்ஸ்) தொகுத்து வெளியிடப்பட்டன. பின்னர் தேர்தல், வாக்குச்சாவடிகள் அவற்றின் கீழ் அடங்கிய இடங்கள் பஞ்சாயத்துக்களின் பட்டியல்கள் முதலியன வெளியிடப்பட்டுள்ளன. இவைகளெல்லாம் மாநில அளவில் ஆங்கில மொழியிலேயே வெளியிடப்பட்டுள்ளன. சிலகாலத்திற்கு முன்பு தமிழக அரசு கிராமங்களின் அகர வரிசைப் பட்டியல் (1972) என்ற தொகுப்பினைத் தமிழில் தப்பும் தவறுமாக ஆங்கிலத்திலிருந்து ஒலி பெயர்ப்பு செய்யப்பட்ட வடிவங்களுடன் வெளியிட்டுள்ளது.[2]

அனைத்திந்திய அளவில் அஞ்சலகங்களின் பட்டியல்கள் வெளியிடப்பட்டுள்ளன. சர்வே ஆஃப் இந்தியாவின் சார்பில் நிலப்படங்களில் வந்துள்ள இடப்பெயர்களின் தொகுப்புகள் வெளியாகி உள்ளன. இராணுவ சர்வேத்துறையினர் வெளியிட்டுள்ள கெசட்டியார் ஆஃப் இந்தியா அண்டு பாகிஸ்தான் என்ற இரண்டு தொகுதிகள் குறிப்பிடப்பட வேண்டியவை. அடுத்து அமெரிக்க அரசின் பூகோளப் பெயர் வாரியம் இராணுவப் பயனுக்காக வெளியிட்டுள்ள சுமார் 30 இலட்சம் உலகப் பெயர்கள் அடங்கிய 150 பெயர்த் தொகுதிகள் குறிப்பிடப்பட வேண்டியவை. இவற்றில் 30,250 இந்தியப் பெயர்கள் இரண்டு தொகுதிகளில் காணப்படுகின்றன. இப்பெயர்களின் உள்ளூர் வடிவங்கள் நிலப் படங்களில் வெளியாகிய வண்ணம் அவ்வவ்விடங்களின் இருப்பு பற்றிய விவரங்களுடன் கொடுக்கப்பட்டுள்ளன[5]

இவை போக ஆய்வேடுகளுக்காகவும் ஆராய்ச்சிக்காகவும் இலக்கியங்கள், கல்வெட்டுகள் முதலியவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட இடப்பெயர்த் தொகுப்புகள் சிலவும் காணப்படுகின்றன.[6]

**இடப்பெயர்த் தொகுப்புகளின் வகைகள்:** இடப்பெயர்த் தொகுப்புகளை (1) பட்டியல் அட்டவணை முறை (2) கெஜட்டியர் முறை (3) கலைக்களஞ்சிய முறை (4) அகராதி முறை முதலிய முறைகளில் தொகுக்கலாம்.

இடப்பெயர்த் தொகுதிகளை (1) தமிழிலுள்ள இடப் பெயர்களின் தொகுதிகள் (2) பிற இந்திய மொழியில் அமைபவை (3) உலக மொழிகளிலுள்ள

இடப்பெயர்கள் என அமைக்கலாம். தமிழிலுள்ள இடப்பெயர்த் தொகுதிகளே தொகுக்கப்படாத நிலையில் ஏனையவற்றைப் பற்றிப் பேசுவது பொருத்தமற்றது. எனவே தமிழ் இடப்பெயர்த் தொகுதிகள் பற்றி மட்டும் இங்குப் பேசுவோம்.

**பட்டியல், அட்டவணை முறை:** அகர வரிசை அல்லது வேறு ஏதாவது முறையில் பட்டியலாகவோ, அட்டவணையாகவோ புள்ளி விவரங்கள் முதலியவற்றுடன் தொகுப்பது. இஃது அரசு நிருவாகம் மற்றும் அடிப்படைத் தகவல்கள் முதலிய வற்றுக்கும் பயன்படும். முன்பு குறிப்பிட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வெளியீடுகள், பஞ்சாயத்துக்களின் பட்டியல்கள், அஞ்சல் நிலையங்களின் பட்டியல்கள், தேர்தல் வாக்குச் சாவடிப் பட்டியல்கள், மாவட்டத் தொலைவுப் பதிவேடுகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

**எடுத்துக்காட்டு: கோவை மாவட்டத் தொலைவுப் பதிவேடு (1931)**

| கிராமங்கள், சிறு கிராமங்கள், நிலவருவாய் எண்ணுடன் | சாலை வழி | | தொலைவு (மைல்கள்) | | |
|---|---|---|---|---|---|
| | மாஜிஸ்திரேட் கோர்ட்டிலிருந்து | வட்ட முன்சீப் கோர்ட்டிலிருந்து | வட்டத் தலைமை | கோவையிலிருந்து | கோவைக்குச் செல்ல மிக அடுத்த ரயில் நிலையம் |
| 33 அவினாசி பாளையம் (தெற்கு) | 10 | 12 | 14 | 33 | திருப்பூர் 9 |
| கொடுவாய் | 12 | 14 | 14 | 32 | " |

**கெஜட்டியர் முறை:** கெஜட்டியர் என்றால் நிலப்படங்களுக்குப் பிற்சேர்க்கையாக அமையும் இடப் பெயர்ப்பட்டியல் அல்லது அகராதி ஆகும். இந்திய ராணுவ சர்வே வெளியிட்டுள்ள கெஜட்டியர்கள், அமெரிக்கப் பூகோளப் பெயர் வாரியம் வெளியிட்டுள்ள கெஜட்டியர்கள் இதற்கு உதாரணமாகும். 'மாவட்ட செய்தித் தொகுப்பை மானுவல் என்பதோடு கெஜட்டியர் என அழைக்கும் வழக்கமும் காணப் படுகிறது. இத்தகைய நூல்களின் பின்னிணைப்பாக அவ்வம்மாவட்டங் களில் உள்ள முக்கிய இடப்பெயர்களை அகர வரிசையில் அமைத்து — அவை பற்றிய வரலாறு, பண்பாடு, பற்றிய செய்திகளைத் தொகுத்துக் கொடுக் கின்றனர்.

எ.டு: அமெரிக்கப் பூகோளப் பெயர் வாரியம் வெளியிட்டுள்ள - இந்தியா

விலுள்ள தரப்படுத்தப்பட்ட - பெயர்களின் கெஜட்டியர் என்பதிலிருந்து (ஐந்தாம் அடிக்குறிப்பு நோக்குக)

| பெயர் | இடத்தின் நிலை | அட்சரேகை | தீர்க்கரேகை | நிருவாகப்பிரிவு | கூட்டுக்குறிப்பு விவரம் |
|---|---|---|---|---|---|
| கோயம் புத்தூர் | மக்கள் வாழுமிடம் | 1100 வ | 7658 கி | இந்தியா 4500 | ஆசியா, சர்வே ஆஃப் இந்தியா ஜிஎஸ்ஜிஎஸ் 2555; அளவு 1: 1,000,000 |

**கலைக்களஞ்சிய முறை (செய்தித் தொகுப்பு முறை)** : இடப்பெயர்களை அகர வரிசையில் அமைத்து ஓர் இடம் பற்றிய மொழி, வரலாறு, பண்பாடு முதலிய எல்லாச் செய்திகளையும் தொகுத்துக் கொடுப்பதாகும். 'சிவத்தல மஞ்சரி' போன்றவற்றை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

எடுத்துக்காட்டு - அபிதான சிந்தாமணி (1899)சிவசேத்திர மான்மியம் பக்.1556.

**திருப்பாண்டிக் கொடுமுடி:** இது திருக்கலையின் கொடுமுடிகளிலொன்று. பிரம விட்டுணுக்கள் பூசித்த தலம் (சுவாமி பெயர்) கொடுமுடி நாதர் (தேவி பெயர்) பண்மொழியம்மை (தீர்த்தம்) நொய்யல் நதி. ஞானசம்பந்தர்-1, நாவுக்கரசர்-1, சுந்தரர்- 1 கொடுமுடி ஸ்டேசன்.

**அகராதி முறை:** இடப்பெயர் அகராதிகள் ஏனைய மொழி அகராதிகளின் பண்புகளைப் பெற்றிருப்பினும் சற்று வேறுபட்டவை. இத்தகைய அகராதிகள் தமிழில் இல்லை. மேலைநாட்டு மொழிகளில் இத்தகைய அகராதிகள் பல எழுந்துள்ளன. இவற்றை முன்மாதிரியாகக் கொண்டு நம்முடைய தொகுப்பு முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

இடப்பெயர் அகராதிகள் மூன்று நிலையில் அமையலாம்.

1. இலக்கியம், கல்வெட்டு முதலிய வரலாற்றாவணங்களில் காணப்படும் பழம் பெயர்களின் அகராதிகள். இத்தகைய அகராதிகளில் ஏனைய செய்திகளோடு அப்பெயர்கள் இன்று வழங்கும் இடங்களைக் கண்டுபிடித்துச் சுட்டுவது முக்கியமாகும்.

2. வட்டார வாரியாக வழக்கிலுள்ள இடப்பெயர்களின் அகராதிகள் (குடியிருப்புப் பெயர்கள், பெரும்பெயர்கள், சிறு பெயர்கள்)

3. தமிழ் இடப்பெயர்கள் எல்லாவற்றுக்குமாய் அமையும் பொது அகராதி-

1. இடப்பெயர்களின் சரியான எழுத்து, பேச்சு வடிவங்களை எடுத்துரைத்தல். எ.டு. கோயம்புத்தூர் - [illegible] வடிவம். கோயமுத்தூர் - [illegible] வடிவம்:

தாராபுரம்- பொது வடிவம்; தாரா வரம் - வழக்கு வடிவம். இஃது இடப்பெயர்களைத் தரப்படுத்துகிற முயற்சிக்குத் தேவையானதாகும்

2. இடப்பெயர்களின் வடிவங்களில் ஏற்பட்ட மாற்றங்களை வரிசைப்படுத்தி விளக்குதல்.

எ.டு. கோவன்புத்தூர் 12 - 13-ஆம் நூ தெ.இ.க, கோவம்புத்தூர், கோயம்புத்தூர் 18-ஆம் நூ, கோய முத்தூர் 20-ஆம் நூ ஓரினமாதல் மூலம் திரிந்தது. ராஜ ராஜபுரம் 14-ஆம் நூ (தெ.இ.கோ.சா), இராதா புரம் 16-ஆம்நூ தெ.இ.கோ.சா, தாராபுரம் 18-ஆம் நூ மெய் யொலித்திரிபு, உயிர் நீட்சி, மெய்யிடம் பெயர்தல். ஒ.நோ. ராஜராஜேஸ்வரம் – ராதாசுரம் – தாராசுரம் (தஞ்சை) ராசராசபுரம் – தாதாபுரம் (திண்டிவனம்)

3. இடப்பெயர்களின் சரியான பொருள் அல்லது பொருள்களை விளக்குதல்

1. கோவன் - ஆட்பெயர் - இருளர் தலைவன் பெயர்.

2. கோயன் - சேர அரசன் பெயர்

கோயம் - என்பது கோகர் என்பதன் திரிபு என்ற விளக்கத்திற்கு விதிகள் இடந்தர வில்லை - புத்தூர் "புதிதாகத் தோன்றிய ஊர்" காஞ்சியவாயப் பேரூருக்குப் பக்கத்தில் தோன்றிய புதிய ஊர்.

4. இடப்பெயர்களின் வரலாறு முதலியவற்றை விளக்குதல் எம்மொழியைச் சேர்ந்தது, பெயர் கொடுத்தவர், தோன்றிய காலம், இடப்பெயரின் பிற பயன்பாடு (எ.டு. குழிப்பாடி நேரிது, இப்புடவை வேளாகாணி முதலிய ஆகுபெயர் வழக்குகள் இப்பட்டு காஞ்சிபுரம்).

மேலே கண்ட நோக்கங்களின் அடிப்படையில் இடப்பெயர் அகராதி களை அமைக்கும் போது அவை: 1. உச்சரிப்பு அகராதி 2. வரலாற்று அகராதி 3. சொற்பிறப்பியல் அகராதி 4. கலைக்களஞ்சிய அகராதி முதலிய நிலைகளில் காட்சி அளிப்பதைப் பார்க்கலாம். மேலே கண்ட நோக்கங்கள் எல்லாம் அமையாமல் முதல் நோக்கம் அஃதாவது உச்சரிப்புத் துணை என்ற நிலையில் அமையும்போது இடப்பெயர் - உச்சரிப்பு அகராதிகள் என்று அவற்றை அழைக்கலாம். பிற மூன்று நோக்கங்களில் இரண்டும் மூன்றும் ஒன்றை ஒன்று தழுவியவை. தூய இடப்பெயர் அகராதிகளில் இவை இரண்டும் கட்டாயம் இடம்பெறும். கலைக் களஞ்சிய அகராதிகள் மேலே கண்டவற்றுடன், கூடுதல் விவரங்கள் தருவனவாகும்.

இங்குப் பொதுவாக அகராதி முறையில் இடப்பெயர்களை எவ்வாறு தொகுத்தமைக்கலாம் என்பதைப் பற்றி மட்டும் பேசலாம்.

**இடப்பெயர்களைத் தொகுத்தல்:** தமிழில் பழையனவும் வழக்கி லுள்ளனவுமான அனைத்து இடப் பெயர்களையும் தொகுக்கும் முயற்சியை மேற்கொண்ட பின்னரே இடப்பெயர் அகராதிகளை உருவாக்க இயலும். எனவே தமிழ் இடப்பெயர்களைத் தொகுக்கும்

முயற்சியைத் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களோ, அரசோ மேற்கொள்ள வேண்டும். கிளை மொழி ஆராய்ச்சி யின் பகுதியாகவும் இதை முழுமுயற்சி யாக மேற்கொள்ளலாம். அல்லது ஆங்கில இடப்பெயர்க் கழகம் செய்வதைப் போன்று தமிழ் இடப்பெயர்க் கழகம் ஒன்றை நிறுவி - அதன் வழி இத்தகைய பணியைத் தொடங்கலாம்.

இடப்பெயர்களை எவ்வாறு தொகுப்பது என்பது பற்றி இவ் வாசிரியரே வேறிடங்களில் விளக்க மாக எழுதியுள்ளார். எனவே இடப்பெயர் அகராதிகளின் வகைகள், அமைப்பு முதலியன பற்றி எண்ணலாம். பொதுவாகக் குடியிருப்புப் பெயர்கள், தெருப்பெயர்கள், மலை, ஆறு, குளம், வயல் பொதுவிடங்கள் முதலியவற்றின் பெயர்கள் எனப்படும் பெரும்பெயர்கள், சிறு பெயர்கள் எல்லாவற்றையும் எழுத்திலும் பேச்சிலும் உள்ளதை எல்லாம் திரட்டவேண்டும். ஆங்கில இடப் பெயர்க் கழகம் இவ்வாறு வட்டார வாரியாகத் தொகுத்து இதுவரை 50-க்கு மேற்பட்ட தொகுதிகளை வெளியிட்டுள்ளது.

இடப்பெயர்களின் உச்சரிப்பு, ஒலிபெயர்ப்பு முதலியன பற்றி அறிந்துகொள்ள இத்தகைய அகராதிகள் தேவை. இத்தகைய இந்திய இடப்பெயர் உச்சரிப்பு அகராதி ஒன்றைத் தயாரிக்கும் முயற்சியில் மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் மைய நிறுவனம் ஈடுபட்டுள்ளது. தமிழ் போல இருமொழி வழக்குள்ள மொழிகளில் இது இடப்பெயர்களைத் தரப்படுத்தத் துணை செய்யும்.

**அமைப்பு**

1. **தலைப்புச்சொல்:** இடப்பெயர் களின் தரப்படுத்தப்பட்ட எழுத்து வடிவம் பேச்சு வடிவம்
2. **காணப்படும் இடம்** - தன்மை -
3. ஒலிபெயர்ப்பு : பொது எழுத்து உரோமன் தேவநாகரி எழுத்து.
4. **பிற** செய்திகள் : புறப் பெயர்கள் (சென்னை - மதராஸ்) மாற்றுப் பெயர்கள் (மயிலாடுதுறை, மாயவரம்) முதலியன.

எ.டு. : கோயம்புத்தூர் : மாவட்டத் தலைநகர், தமிழ்நாடு, Coimbatore, Koyamputtur, Koyampattur.

**மலையாள ஸ்தல நாம கோசம்**

மலையாளத்தில் இத்தகைய அகராதியின் முதல் தொகுதியை மேலே கண்ட பெயரில் திருவிளக்குடி இராஜேந்திரன் தொகுத்து, கேரள மொழிகள் நிறுவனம் வழி வெளியிட்டுள்ளார் (1984). இந்திய மொழிகளில் இதுவே முதல் முயற்சியாகும். அதன் அமைப்பு வருமாறு

இடப் பெயர்கள் மாவட்ட வாரியாக அகர வரிசையில் அமைந்துள்ளன.

| | தலைப்புச் சொல் | அமைப்பு | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|
| 1. | இடப்பெயர் | மலையாள எழுத்தில் | அஞ்சுதெங்கு |
| | | இன்றைய ஆங்கில எழுத்தில் | Anchu Thengu |
| | | ஐ.பி.ஏ. ஒலி பெயர்ப்பில் | |
| 2. | வட்டம் | | சிறயின் கீழ் |
| 3. | கிராமம் | | கடய்க்காவூர் |
| 4. | பஞ்சாயத்து | | அஞ்சுதெங்கு |
| 5. | பிற விவரங்கள் (பள்ளி, கோயில், ரயில்நிலையம் முதலியன) | | அஞ்சல் நிலையம், தொலைபேசிநிலையம், பழைய கோட்டை, வரலாற்று முக்கியத்துவம் |
| 6. | வழக்கிலுள்ள ஆங்கில வடிவம் | | Anjan Go |
| 7. | மாவட்டத் தலைமை யகத்திலிருந்து தூரம் கி.மீ. | | 34 |
| 8. | பக்கத்திலுள்ள நதி | | — |
| 9. | பழைய பெயர் | | — |
| 10. | வடிவ் வேறுபாடு | | — |

இதில் ஆறு மாவட்டங்களிலுள்ள முக்கிய குடியிருப்புப் பெயர்கள் (கிராமங்கள், சிறு கிராமங்கள்) 4371 மட்டும் அமைந்துள்ளன. இரண்டாம் தொகுதி விரைவில் வெளிவரும். உச்சரிப்புக்களைத் தரப்படுத்தவும் அடிப்படை வடிவத்தைத் தேர்ந்தெடுக்கவும் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள் இதன் முன்னுரையில் விளக்கப்பட்டுள்ளன. இருமொழி

வழக்குள்ள தமிழில் உள்ள பிரச்சினைகள் முற்றிலும் வேறு பட்டவை. எனவே தமிழிலுள்ள சிக்கல்களை மனத்தில் கொண்டு, தக்க கொள்கைகளை உருவாக்கி இத்தகைய தமிழ் இடப்பெயர் அகராதி ஒன்றை முக்கிய குடியிருப்புப் பெயர்களை மட்டுமாவது தொகுத்து வெளியிட வேண்டியது மிகவும் விரைந்து செய்யப்பட வேண்டியதாகும்.

**தூய இடப்பெயர் அகராதிகள்:** தூய இடப்பெயர் அகராதிகளில் இடப் பெயர்களின் வரலாற்று வடிவங்களும் பின்னர் அவற்றின் அடிப்படையில் சொற்பொருள் விளக்கமும் அமையும். உச்சரிப்புப் பற்றிய விவரங்களும் பிற செய்தித் தொகுப்புகளும் வேண்டு மானால் அமைத்துக் கொள்ளலாம். அதாவது தூய இடப்பெயர் அகராதியின் இறுதி நோக்கம் சொற்பொருள் விளக்கம் செய்வதே யாகும். அதாவது, வரலாற்று மாற்று வடிவங்களின் அடிப்படையில் ஒலியியல் விதிகளின் ஒழுங்கு முறையைக் கருவியாக்கி - மூலவடிவம் நிச்சியித்தல் - முதல் கட்டம். இரண்டாவது கட்டம் நிச்சயித்த மூல வடிவத்திற்கு, சொற்பொருள் மாற்றங்களின் அடிப்படையில் மூலப் பொருளை நிச்சயித்தலாகும். இங்கே இடப்பெயரின், மூல வடிவத்தையும் மூலப் பொருளையும் மீட்டுருவாக்கம் செய்யும் முயற்சி மேற்கொள்ளப் படுகிறது. மேலை நாட்டில் எழுந்த அகராதிகளில் இத்தகு அறிவியல் முறையின் செம்மையைக் காணலாம். ஆனால் நம் நாட்டு இடப் பெயராய்வில் தலபுராண முறையே மேலோங்கியிருப்பதால் அத்தகைய ஆய்வின் முடிவுகளை அகராதிகளில் சேர்த்துவிடக் கூடாது. அறிவியல் முறையை மேற்கொண்டு செம்மையான அகராதிகளை இனிமேல் தான் தமிழ் இடப் பெயராய்வாளன் அமைக்க வேண்டும்.

**ஆங்கில இடப்பெயர் அகராதிகள்:** ஆங்கில இடப்பெயர்க் கழகம் வெளியிட்டுள்ள இடப்பெயர் பற்றிய நூல்களும் ஐலர்ட் எக்வாள் வெளியிட்டுள்ள **தி கன்சைஸ் ஆக்ஸ்போர்டு டிக்ஷனரி இங்கிலிஷ் பிளேஸ் நேம்ஸ்** (4-ஆம் பதிப்பு - 1960) என்ற நூலும் தக்க வழிகாட்டிகளாக அமைகின்றன.

திரு. ஜே.பி.ஒக்டன் எழுதிய **தி பிளேஸ் நேம்ஸ் ஆப் ஸ்டாஃபோர்டுஷைர்:**

மேற்கண்ட நூலின் (1984) முதல் தொகுதியில் கீழ்க் கண்ட அமைப்புக் காணப்படுகிறது.

1. தலைப்புச் சொல். இடப்பெயர் : நிலக்கிடப்பு முறையில் பழைய நிருவாகப் பிரிவு அடிப்படையில் அகர வரிசையில்
2. இருப்புக் குறியீட்டு எண்
3. வரலாற்று வடிவங்கள், மீட்டுரு வாக்கம்
4. சொற்பொருள் விளக்கம் - முக்கியக் குடியிருப்புப் பெயர்களின் கீழ்த் தெருப்பெயர், பொதுவிடப் பெயர் கள் முதலிய சிறு பெயர்கள் வயற் பெயர்கள் முதலியன மேலே கண்ட முறையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

எ.டு: Blymhill (119-8112)
Brumhelle 1086 DB
Blumehil 1167 p.
Blynhill 1485 to 1571 Pat, et passim to 1833 O

The 'wild plum - tree hill', vide ptyme, hyll, as suggested by Ekwall (DEPN)). The voicing of p to b is not uncommon in the st dialect. For a parallel voicing compare Dunstall infra S.M. from tun-stall, and Gornal infra s.n. from Cweorn and halh. Ibid pp. 128-9.

இவை ஒவ்வொரு இடப் பெயராகத் தனித்தனியாக ஆராய்ந்து அமைக்கப்பட்டுள்ளன. இடப்பெயர்கள் போக இடப் பெயர்களில் வரும் ஏனைய கூறுகளும் இவ்வண்ணமே தனியாக அகராதிவடிவில் அமைக்கப் பட்டுள்ளன. இவ்வகராதிப் பகுதியுடன் இடப்பெயர்க் கூறுகள், விகுதிகள் முதலியவற்றைப் பற்றிய விரிவான கட்டுரைகளும் இடப்பெயர் கழகத் தொகுதிகளில் அமைகின்றன.

**ஜலர்ட் எக்வாலின்**

ஆங்கில இடப்பெயர் **அகராதி** (DEPN) மேலே கண்ட வட்டார வாரியான தொகுதிகளைப் போலன்றி ஆங்கில இடப்பெயர்கள் முழுமைக்குமான ஒரு பொது அகராதி இது. இவ்வகராதியில் முக்கிய இடப் பெயர்க் கூறுகளும் தலைப்புக்களாகக் கொண்டு ஆராயப் பட்டுள்ளன. வரலாற்றுப் பெயர்களும் வழக்குப் பெயர்களும் இதில் உள்ளன. இவ்வகராதியின் நோக்கம் முக்கிய ஆங்கில இடப்பெயர்களுக்குச் சொற்பொருள் விளக்கம் கொடுப்பது தான்.

**அமைப்பு தலைப்புச் சொல்:** இடப்பெயர்களோ, இடப்பெயர்க் கூறுகளோ தலைப்புச் சொற்களாக அமைகின்றன. விகுதிகளின் கீழ், அவை இடம் பெறும் இடப்பெயர்கள் காட்டப்படும்.

**வருமிடங்கள்:** முக்கியமானவை மட்டும்

**வரலாற்று வடிவங்கள்:** காலம், சான்றுகளுடன்.

**மீட்டுருவாக்கம்:** வடிவமும் பொருளும் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு விளக்கப் படும்.

**எடுத்துக்காட்டு:** **Kingsbury** mx (Kynges byrig 1044-6 BM, Chingesberie DB) K Episcopi so (Cyncgesbyng 1065 wells, Chingesberie DB) K Regis so at Milborne Port (Kingesberi 1200 cur) 'The Kind's Burg'. K-Episcopi from Bishop of Bath (DB)

**Kingsbury** Wa (chines berie DB, Kines buri HyI BM, 1222 FF, Kinesberia 1190 P) 'Cyne's Burg' -277

Caldwell YN (Caldeuuella DB, - well 1208 FF) 'Cold stream' C is on Caldwell Brook -p.82

இந்திய இடப்பெயர்களைப் பற்றி ஆர்.ஏ.சிங் எழுதிய The structure and treatment of Entries in a dictionary of place names [Studies in Indian place names, Vol.V (1984) pp. 107-112] சில சிக்கல்களை

ஆராய்ந்துரைக்கிறது.

தமிழ் இடப்பெயர் அகராதிக் குரிய பெயர்களை இடவாரியாகத் தொகுக்கும் போது ஆங்கில இடப்பெயர்க் கழக முறையிலும் பொது அகராதியின் ஆக்ஸ்போர்டு ஆங்கில இடப் பெயர் அகராதி முறையிலும் அமைக்கலாம்.

**தமிழ் இடப்பெயர் அகராதியின் அமைப்பு:** இதில்

1. தலைப்புச் சொல்
2. வருமிடங்கள்
3. வரலாற்று மாற்று வடிவங்கள்
4. பொருள்கள்
5. மீட்டுருவாக்கமும் சொல் லாக்கமும் சொற்பொருள் விளக்கமும்

என்று ஐந்து பகுதிகளாக அமையலாம்.

**தலைப்புச் சொல்:** இடப்பெயர் களையும் இடப்பெயர்க் கூறுகளையும் இதில் அமைக்கலாம். ஒவ்வொன்றுக் கும் ஒரு தனிக் கட்டுரை அமைப்பது நல்லது. இன்றைய வழக்கு வடிவத்தை அடிப்படைச் சொல்லாக அமைத்து ஏனைய வரலாற்று வடிவங்களை அடுத்து அமைக்கலாம். வேண்டுமெனில் அவற்றை அவற்றிற்குரிய அகர வரிசையிலும் தகுந்த சுட்டுக்குறிப்புடன் அமைக்கலாம். ஒத்த ஒலிவடிவில் அமையும் இடப்பெயர்களுக்கு ஒரு பொதுத் தலைப்பில் துணைப் பத்திகள் அமைத்து வரிசைப் படுத்தலாம். விகுதிகளின் கீழ் அவை அமையும் இடப்பெயர்களின் முன்னொட்டுக்களை எல்லாம் வகைப் படுத்திக் கொடுக்கலாம்.

**வருமிடங்கள்:** வழக்குப் பெயர்களாயின் அவை வருமிடங்கள் பற்றியும் வரலாற்றுப் பெயர்களாயின் அவை இருந்த இடத்தை இனங்கண்டும் சுருங்கிய இடக் குறியீடுகளுடன் தரலாம். ஒரே பொருளில் வரும் பெயர்களின் மொத்த எண்ணிக்கை யையும் காட்டலாம்.

**வரலாற்று மாற்று வடிவங்கள்:** இவற்றை இவற்றின் காலம், சான்றுகளுடன் சுருக்க முறையில் அமைத்தல் வேண்டும்.

**பொருள்கள்:** வரலாற்று மாற்று வடிவங்களை ஒட்டி, அவ்வக்காலத்தில் கூறப்பட்ட பொருள்களைத் (மக்கள் சொற்பொருள் விளக்கமாயினும் பிறவாயினும்) தொகுத்துத் தர வேண்டும்.

**மீட்டுருவாக்கமும் சொல்லாக்கமும், சொற்பொருள் விளக்கமும்:** மொழி யியல் ஒலி விதிகளின்படியுள்ள முறையில் வடிவத்தை மீட்டுருவாக்கம் செய்து சொல்லாக்கம் காட்டி, பொருளையும் வரலாறு, பண்பாடு, நிலநூல் முதலிய நோக்கில் மீட்டுருவாக்கம் செய்து சுருங்கிய முறையில் அமைக்கலாம்.

**எடுத்துக்காட்டு:** கோவை மாவட்ட ஊர்ப்பெயர்களிலிருந்து:

**அய்யம்பாளையம்** அ 67, அ 46கு, கோபி 15 செ, பல் 9க, பொ 69 7. . . . . . . (25)

**அய்யன் பாளையம்** "அய்யனுடைய ஊர்" அய்யன் 1. "தந்தை", 2. பிராமணன் 3. வெள்ளாளரில் மூத்தோர். உடைமைப் பெயர்.

**கணபதி பாளையம்** அ 30கு, தா 2, பல் 3 மே . . . . . . . . . . . . (26) "கணபதியின் ஊர்" கணபதி 1 "விநாயகர்" 2. அப்பெயருடைய ஆள் நினைவு அல்லது உடைமைப்பெயர்

**கோவில் பாளையம்** பல் 32 அ "இராமசாமி கோயிலை ஒட்டி எழுந்த ஊர்" தழுவு பெயர்

**நடுப்பாளையம்** அ 67, பக் 94 பொ. . . . . . . (18). இரண்டூர்களுக்கிடையில் எழுந்த ஊர், தொடர்புப் பெயர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | பள்ளபாளையம் | < | பள்ளர் பாளையம் |
| 2. | பள்ள பாளையம் | < | பள்ளம் பாளையம் ("குழி" + |
| 3. | வேலம் பட்டி | < | வேலன் பட்டி |
| 4. | வேலம் பட்டி | < | வேலம்பட்டி ("மரம்" + |
| | பிரம்மதேசம் | < | பிரம்மதேயம் |
| | பெரமியம் | < | பிரமியம் < பிரம்மதேயம் |
| | செங்கப்பள்ளி | < | செங்கலப்பள்ளி < செங்கமலப்பள்ளி "பள்ளி" சமணர் கோயில் |
| | பழனி | < | பொதினி அகம் 1 : 3_4 ; 61 : 15_16 பழம் + நீ என முருகனைப் பார்வதி அழைத்தது |
| | வரம் | < | புரம் கல்லாவரம் |
| | முத்தூர் | < | புத்தூர் கோயமுத்தூர் |

அடிக்குறிப்புகள்

1. கி. நாச்சிமுத்து, தமிழ் இடப் பெயராய்வு 1983, ப. 183 _ 186.

2. கி. நாச்சிமுத்து, தமிழ் இடப் பெயராய்வு 1983, ப.12 _ 15

3. Khosla, K.L., *The where is it?* Reference Index showing Geographical position of all important localities in India. Second edition. 1976, in four parts: Part I Place names Part II Railway Station Part III Localities Part IV - Physical --pp. 64 (approx. 12000 names).

4. Director of Military Survey (India), Gazetteer of India and Pakistan. 2 Vols. Vol.1 A - K 721 pages. 1950, Vol. 2 is not yet available.

5. United States Board on Geographical Names, *Official Standard Names Gazetteer.*
India - Vol.I & II p.p. 787: The scale of Map coverage is about 1. 1,000,000 (1:16 Miles).

6. கி. நாச்சிமுத்து, மு.சு.நூ. பக். 7_10.

தமிழ்க் கலை
தமிழ் 7, கலை 1, 2

# தொல்காப்பிய உரியியல் : ஓர் அகராதியியல் கண்ணோட்டம்

க. பாலசுப்பிரமணியன்

**முன்னுரை:** எழுத்து, சொல், பொருள் என மூன்றதிகாரங்களாய் அமைந்த தொல்காப்பியத்தில் இரண்டாவதாகிய சொல்லதிகாரத்தின் பகுதியாக எட்டாவது இயலாக அமைந்திருப்பது உரியியல். உரிச்சொல் என்ற சொல் வகையின் பொது இலக்கணம் கூறி (நூற்பா.1) அவ்வுரிச்சொற்களுள் அரியவை சிலவற்றிற்குப் பொருளும் கூறுகிறது (நூ. 2-92). தொடர்ந்து சொற்பொருளியல் செய்திகள் சிலவற்றையும் பேசுகிறது (93-100). தமிழ் இலக்கண அமைப்பில் இவ்வுரியியலின் இடம் என்ன? என்று இன்றைய மொழியியல் கண்ணோட்டத்தில் கண்டு, சொற்பொருள் கூறும் இவ்வுரியியல் அகராதியியல் கண்ணோட்டத்தில் எவ்வாறு அமைந்துள்ளது? அகராதியியல் கூறுகளை உட்கொண்டுள்ளதா? தமிழ் அகராதியியலின் முன்னோடி தொல்காப்பிய உரியியல் என்ற கருத்து பொருத்தமானதா? என்று இக்கட்டுரை ஆராயும். இவ்வாராய்ச்சியின் பகுதியாக உரிச்சொல்பற்றிய பழைய உரையாசிரியர்கள், இன்றைய ஆய்வாளர்கள் ஆகியோரின் கருத்துகளும் மதிப்பிடப்படும்.

**இலக்கண அமைப்பில் உரியியலின் இடம்:** மொழியியலாரின் மொழியமைப்பைப் பற்றிய கருத்துகளில் அடிப்படையான வேறுபாடுடைய இரண்டு வகைகள் உள்ளன. முதல்வகை அமைப்புமுறை அல்லது பகுப்புமுறை மொழியியலைச் (Structural or taxonomic linguistics) சார்ந்தது. இரண்டாவது வகை மாற்றிலக்கண மொழியியலைப் (Transformational Generative approach) பின்பற்றியது. பகுப்புமுறை மொழியியல் கண்ணோட்டத்தில் மொழியமைப்பு மூன்று பகுதிகளை உடையது. ஒன்று வடிவமைப்பு (Structure of expression), இரண்டாவது பொருளமைப்பு (Structure of content), மூன்றாவது சொற்களஞ்சியம் (Vocabulary). இவற்றுள் இறுதியாய் உள்ள சொற்கோவையே வடிவமைப்பையும் பொருள் அமைப்பையும் தொடர்பு படுத்துவது. அஃதாவது சொற்களையும் அவற்றின் பொருள்களையும் பற்றிப் பேசுவது (ஒ. நோ. Gleason, 1961 : 6).

மாற்றிலக்கண மொழியியல் கண்ணோட்டத்தின்படி ஒரு மொழியின் இலக்கணம் மூன்று பகுதிகளை உடையது. தொடரியல் பகுதி (Syntactic component), பொருளியல் பகுதி

(Semantic component), ஒலியனியல் பகுதி (Phonological component) எனும் இவற்றில் தொடரியல் பகுதியே அடிப்படையானதும் சிறப்புடையதும் ஆகும். மற்ற இருபகுதிகளும் தொடரியல் பகுதியின் விளக்கப் பகுதிகளே (interpretive components) (Chomsky, 1965: 15, 16). இவற்றில் பொருளியற் பகுதி இரு பிரிவுகளைக் கொண்டது. ஒன்று, மொழியில் உள்ள சொற்கள் அனைத்திற்கும் பொருள் கூறும் அகராதி. மற்றொன்று வரையறைக்குட்பட்ட பொருள் விளக்க விதிகள் (Projection rules) (Katx and Postal, 1964: 12).

இவ்விரண்டனையும் ஒப்பிடும் பொழுது ஒன்று தெளிவாகிறது. மொழியமைப்பைப் பற்றிய கண்ணோட்டத்தில் வேறுபாடு இருப்பினும் அகராதி அல்லது சொற்களஞ்சியமும் அவற்றின் பொருள் விளக்கமும் இலக்கணத்தின் பகுதி யாகக் கருதப்படுகின்றன என்பது அது. இவ்வாய்வு தனிப்பகுதியாக அமைகின்றதா, இன்னொருபகுதியின் உட்பிரிவாக அமைகிறதா என்பதிலும் பகுதிகளுக்குக் கொடுக்கப்பட்ட சிறப்பிடத்திலுமே வேறுபாடுகள் உள்ளன. எனவே, சொற்களைக் கூறி, அவற்றின் பொருளைக் கூறும் தொல்காப்பிய உரியியல் பகுதி இலக்கணத்தின் பகுதியாக அமைந்தது. பொருத்தமற்ற இடைப்பிறவரல் அல்ல. "மொழி அமைப்பை விளக்கும் சொல்லதிகாரத்தில் சில சொற் களுக்குப் பொருள் கூறுவதற்காகவே ஓர் இயலின் பெரும்பகுதியை ஒதுக்குவானேன் (சண்முகம், 1984: 72) என்ற கேள்வி எழத்தேவையில்லை.

சொற்பொருள் விளக்கத்தை இலக்கணத்தின் பகுதியாகவே தொல் காப்பியர் கொண்டார் என்பதற்கு வேறு அகச்சான்றுகளும் உள்ளன. உரிச்சொல்லின் தன்மையாக 'ஒரு சொல் பல பொருட்கு உரிமை பூண்டிருப்பதையும் பல சொல் ஒரு பொருட்கு உரிமை பூண்டிருப்பதையும்' (உரி. 1) தொல்காப்பியர் கூறுகிறார்.

கிளவியாக்கத்தில் இவற்றின் தொடரியற் கூறுகள், தொடரியல் உறவின் அடிப்படையில் பொருள் வேறுபடுதல் ஆகியவற்றைப் பின்வரும் நூற்பாக்களில் விளக்குகிறார்.

ஒரு பொருள் குறித்த வேறு
பெயர்க்கிளவி
தொழில் வேறு கிளப்பின் ஒன்றிடன்
இலவே (கிளவி : 42)

வினை வேறுபடூஉம் பலபொருள்
ஒருசொல்
வினை வேறுபடாஅப் பலபொருள்
ஒருசொல் என்று
ஆயிரு வகைய பல பொருள் ஒருசொல்
(கிளவி : 52)

அவற்றுள்,

வினைவேறு படூஉம் பலபொருள்
ஒருசொல்
வேறுபடு வினையினும் இனத்தினும்
சார்பினும்
தேறத் தோன்றும் பொருள்தெரி
நிலையே (கிளவி: 53)
ஒன்றுவினை மருங்கின் ஒன்றித்
தோன்றும்
வினைவேறு படாஅப் பலபொருள்
ஒருசொல்
நினையுங் காலைக் கிளந்தாங்கு
இயலும் (கிளவி: 54)

எழுத்ததிகாரத்திலும் பொருள் வேற்றுமையின் அடிப்படையில் புணர்ச்சி வேற்றுமை அமைவதை விளக்குகிறார்.

புளிமரக் கிளவிக்கு அம்மே
சாரியை (எழு. 245)

ஏனைப் புளிப்பெயர்
மெல்லெழுத்துமிகுமே (எழு. 246)

சேஎன் மரப்பெயர் ஒடுமர இயற்றே
(எழு. 279)

பெற்றம் ஆயின்முற்ற இன்வேண்டும்
(எழு. 280)

உரிச்சொல் பற்றிப் பேசுமுன்பே, சொற்பொருண்மை இலக்கண அமைப்பைப் பாதிப்பதையும் அதனால் பாதிக்கப்படுவதையும் காட்டியிருப்பது சொற்பொருண்மைக்கு இலக்கணத்தில் உள்ள பங்கை அவர் நன்கு உணர்ந்திருந்தார் என்பதையும் அதனை இலக்கணத்தின் கூறாகவே கருதினார் என்பதையும் புலப் படுத்துகிறது.

இவ்வாறு, இலக்கணத்தின் பகுதியாக அமைந்த சொற்களஞ்சியம் பற்றிய செய்திகள் பின்னர் அகராதி என்ற தனிநூலாக வகுக்கப்பெற்ற இலக்கணத்தின் பகுதியாக வருவது மட்டுமன்றி இலக்கியக்கல்வி, இலக்கியப் படைப்பு, மற்றபிற துறைக்கல்வி ஆகியவற்றிற்கும் பயன் படும் அடிப்படையில் வளர்ந்து நிற்கின்றது. மானிடவியலில் (Anthropology) பகுதியாகத் துவங்கிய மொழியியல் மானிடவியலுக்கு கொள்கைக் கடன் வழங்கும் தனி யியலாக வளர்ந்தமை போல அகராதியியலும் தனிப் பயன்பாட்டிய லாக (applied science) வளர்ச்சி யடைந்துள்ளது. எனவே, சொற் களஞ்சியம் இலக்கணத்தின் பகுதியாக விளக்கப்படும்பொழுது அகராதியியற் கூறுகளைக் கொண்டிருப்பது இயல் பானதே. இவ் வடிப்படையில், தொல்காப்பிய உரியியலை அகராதி யியற் கண்ணோட்டத்தில் கண்டு அதன்கண் அமைந்துள்ள பல்வேறு அகராதியியற் கூறுகளை இக்கட்டுரை ஆராயும்.

**உரியியலில் அகராதிக் கூறுகள்:** தொல்காப்பிய உரியியல், அகராதி யியற் கூறுகளைக் கொண்டுள்ளது என்பதும் தமிழ் அகராதியியல் வளர்ச்சிக்கு முன்னோடியாய் அமைந்தது அதுவே என்பதும் முன்பே ஆய்வாளரால் எடுத்துக் காட்டப் பட்டுள்ளன. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி, முதற்பகுதி முன்னுரையில் (ப. XXV) முதன் முதலாக இஃது குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ந்து சுந்தர சண்முகனார் (1971), செயதேவன்(1977) ஆகியோரும் பின்னர் எடுத்துக்காட்டியுள்ளனர். இவ் வாய்வாளர் காட்டிய பொதுக் கூறுகள் தவிர சிறப்புக் கூறுகள் இங்கு ஆராயப்படும்.

**உரிச்சொற்கள், அகராதிச் சொற்கள்:** தொல்காப்பியர் கூறும் சொல்வகைப் பாட்டில் உரிச்சொற்களின் இடம் என்ன என்பதில் ஆய்வாளரிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. மீனாட்சிசுந்தரனார் (1974) தொல் காப்பியர் கருத்துப்படி சொற்கள் இரண்டே, அவை பெயர்ச் சொல்லும் வினைச்சொல்லும் என்பார்.[1] இடைச் சொல்லும், உரிச்சொல்லும் அவற்றின் அகத் துறுப்பாகவும் புறத்

துறுப்பாகவும் வருவன.[2] பெயரும் வினையுமே முழுச் சொற்கள், இடையும் உரியும் அவற்றின் பகுதியாக வரும் குறைச்சொற்கள். சொற்களின் பொருள் இரண்டு வகைப்படும். இலக்கணத்தில் காலம், இடம், பால் முதலியன காட்டும் இலக்கணப். பொருள் ஒன்று. பொதுவாக உலகத்தில் சொல்லுக்குக் காணும் பொருள் மற்றொன்று. சொல்லைப் பகுத்துக் காணும் பொழுது இரண்டாம் வகையான பொருள் உடையன, அடிச்சொற்கள் அல்லது பகுதி என்று கூறும் உருபன்களே. பொருள் உள்ளவை (contentives) இவையே. மற்றவை இலக்கணப் பொருள் உள்ளவை (functors). இவ்வடிப்படையில் சொற்கள் அல்லது உருபன்கள் இரண்டாகப் பிரிகின்றன. (1) அடிச்சொல்லாய் வரும் பொருளுக்குரியவை. (2) அடிச்சொல் அல்லாத பிற உருபன். முதல் வகையினை உரிச்சொல்லாகவும் இரண்டாம் வகையினை இடைச் சொல்லாகவும் தொல்காப்பியர் பாகுபாடு செய்கிறார். பொருளுக்கு உரிமை பூண்டவை என்ற அடிப் படையில் உரிச்சொல் என்று பெயர் வழங்குகிறார். எழுத்ததிகாரத்தில் புணர்ச்சி பற்றிப் பேசும்பொழுது (108) பெயரும் வினையும் நின்று புணரும் என்றுகூறி, இடை, உரிச் சொற்கள் பற்றி அந்நூற்பாவில் பேசாமையும் பின்னர், "குறைச்சொல்"லாகிய உரிச் சொல்லைப் "புணரியல் நிலையிடை உணரத் தோன்றாதன"வற்றுள் (எழு. 482) சேர்ப்பதும் பெயரும் வினையுமே முழுச் சொற்கள் என்பதே தொல்காப்பியர் கருத்து என்பதை வலியுறுத்துகிறது. இது மீனாட்சி சுந்தரனார் கருத்து.

சண்முகம் (1985), மீனாட்சி சுந்தரனார் கருத்திலிருந்து சிறிது மாறுபடுகிறார். உரிச்சொற்கள் பொருளுக்குரிய அகராதிச்சொற்கள் அல்லது அகராதியன்கள் (Lexemes) என்ற கருத்தை ஏற்றுக் கொண்டாலும் உரிச்சொற்களில் சில (நனி, தவ) அடிச் சொற்களாக வாராமல் வராது அடையாக மட்டும் வருவனவாக இருப்பதால் உரிச் சொல்லைத் தனிச் சொல் வகையாகக் கருத வேண்டும் என்று கூறுகிறார். எனினும் இருவரும் உரிச்சொற்கள் அகராதிப் பொருளுக் குரிய (Lexical meaning) அகராதிச் சொற்கள் (Lexical words) அல்லது அகராதியன்கள் அல்லது பொருளன் கள் (Lexemes) என்ற கருத்தில் ஒன்றுபடுகின்றனர்.

**அகராதியியற் செய்திகள்:** முன்னுரையில் (1) கூறியது போல உரியியல் முதல்நூற்பா உரிச் சொல்லின் பொதுவிலக்கணம் கூறினாலும் அது மூவகைச் செய்தி களை உட்கொண்டுள்ளது. (1) உரிச்சொல்லின் சொல்லியல் கூறு, (2) பொருளியல் கூறு, (3) பொருள் விளக்கும் முறை. "பெயரினும் வினையினும் மெய்தடுமாறி" வரும் என்பது சொல்லியல் செய்தி. "இசையினும் குறிப்பினும், பண்பினும் தோன்றுதலும்", "ஒருசொல் பல பொருட்டு" உரித்தாய் வருதலும், "பலசொல் ஒரு பொருட்டு" உரித்தாய் வருதலும் பொருளியற் கூறுகள்." பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தி எச்சொல்லாயினும் பொருள் வேறு கிளத்தல்", என்பது பொருள் விளக்கும் முறை. அடுத்து வரும் 91 நூற்பாக்கள் சொற்பொருள் பற்றிப் பேசுகின்றன. இறுதியில் வரும் 8 நூற்பாக்கள் பொருளியற்கூறுகள் சிலவற்றைப் பேசுகின்றன. இச் செய்திகளை

அகராதியியற் கண்ணோட்டத்தில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்: (1) சொல்வடிவு பற்றிய செய்திகள். இலக்கணக் கூறுகளும் இதில் அடங்கும். (2) சொற்பொருள் பற்றிய செய்திகள் (3) அகராதித் தொகுப்பு, அமைப்பு பற்றிய செய்திகள்.

**சொல்வடிவு பற்றிய செய்திகள்:**

**அ. பெயரினும் வினையினும் மெய் தடுமாறுதல்:** ஆராயப்படும் சொல்லின் இலக்கணக் கூறு இன்னதென்று கூறுதல் அகராதியியல் மரபு. அவ் வகையில் உரிச்சொற்கள், முழுச் சொற்களாக வரும் பெயர்ச் சொற்கள் வினைச் சொற்களின் பகுதியாய் வரும் என்பதை இவ்வாறு பெயரினும் வினையினும் மெய்தடுமாறா என்று கூறுகிறார் தொல்காப்பியர். இன்றைய அகராதியியல் மரபுப்படி சொற்களை வகைப்படுத்தி இலக்கணக் குறிப்பு தரவேண்டினும் தொல்காப்பியரின் உரிச்சொல் என்ற பகுப்பே அகராதிச் சொல் அல்லது பொருளுக்குரிய சொல் என்ற அடிப்படையை உடையதாதலால் அச்சொற்களின் பொது இயல்பைக் கூறி அமைகிறார். கம்பலை, சும்மை, கலி (உரி. 53) சீர்த்தி (16) மாலை (17) போன்றவை பெய ரொடு மயங்கின. ஓய்தல், ஆய்தல், (34) அலமரல், தெருமரல் (14) போன்றவை வினையொடு மயங்கின.

**ஆ. சொற்களின் மேற்கோள் வடிவங்கள்:** உரிச்சொல்லைத் தனிச் சொல் வகையாகவும் அவை, அடிச்சொற்கள் அல்லது அகராதி யன்கள் என்றும் கருதும் ஆய்வாளர், சில சொற்கள் கறுப்பு, சிவப்பு போன்றன (உரியியலில் வருவன வற்றுள் 55 சதவிகிதச் சொற்கள்) பகுபதமாக வருவதை எடுத்துக்காட்டி, உரிச் சொற்களை அடிச்சொற்கள் அல்லது குறைச் சொற்கள் என்று கூறுவது முற்றிலும் பொருந்துமா என்ற வினாவை எழுப்பியுள்ளார் (ஒ. நோ. சண்முகம், 1985).

உரிச்சொற்கள் பொருளுக்குரிய சொற்கள், அகராதிக்குரிய சொற்கள் (Lexical words) என்ற கருத்தினை ஏற்றுக்கொண்டால், அவ்வகராதிச் சொற்கள் எனப்படுபவை நுண் வடிவங்கள் (Abstract forms), அவ்வடி சொற்களிலிருந்து வரும் விகற்பங்கள் அனைத்திற்கும் பொதுவானவை என்பதையும் ஏற்றுக்கொண்டால் அவை எந்த வடிவில் மேற்கோளாகக் கொடுக்கப்பட்டுள்ளன என்பது முக்கியமல்ல என்பது தெளிவாகும். கறுப்பு, சிவப்பு என்பன பகுபதமாகக் கொடுக்கப்பட்டிருப்பினும் கறு, சிவ என்பனவே உரிச்சொற்கள். ஓர் அகராதிச் சொல்லின் பல்வேறு வடிவங்களில் ஒன்றை மேற்கோள் வடிவமாக, அல்லது தலைச் சொல் வடிவமாகத் தேர்ந்து கொடுப்பது அகராதியியல் மரபே. எனினும் அவற்றின் விகற்பங்கள் அனைத்தையும் அவ்வடிவம் உட்கொள்ளும். மேற்கோள் வடிவத்தைத் தேர்ந்தெடுக்கும் கொள்கை அகராதிக்கு அகராதி வேறுபடும். தமிழ் அகராதிகளில், வினைக்கு, சில முன்னிலை ஏவல் வடிவங்களைத் தர, சில தொழிற் பெயரைத் தருகின்றன. எனினும், ஓர் அகராதி ஒரு முறையைத் தான் பின்பற்றும். ஆனால், தொல்காப்பியர் ஒரு முறையைப் பின்பற்றாது, சில சொற்களுக்கு அடிச் சொற்களையும் (உறு, தவ) சில சொற்களுக்குத் தொழிற்பெயர் வடிவங்களையும் (ஆய்தல், ஓய்தல்), வேறுசில

சொற்களுக்கு ஆக்கப்பெயர்களையும் (கறுப்பு, சிவப்பு) தருகிறார். இவ்வகையில் இன்றைய அகராதியியல் முறையிலிருந்து தொல்காப்பியர் வேறுபடுகிறார். நூற்பாவின் யாப்பமைதி காத்தலும் உரிச் சொற்களில் சில அடிச்சொல் வடிவில் தனியாக வராமையும் அதற்குக் காரணங்களாதல் வேண்டும்.

சொற்பொருள் பற்றிய செய்திகள்;

அ. பலபொருள் ஒரு சொல்லும் ஒரு பொருட் பன்மொழியும்: சொற்பொருள் பற்றிய செய்திகளுள் ஒருசொல் பல பொருட்கு உரித்தாய் வருதலும் பல சொல் ஒருபொருட்கு உரித்தாய் வருதலும் அகராதியியல் கூறுகள் என்பது முன்பே பிறரால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஒரு சொல் பலபொருட்கு உரித்தாய் வருவனவற்றுள், இன்று பொருட் பன்மை (Polysemy) உருவொப்புமை (Homonymy) என்ற இரு வகைகள் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன. கால் என்ற சொல் உடலுறுப்பு, நாற்காலி போன்றவற்றின் பகுதி, வண்டிச்சக்கரம் ஆகியவற்றைக் குறிப்பது பொருட்பன்மை. அஃதாவது, ஒருசொல் ஒன்றற்கொன்று தொடர்புடைய பல பொருள்களைக் கொண்டிருத்தல். ஆனால், மா என்ற சொல் விலங்கு, மரம், கருமை போன்றவற்றைக் குறிப்பது உருவொப்புமை. அதாவது, வேறுவேறு சொற்கள் ஒரே வடிவத்தைக் கொண்டிருத்தலாகும். ஆனால் மா என்ற சொல்லே 'விலங்கு' என்ற பொதுப்பொருளையும் குதிரை என்ற சிறப்புப் பொருளையும் தருவது பொருட்பன்மை. இத்தகு வேறுபாடு தொல்காப்பியரால் காட்டப் பெறவில்லை. அவர் எடுத்துக்காட்டுகள் பெரும்பாலும் உருவொப்புமையாகவே அமைந்துள்ளன.

ஆ. இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றுதல்: உரியியல் முதல் நூற்பாவில் வரும் 'இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி' (உரி. 1) என்ற தொடர் கருத்து வேறுபாட்டிற்கு இடமுள்ளதாக அமைந்துள்ளது. தெய்வச்சிலையார் தவிர மற்ற உரையாசிரியர்கள் அனைவரும் உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு என்ற மூவகைப் பொருண்மைகளுள் ஒன்றற்குரியனவாக வரும் எனக் கூறுகின்றனர். இவ்வடிப்படையில் உரியியலில் பொருள் கூறப்பெறும் சொற்களைப் பகுப்பது பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. தீர்தல், தீர்த்தல் (உரி. 22) என்ற சொற்கள் தரும் விடற்பொருளையும் கெடவரல், பண்ணை (உரி. 23) என்ற சொற்களின் விளையாட்டுப் பொருளையும் குறிப்பு என்பது எவ்வாறு பொருந்தும் என்பது புரியவில்லை. பெரும்பாலான வினைப் பொருண்மைகள் (ஒ. நோ. "ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய் ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்." உரி. 34) குறிப்புப் பொருண்மையில் அடக்கப்படுவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

ஆனால், தெய்வச்சிலையார் மற்ற உரையாசிரியர்களிடமிருந்து வேறுபட்டுப் பொருள் கூறுகின்றார். "இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி" என்பது சொல்லானும், குறிப்பானும் பண்பானும் புலப்பட்டு என்றவாறு. சொல்லாற் புலப்பட்டது உறு (உரி. 3) என்பது. இதனின் இஃதுறும் என்றவழி மிகும் என்னும்

பொருள் புலப்பட்டது. குறிப்பாற் புலப்பட்டது கறுத்தான் (உரி. 76) என்பது. ஒருவன் மாட்டுக் கருமையாகிய நிறத்தைக் குறியாது அவனது வெகுட்சியைக் குறித்தலாற் குறிப்பாயிற்று. பண்பாற் புலப்பட்டது "வெகுட்சிக்குக் கண் சிவக்கும்" என்பது. கண்ணின் சிவப்பு அது சிவத்தற்குக் காரணமாகிய வெகுட்சியின்மேல் வந்தது. இவற்றை வடநூலாசிரியர் முக்கியம், இலக்கணை கௌனம் என்ப. சொற்பொருள்படும்வழி, சொல்லானும் குறிப்பானும் குணத்தானும் பொருள் படும் என்பதூஉம், ஈண்டுக் கூறப் படுகின்ற உரிச்சொல் இம்மூவகை யானும் பொருள் வேறுபடூஉம் என்பதூஉம் கூறியவாறாம்."

இங்கே தெய்வச்சிலையார் மற்ற உரையாசிரியர்களிடமிருந்து இரு வகையில் வேறுபடுகிறார். (1) இசை என்ற சொல்லுக்குச் சொல் எனப் பொருள் கொள்கிறார். (2)இசை, குறிப்பு, பண்பு என்பனவற்றைப் பொருண்மையில் வகைகளாகக் கொள்ளாது பொருள்படும் அல்லது புலப்படுக்கும் முறைகளாகக் கொள் கிறார். இவற்றை வடநூலாரின் மூவகைப்பொருள்களாகிய முக்கியப் பொருள், இலக்கண கௌனம் என்பவற்றுடன் ஒப்பிடுகிறார். இவ்வேறுபாடுகள் இன்று அகராதி யியலில் சொற்பொருள் கூறுகளாகக் கருதப்படும் கருத்துப் பொருள் (designation), குறிப்புப் பொருள் (connotation), பொருள் வழக்கு வரையறை (range of application) என்ற வேறுபாடுகளை ஒத்து விளங்குகின்றன. (Zgusta, 1971 : 27). இசை என்பதனைச் சொல் என்று கொண்டதால் சொல்லின் கருத்துப் பொருள் அல்லது முக்கியப்பொருள் பெறப்படுகிறது. பெயர்ப்பொருளை முக்கியப்பொருள் கருத்து (intellectual meaning) என்று கொள்வதும் அகராதியியல் வழக்கே (Zgusta, 1971 : 35) தொல்காப்பியரின் குறிப்பும் அகராதியியலார் அல்லது சொற்பொருளியலாரின் connotation அல்லது குறிப்புப் பொருளும் ஒப்பானவை. ஆனால் தொல் காப்பியரின் பண்பு என்பது வழக்கு வரையறை (range of application) யுடன் ஒப்பிடத்தக்கது அல்ல. அதனை உல்மன் (1962) என்னும் பொருளியலார் கூறும் உணர்ச்சிப் பொருள் (emotive meaning) என்பதுடன் ஒப்பிடலாம். எனவே தெய்வச்சிலையாரின் பொருள் அகராதியியல் சொற்பொருளியல் முறைகளை ஒத்திருப்பதுடன் பொருத்த மானதாகவும் அமைகிறது.

**இ பொருள் மயக்கம் தவிர்தல் :** ஒரு சொல் பலபொருளில் வருதலைப் பொருள்மயக்கம் (ambiguity) என்று கூறுவர். இம்மயக்கம் சொற்கள் வழங்கும் மொழிச்சூழலால், அஃதாவது அச்சொல்லையடுத்து முன்னும் பின்னும் வரும் சொற்களால் தெளிவுபெறும் (disambiguation) என்று கூறுவர். இக்கருத்தையே தொல் காப்பியர்:

"மெய்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்
முன்னும் பின்னும் வருபவை நாடி
ஒத்த மொழியால் புணர்த்தனர் உணர்த்தல்
தத்தம் மரபில் தோன்றுமன் பொருளே"(உரி. 93)

என்ற நூற்பாவால் விளக்குகிறார். அகராதிகளில் பொருள் வேறுபாடுகள், எடுத்துக்காட்டுத்தொடர்கள் (illustra-

tive examples) மூலம் புலப்படுத்தப்படும். இதுவே சொற் பொருளியல் கண்ணோட்டத்தில் தொல்காப்பிய ரால் உணர்த்தப்பட்டுள்ளது. வேறு சில சொற்பொருளியற் செய்தி களையும் தொல்காப்பியர் உரியியலில் விளக்குகின்றார்.

"மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா"(உரி.98) என்ற நூற்பாவின் மூலம் சொற்பொருள் இடுகுறியாய் அமைந்தது என்பதைக் கூறுகின்றார். இதை மொழியியலார்' arbitrariness' என்று கூறுவர். இந்தச் சொல் இப்பொருளை உணர்த்த வேண்டும் என்பதற்குச் சொல்லுக்கும் பொருளுக்கும் தொடர்பு உண்டு என்பவர் கொள்கையிலிருந்து வேறு படுகிறார் என்பது தெளிவாகிறது.

**அமைப்புக் கூறுகள் :**

**அ. சொல் தேர்வுக் கொள்கை :** ஒரு மொழியில் வழங்கும் பொருட்குரிய அல்லது அகராதிச் சொற்கள் இவையென வரையறுத்தல் எளிய செயலல்ல. இலக்கணச் சொற்கள் அகராதிச் சொற்கள் ஆகிய இரண்டில் இலக்கணச் சொற்கள் மூடிய தொகுதி (Closed set) என்றும் அகராதிச் சொற்கள் திறந்த தொகுதி (Open set) என்றும் கூறுவர் (Lyons, 1968:436). அகராதிச் சொற்கள் அல்லது பொருட்குரிய உரிச்சொற்களின் இத்தன்மையை,

> "இனைத்தென அறியும்
> வரம்பு தமக்கு இன்மையின்
> (உரி. 100)

என்ற அடிகளால் புலப்படுத்துகிறார் தொல்காப்பியர். எண்ணற்ற சொற் களில் எவற்றைத் தொகுக்க இருக்கும் அகராதியில் சேர்ப்பது என்ற சொல் தேர்வுக் (selection of words) கொள்கை தொகுக்கப்படப் போகும் அகராதியின் வகை, நோக்கம், இவற்றின் அடிப் படையில் முடிவு செய்யப்படும். தொல்காப்பியர் உரியியலை இலக்கணத்தின் பகுதியாக அமைத் திருப்பதாலும் அது தாய்மொழி யாளரைப் பயன்படுத்துவோராகக் கொண்டிருப்பதாலும் எல்லார்க்கும் தெரிந்த வெளிப்படையான சொற்களைத் (common words) தேர்ந்தெடுக்காது வெளிப்பட வாராத உரிச் சொற்களையே (rare words) தேர்ந்தெடுக்கிறார்.

> வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
> வெளிப்பட வாரா உரிச்சொல் மேன
> (உரி. 2)

என்ற நூற்பா தொல்காப்பியரின் சொல் தேர்வுக் கொள்கையையும் அதன் காரணத்தையும் புலப் படுத்துகிறது. வெளிப்படு சொற்களை எடுத்துச் சொல்ல வேண்டாம் என்பதன் மூலம் அவை நூல் பயன்படுத்துவோர் நன்கு அறிந்தவை என்பதைக் காட்டுகிறார். அரிய சொற்களுக்கே இங்குப் பொருள் கூறப்படுகின்றன என்று அடுத்துக் கூறுகிறார். எனவே, உரியியல் அகராதி யியல் கண்ணோட்டத்தில் அருஞ்சொற் பொருள் அகராதி என்னும் சிறப்பகராதியின் பாற்படும்.

**ஆ. பொருள் விளக்க முறை:** அகராதி களில் சொற்களின் பொருள்கள், சொற்பொருள் விளக்க வரையறை (lex-

icographic definition) ஒருபொருட் பன்மொழி அல்லது ஒப்புச் சொல்லைப் பயன்படுத்தல் (Use of synonyms or equivalents) என்னும் இரு முறைகளால் விளக்கப்படும். ஒரு பொருள் பன்மொழிகள் தனியாகவோ விளக்க வரையறையுடன் சேர்த்தோ பயன்படுத்தப்படும் (Zgusta, 1971: 259). தொல்காப்பியர் தான் பொருள் கூறும் சொற்களின் பொருளை விளக்க ஒருபொருட் பன்மொழிகளையே பயன் படுத்துகிறார்.

அகராதியில், ஒருபொருள் சொற்களைப் பொருள் விளக்கம் கூறப் பயன்படுத்தும்பொழுது, பயின்று வழங்காத வழக்கொழிந்த, அரிய சொற்களின் பொருள்களை விளக்கப் பயிற்சியில் உள்ள எளிய சொற்களைப் பயன்படுத்துவதே முறையாகும். (Singh, 1982; 133,134). தொல்காப்பியர் பொருள்கூறும் முறை இம்முறையே யாகும்.

> பயிலாதவற்றைப் பயின்றவை
> சார்த்தித் தத்தம் மரபிற்சென்று
> நிலை,மருங்கின் எச்சொல் லாயினும்
> பொருள் வேறு கிளத்தல் (உரி. 1)

என, பயிற்சியில் இல்லாத சொற்களைப் பயிற்சியில் உள்ள சொற்களோடு சார்த்திப் (equating) பொருள் சொல்ல வேண்டும் என வரையறை செய்கிறார்.

## முடிவுரை

மேற்கூறிய அனைத்தும் தொல்காப்பிய உரியியல், மொழியமைப்பை விளக்கும் இலக்கண நூலின் பகுதியாக அமைந்து அருஞ்சொற்பொருள்கூறும் அகராதிப் பகுதி தனியியலாக வளர்ந்துள்ள அகராதியியலின் கூறுகளையும் சொற்பொருளியல் கூறுகளையும் கொண்டுள்ளது என்பதைத் தெளிவு படுத்துகின்றன.

## குறிப்புகள்

1. சொல் எனப்படுப பெயரே வினையென்று
   ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே - சொல் 158.
2. இடைச் சொற்கிளவியும் உரிச்சொற் கிளவியும்
   அவற்றுவழி மருங்கின் தோன்றும் என்ப -சொல். 159.

## மேற்கோள் நூல்கள்


சண்முகம், செ. வை. (1985) "உரிச்சொல்" அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழக முதல் கருத்தரங்கு மாநாடு, அண்ணாமலை நகர்.

சுந்தரசண்முகனார், (1971) தமிழ் அகராதிக்கலை, கழகம், சென்னை.

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், இளம்பூரணம், 1955, கழகம், சென்னை.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையர் உரை, 1959, கழகம் சென்னை.

தொல்காப்பியம், சொல்லதிகாரம், தெய்வச்சிலையார் உரை, 1929, கரந்தைத் தமிழ்ச் சங்கம், கரந்தை, தஞ்சாவூர்.

மீனாட்சிசுந்தரன், தெ. பொ. (1974) "உரிச்சொல்", இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்-1, பதி. ச. அகத்திய லிங்கம், க. பாலசுப்பிரமணியன், அண்ணாமலை நகர், ப. 121-138.

ஜெயதேவன், வ. (1977) தமிழ் அகராதியியல், சென்னை.

Chomsky, N.A. (1965) *Aspects of the Theory of Syntax*, The M.I.T. Press, Massachusettes.

Gleason, H.A. (1961) *An Introduction to Descriptive Linguistics*, New York.

Katz, J.J. and P. Postal, (1964) *An Integrated Theory of Linguistic Descriptions*, M.I.T. press, Massachusettes.

Lyon, J. (1968) *Introducction to Theoretical Linguistics* Cambridge, London.

Singh, R.A. (1982) *An Introduction to Lexicography*,CIIL, Mysore.

Tamil Lexicon, Vol. I. 1924, University of Madras.

Ullmann, S. (1962), *Semantics, An Introduction to the Science of Meaning*, Basil Black well, London.

Zgusta, l. (1971) *Manual of Lexicography*, Mouton, The Hague.

தமிழ்க் கலை
தமிழ் 7, கலை 1, 2

# அகராதித் தொகுப்பில் எழும் சில சிக்கல்கள்

பா. ரா. சுப்பிரமணியன்

ஓர் அகராதியில் பெயர்ச் சொல்லையும் வினைச் சொல்லையும் எவ்வடிவத்தில் தரவேண்டும் என்பதற்குச் சில நியதிகள் அகராதி தொகுப்போரால் மேற்கொள்ளப் படுகின்றன. இந்நியதிகள் பெரும் பாலும் மரபு வழிபட்டவை. அவை மொழியின் இலக்கண மரபை ஒட்டி அமையும். இலக்கண நூல்கள் பெயர்ச் சொற்களையும் வினைச்சொற்களையும் பகுத்துக் காட்டும் முறையை ஒட்டிய வகையில் தலைச்சொல் தேர்ந்தெடுக்கப் பட்டால் அகராதியைப் பயன் படுத்துவோருக்கு எளிமையாக இருக்கும்.

பெயர்ச்சொல்லின் ஒருமை-பன்மை வடிவங்களையும் வேற்றுமை யுருபு ஏற்கும் வடிவம்-ஏற்ற வடிவம் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு பெயர்ச்சொற்களுக்குத் தலைச்சொல் சில தமிழ் அகராதிகளில் (வின்சுலோ, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி செ.ப.அக.) தரப்பட்டுள்ளது. அகராதியின் பன்மை விகுதிகளும் வேற்றுமையுருபுகளும் காட்டப் படுகின்ற காரணத்தால் இவ்விகுதி அல்லது உருபு ஏற்கும் முன் உள்ள வடிவமே பெயர்ச் சொல்லின் தலைச்சொல்லாகிறது. இவை சேர்க்கப் படுகையில் சந்தி விதிகளால் ஏற்படும் மாறுதல்கள் அகராதியில் இடம் பெறுவதில்லை. அவை மொழியின் இலக்கணத்தைச் சார்ந்தவை.

சான்றாக : மரம்-மரங்கள்
மரத்தை/மரத்தினை

என்னும் வடிவங்களில் ஒருமை வடிவமாகிய 'மரம்' என்பதே தலைச்சொல் ஆகும். பன்மை வடிவிலும் வேற்றுமையுருபு ஏற்ற வடிவிலும் உள்ள சந்தி விகுதிகள் (மரம் + கள், மரம் + அத்து + இன் + ஐ) இலக்கணத்தின் பாற்பட்டவை. அவை சில விதிகளின் அடிப்படையில் ஒரே சீராக அமைகின்றன. எனவே விகுதியோ உருபோ ஏற்ற வடிவங்கள் அகராதியில் காட்டப்பெறுதல் இல்லை.

இந்த முறை எளிதானது; வசதியானது. ஆயினும் இடர்ப் பாடில்லாத முறையன்று. எடுத்துக் காட்டிற்கு ஒன்றிரண்டைச் சுட்டிக் காட்டலாம். குலப்பெயர்களை அல்லது இனப் பெயர்களை ஒருமை வடிவில் கொடுப்பதா, பன்மை வடிவில் கொடுப்பதா?

இடையன் - இடையர்
செட்டி - செட்டியார்
தமிழன் - தமிழர்

ஒருமை வடிவத்தை அகராதியில் தருவது என்னும் நியதியை ஏற்றுக் கொண்டால் 'இடையன்' என்று கொடுக்க வேண்டியிருக்கும். அச் சொல்லால் அவ்வகுப்பார் மனம் வருந்தக்கூடும். இன்று தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கின்ற மறுமலர்ச்சியையும் சாதி-குலம் பற்றிய மாறுபட்ட கண்ணோட்டத்தையும் அச்சொல் பிரதிபலிப்பதாக இராது. அகராதி உருவாக்குவோர் சமுதாய உணர்வோடு இங்கு நடந்துகொள்ள வேண்டியவர் ஆகின்றனர்.

இன்னும் ஒரு பெயர்ச்சொல்லை நோக்குவோம். 'அமைச்சன்' என்ற சொல் அகராதியில் இடம் பெற்றுள்ளது. 'அமைச்சர்' என்பது பலரைக் குறிப்பிடுகின்ற முறையால் அகராதியில் இடம்பெறாது. ஆயினும் இன்றைய நடைமுறையில் 'அமைச்சர்' என்னும் சொல் பலரைச் சுட்டாமல், ஒருவரையே சுட்டுவதாலும், மரியாதைப் பன்மை (Honorific Plural) என்னும் நிலையைத் தாண்டியிருப்பதாலும் (முதலமைச்சர், கல்வியமைச்சர், அமைச்சரகம் ஆகிய ஆட்சிகளை நோக்க) 'அமைச்சர்' என்பது அகராதியில் இடம் பெறும் தகுதி பெறுகிறது.

வினைச் சொல்லை நோக்கும் போது வேறு சில நியதிகள் மேற்கொள்ளப்படுகின்றமை தெளிவாகும். (அ) வினையின் உடன்பாட்டு நிலை, எதிர்மறை நிலை என்னும் இரண்டில் எதிர்மறை விகுதியுடன் கூடிய வினையடியைக் காட்டாது உடன்பாட்டு நிலையில் உள்ள வடிவமே அகராதியில் தலைச் சொல்லாகிறது. (ஆ) தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடங்களுக்கும் உரிய வினைமுற்று வடிவங்களும் பல்வேறு பெயரெச்ச, வினையெச்ச வடிவங்களும் பொதுவாக அகராதியில் இடம் பெறுவதில்லை. இவை யாவும் பெறுவதற்கு அடிப்படையாக இருக்கும் தெரிநிலை வினையடியைத் தருவதே அகராதியின் மரபாக இருக்கிறது.

சான்றாக :

அறிகிறான் - அறிந்தான் - அறிவான்; அறியான்

அறிகிற - அறிந்த - அறியும்; அறியாத

அறிந்து - அறிய; அறியாமல்
என்னும் உடன்பாட்டு-எதிர்மறை வினைமுற்றுகளும் எச்ச வடிங்களும் உண்டாவதற்கு மூலமான 'அறி' என்பதே தலைச் சொல்லாகிறது.

தெரிநிலை வினையின் தலைச் சொல்லை அகராதியில் தரும்போது மேற்கொள்ளப்படும் மற்றொரு மரபு (செ. ப. அக. யில் பின்பற்றப்பட்ட முறை) வினையடியுடன் -தல்/ -த்தல் என்னும் குறியீடு சேர்ப்பதாகும்.

எ.டு. படி-தல்
படி-த்தல்

இம்முறையை வினையைக் காட்டும் வாய்பாடாகக் கொள்ள வேண்டுமே யன்றித் தொழிற்பெயராகக் கொள்வது பொருத்தமற்றது. வாய்பாடாகக் கொள்ளாமல் தொழிற்பெயராகக்

கொள்வோமாயின் பிழைகள் நேர வழியுண்டு. எ.டு. 'கட' என்னும் வினையடியை அகராதியில் கடத்தல் என்று காட்டுவதைக்கொண்டு இவ் வினைக்குப் 'பிற நாட்டிலிருந்து பொருள்களைக் கள்ளத்தனமாகக் கொண்டு வருதல்' என்னும் பொருள் உண்டு எனப் பிழையாக எண்ண நேரிடும். இப்பொருள் இவ்வினைக்கு இல்லை என்பது வினையின் முற்றுவடிவங்களை (கடக்கிறான்-கடந்தான்- கடப்பான் என்பனவற்றை) நோக்கத் தெளிவாகும். மேலும் வினையடிக்கும்-தல்/-த்தல் என்னும் குறியீடுகளுக்கும் இடையில் இடப்படும் சிறுகோடு(-) இது தொழிற்பெயர் அன்று என்பதை உணர்த்த வல்லது. 'கடத்தல்' என்று சேர்த்து எழுதிய வடிவம் கடத்து-தல் என்னும் வினையின் தொழிற்பெயராகும். அவ்வினைப் பெயரே மேற்சொன்ன பொருளைத் தருகிறது.

அகராதியில் பெயர்ச் சொல்லிற்கும் வினைச்சொல்லிற்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள இம் முறையை அகராதியியலில் Word and Paradigm Model என்பர். இதனைச் "சொல்-சொல்விகற்ப முறை" என்று அழைக்கலாம். இம்முறை வசதியானது; பொருள் வேறுபடாத ஒரு சொல்லின் வடிவங்களைக் காட்டுவதற்குச் சிறந்தது. ("One of the bases of the lexicographer's work is the fundamental assumption that such series of words as book: :books, or work: :works: :worked belong together. In other words, the usual working model of the lexicographer is the so-called word-and-paradigm model. When using this model single series of forms such as those quoted above remains the same, while only the different grammatical categories are expressed by different forms" (Zgusta. Manual of Lexicography, P.119)

மிகக் குறைவான அல்லது மிக ஒழுங்கான பெயர், வினை விகற்பங்களுடைய ஒரு மொழிக்கு அல்லது ஒரு மொழியின் ஒரு காலகட்டத்திற்கு அகராதி உருவாக்கும் போது மேற்கூறிய முறை மிக்க வசதியானது என்பதில் ஐயமில்லை. அவ்வாறன்றிப் பல்வேறு விகற்பங் களுடைய, பல்வேறு கால கட்டங்களைத் தாண்டிவந்து வழங்குகிற ஒரு மொழிக்கு இம்முறை போதியதாக இல்லை என்று கூறவேண்டும். சங்க இலக்கியங்களில் வழங்கும் வினை விகற்பங்கள் அனைத்தையுமோ பெரும்பாலான வற்றையோ தமிழ்ப் பேரகராதியின் வினைத் திரிபு அட்டவணையைக் கொண்டு அறிந்து கொள்ள முடியாது. அகராதியை வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு உருவாக்கும் போது சொற்பொருள் மட்டுமல்லாது சொல்லின் வடிவங்களும் வரலாற்று முறையில் அகராதியில் ஏதேனும் ஒரு முறையில் அமைய வேண்டும்.

(ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி "to be" என்னும் வினைச் சொல்லிற்கு ஆங்கிலத்தில் இருந்துவந்த வடிவங் களை, 1) நிகழ்காலம் Present Indicative, 2) ஏவல் Present Imperative, 3) இறந்தகாலம் Past indicative, 4) be என்பதன் பிற வடிவங்கள் parts from be only என நான்காகப் பிரித்து ஒவ்வொரு பிரிவின் கீழும் உட் பிரிவுகளுடன் பல கால கட்டங்களில்

வழங்கி வந்த பல வடிவங்களை மேற்கோளுடன் காட்டியுள்ளது).

தமிழ்ப் பேரகராதியில் தெரிநிலை வினைகளுக்காவது ஓர் அட்டவணை இணைப்பாகத் தரப்பட்டு வினைவிகற்பங்களை அறிந்து கொள்ள ஒரு வழி செய்யப் பட்டிருக்கிறது. தெரிநிலை வினை களைப் போன்று பால்-எண்-இடம் ஆகியன காட்டும் விகுதிகளுடன் கூடியும், மற்றும் எச்ச வடிவங்களுடன் வழங்கும் காலங் காட்டாத குறிப்பு வினைகளைப் பற்றி மிகக் குறைவான செய்திகளையே பேரகராதியில் காண்கிறோம். பண்டைய இலக்கியங் களில் மிகப் பயின்று வரும் இத்தகைய வினையாக்கத்தை அகராதியில் குறிப்பிடுவது எவ்வாறு?

நாம் முதலில் இவ்வினையாக்கம் இரு வகையில் தொழிற்படுவதைத் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும்.

1.பெயர்ச் சொற்களில் தன்மை முன்னிலை-படர்க்கை ஆகிய மூவிடப் பால் எண்-இடம் காட்டும் விகுதிகள் சேர்த்து வினையாக்கும் முறை ஒன்று.

எ.டு.

கண்

| | |
|---|---|
| கண்ணை | கண்ணையுடையை |
| கண்ணேம் | கண்ணையுடையேம் |
| கண்ணன் | கண்ணையுடையான் |

என வருவன.

2. சில பண்புச் சொற்களி லிருந்தும் (எ.டு. இனிமை) எதிர்மறை அடிகளிலிருந்தும் தெரிநிலை வினை களுக்கு இணையாக வடிவங்கள் உருவாக்கப்பட்டு வழங்கி வருகின்றன. எடுத்துக்காட்டாக அன்-மை, இன்-மை, உடை-மை, உண்(உள்)-மை ஆகிய வற்றைக் காட்டலாம். இவற்றிலிருந்து உண்டாகிய காலங் காட்டாத வினை வடிவங்கள் பல்கிப் பெருகிப் பண்டைய இலக்கியங்களில் வழங்கி வருகின்றன. சங்க இலக்கியங்களிலும் சங்க காலத்தை ஒட்டிய மணிமேகலை வரையுள்ள இலக்கியங்களிலும் மேற் சொன்ன நான்கின் குறிப்பு வினைவடிவங்கள் பலவாகும். எடுத்துக் காட்டிற்கு இன்-மை என்னும் அடியிலிருந்து வழங்கி வரும் வடிவங்களைத் தரலாம்.

இல்
இல்லாமை

இல்லாதேன், இல்லேன், இலாதேன், இலேன்
இல்லேம், இலேம், இலம், இலோம்

இலாய்,
இலிர், இலீர்

இல்லவன், இல்லன், இல்லான், இல்லாதான், இல்லோன்;
இலன், இலாதவன், இலாதான், இலான், இலாளன், இலோன்

இல்லவள், இல்லாதாள், இல்லாள், இல்லோள்;
இல்லள், இலள், இலாள், இலோள், இலாதாள், இலாதவள்.

இல்லர், இல்லவர், இல்லார், இல்லோர், இல்லாகியர்,
இல்லாதவர், இல்லாதார்; இலர், இலவர், இலார்,
இலாதவர், இலாதார், இலாளர், இலோர்.

இலி
இல்லை, இலது, இலை, இல்லாகுதும், இல்லாகும்
இல்லது, இல்லாது

இல்லா, இல்லாதவை, இல்லாகியர், இல்லாகின்று;
இல, இலாகும்.

இன்றி, இன்றியும், இன்றாய், இன்று;
இல்ல, இல்லா, இல்லாயின், இலாதாயின், இலாது,
இல்லாது, இல்லாத; இலாத

இல்லாகியாங்கு, இல்லால், இல்லேல்;
இன்றாயின், இன்றாயினும்

மேற்காட்டிய வடிவங்கள் மணிமேகலை வரை உள்ள இலக்கிய நூல்களில் வழங்கி வருகின்றன. இவ்வாறு கிளைத்துள்ள இவ்வடிவங்களுக்குத் தாய்ச் சொல்லாக ஒரு வடிவத்தைத் தேர்ந்தெடுத்துத் தலைச்சொல்லாக அகராதியில் கொடுக்க வேண்டும்.

சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி இவ்வடிவங்கள் எந்தத் தாய்ச்சொல்லிலிருந்து கிளைத்தன வாகக் காட்டுகிறது? அப்பேரகராதி இல் என்பதற்கும் இன்மை என்பதற்கும் தந்துள்ள பொருள் விளக்கத்திலிருந்து இவ்விரண்டும் எதிர்மறைக்குறிப்பு வினையடியாகப் பயன்படுவதை அறிய முடியவில்லை. எனவே மேற்காட்டிய அத்தனை வடிவங்களுக்கும் மூலமான தாய்ச்சொல்லைப் பற்றிய செய்தி இல்லை. தாய்ச்சொல் தரப்படாமல் 'இல்' என்பதிலிருந்து பெறப்படும் சில வடிவங்கள் (இல்லாதவன், இல்லாமை, இல்லை, இலம், இலி, இன்றிய) தனித் தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவை தனியாகத் தரப்பட்டமைக்குப் பொருளும் இலக்கணமும் காரணங்க ளாகலாம்.

தெரிநிலை வினைகளுக்குச் சங்க இலக்கியங்களிலும் ஏனைய பண்டைய இலக்கியங்களிலும் வழங்கி வரும் பல்வேறான முற்று, எச்ச வடிவங்கள் தொகுக்கப்பட்டு அவை அகராதியில் தரப்படும் முறை குறித்தும் ஒரு முடிவு தேவை. வரலாற்று முறைப்படி அமையவிருக்கும் ஒரு பேரகராதியில் வினைக்கு வழங்கிவந்த வடிவங்களின் வரலாறும் தரப்பட வேண்டும். ஒரே வடிவுடைய பெயர்ச்சொல் எண்ணிடப்பட்டு வேறுபடுத்திக் காட்டப்படுகின்றது.

எ.டு.

பாழி[1], பாழி[2], பாழி[3]. இதுபோன்று இருவேறு வினைகளுக்கு ஒரே வடிவுடைய வினையெச்சம் வழங்கிவருவதையும் காணலாம்.

எ.டு.

புரைஇ[1] - பாதுகாத்து, புரந்து (பதிற்றுப்.50-4)
புரைஇ[2] - போன்று (அகநா. 152-23).

இவற்றை அவ்வவ் வினைகள் (புர-த்தல்; புரை-தல்) வருமிடத்து காட்டுவது இலக்கியம் கற்போருக்குப் பயனுடையதாக இருக்கும்.

தெரிநிலை வினை வடிவங்களுக்கு இணையாகக் குறிப்பு வினையடி வடிவங்கள் வழங்கி வந்துள்ளன. 'வெய்யை' (விருப்பத்தையுடைய) என்னும் வடிவத்திற்கு 'வெம்மை' என்னும் பண்புச்சொல் தாய்ச்சொல் என்பதை அகராதி பயன்படுத்துவோர்

அறிந்து கொள்வார்களா என்று கேள்வியும் எழுகிறது.

தெரிநிலை வினைகளுக்கு அட்டவணை தயார் செய்தது போன்று குறிப்பு வினைகளுக்கும் உருவாக்க இயலுமாயின் அவ்வட்டவணையைப் பேரகராதியில் தெரிநிலை வினை விகற்ப அட்டவணைக்கு அடுத்துக் கொடுக்கலாம்.

அல்லது குறிப்பு வினை வடிவங்களை அவ்வவ் வினையடிகள் வருமிடத்துத் தொகுத்தும் தரலாம். தெரிநிலை வினை வடிவங்களை வரலாற்று முறையில் தொகுத்தளிப்பது போன்று குறிப்பு வினை வடிவங்களையும் தொகுத்துக் காட்டலாம்.

4. அகராதியில் சொற்களுக்கு விளக்கம் தருவது எவ்வாறு என்பது குறித்தும் சிறிது கூறவேண்டும். இருமொழி அகராதியில் விளக்கம் தருவதில் எழும் சிக்கல் பற்றியும், ஒருமொழி அகராதியில் விளக்கம் தருவது பற்றியும் சில செய்திகள் கூறவேண்டும். எல்லோரும் அறிந்த சொற்களுக்கு விளக்கம் தருவது மிகவும் சிக்கலானது. எடுத்துக்காட்டாக, 'நீர்' என்னும் சொல்லைத் தமிழில் எவ்வாறு விளக்குவது? நீர்-'விண்ணிலிருந்தும், மண்ணிலிருந்தும் கிட்டும் மனிதன் உயிர் வாழ்வதற்கு வேண்டிய, நீர்மம்' என்பதா அல்லது 'ஹைட்டிரஜன் இருபங்கும் ஆக்சிஜன் ஒரு பங்கும் சேர்வதால் உண்டாவது' என்பதா?

இனிச்சில ஆங்கில அகராதிகள் நீர் என்னும் சொல்லிற்கு எவ்வாறு விளக்கம் அளித்துள்ளன எனப் பார்ப்போம்.

Oxford English Dictionary (O.E.D.)

Water : The liquid of which seas, lakes and rivers are composed and which falls as rain and issues from springs. When pure, it is transparent, colourless (except as seen large quantity, when it has a blue tint) tasteless, and inodorous.

Webster Contemporary Dictionary (W.C.D.)

Water : The colourless liquid that covers over 70 percent of the earth's surface, is capable of wetting and dissolving many different substances, and is an essential constituent of all organisms.

Oxford Advanced Learner's Dictionary (O.A.L.D.)

Water : liquid (H2O) as in rivers, lakes, seas and oceans.

முதலிரு அகராதிகளும் தரும் விளக்கம் இரு கூறுகளில் ஒத்துள்ளன. நீர் எங்குக் கிடைக்கிறது, எப்படிப் பட்ட தன்மையுடையது என்னும் இரு கூறுகளில் இவை விளக்கத்தைத் தந்துள்ளன. இரண்டாவது அகராதி 'பூமியின் நிலப்பரப்பில் 70 விழுக்காடு நீரால் மூடப்பட்டுள்ளது; பல பொருள்களைக் கரைக்கவல்லது என்னும் புதுச் செய்திகளையும் தருகிறது. மூன்றாவது அகராதி தந்துள்ள விளக்கம் மிகச் சுருக்கமாக உள்ளது. ஆனால், நீர் அறிவியல் அடிப்படையில் என்ன கூறுகள் கொண்ட கலவையாகும் என்பது

($H_2O$) குறிப்பிடப்பட்டுள்ளது. மூன்று அகராதிகளும் ஒவ்வொரு விதமாக விளக்கம் தந்திருப்பதற்கு ஒரு முதன்மைக் காரணம், அகராதி எந்த நோக்கத்திற்காக, யாருக்காக உருவாக்கப்படுகிறது' என்பதாகும். O.E.D. 'வரலாற்றடிப்படையில் பொருள் வளர்ச்சி காட்டுவதை நோக்கமாக உடையது. இவ் வகராதியைப் பயன்படுத்துவோர் அறிஞர்களாகவே இருப்பர். எனவே இவ்விரு நோக்கத்திற்குத் தகுந்த விளக்கம் தரப்படவேண்டும். 'பூமியின் பரப்பில் 70 விழுக்காடு நீர்' என்ற செய்தியும் 'நீரானது இரு கூறுகளின் கலவை' என்ற அறிவியல் செய்தியும் கால வரலாற்று முறையில் பயன்படத்தக்க செய்தி அன்று என விடப்பட்டிருக்கக் கூடும்.

வெப்ஸ்டர் சமகால அகராதி (Webster's Contemporary Dictionary) என்பது 'செய்திக் களஞ்சியப் பதிப்பு' (Encyclopedic Edition) என அறிவித்துக் கொண்டதால் அதற்குத் தகுந்தபடி (நிலப்பரப்பில் 70 விழுக்காடு நீர்; பொருளைக் கரைக்க வல்லது ஆகிய) கூடுதல் செய்தி விளக்கத்தையும் தந்துள்ளது. மூன்றாவது அகராதி ஆங்கிலம் கற்கும் மேல்நிலை மாணவர்களுக்கு என உருவாக்கப்பட்ட அகராதி ஆகையால் அதன்கண் 'நீர்' என்பதை மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய குறைந்தளவு விளக்கமே காணப்படுகிறது.

எத்தகைய அகராதி, யாருக்காக அகராதி என்பனவற்றைப் பொறுத்துச் செய்தி கூடுதலாகவோ குறைவாகவோ அமைகிறது. மேலை நாட்டகராதிகள் இயன்றவரை இவ்விருநோக்கங்களையும் மறப்பதில்லை; சிறப்பாகவே பின் பற்றுகின்றன. ஓட்டோ போட்லிங் என்பாரும் ரோத் என்பாரும் வடமொழிக்குச் செருமானிய மொழியில் முதலில் உருவாக்கிய அகராதி (1855 முதல் 1875 வரை வெளிவந்த அகராதி) தன் நோக்கத்திற்கு (வடமொழியின் சொற்கோவையை முதன் முதலில் ஐரோப்பியருக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்னும் நோக்கத்திற்கு) இணங்கச் சொற்கோவையைப் பெருக்கி விளக்கத்தைச் சுருக்கமாகவே தந்துள்ளது.

'கைலாஸ்' என்பதற்கு 'குபேரன், சிவன் ஆகியவரின் இருப்பிடமான மலை 'eines Berges, des Sitzes von Kuvera and Siva' என ஒரு சிறிய புராணக் குறிப்பைத் தந்தமைகிறது.

5. செருமனியில் அகராதித் தொகுப்பில் ஏற்பட்ட ஒரு திருப்பம் இங்குக் குறிப்பிடத்தக்கது. முதல் உலகப்போரில் செருமனி அடைந்த தோல்வியாலும் அதன்பின்னர், ஹிட்லரின் எழுச்சியாலும் அந்நாடு தன் அண்டை நாடான பிரான்சுடன் பகைமை கொண்டது. இப் பகைமையால் பிரஞ்சுமொழிச் சொற்களை செருமானிய மொழி யிலிருந்து நீக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஹிட்லரின் ஆட்சிக்காலத்தில் தோன்றிய அகராதிகள் மக்களிடையே வழங்கி வந்த பிரஞ்சுச் சொற்களைத் தர முனைந்தன. 'ஆரஞ்சு' (Orange) என்பது பிரஞ்சுச் சொல்லாதலால் 'ஆப்பில்சீன்' (Apfelsine) என்னும் செருமானிய சொல் அகராதியில் இடம் பெற்றது.

'நடைபாதை' என்பதற்குரிய Trottoir என்னும் சொல் நீக்கப்பட்டு 'Burgersteig' மட்டுமே இடம் பெற்றது. அக்காலத்து அகராதியில் 'செரு மானியருக்கு ஒரு செருமன் அகராதி' (Dem Deutchen volk ein Deutches Worterbuch) என்னும் தொடர் அச்சடிக்கப்பட்டிருக்கக் காணலாம்.

இம்முயற்சி இரண்டாம் உலகப்போர் முடிவுற்ற பின் வெளிவந்த அகராதிகளிலும் பழைய அகராதியின் புதிய பதிப்பிலும் கைவிடப்பட்டது. புதிய செருமன் அகராதிகளில் வழக்கிலுள்ள பிற மொழிச் சொல்லும் வழக்கிற்கு வந்துவிட்ட செருமானியச்சொல்லும் அகராதியியல் முறைப்படிச் சேர்க்கப்படுகின்றன. Langenscheidt என்னும் நிறுவனம் வெளியிடும் செருமன்-ஆங்கில அகராதியில் தொலைபேசி என்பதற்கு Telephon என்ற உலகவழக்குச் சொல்லும் Fern-sprnsprecher என்னும் செருமானிய அலுவலக ஆட்சிச் சொல்லும் உள்ளன. இவ்விரு சொற்களின் வழியாகக் கிளைத்த கூட்டுச் சொற்களும் தரப்படுகின்றன.

எ.டு. (Telephonnummer, Fern-sprechnummer)

6. மேற்கூறியவை அனைத்தும் சில அடிப்படைக் கொள்கை வகுத்துக் கொண்டு தீர்க்கவேண்டிய சிக்கல் களாகும். இவை தவிர அகராதி உருவாக்குவோருக்கு ஒவ்வொரு நாளும் எழும் சிக்கல்களும் உண்டு. அவை உடனுக்குடன் தீர்க்கப்பட வேண்டியன. இத்தனை சிக்கல்களுக்கும் முடிவு கண்டு வெளிவரும் அகராதி குறைபாடில்லாத அகராதியாக இருக்க இயலாது. ஏனெனில் புதிதாக வரும் ஓர் அகராதி பழைய அகராதியின் குறைவை நிறைவு செய்யும் நோக்கத்தோடு உருவாகிறது. குறைவே இல்லாத நிறைவான அகராதி என்பது கானல்நீர் போன்ற ஓர் உருவெளித் தோற்றமாக அடையவொண்ணாத ஒன்றாக உள்ளது (nothing in this world, not even a high-class dictionary, can ever attain perfection' - Muret Sanders German - English Dictionary, 1910).

தமிழ்க் கலை
தமிழ் 7, கலை 1, 2

# அகராதிச்சொற்கள்

பெ. மாதையன்

"குறிப்பிட்ட ஒரு மக்கட் சமூகத்தின் பேச்சுமுறையிலிருந்து தொகுக்கப் பட்டு, அச்சமூகத்தால் ஏற்பளிக்கப் பட்ட சொற்களின் ஓர் ஒழுங்கமைவுப் பட்டியலே அகராதி ஆகும். ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய பொருள்களைத் தகுதிவாய்ந்த வாசகன் ஒருவன் புரிந்து கொள்ளும் வகையில் தொகுப் பாளன் பொருளை அதில் தருவதோடு அச்சொல்லின் சமூகப் பயன்பாடு குறித்த தேவையான செய்திகளையும் தருதல் வேண்டும்."[1]

எனும் சி.சி.பெர்க் என்பாரின் அகராதி பற்றிய இவ்விளக்கத்தில் ஒழுங்கமைவுப் பட்டியல், சமூக ஏற்புடைய சொற்கள் என்பன கவனிக்கத்தக்கன. மொழியில் காணப்படும் சொற்களை நிரல்பட நிறுத்திப் பொருள்கூறுவது மட்டுமே அகராதியன்று என்பதையும் சில ஒழுங்கு நெறிகளுக்கு உட்பட்டுப் பதிவுகளைத் தெரிவுசெய்து அமைத்தல், சொற்களின் சமூகவயப்பட்ட உண்மைப் பயன்பாடுகளை உரைத்தல் என்பன போன்ற தொகுப்பியல் நெறிகள் பலவும் அகராதி உருவாக்க நெறியில் உண்டு என்பதையும் வலியுறுத்துவனவாய் உள்ளன.

சொற்றொகுப்பு, பதிவுத்தெரிவு, பதிவமைப்பு, பொருள் வரிசைநெறி, மேற்கோள் தருதல் எனப் பல்வகைப் பட்ட தொகுப்பு நெறிகளைக் கொண்டிலங்குவது இவ்வகராதிப்பணி. அதனால்தான் இங்கு ஒவ்வொரு பதிவமைப்பும் ஒரு தனி ஆய்வாகவே கருதப்படுகின்றது. நீண்டதோர் ஆய்வைக்காட்டிலும் செம்மையாய் அமைக்கப்பெறும் ஓர் அகராதிப்பதிவு சிறப்பு வாய்ந்தது. பதிவமைப்பு நெறி என்பதில் பல்வகைச் சிக்கல்கள் உண்டெனினும் ஈண்டுப் பதிவுச் சொற்கள் அல்லது அகராதிச் சொற்கள் என்பவை மட்டுமே ஆய்வுப் பொருள்களாய்க் கொள்ளப் பெறு கின்றன. அகராதிக்கலை நெறிகளுக்கு உட்பட்டுத் தெரிவு செய்யப்பெறும் அகராதிச் சொற்றேர்வு இயல்புகள், இயல்பான மொழிச் சொற் களினின்றும் இவை வேறுபடுந்தன்மை, தமிழில் அகராதிப் பதிவுகளைத் தெரிவு செய்வதில் கவனிக்கப்பட வேண்டிய சில நெறிகள் என்பன இக்கட்டுரைக்கண் எடுத்தியம்பப் பெறவுள்ளன.

**இலக்கணமும் அகராதியும்:** இலக் கணம், அகராதி எனும் இரண்டும் ஒருமொழியின் சிறப்பு வாய்ந்த

கூறுகளாம். ஓர் இலக்கண நூலைக் காட்டிலும் சிறந்த ஓர் அகராதித் தொகுப்பு மேம்பட்டது. காரணம், இலக்கண நூலில் இடம் பெறாத பல் வகைப்பட்ட முறையற்ற சொல்விரிவுகளும் அகராதியில் பதிவுகளாய்த் தரப்பெறுகின்றன. இக்காரணத்தினால் தான் புளும்ஃபீல்டு என்பார் அகராதியை 'ஒரு மொழியின் அடிப்படையான முறையற்ற வடிவங்களின் தொகுப்பாகவும் இலக்கணத்தின் பின்னிணைப்பாகவும்[2] சுட்டியுரைக்கின்றார்.

அகராதிகளில் முறையற்றவையும் முன்னறிந்து கூற இயலாதவையுமான சொற்களும் பொருள்களும் இடம் பெறுகின்றன. ஆனால் இலக்கண நூலில் முறையான சொற்கள் மட்டுமே எடுத்தியம்பப் பெறுகின்றன. இலக்கண நூலில் பெயர், வினை எனும் பொதுத்தலைப்பில் பல்வகையாய்ப் பரந்துபட்டுக் காணப்படுகின்ற சொற்களின் பொதுவியல்புகள் வரையறுத்து உரைக்கப் பெறுகின்றன. ஒரு குறிப்பிட்ட இலக்கணக் கூறாய்ச் செயற்படும் சொல்விரிவுகள் பல தமிழில் வாய்பாடுகளில் அடக்கி உரைக்கப் பெறுகின்றன. ஆனால் அகராதிகளில் பொதுமை மீறிய தனித்த சொல்விரிவுகள் பலவும் பதிவுகளாய் அமைகின்றன. இங்கு ஒரு வினையின் சொல்லடுக்கில் காணப் பெறும் வேறுபட்ட வடிவங்கள், சில சொல்விரிவுகளின் பொருள் வேறுபாடுகள், பன்மையிலோ, ஒருமையிலோ மட்டுமே வரும் பெயர்கள் என்பன போன்ற முறையற்ற வடிவங்களும் பொருள்களும் சுட்டிக்காட்டப் பெறுகின்றன. இதனால்தான் இலக்கணத்தினும் உயர்ந்ததாய் அகராதி கருதப் பெறுகிறது.

**சொற்களும் அகராதிச் சொற்களும்:** பொதுவாக மொழியில் வழங்கும் சொற்களுக்கும் அகராதியில் பதிவாய் அமையும் அகராதிச் சொற்களுக்கும் வேறுபாடு உண்டு. சொல் என்பதற்கு, புளும்ஃபீல்டு கட்டிலாச் சிறுவடிவம் (minimum free form) என இலக்கணம் உரைக்கின்றார். இவர்தரும் விதிப்படி சொல் என்பது சிறிதாகவும் தனித்தியங்கும் தன்மை வாய்ந்ததாகவும் இருத்தல் வேண்டும். ஆனால் அகராதிச்சொல் என்பது இதற்கு அப்பாற்பட்டதும் பரந்து பட்டதும் ஆகும்.

அவள் பாடச் சென்றாள்
நான் பார்க்கப் போனேன்
அஃது ஓடி வந்தது
அந்த வீடு அழகாக உள்ளது

எனும் தொடர்களில் உள்ள பாட, பார்க்க, ஓடி, அழகாக எனும் சொற்களில் உள்ள அ, இ, ஆக என்பன மொழியில் தனித்தியங்குவன அல்ல. அவ்வாறே உண்மார், ஆடுமார், அண்ணன்மார் என்பனவற்றில் உள்ள மார் என்பதும் தனித்தியங்கும் தன்மையதன்று. இவ்வாறு தனித்தியங்கும் தன்மை அற்ற சொற்களை மொழியியலார் கட்டுடை வடிவம் (bound form) எனக்குறிப்பர். தனித்தியங்கும் தன்மை உடையவை கட்டிலா வடிவம் (free form) எனச் சுட்டப் பெறும். இக்கட்டிலா வடிவங்கள் இலக்கணப் பொருள், சொற்பொருள் எனும் இரண்டையும் உடையனவாய் இருக்கக் கட்டுடை வடிவங்களோ இலக்கணப் பொருள் மட்டுமே உடையனவாக உள்ளன.

தொல்காப்பியர்

"பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்"[3]

எனச்சுட்டுவதை ஈண்டு நினைவு கூறலாம். ஆடு எனும் ஒரு சொல்; செயலை நோக்கும் வழி ஆடுதல் எனும் சொற்பொருளையும் சொல்லின் தன்மையை நோக்கும்பொழுது வினை எனும் இலக்கணப் பொருளையும் உணர்த்துகின்றது. ஆடுமார், ஆடி, என்பனவற்றில் உள்ள மார், இ என்பன முறையே பன்மை ஈறு, வினையெச்ச ஈறு எனும் இலக்கணப் பொருள் மட்டுமே உடையன; இவை சொற்பொருள் உடையன அல்ல.

மேற்காட்டப்பட்ட இருவகைச் சொற்களுமே அகராதிகளில் பதிவுகளாய் இடம்பெறும். இவை அனைத்துமே அகராதிச் சொற்கள் எனப்பெறும். அகராதியில் இடம் பெறும் சொற்கள் சிறியனவாகவோ தனித்தியங்கும் தன்மை உடையனவாகவோ இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. 'அ' எனும் ஒரு தனி எழுத்தும் முன்னொட்டு, பின்னொட்டு, இடைநிலை என்பனவும் எதிர், எழுது, வை, கொடு, கொள் என்பன போன்ற தனிச் சொற்களும் எதிர்கொள், எழுதிவை, எழுதிக்கொடு, அடைமழை என்பன போன்ற கூட்டுச் சொற்களும் சோற்றை மறந்தாள், வாயைப் பிளந்தான் என்பன போன்ற மரபுத்தொடர்களும் ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்பன போன்ற பழமொழிகளும் கூட அகராதிச் சொற்கள் தாம். இதனால்தான் அகராதிச் சொற்கள் என்பவை பொதுவான, மொழிச் சொற்களைக் காட்டிலும் பரந்துபட்டனவாய்க் கருதப்படுகின்றன.

மொழியில் சொல் எனக் குறிக்கப் பெறுவனவற்றுக்கும் அகராதித் தொகுப்பில் சொல் எனக் குறிக்கப் பெறுவனவற்றுக்கும் இத்தகைய வேறுபாடுகள் பலவும் உண்டு. மேலே குறிப்பிடப்பட்ட அகராதிச் சொற்கள் இயல்பான மொழி வழக்கில் ஓர் எழுத்தாகவும் ஒட்டாகவும் இடைநிலையாகவும் தனிச் சொல்லாகவும் கூட்டுச் சொல்லாகவும் ஏன் தொடராகவும் கூட இருக்கலாம். அகராதிச் சொற்களைத் தெரிவு செய்வதில் காணப்பெறும் பல்வகைச் சிக்கல்களுக்கும் அகராதிச் சொற்களின் இத்தகைய பரந்துபட்ட தன்மையே காரணம் எனலாம்.

**சொல்லடுக்கும் அடிப்படை வடிவமும்:** அகராதிச் சொற்கள் என்பவை பரந்துபட்டவை எனின், ஒரு மொழியின் அனைத்துச் சொற்களும் அகராதியில் இடம்பெறுமா எனின், அவை அனைத்தும் இடம்பெறா. தமிழைப் பொறுத்தமட்டில் பெயர், வினை, இடை, உரி என்ற நால்வகைச் சொற்கள் உண்டு. இவற்றில் பெயரும், வினையும் தனித்தியங்கும் தன்மையன. உரிச்சொற்கள் பலவும் பெயராகவும் வினையாகவும் நின்று செயற்பட வல்லன. தனித்த உரிச்சொற்களும் உண்டு. இடைச் சொற்களாய்க் கொள்ளப்படும் சாரியை, வேற்றுமை உருபு, காலஇடைநிலை, அசை, இசைநிறை, உவமஉருபு என்பன தனித்தியங்கும் தன்மையன் அல்ல; இவை பெயரையும் வினையையும் சார்ந்தே செயற்படும். இந்நால்வகைச் சொற்களுக்கும் அகராதியில் இடம் உண்டு. காரணம் இவை கட்டிலா வடிவம், கட்டுடை வடிவம் எனும் இரண்டாகவும் செயற்படுகின்றன.

பெயர், வினை என்பன திணை பால், எண், இடம், காலம் எனும் இலக்கணக் கூறுகளின் அடியாகப் பல்வகையாக விரிந்து நின்று செயற்படத்தக்கன. வா என்ற ஒரு வினையை அடிப்படையாகக் கொண்டு சங்க இலக்கியத்தில் மட்டும் நூற்றுக் கும் மேற்பட்ட வினைவிகற்பங்கள் வந்துள்ளன. இதே போன்று அல், அன், நல் என்பன போன்ற அடிச்சொற்களின் அடியாகத் திணை, பால், எண், இடங்களுக்கு ஏற்பக் குறிப்பு வினைகளும் குறிப்பு வினையாலணையும் பெயர்களும் தோன்றுகின்றன. இவை அனைத்தும் அகராதிகளில் இடம்பெறா. இவ்வாறு பல்வகையாய் விரிந்து வரும் சொற்கள் அனைத்தும் சொல்லடுக்கு (paradigm) எனப்பெறும். சுகுஸ்தா இச் சொல்லடுக்குகளைப் பற்றிக் குறிப்பிடு கையில் கிரேக்கமொழியில் ஒரு வினைக்கு 200 வகையான சொல் விரிவுகளும் (inflections) வடமொழியில் ஒரு வினைக்கு 1350 சொல்விரிவுகளும் உள்ளனவெனச் சுட்டுகின்றார். இவ்வாறு வருகின்ற சொல்விரிவுகள் அனைத்தும் அகராதியில் இடம்பெறா. ஒவ்வொரு சொல்லின் அடியாகத் தோன்றும் சொல்விரிவுகள் அனைத்தையும் அடிப் படையாகக் கொண்டு அகராதிப் பதிவுக்குரிய சொற்கள் தெரிவு செய்யப்பெறுகின்றன. இவ்வாறு அகராதிப் பதிவினைத் தெரிவு செய்யும் நெறி Word-and-paradigm model எனப்பெறும்.

சொல்லடுக்கு எனும் பொழுது அதில் சென்றான், செல்கிறான், செல்வான், சென்றது, செல்கின்றது, செல்லும், சென்றேன், சென்றாய், சென்றோம், சென்றார்கள் என்பன போன்றுவரும் அனைத்து முற்றுச் சொற்களும் சென்று, செல்ல, சென்றதும், செல்கையில், சென்றால், சென்ற, செல்கின்ற, செல்லும் என வரும் எச்சச்சொற்களும் சென்றவன், செல்லுபவள் என வரும் வினை யாலணையும் பெயர்களும் இவை போன்ற எல்லா வினைவிகற்பங்களும் அடங்கும். இவ்வினை விகற்பங்கள் அனைத்தும் செல்லுதல் எனும் சொற்பொருளில் திணை, பால், எண், இடம், காலம் எனும் இலக்கணக் கூறுகளில் மட்டுமே மாற்றம் பெற்றுள்ளன.

இவ்வாறு பல்வகையாக விரிந்து பரந்து வருகின்ற சொல்விரிவுகள் அனைத்தையும் செம்மையாய்க் கண்டு இச்சொல்விரிவுகள் அனைத்தையும் எளிதில் வரவழைத்துக்கொள்ளத் தக்கதொரு வடிவை அகராதிப் பதிவாய்த் தருவது பொதுவான அகராதிக்கலை நெறி. இவ்வாறு தெரிவு செய்யப்பெறும் வடிவமே அடிப்படை வடிவம் (canonical form) எனப் பெறுகின்றது. மேற்குறிப்பிட்ட சென்றான் முதலாய சொற்கள் அனைத்தும் சொல்லடுக்கு (paradigm) எனப்பெறும். சென்றான், செல்கிறான் என இவ்வாறு பரந்துபட்டு வருகின்ற வினை விகற்பங்கள் அனைத்துக்கும் ஆதாரமான **செல்** என்பது அடிப்படை வடிவம் எனப்பெறும்.

இவ்வடிப்படை வடிவைத் தெரிவு செய்வதில் ஒவ்வொரு மொழியும் தத்தம் மரபுவழிப்பட்டுச் சில நெறிகளைக் கைக்கொண்டுள்ளது. தமிழைப் பொறுத்தமட்டில் பெயர் களில் ஆடவன், அரசன் என்பன போன்ற ஆண்பாற் பெயர்ச்

சொற்களும் வினைகளைப் பொறுத்த மட்டில் செல், ஆள், கொல், அறி என்பன போன்ற ஏவல் வினை வடிவங்களும் குறிப்பு வினை களைப் பொறுத்தமட்டில் அல் என்பது போன்ற அடிச்சொற்களும் அடிப்படை வடிவங்களாய்த் தெரிவுசெய்யப் பெறுகின்றன. இதுவே தமிழ் அகராதிக் கலை மரபாக உள்ளது.

**அடிப்படை வரிவத்தெரிவு:** அடிப்படை வடிவங்களைத் தெரிவு செய்யும்போது அவ்வடிப்படை வடிவம் எல்லாச் சொல்விரிவுகளையும் எளிதில் பெறுதற்குரிய தன்மையதாய் இருத்தல் அவசியமானது. வா, தா எனும் வினைகளின் அடியாகத் தோன்றும் வந்தான், வருகிறான், வருவான்; வந்தாள், வருகின்றாள், வருவாள்; வந்தது, வருகின்றது, வரும்; வந்தன, வருகின்றன, வருவன; வந்த, வருகின்ற; தந்தான், தருகின்றான், தருவான்; தந்தாள், தருகிறாள், தருவாள்; தந்தது, தருகின்றது, தரும் என்பன போன்ற சொல்விரிவுகளில் வா, தா எனும் ஏவல் வினைவடிவங்கள் எங்கும் இல்லை. பெரும்பான்மையான சொல் விரிவுகளில் வரும் வரு, தரு என்பன வற்றையே அடிப்படை வடிவங்களாய்க் கொண்டு அகராதிப் பதிவாய்த் தருதல் பொருத்தமானது.

**சொல்லடுக்கில் பொருள், வடிவ வேறுபாடுகள்:** சொல்விரிவுகள் எல்லாம் பொருள், வடிவ வேறுபாடுகள் ஏதும் இன்றி வந்துள்ளனவா என்பதைக் காண்பது மிகமிகத் தேவையானது. பொருள் உரைப்பதே அகராதியின் தலையாய பணி என்பதாலும் மொழியில் காணப்படும் வேறுபட்ட சொல்வடிவம் எந்த ஒரு அகராதிப் பயன்பாட்டாளனையும் குழப்பத்திற்கு ஆட்படுத்திவிடக் கூடாது என்பதாலும் இவ்விரண்டிலும் அகராதிக்கலைஞர் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும்.

**பொருள் வேறுபாடு:** ஒரு சொல்லடியாகத் தோன்றும் சொல் விரிவுகளில் சில அடிச்சொல்லின் பொருளினின்றும் வேறுபட்டு வருதலும் உண்டு. தமிழில் ஆனால், ஆயின், எனின் என்பன போன்ற சொற்களை இதற்குச் சான்றாய்க் காட்டலாம்.

மழைபெய்யுமானால்
நெல்விளையும்
மழை பெய்யும்; ஆனால் நெல்
விளையாது

எனும் இருதொடர்களில் உள்ள ஆனால் என்பது இருவேறுபட்ட தன்மையினதாய்ச் செயற்பட்டுள்ளது. முதலாவது தொடரில் உள்ள ஆனால் என்பது ஆதல் (become) என்கின்ற பொருளிலும் இரண்டாவது தொடரில் உள்ள ஆனால் என்பது but என்கின்ற பொருளிலும் வந்துள்ளன. இவ்விரண்டாவது சொல்லை அகராதிப் பதிவாய்க்கொண்டு அதன் இலக்கணச் செயற்பாடு, பொருள் வேறுபாடு எனும் இரண்டையும் சுட்டிக்காட்டல் வேண்டும். முதல் தொடரில் வரும் ஆனால் (ஆதல்) என்பது ஆ-தல் என்பதன் சொல்விரிவில் அடங்கிவிடும்.

**வடிவவேறுபாடு:** ஏமாறு எனும் வினையடி பன்னிரு வகைப்பட்ட வினைப்பாகுபாட்டில் 'இன்' இடைநிலைபெறும் ஐந்தாம் வினையடியாய்ச் செயற்படவல்லது. இவ்வினையின் இறந்தகாலச் சொற்கள் ஏமாறி, ஏமாற, ஏமாறினான், ஏமாறியது என விரியவல்லன. ஆனால் இக்கால

மொழிநடையில் ஏமாந்து, ஏமாந்தான், ஏமாந்தது, ஏமாந்துபோக என்பன போன்ற வினைவிகற்பங்கள் காணப்படுகின்றன. இவை இவ் வினையின் இயல்பான சொல் விரிவுகளினின்றும் மாறுபட்டு வருகின்றன. இங்கு வடிவ வேறுபாடு உண்டே ஒழியப் பொருள் வேறுபாடில்லை. இது போன்று வடிவ வேறுபாடுடைய சொற்கள் பழந் தமிழில் மிகுதியும் உள்ளன. குருவி=குரீஇ, அசைஇ=அசைந்து, அசைத்து, இரீஇ=இருந்து, இருத்தி, கழீஇ=கழுவி, எழீஇ=எழுந்து, உரைஇ =உரைத்து, இடீஇ=இட்டு என்பன போன்றவை தமிழ் இலக்கியங்களில் காணப்படும் வடிவ வேறுபாட்டுச் சொற்களாகும். இவற்றில் பெயர்களைப் பொறுத்த மட்டில் அவற்றை இரு பதிவுகளாய்த் தரலாம். வினைகளைப் பொறுத்தமட்டில் அவற்றின் வடிவ வேறுபாட்டு நிலைகளைப் பதிவில் சுட்டிக்காட்ட வேண்டுவது அவசியம்.

தமிழில் மூவிடப் பெயர்கள் பலவும் உருபேற்கும் நிலையில் திரிந்து வழங்குவனவாக உள்ளன. நீ, தாம், நாம், யாம், தான், யான் என்பன முறையே நின், (உன்), தம், நம், எம், தன், என் எனத் திரிந்து வழங்குகின்றன. இத்தகு உருபேற்ற வடிவங்களையும் உருபேலாத இயல்பு வடிவங்களையும் அகராதியில் பதிவு களாய் அமைத்து உருபேற்ற வடிவங்களுக்கு உருபேலா வடிவங் களைக் குறுக்கு நோக்கீடாய்க் காட்டல்வேண்டும்.

தமிழில் அகராதிச்சொல் தேர்வுச் சூழல்கள் சில: தமிழில் அகராதிச் சொற்களைத் தெரிவு செய்வதில் மிகவும் கவனமாய் இருத்தல் வேண்டும். பொருள் வேறுபாட்டைக் காட்டுவது மட்டுமே ஓர் அகராதியின் நோக்க மன்று. சொல்லடுக்கில் நிகழ்ந்துள்ள வடிவ வேறுபாடுகளையும் கண்டறிந்து சுட்டிக்காட்டுதல் அவசியம். ஒத்த வடிவுடைய சொற்கள் பல பொருள் வேறுபாட்டையும் கொண்டிருக்கும். எனவே ஒவ்வொரு சொல்லின் சொல்விரிவுகள் அனைத்தையும் கூர்ந்து நோக்குவதுடன் பொருள் வேறுபாட்டையும் வடிவ வேறு பாட்டையும் தெளிவாய் உணர்ந்து அகராதிச் சொற்களைத் தெரிவு செய்தல் அவசியமானது.

**வினை:** தமிழில் வினைச்சொல்லின் சொல்விரிவுநிலை மிகவும் சிக்கல் வாய்ந்தது. அயல்நாட்டவர்க்கு மட்டு மன்றி ஒரு தாய்மொழியாளனுக்கே இவற்றைப் புரிந்து கொள்வதில் மிகுதியும் இடர்ப்பாடு உண்டு. இறந்தகால இடைநிலை வேறுபாட்டு அடிப்படையில் தமிழின் வினைகள் பன்னிரண்டாய் வகைப்படுத்தப் பட்டுள்ளன. இவ்வகைப்பாட்டில் அடங்காத வினைகள் சிலவும் உண்டு. வா, தா, சா, போ, நோ, வே எனும் வினைகள் இதில் அடங்கும். இவை 13-ஆம் வினை வகையினவாய்க் கொள்ளப்படும். வா, தா எனும் வினைகள் பல்வகைப்பட்ட நிலையில் திரிந்து வழங்குகின்றன. இவை இறந்தகாலச் சொல்விரிவுகளில் வ, த எனவும் (வந்தான், தந்தான்) எதிர்கால, நிகழ்காலச் சொல்விரிவுகளில் வரு, தரு (வருவான், தருவான், வருகிறான், தருகிறான்) எனவும் செயவென் எச்சநிலையில் வர், தர் (வர, தர) எனவும் செயற்கு வாய்ப்பாட்டுச் சொல்லாய் வருநிலையில் வார், வரு (வரற்கு, வருதற்கு) எனவும் இலக்கிய வழக்குகள் சிலவற்றில் வார், தார்

(வாரீர், தாரீர், வாரான், தாரான், வாரல், தாரல்) எனவும் நிற்கின்றன. இவ்வாறே சா எனும் வினை இறந்தகாலச் சொற்களில் செத்தான், செத்து, செத்த, செத்தது எனத் திரிந்து நிற்கின்றன. இவ்வாறு வினையடிகள் வேறுபட்டு வழங்கும் தன்மைகளையும் அகராதியில் குறிப்பிட்டாக வேண்டும். இவற்றின் வருகை நிலைகளைப் பதிவிலோ அகராதியின் முன்னுரை, பின்னிணைப்பு இவற்றில் எங்காவதோ குறிப்பிடல் வேண்டும்.

போ, போகு, போது எனும் மூன்று வினைகளும் போதல் எனும் பொருளின. இவற்றில் போ என்பது முக்காலத்திலும் போனான், போயினான், போகிறான், போவான் எனவும் போகு எனும் வினை போகியோன், போகிய, போகுகிறேன், போகுவான் எனவும் வருகின்றன. போது என்பது போதுவான், போதுகிறான் என எதிர்விலும் நிகழ்விலும் வருகின்றது. இஃது இறப்பில் போதினான் என வருதல் வேண்டும். இவற்றை நோக்கும் பொழுது போ என்பதை 13_ஆம் வகை வினைச் சொல்லாகவும் போகு, போது என்பவற்றை 5_ஆம் வகை வினைகளாகவும் கொள்ளவேண்டும். வினைவிகற்ப நிலையில் இவை இவ்வாறு வேறுபட்டிருத்தலான் இவற்றை அகராதியில் தனித்தனிப் பதிவுகளாய் அமைப்பதே ஏற்புடையது. இவ்வாறன்றித் தமிழ்ப் பேரகராதி போகு எனும் வினைப் பதிவிற்குப் போ எனும் வினைப் பதிவைக் குறுக்கு நோக்கீடாய்க் கொடுத்துளது. போ எனும் வினைப் பதிவில் போகு எனும் வினையின் அடியாகத் தோன்றும் போகி, போகல், போகிய எனும் சொல்விரிவுகளை மேற்கோளாய் அமைத்துளது. மேலும் போ எனும் வினையடியை 4,5_ஆம் வினையடியாகவும் காட்டியுளது. இஃது ஏற்புடைத்தன்று. போ என்பதைப பதின்மூன்றாம் வினை வகையாகவும் போகு என்பதை 5_ஆம் வினை வகையாகவும் காட்டித் தனித்தனிப் பதிவுகளாய் அமைத்தல் வேண்டும்.

போ_தல் 4,5 v. intr. எனவும்
போகு-தல் 5 v. intr. எனவும்

பதிவை அமைப்பது சரியன்று.

தமிழில் சங்க இலக்கியக் காலந்தொட்டுப் போந்து என்பதோர் சொல்விரிவு காணப்படுகின்றது. இதேபோன்று போந்த, போந்தது, போந்தன, போந்தென, போந்தேன், போந்தோர் என்பன போன்ற இலக்கிய வழக்குகளும் காணப் படுகின்றன. இவற்றை எவ்வினையின் சொல்விரிவுகளாய்க் கொள்வது. தமிழ்ப் பேரகராதி இவற்றைப் போ என்பதன் சொல்விரிவாய்க் கருதி யுள்ளது போலும். இதனால்தான் போ என்பதைத் தமிழ்ப் பேரகராதி 4_ஆம் வினையடியாகவும் சுட்டியுள்ளது. வின்சுலோ அகராதி இச் சொல் விரிவுகளைப் போது என்பதன் இறந்தகாலச் சொல்விரிவுகளாய்க் கொண்டுள்ளது. இதனால்தான் வின்சுலோ அகராதி, போது என்பதன் பதிவை,

போது, கிறது, போந்தது, ம், போத v.n.

என அமைத்துள்ளது. போது என்பது போந்த என வருதற்கு வாய்ப்பேதும் இல்லை. போ என்பதன் அடியாகப்

போனாள், போயினான், போய் எனும் இறந்தகாலச் சொல்விரிவுகள் அமைதலால் இதனைப் பதின்மூன்றாம் வினையடியாகக் கொள்வதே பொருத்தம்.

இங்கு நாம் சங்க இலக்கியங்களில் காணப்படும் போத்தந்தான், போத்தந்த, போத்தந்து, போதந்து, போதந்தாள் எனும் சொல் விரிவுகளையும் கருத்திற் கொள்ள வேண்டும். போதா எனும் கூட்டுச் சொல்லின் அடியாகத் தோன்றியவை இவை. இவற்றின் இடைக்குறை வடிவங்களாக போந்து என்பன போன்றவற்றைக் கருதவும் வாய்ப்புண்டு. இவ்வாறு கொள்ளுதல் பொருந்துமா என்பதும் போந்து என்பதைப் போ என்பதன் சொல் விரிவாய்க் கொள்ள வாய்ப் பேதும் உளதா என்பதும் ஆயத்தக்கன.

மேற்குறித்த செய்திகளை எல்லாம் முழுமையாகப் பார்க்கும் பொழுது போகு, போது என்பனவற்றை ஐந்தாம் வகை வினையாய்க் கொண்டுத் தனித்தனிப் பதிவுகளாய் அமைக்கலாம். அவ்வப் பதிவுகளில் அவ்வவற்றுக்குரிய சொல் விரிவுகளை மட்டுமே மேற்கோளாய்த் தரலாம். போ எனும் பதிவில் எக்காரணத்தை முன்னிட்டும் போகு என்பதன் சொல்விரிவுகளை மேற்கோளாய்த் தருதல் வேண்டாம். போ என்பது போனான், போயினான், போய் என வருதலால் பதிமூன்றாம் வினைவகையாய்க் கொள்ளல் வேண்டும். இவ்வாறு போ எனும் வினை இறந்தகாலத்தில் பல்வகையாய் விரியும் தன்மையை அகராதிப் பதிவிலேயே குறிப்பிட்டுக் காட்டல் வேண்டும்.

சங்க இலக்கியத்தில் செத்தனன், செத்தனென், செத்து, செத்தென, செத்தோர் எனும் சொல்விரிவுகள் காணப்பெறுகின்றன. இவற்றில் செத்தோர் என்பது மட்டும் இறந்தோர் எனும் பொருளினதாய்ச் சா எனும் வினையின் சொல்விரிவாய் வந்துள்ளது. ஏனையவை ஒத்திருத்தல், கருதுதல், சுருங்குதல் எனும் பொருளில் வருகின்றன. இவை சா எனும் வினையின் சொல்விரிவுகள் அல்ல. இங்குக் கிடைக்கும் சொல்விரிவுகள் அனைத்தும் இறந்த காலத்தினவாகவே இருத்தலால் இவற்றின் அடிப்படையில் அடிப்படை வடிவைத் தீர்மானிப்பது கடினம். இத்தகு நிலையில் ஒரு குறிப்பிட்ட வகைச் சொல்விரிவுகள் மட்டுமே கிடைக்கும் சூழலில் ஏதாவதொரு சொல்விரிவைப் பதிவாய்த் தந்து ஏனைய சொல் விரிவுகளையும் பொருளுக்குரிய மேற்கோள்களாய்த் தரலாம். அல்லது செத்தல் எனத் தொழிற்பெயராகவே பதிவை அமைக்கலாம்.

மேற்காட்டப்பட்ட சொல்லைப் போன்றே ஆன்ற, ஆன்றல், ஆன்றவர், ஆன்றன்று, ஆன்றனை, ஆன்றிகம், ஆன்றிசின், ஆன்று, ஆன்றோர், ஆனா, ஆனாது, ஆனாய் எனும் சொற்களும் சங்க இலக்கியங்களில் காணப் பெறுகின்றன. இவை இல்லையாதல், அமைதல், மாட்சிமைப்படுதல், நிறைதல், அடங்குதல், வருந்துதல், பொறுத்தல், நீங்குதல், மிகுதல், கெடுதல், இடையறவுப்படுதல் எனப் பல்வகைப் பொருளில் வருகின்றன. இங்கு இச் சொற்களுக்கான அடிப்படை வடிவைத் தெரிவு செய்வது கடினமாக உள்ளது. நிகழ்காலச் சொல்விரிவுகள் இல்லாத சூழலில் இவற்றிற்கான அடிப்படை வடிவை

'ஆல்' எனக் கொள்வதா 'ஆன்' எனக் கொள்வதா என்பன போன்று பலவகை இடர்ப்பாடுகள் தோன்று கின்றன. பிற்கால இலக்கியங்களில் எங்காவது இவற்றுக்கான நிகழ்காலச் சொல்விரிவுகள் கிடைக்குமாயின் அடிப்படை வடிவங்களை எளிதில் தீர்மானிக்கலாம்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி இச்சொற்களின் அடியாகி ஆன்ற[1], ஆன்ற[2], ஆன்றல்[1], ஆன்றல்[2], ஆன்றவர், ஆன்றார், ஆன்று, ஆன்றோன், ஆனா, ஆனாமை எனப் பல பதிவுகளை அமைத்துள்ளது. இப்பதிவுகளை எல்லாம் முழுமையாக நோக்கும் பொழுது இவ்வகராதி இச் சொற்களைப் பொருள் அடிப் படையில் (ஆல்-, < சால்) அகல் எனும் சொற்களினின்றும் வந்தன வாய்க் காட்டியுள்ளது. இவற்றைப் பொருள் அடிப்படையில் ஆல், அகல் எனும் சொற்களினின்றும் வந்தன வாய்க் கருதும் சூழலில் இவ்வாறு பல்வகைப் பதிவுகளாய் அமைக்காமல் ஆல் என்பதன் அடியாகத் தோன்றிய பொருள்களுக்கு ஒரு பதிவும் அகல் என்பதன் அடியாகத் தோன்றிய பொருள்களுக்குப் பிறிதொரு பதிவும் அமைத்திருக்கலாம்.

இத்தகைய சிக்கல் வாய்ந்த சூழல்களில் அறிஞர் குழுவினரின் பரிந்துரைகளின் அடிப்படையில் அடிப்படை வடிவையோ, அடிப்படை வடிவைத் தீர்மானிக்க இயலாத சூழலில் இச்சொற்களுக்கான பதிவமைப்பு நெறிகளையோ மேற்கொள்ளலாம். இங்கு நாம் இச் சொல் விரிவுகளை 'ஈன்' என்பதன் அடியாகத் தோன்றிய ஈன்றனை, ஈன்று, ஈன்றோர், ஈனாய், ஈனா எனும் சொல்விரிவுகளோடு இணைத்துப் பார்க்கவும் வாய்ப்புண்டா என்பது கருத்திற் கொள்ளத்தக்கது.

**பெயர்:** பெயர்களைப் பொறுத்த மட்டில் தமிழில் ஆண்பால் ஒருமைப் பெயர்கள் பதிவுகளாய் அமைக்கப் பெறுகின்றன. ஆடவன், ஆடவர், சான்றோன், சான்றோர், சான்றோள் எனும் சொற்களில் ஆடவன், சான்றோன் என்பன அகராதிச் சொற்களாய்க் கொள்ளப் பெறு கின்றன. இத்தகு சொற்கள் அனைத்தும் ஒத்தபொருளில் வரின் சிக்கல் இல்லை. ஒவ்வொரு சொல்லும் ஒன்றில் ஒன்றில்லாத பிற பொருள்களிலும் வருகின்ற சூழலில் அவை அனைத்தையுமே தனித்தனிப் பதிவுகளாய்க் கொள்வது சிறந்தது. அமிழ், அமிழ்து, அமிழ்தம் என்பன போன்ற ஒருசொல்லின் வேறுபட்ட வடிவங்கள் ஒத்த பொருளுடையனவாக வந்தாலும் அவற்றை அகராதிப் பதிவுகளாய்க் கொள்ளலாம். இவற்றில் ஒரு சொல்லைத் தலைச்சொல்லாய்க் கொண்டு ஏனையவற்றுக்கு அத்தலைச் சொல்லைக் குறுக்கு நோக்கீடாய்த் தரலாம்.

**வினையடைகளும் இணைப் பிடைச் சொற்களும்:** தமிழில் வினையெச்ச வாய்பாட்டுச் சொற்கள் சில வினையடைகளாகச் (adverb) செயல் படுகின்றன. உரக்க, உரத்து, சாய்ந்து, குறைத்து, ஒழிய, தவிர, அடங்க, முற்ற, அடித்து என்பன போன்ற சொற்கள் மொழியில் செயல்படுந் தன்மைகளைத் தெளிவாய் உணர்ந்து கொள்வது நல்லது. இவற்றின் வடிவில் மயங்கி வினையெச்சங்களாக எண்ணி விட்டு விடாமல் இவற்றின் வழக்கு நோக்கி

வினையடைகளாகச் செயல்படும் சூழலில் இவற்றை அகராதிச் சொற்களாய் ஏற்றல் வேண்டும்.

| தொடர் | பொருள் |
| --- | --- |
| உரத்துப் பேசினான்<br>உரக்கப் பேசினான் | - சத்தமாக |
| குறைத்து வாங்கினான்<br>குறைத்துக் கொடுத்தான் | - குறைவாக |
| அவன் ஒழிய<br>ஏனையோர் வந்தனர்<br>அவளைத்தவிர<br>மற்றவர் படித்தனர் | - தவிர,<br>நீங்கலாக |
| அடங்கக் கைக்கொள்<br>முற்றக் கொடுத்தான் | - முழுக்க,<br>முழுதும் |
| மரம் சாய்ந்து<br>வளர்ந்தது | - சாய்வாக |
| அடித்துச் சொன்னான் | - ஆணித்<br>தரமாக |

மேற்காட்டிய எடுத்துக்காட்டுகளில் அனைத்துச் சொற்களும் வினையடை யாகவே செயல்பட்டுள்ளன. இவை போன்ற சொற்கள் 'உணவைக் குறைத்து உடலை மெலிவித்தான்' 'தேங்காய் முற்ற ஒருவாரம் ஆகும்', 'கட்டிடம் சாய்ந்து பலர் இறந்தனர்' என வினையெச்சமாகச் செயற்படும் சூழல்களையும் உணர்ந்து அவற்றை விலக்கி வினையடையாகச் செயற் படுவனவற்றைப் பதிவுகளாய்க் கொள்ளல் வேண்டும். மேற்கோள்களை இங்குத் தெளிவாய்த் தருதல் அவசியம்.

இவ்வாறே ஒரு சொல்லின் அடியாகத் தோன்றும் சொல்விரிவுகள் சில அடிப்படைச் சொல்லின் வடிவினின்றும் வேறுபடாமல் பொருளில் மட்டுமே வேறுபட்டுப் பிறிதொரு இலக்கணக் கூறாகவே செயற்படுதலும் உண்டு. இதற்கு இலக்கிய வழக்குகளிலும் சான்றுகள் உண்டு. ஆ, ஆக எனும் இருவினைகளின் சொல்லடுக்குகளில் ஆதலின், ஆகலின் எனும் இருசொற்கள் உள்ளன. இச்சொற்கள் சங்க இலக்கியங்களிலும் மிகுதியாய்க் காணப்பெறுகின்றன. இவை ஆகுதலினால், ஆகையால் (the act of becoming, therefore) எனப் பொருள் பட்டு நிற்கின்றன.

நீடினை **ஆகலின்** காண்கு
வந்தசின்
(பதி.16_9)

குறத்தி மாட்டிய வறற்கடைக்
கொள்ளி
ஆரம் **ஆதலின்** அம்புகை
அயலது
சாரல் வேங்கைப் பூஞ்சினைத்
தவழும்
(புற.108 1_3).

இவ்விடங்களில் ஆகலின், ஆதலின் என்பன ஆகையால் எனப் பொருள்பட்டு நிற்கின்றன. இவற்றை அகராதிச் சொற்களாய்க் கொள்ளல் வேண்டும். 'அன்பிலை ஆதலின் தன் புலந்து நயந்த' (நற் 375_4) எனும் இடத்தில் நீ அன்பில்லாதவன் ஆகுதலினாலே எனும் பொருளில் வருகின்றது. தமிழில் ஆனால், ஆனாலும், என்றால், என்றாலும், இருந்தாலும், ஆனபோதிலும், என்ற போதிலும், இருந்தபோதிலும் என்பன

போன்ற இணைப்பிடைச் சொற்களை முறையான சொல்விரிவுகளினின்றும் பிரித்துணர்ந்து அவற்றை அகராதிப் பதிவுகளாய்த் தருதல் வேண்டும்.

**ஆக்கச் சொற்கள்:** அகராதிச் சொற்களைப் பொறுத்தமட்டில் அகராதிக் கலைஞர் கவனத்தில் கொள்ள வேண்டிய பிறிதொரு கூறு ஆக்கச் சொற்களாகும். இவற்றை விகுதிகள் சேர்ந்தவை, கூட்டுச் சொற்கள் என இரண்டாய்ப் பகுக்கலாம்.

**விகுதி சேர்வன:** எதிர்ச்சி, அதிர்ச்சி, பெயர்ச்சி, வளர்ச்சி, தாழ்ச்சி, உயர்ச்சி என வருவனவும் எதிர்வு, அதிர்வு, பெயர்வு, தளர்வு, மறைவு அடைவு என வருவனவும் அளிப்பு, படிப்பு, நடிப்பு, செழிப்பு, மடிப்பு, தடிப்பு, என வருவனவும் இவை போல்வன பிறவும் இதில் அடங்கும். பொதுவாக மிகப்பெரிய அகராதிகள் இத்தகு ஆக்கச் சொற்கள் அனைத்தையும் பதிவாய்த் தரும். வரையறுத்த சிறு அகராதிகள் படிப்பு = கல்வி என்பதுபோல் சற்றே பொருள் வேறுபாடுடைய சொற்களை மட்டுமே பதிவுகளாய்த் தரும்.

வினையடிகளோடு அல், தல் எனும் தொழிற்பெயர் விகுதிகள் சேர்ந்து வரும் சொற்கள் பொருள் வேறுபாட்டை நல்குவனவாய் உள்ளன. **ஆடல்,** ஆடுதல்; **பாடல்,** பாடுதல்; **ஊடல்,** ஊடுதல்; **வற்றல்,** வற்றுதல்; **அவியல்,** அவித்தல்; **குவியல்,** குவித்தல்; **கீறல்,** கீறுதல்; **புதையல்,** புதைத்தல்; **படையல்,** படைத்தல்; **மோதல்** மோதுதல்; **ஆற்றல்,** ஆற்றுதல் என்பன போன்ற சொற்செட்டுகளில் அல் விகுதி சேர்ந்த சொற்கள் தல் விகுதி சேர்ந்த தொழிற்பெயர்களினின்றும் வேறுபட்டுத் தொழிற் பெயர்ப் பொருண்மையோடு ஆடல் = ஆட்டம், பாடல் = பாட்டு என்பனபோல் பிற பொருளையும் சுட்டி நிற்கின்றன. இவற்றைச் சொல்விரிவுகளில் அடக்கி விடாமல் அகராதிப் பதிவுகளாய்க் கொள்ள வேண்டும்.

எல்லாத் தொழிற்பெயர்களும் இவ்வாறு வாரா என்பது ஈண்டு கவனத்திற்கொள்ளத்தக்கது. அசையல், அசைதல்; பெயரல், பெயர்தல்; உயரல், உயர்தல்; வாழல், வாழ்தல்; ஆட்டல், ஆட்டுதல்; மாயல், மாய்தல் என்பன போன்றவை முந்தைய சொற்செட்டுகளைப்போலன்றி ஒத்த பொருண்மையனவாகவே செயற்படுகின்றன. இவற்றைச் சொல் விரிவுகளில் அடக்கிக் கொள்ளலாம்.

**கூட்டுச்சொற்கள்:** பொருள்தரு நெறியின் அடிப்படையில் இவற்றை மூன்றாய்க் காணலாம்.

1. கூட்டுச்சொற்களின் அலகுகள் தத்தம் பொருளில் மாறாமல் வருதல். செந்தாமரை, செங்காந்தள், எண்திசை என்பனவற்றை இதற்குச் சான்றாய்க் காட்டலாம். இச்சொற்களில் உள்ள செம், தாமரை, செம், காந்தள், எண், திசை எனும் சொற்கள் தனித்து வருநிலையில் எப்பொருளை உணர்த்துகின்றனவோ அப்பொருளையே கூட்டுச் சொற்களிலும் தருகின்றன.

2. தத்தம் பொருளில் நீங்காமல் தம்மோடு தொடர்புடைய பிறிதொரு பொருளைச் சுட்டி வருவனவற்றை இவ்விரண்டாம் வகையில் அடக்கலாம். ஆறுமுகம் (முருகன்), ஆலமர் செல்வன் (சிவன்) எரிமலர் (தாமரை), அறுகால்பறவை (வண்டு) என்பன

போன்றவற்றை இதற்குச் சான்றாக்க லாம். ஆறு, முகம் என்பன தத்தம் பொருளில் மாறாமல் ஆறுமுகங்களை உடைய முருகக் கடவுளைக் குறிக்கின்றது.

3. கூட்டுச்சொற்களின் கூறுகள் தத்தம் பொருளில் நீங்கி இணைந்தே நின்று பிறிதொரு பொருளை உணர்த்தி வருவனவற்றை இம் மூன்றாம் வகையினவாய்க் கொள்ள லாம். கால்கட்டு, எரிந்துவிழு, கம்பிநீட்டுதல், கம்பி எண்ணுதல் என்பன போன்ற சொற்களை இதில் அடக்கலாம்.

இம்மூன்றில் பின்னிருவகைச் சொற்களையும் எல்லா அகராதிகளும் பதிவாய்த்தரும். இரண்டாவது வகை யில் அடங்கும் சொற்களில் சற்றே கவனம் காட்ட வேண்டும். மொழியில் காணப்படும் தனிச் சொற்களுக்குரிய ஒருபொருட்பன்மொழியாக வரும் இவை போன்ற சொற்களைச் சில வரன்முறைகளுக்கு உட்பட்டுப் பதிவாய்க் கொள்ளலாம். ஆதிரை முதல்வன் என்பது சிவனைக் குறிப்பது. ஆதிரைமுதல்வன் புதல்வன் என வரும் போது அது முருகனைச் சுட்டும். இவற்றில் ஆதிரைமுதல்வன் என்பதை மட்டும் பதிவாய்க் கொள்ளல் போதுமானது. ஆதிரை முதல்வன் புதல்வன் என்பதைப் பதிவாய்த் தரல் வேண்டா. ஆதிரை முதல்வன் என்பதற்குப் பொருள் தெரிந்தாலே போதும். பின்னர் அதினின்றும் ஏனைய பொருள்களை உணர்ந்து கொள்ளலாம்.

முதலாவது வகையில் அடங்கும் இயல்புச் சொற்சேர்க்கைச் (free combination) சொற்களை அகராதியில் கொடுத்தலில் மிகுதியும் கவனம் தேவை. எண்திக்கு, எண்திசை, அட்டதிக்கு, அடிச்சிரட்டை, அடைப்பை என்பன போன்ற சொற்களை அகராதியில் தருதல் வேண்டா. எண், திக்கு, திசை, அடி, சிரட்டை, அடை (வெற்றிலை), பை எனும் தனிச் சொற்களுக்குப் பொருள் தெரிந்தாலே போதுமானது. மிகவும் நெகிழ்வான இத்தகைய இயல்புச் சொற்சேர்க்கைகளை அகராதிச் சொற்களாய்க் கொள்ளல் வேண்டா.

சில தனிச்சொற்கள், கூட்டுச் சொற்களின் அடியாகத் தோன்றும் சொல்விரிவுகளைப் பதிவாய்க் கொள்ளுதல் வேண்டா. எடுத்துக் காட்டாக எரிகுடல், எரிகுடலன்; அக்கிராசனம், அக்கிராசனர்; அணியம், அணியத்துக்கட்டை; அக்கினிசாட்சி, அக்கினிசாட்சியாய்; என்பன போன்ற சொற்செட்டுகளில் முதலில் உள்ள சொல்லின் பொருளிலேயே இரண்டாவது சொற்கள் வருகின்றன. அவை முறையே மிகுபசி, மிகுபசி உடையவன், சபைத்தலைமை, சபைத் தலைவர், கப்பலின் முன்பக்கம், கப்பலின் முன்பக்கக்கட்டை எனப் பொருள்பட்டு வருகின்றன. இவற்றில் முன்னுள்ள சொற்களைப் பதிவுகளாய் அமைத்தலே போதுமானது. அக்கினி சாட்சி, அக்கினிசாட்சியாய் என்ப வற்றில் அக்கினிசாட்சியை மட்டுமே அகராதிச் சொல்லாய்க் கொள்ளலாம்.

4. இதுவரை கண்ட செய்திகளை ஒருங்கே நோக்கும்பொழுது சொல் விரிவுகளையும் ஆக்கச் சொற்களையும் அவற்றின் பயன்பாடுகளையும் தெளி வாகவும், முழுமையாகவும் அறிந்தே அகராதிச்சொற்களின் தெரிவுக்கு அடிப்படையாய் அமைகின்றது

என்பது புலனாகின்றது.

தமிழைப் பொறுத்தமட்டில் வினைகளின் சொல்லடுக்கு முழுவதையும் நோக்கும் பொழுதே சொல்விரிவுகளை எளிதில் பெறத்தக்க வகையில் அடிப்படை வடிவைத் தெரிவு செய்ய இயலும்.

ஆ, ஆகு; போ, போகு என்பன போன்ற வினைகளின் சொல்லடுக்குகளை வேறுபடுத்தி உணரும் வழியே அவ்வப்பதிவுகளின்கீழ் அவ்வப் பதிவுகளுக்கான சொல் விரிவுகளை மேற்கோளாய் அமைக்க இயலும்.

ஒரு சொல்லின் சொல்லடுக்கில் ஏற்பட்டுள்ள ஏமாறி, ஏமாந்து என்பன போன்ற வடிவ வேறுபாடுகளையும் ஆகலின், ஆதலின், ஆயின், ஆனால், எனில் என்பன போன்ற சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் தெளிவாய் உணரமுடியும்.

'கொல் என்று சிரித்தான்', வருவான் என்று சமைத்தேன்' (வருவான் என்று நினைத்துச் சமைத்தேன்), 'கடிது வந்தான்', 'அதைச் செய்வது கடிது' என்பனபோன்று ஒத்த வடிவுடையனவாய் இலக்கணக் கூறிலும் பொருளிலும் வேறுபட்டு வரும் சொற்களைப் பகுத்தறிந்து அகராதிச் சொற்களாய்த் தெரிவு செய்ய இயலும்.

எனவே, அகராதிக்கலைஞர் மொழியின் இலக்கணமரபை நன்கு உணர்ந்தவராய் சொல்விரிவுகளில் நேர்ந்துள்ள வடிவ, பொருள் வேறுபாடுகளையும் அவற்றின் தெளிவான சமூகப் பயன்பாடுகளையும் நுணித்தறியும் இயல்பினராய் இருப்பது அகராதிச் சொற்றெரிவிற்கு மட்டுமன்று அகராதி முழுமைக்குமே சிறப்பினை நல்குவது.

**அடிக்குறிப்புகள் :**

1. "A dictionary is a systematically arranged list of socialized linguistic forms compiled frc.n the speech habits of a given speech community and commented on by the author in such a way that the qualified reader understands the meaning . . . of each separate form, and is informed of the relevant facts concerning the function of that form in its community" -C.C. Berg.
 - From, Manual of Lexicography, p.197.
2. "lexicon is really an appendix of the grammar, a list of basic irregularities" -From An Introduction to Lexicography, p.7.
3. தொல்காப்பியம், பெயரியல், நூற்பா:2

துணை நூல்கள் :


Palmer, F.R., reprint-1983 *Semantics*, Cambridge, Cambridge University Press.

Singh, Ram Adhar., 1982, *An Introduction to Lexicography,* Mysore, Central Institute of Indian Languages.

Winslow, M., reprint (1987,) *A comprehensive Tamil and English Dictionary,* New Delhi, Asian Educational Services.

Zgusta, Ladislav, *et al,* (1971) *Manual of Lexicography,* The Hague, Mouton and company.

University of Madras, reprint (1982) *Tamil Lexicon,* Vol.I-VI, Madras.

நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், இரண்டாம்பதிப்பு 1981, **தொல்காப்பியம்**, சென்னை.

. . . . . . . . . , இரண்டாம் பதிப்பு 1981, **நற்றிணை**, சென்னை.

. . . . . . . . . . . . , இரண்டாம் பதிப்பு 1981, **பதிற்றுப்பத்து**, சென்னை.

. . . . . . . . . . . . , இரண்டாம் பதிப்பு 1981, **புறநானூறு**, சென்னை.

பிரெஞ்சு இந்தியக் கலைக்கழகம், (1967), **பழந்தமிழ் நூற்சொல்லடைவு** முதற்பகுதி, பாண்டிசேரி.

. . . . . . . . . . . . , (1968), **பழந்தமிழ் நூற்சொல்லடைவு** இரண்டாம்பகுதி, பாண்டிச்சேரி.

. . . . . . . . . . . . , (1970), **பழந்தமிழ் நூற்சொல்லடைவு**, மூன்றாம் பகுதி, பாண்டிச்சேரி.

தமிழ்க் கலை
தமிழ் 7, கலை 1, 2

# பலபொருள் சொற்கள் - பொருட்பன்மையும் பெயர்ப்பன்மையும்

எச். சித்திரபுத்திரன்

**முன்னுரை:** மனித அறிவோடு தொடர்புபெற்று மொழியும் வளர்கின்றது. மனிதவாழ்வு அளவு (quantity) தரம் (quality) என்பனவற்றின் அடிப்படையில் வளர்வதுபோல், ஒருமொழியின் வாழ்வும் வளர்ச்சியும் அதன் அளவிலும் தரத்திலும் அடங்கி யுள்ளன. ஆங்கிலம் முற்கால ஆங்கிலத்திலிருந்து இடைக்கால ஆங்கிலத்தின் வழித் தற்கால ஆங்கிலமாக வளர்ந்து வந்துள்ளது. ஆங்கில-சாக்சன் (Anglo-Sazon) அகராதிகளில் அடங்கியுள்ள சொற்களை நாம் எளிதாக எண்ணிவிடலாம். இச்சொற்கள் ஏறத்தாழ 6000 ஆகும்.

ஜான்சனின் ஆங்கில அகராதி (1755) சுமார் 48,000 சொற்களைக் கொண்டுள்ளது. ஆனால் தற் காலத்தில் வெளிவந்துள்ள ஆக்ஸ் போர்டு ஆங்கில அகராதி(OED) ஏறத்தாழ 4,14,000 சொற்களைக் கொண்டுள்ளது. இஃது ஆங்கில மொழியானது சொல்நிலையில் வளர்ச்சி பெற்றுள்ளதைக் காட்டும். இவ்வளர்ச்சியே சொல் வளர்ச்சியாகும். சொல் வளர்ச்சி என்று கூறும் பொழுது, பொதுவாக ஒரு மொழியில் காலப்போக்கில் ஏற்படும் சொற்களின் பெருக்கமே நம் நினைவில் வருகின்றது. ஆனால், ஒரு சொல்லின் பொருளில் ஏற்படும் வளர்ச்சியும் மாற்றமும் கூடச் சொல்வளர்ச்சியைச் சாரும். சொல் வளர்ச்சியைப் பின்வருமாறு எழுதிக் காட்டலாம்:

சொல் வளர்ச்சி
- அளவு (சொல்பெருக்கம்)
- தரம் (பொருள் வளர்ச்சி)

ஒரு மொழியில் சொல்வளர்ச்சி தவிர்க்க முடியாத ஒன்றாகும். புதிய பொருட்களைக் (things) கண்டு பிடிப்பதன் மூலம் அல்லது புதுக் கருத்துகளை உணர்த்துவதன் மூலம் சொல் வளர்ச்சி நடைபெறுகின்றது. இவ்வகை சொல்வளர்ச்சியால் மொழியின் தன்மை மாறுபடுகின்றது.

சொல்வளர்ச்சித் தனி ஒரு மனிதனாலோ ஒரு குழுவினராலோ நடைபெறலாம். ஒரு மனிதனின் சொல்திறன் மற்றொரு மனிதனின் சொல் திறனிலிருந்து மாறுபடுகின்றது. ஷேக்ஸ்பியர், மில்டன் போன்றவர்கள் ஆங்கிலச் சொல்வளர்ச்சிக்குப்

பெரிதும் உதவியுள்ளனர். இவ்விருவரும் கவிதைச் சிறப்புரிமை (Poetic licence) என்பதின் அடிப்படையில் எண்ணற்ற சொற்களை ஆக்கியும் பழைய சொற்களுக்குப் புதுப்பொருள்களை வழங்கியும் உள்ளனர். மற்றைய மொழிகளைப் போல் தமிழும் அதன் காலப்போக்கில் சொல் மற்றும் சொற்பொருள் நிலையில் மாற்றம் பெற்றுக் காணப்படுகிறது.

## 1. சொற்பொருள்

மொழி காலப் போக்கில் அதன் வளர்ச்சியில் மாறுபடுகின்றது. ஒலியும் ஒலியழுத்தமும் சொற்களும் இலக்கணக் கூறுகளும் பொருளும் மெதுவாக மாறும் தன்மை பெற்றுள்ளன. மாற்றங்களுக்கு உட்படும் மொழியியல் கூறுகளில் பொருள் மிக எளிதாக மாறும் தன்மை பெற்ற ஒன்றாகவுள்ளது. சொற்கள் பொது வாகப் பொருட்களையோ, கருத்து களையோ குறிக்கின்றன. மாறுபட்ட ஒலியன் அமைப்புடைய சொற்கள் மாறுபட்ட கருத்துக்களையோ, பொருட்களையோ (things), விளக்கும் என்பதைத் தவிர ஒரு சொல்லே ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக் களையோ, பொருட்களையோ குறிக்கப் பயன்படுத்தப்படலாம். ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் என்ற நிலை மொழிகளில் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. ஒரு பொருள்தரும் சொற்கள் பெரும்பாலும் (அறிவியல்) கலைச் சொற்களாகத்தான் காணப் படுகின்றன, (Singh 1982: p. 38).

**பலபொருள்:** ஒரு சொல் தரும் பல பொருட்களை ஊன்றி நோக்கினால் அவை பின்வரும் இரண்டு நிலைகளில் அமைவதைக் காணலாம்.

1. பெருக்கப் பொருள் (multiple meaning)
2. மாற்றுப்பொருள் (different meaning)

முதல் வகையில் சொல்லின் பொருட்கள் தொடர்புடையதால் ஒரு பொதுத்தன்மை பெற்றுக் காணப்படும். இரண்டாவது வகையில் சொல் கொண்டிருக்கும் பொருட்கள் ஒன்றிற் கொன்று தொடர்பற்றவையாய்க் காணப்படும். இப்பொருள் வேறு பாட்டைப் பின்வருமாறு விளக்கலாம்:




படம் 1




படம் 2

வரைபடம் 1இல் சொ-பொ என்பது

சொற்பொருளின் பொதுத் தன்மையைக் குறிக்கும். சொற் பொருள்கள் பொ1, பொ2, பொ3 என்பன சொ-பா என்ற பொதுத்தன்மையின் கூறுகளாக அமைவதைக் காணலாம். இவ்வாறு ஒன்றிற்கொன்று தொடர்புபெற்று ஒரு பொதுத்தன்மையோடு அமையும் பெருக்கப்பொருளுடைய சொற்களைப் பொருட்பன்மைச் சொற்கள் எனலாம். இப்பொருட்கள் அகராதிகளில் ஒரு தலைச்சொல்லின் கீழ் வரிசையாக எண்ணிட்டுக் கொடுக்கப்படும். வரைபடம் 2-இல் காண்பதுபோல ஒரு சொல் கொண்டிருக்கும் பொருட்கள் (பொ1, பொ2, பொ3) எந்தவிதப் பொதுத்தன்மையும் அற்றவையாய்க் காணப்படின் அச்சொல் ஓரே ஒலியன் அமைப்புடைய வேறு வேறு சொற்களாகக் (சொ1, சொ2, சொ3) கொள்ளப்படுகிறது. இம்மாற்றுப் பொருள் சொற்களைப் பெயர்ப் பன்மைச் சொற்கள் எனலாம். மாறுபட்ட பொருட்களுக்கு ஏற்ப இச்சொற்கள் வேறு வேறு சொற்பிறப்பைக் கொண்டுள்ளன. ஆகையால் இச்சொற்கள் அகராதி களில் தனித்தனித் தலைச் சொற்களாகக் கொடுக்கப்படுகின்றன.

**பொருள் தன்மை காண்பதில் சிக்கல்கள்:** ஒரு சொல் கொண்டிருக்கும் பொருட்களின் தொடர்பு சில இடங்களில் எளிமையாக வெளிப்படையாகத் தெரிந்து கொள்ளும் நிலையிலிருக்கும். சில இடங்களில் இத்தொடர்பு தெளிவற்ற நிலையில் காணப்படும். ஒருவருக்குத் தொடர்புடையவையாய்க் காணப்படும் இரு பொருட்கள் மற்றொருவருக்குத் தொடர்பற்றவை யாய்க் காணப்படலாம். சொற்பிறப்பு, வரலாறு ஆகிய நிலைகளில் செயல்படவேண்டிய இவ்விடங்களில் பொருள் தொடர்பை அறிதற்குத் தனி மனித விருப்பு, வெறுப்பு, மற்றும் உளவியல் முதலியன காரணங்களாய் அமைகின்றன. இவ்வாறு ஒரு சொல்லின் பொருட்கள் கொண்டிருக்கும் ஒற்றுமை வேற்று மைகளை அறிந்து கொள்வதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

ஒரு சொல் கொண்டிருக்கும் பொருட்களை வகைப்படுத்திப் பெருக்கப் பொருள்கள் அல்லது மாற்றுப்பொருள்கள், எவைஎவை என்று கண்டறிந்து அகராதிகளில் பதிவு செய்வது பெரும்பணியாகும். நோக்கு நூல்களில் (Reference books) தவறாகப் பதிவு செய்யப்படும் எந்தவொரு செய்தியும் வழிவழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுச் சரியான செய்தியாக நிலைநிறுத்தப்பட வாய்ப் பளிக்கிறது. பொதுவாக அகராதிகள் அவற்றின் தன்மைக் கேற்பவே இப்பொருள் நுணுக்கங்களை விளக்க மாகக் காட்டுகின்றன. சொல் பொருண்மையாளன் முற்றிலுமாக அகராதிகளைச் சார்ந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. கடினமான இத்துறைக்கு மொழி வரலாற்றறிவு, சொற்பிறப்பறிவு, பன்மொழிப் புலமை ஆகியன வேண்டப்படுகின்றன.

ஸ்டீபன் உல்மேன் (1962), சுகுஸ்தா(1971), லயான்ஸ் (1977), பாமர் (1981), சிங் (1982) போன்றவர்கள் சொற்பொருளின் தன்மை, வகை, சொற்பொருள் காண்பதில் ஏற்படும் சிக்கல்கள் போன்றவற்றை விளக்க மாகக் கொடுத்துள்ளனர். பெயர்ப்

பன்மைச் சொற்களும் பெருக்கப் பொருட்களும் மொழிகளில் எவ்வாறு தோன்றுகின்றன என்பதற்கான காரணங்கள் பலவும் இவர்களால் கொடுக்கப்பெற்றுள்ளன. இக்கட்டுரை மேற்கூறியவர்கள் கொடுத்திருக்கும் வழிமுறைகளின் அடிப்படையில் தமிழ், பொருட்பன்மை, பெயர்ப்பன்மைச் சொற்களின் தன்மை, அச்சொற்கள் தோன்றக் காரணம் ஆகியவற்றை வெளிக்காட்ட முயல்கிறது.

## 2. பொருட்பன்மை

**மொழிச்சூழல் பயன்பாடு (Shift in application):** சொற்கள் பயன்பாட்டுச் சூழலுக்கு ஏற்பப் புதுப்பொருளைப் பெறுகின்றன. இவ்வகையில் தோன்றும் பொருள்களில் சில குறைந்த நாட்கள் மட்டும் நிலைத்திருந்து மறைந்து விடுகின்றன. ஆனால் சில, நிரந்தரப் பொருள் மாற்றத்திற்கு உட்படுகின்றன. இப்பொருட்கள் பயன்பாட்டு நிலையில் விரிவடைந்து ஒரு சொல்லின் பெருக்கப் பொருளாகப் பயன்பெறும் நிலமையைப் பெறுகின்றன. உல்மேன் (1962 : 159) இவ்வகை மாற்றங்களுக்கு ஆங்கிலப் பெயரடைகளை எடுத்துக்காட்டாகக் கூறுவார். பாமர் (1981 : 104) இவ்வகை மாற்றங்கள் ஒழுங்கானவை என்பார்.

தமிழிலும் இத்தகைய மாற்றங்கள் பல காணக்கிடைக்கின்றன. எடுத்துக்காட்டாக நாம் அன்றாடம் வழங்கிவரும் பெயரடைகள் பல, தாம் தழுவிவரும் பெயர்களுக்குத் தக்கவாறு புதுப் பொருட்களைப் பெறுகின்றன.

(எ. டு)

இனிய —
- செய்தி (நல்ல)
- பாட்டு (காதிற்கினிய)
- சுவை (நாவிற்கினிய)
- காட்சி (கண்ணிற்கினிய)
- நண்பன்(மனத்திற்கினிய)

நல்ல —
- பையன்(குணம்)
- ஆள் (தகுதி)
- குடும்பம் (பாரம்பரியம்)
- படிப்பாளி (ஆழ்ந்த/தெளிவான)
- மழை (கனத்த, பலத்த)

மேற்கூறிய எடுத்துக்காட்டுகள் 'இனிய' என்ற பெயரடை 'இனிமையான' (sweetness) என்ற பொதுப்பண்பைக் கொண்டிருந்தாலும் தான் தழுவி வரும் பெயர்களின் தன்மைக்கேற்ப காதிற்கினிய, கண்ணிற்கினிய, நாவிற்கினிய போன்ற நுண்ணிய பொருள் வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. இதைப்போன்றே 'நல்ல' என்ற பெயரடை கொடுக்கும் பொருள் வேறுபாடுகள் சில எடுத்துக் காட்டுகளில் குறிக்கப்பெற்றுள்ளன. இச்சொற்கள் ஒலியழுத்தம் (strees) பெற்று நேர் எதிரான பொருட்களைக் கொடுப்பதையும் பேச்சு மொழியில் காணலாம்.

**(சமூகச்) சூழல் சிறப்பாக்கம் (Specialization via context)** ஒரு சொல் பலவகைப்பட்ட சமூகச்சூழல்களில் பயன்படுத்தப்படும் பொழுது தொடர்புடைய பல சிறப்புப் பொருட்களைப் பெறுகின்றது. இச் சொல் சாதாரண நிலையில் அதன் பொதுப் பொருளையும் குறிப்பிட்ட ஒரு

சமூகச்சூழலில் பயன்படுத்தப்படும் பொழுது வேறுஒரு சிறப்புப் பொருளையும் பெறுகின்றது.

(எ. டு)

நட்சத்திரம்
- விண்மீன் (பொது)
- நடிகர்கள் (சினிமா)
- 27 விண்மீன்கள் (சாதகம்)

திரை
- திரை (பொது)
- சினிமாத்திரை (சினிமா)
- நாடகத்திரை (நாடகம்)
- முஸ்லீம் பெண்கள் அணியும் முகத்திரை (இசுலாம்)
- பஞ்சுச்சுருள் (நெசவு)

சீட்டு
- சிறுகுறிப்பு
- விளையாடும் சீட்டு
- பயணச்சீட்டு
- பத்திரம் (bond)
- ஏலச்சீட்டு (chitfund)

சமூகச் சூழலில் எழும் இப்பொருள் மயக்கத்தை மொழிச் சூழலில் எளிதாகத் தீர்த்துவிடலாம். இவ்வகைப் பெருக்கப் பொருட்களைப் பொது அகராதிகளில் காண்பதைவிடச் சிறப்பு அகராதிகளில்தான் அதிகம் காண முடியும்.

**அணி (நய) மாற்றம்** (Figurative language) அணிநயமாற்றம் மொழியின் அடிப்படைப் பண்பாக உள்ளது. இம்மாற்றம் சொற்பொருள் மாற்றம் ஏற்பட ஏதுவாகின்றது. ஒரு சொல் தன் பொதுப் பொருளை இழக்காமல் பல அணிநயப் பொருட்களைப் பெறுகின்றது. புதிதாக உருப்பெற்ற பொருளும் பழைய பொருளும் எவ்விதக் குழப்பமும் இல்லாமல் பயன்படுத்தப்படுகின்றன. எடுத்துக் காட்டாகக் காது, கண், வாய், தலை, மூக்கு, கால் போன்ற உடல் உறுப்புக்கள் பிற பொருட்களின் உறுப்புக்களோடு உருவகப் படுத்தப்படுகின்றன. இவ்வொப்புமைக்கு இரண்டு பொருட்களுக்கும் (things) இடையே ஏதாவது ஒரு வகைக் குணம்/பண்பு பொதுவாக இருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாகக் 'கண்' என்ற சொல்லின் பல்வேறு பயன்பாட்டைக் கீழே காண்போம்:

எ.டு.

கண்
- சல்லடைக்கண்
- நுங்கின் கண்
- தேங்காயின் கண்
- மதகின் கண் (மதகின் துளைப்பாகம்)
- மயிலிறகின் கண் (மயிலிறகின் கண் போன்ற இடம்)
- புண்ணின் கண்
- முரசின்கண (நடுப்பகுதி)

**பிற மொழித்தாக்கம்** (Foreign language influence) ஒரு மொழியில் பிறமொழியின் தாக்கம் சில வேளைகளில் சொற்பொருள் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. சில வேளைகளில் கடன் வாங்கப்பட்ட பொருள் பழைய பொருளை அழுத்தி விடுகிறது. உல்மேன் (1962 : 165). இதன் தொடர்பாகப் பல சொற்களைக் கூறுவார். எடுத்துக்காட்டாகப் பிரஞ்சு மொழிச் சொல்லான parlement, 'speaking, count' என்ற

பொருட்களைத் தருகிறது. ஆனால் ஆங்கில மொழியின் parliament என்ற சொல் தாக்கத்தின் விளைவாக 'legislative assembly' என்ற பொருளையும் அந்தப் பிரஞ்சுச்சொல் பெறுகின்றது. இப்பொருள் மாற்றம் இரண்டு மொழிகளின் கூட்டினால் மட்டும் ஏற்பட்டு விடுவதில்லை. கடன் வாங்கப்பட்ட பொருள் அகில உலக நிலையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக விளங்கும் பொழுதுதான் இப்பொருள் மாற்றம் ஏற்பட அதிகம் வாய்ப்புள்ளது. இம்முறைக்கு எடுத்துக்காட்டாகக் 'கிளை' என்ற தமிழ்ச் சொல்லைக் குறிப்பிடலாம். கிளை, 'பகுப்பு' (division) என்ற பொருளில் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டிருந்தாலும் ஆங்கில *'branch office'* என்ற சொல் வந்தபிறகுதான் 'கிளை', அலுவலகக் கிளையைக் குறிக்கப் பயன்படுத்தப் படுகிறது. இதுபோன்றே 'கலம்', 'விசிறி' போன்ற சொற்களைக் குறிப்பிடலாம்.

***பிழைச் சொற்பிறப்பாய்வு* (Homonymy misinterpreted)**: பெருக்கப்பொருட்கள் தவறான சொற்பிறப்பு ஆய்வுமூலம் தோன்றுகின்றன. ஒலியின் ஒப்புமையுடைய பெயர்ப் பன்மைச் சொற்களின் சொற்பிறப்பை நன்கு அறியாமல் உளவியல் நிலையில் தொடர்புபடுத்திக் காணும் பொழுது ஒரு சொல் பல பெருக்கப் பொருட்களைப் பெறுகின்றது. இவ்வகைப் பொருள் மாற்றம் மிக அருகிய நிலையிலே காணப்படுகிறது. இவ்வகைக்கான எடுத்துக்காட்டுகள் பெயர்ப்பன்மைச் சொற்களின் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (காண்க: கடன் வாங்குதல்)

மேற்கூறிய ஐந்து வகைகளில் முதல் மூன்று வகைகளால்தான் பெரும்பாலான சொற்கள் பொருட் பெருக்கம் பெற்றுள்ளன.

## 3. பெயர்ப்பன்மை

**ஒலிப்பு, எழுத்துமுறை:** பெயர்ப் பன்மைச் சொற்கள் மொழிகளில், ஒலிப்பு மற்றும் எழுத்து முறை (spelling) அடிப்படையில் மூன்று முறைகளில் காணக்கிடைக்கின்றன.

அவை:

1. எழுத்து, ஒலிப்புமுறை ஒத்த பெயர்ப்பன்மைச் சொற்கள் (Homonyms).

2. எழுத்துமுறை ஒத்து ஒலிப்பு முறையில் வேறுபாடு தோன்றும் பெயர்ப்பன்மைச் சொற்கள் (Homographs)

3. ஒலிப்புமுறை ஒத்து எழுத்து முறையில் வேறுபாடு தோன்றும் பெயர்ப்பன்மைச் சொற்கள் (Homophones)

இம்மூன்றையும் பின்வருமாறு எழுதிக்காட்டலாம்:

| சொல் தன்மை | எழுத்து | ஒலிப்பு | பொருள் |
|---|---|---|---|
| பெயர்ப்பன்மை 1 | + | + | - |
| பெயர்ப்பன்மை 2 | + | - | - |
| பெயர்ப்பன்மை 3 | - | + | - |

(+ = ஒத்தது - = வேறுபட்டது)

இந்திய மொழிகள் அசை ஒலிப்பு ( syllabic script ) வடிவானவையாக இருப்பதால் முதல்வகைப் பெயர்ப்பன்மைச் சொற்கள்தான் அதிகம் காணக்கிடைக்கின்றன. தமிழில் பேச்சு மொழியில் பின்வரும் இரண்டு வகையான பெயர்ப்பன்மைச் சொற்களுக்கும் எடுத்துக்காட்டுக்களைக் காணமுடியும்.

(எ. டு)

நல்ல → நல்ல 'தீய'
நல்ல → நல்ல சிறந்த

மலை → மளெ
மழை → மளெ

அரம் → அரம்
அறம் → அரம்

'நல்ல' என்ற பெயரடை சாதாரணமாக ஒலிக்கப்படும்பொழுது 'சிறந்த' என்ற பொருளையும் ஒலி அழுத்தத்துடன் ஒலிக்கப்படும்பொழுது 'தீய' என்ற பொருளையும் தருவதைக் காணலாம். பெயர்ப்பன்மைச் சொற்கள் 2, 3 ஆகியன எழுத்து, ஒலிப்பு ஆகிய இரண்டு நிலைகளில் வேறுபட்டுக் காணப்படுவதால் ஆங்கிலம் போன்ற பிறமொழிகளில் தனித்தனித்தலைச் சொல்லாகக் கொள்ளப்படுகின்றன. இதனால் இச்சொற்களைக்கண்டு கொள்வதில் எந்தச் சிக்கலும் ஏற்படாது. ஆனால் தமிழில் பேச்சு மொழி, ஒலிப்பு முறை அகராதிகள் வெளிவந்தால்தான் இவ்வகைப் பெயர்ப்பன்மைச் சொற்களைத் தொகுத்துக் கொள்ள அதிக வாய்ப்பு ஏற்படும்.

**பயன்பாடு:** பெயர்ப்பன்மைச் சொற்கள் சார்ந்துள்ள அடிப்படை இலக்கண கூறு, மற்றும் இலக்கணப் பயன்பாட்டின் அடிப்படையில் இச்சொற்களை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. முழுப்பெயர்ப்பன்மைச் சொற்கள் (Full homonyms)

2. பகுதிப்பெயர்ப்பன்மைச் சொற்கள் (Partial homonyms) முழுப்பெயர்ப் பன்மைச் சொற்கள் இலக்கண நிலையில் ஒன்றாகக் காணப்படும். அதாவது இச்சொற்கள் ஒரே இலக்கணக் கூற்றைச் சார்ந்து ஒரே இலக்கண வாய்பாடும் (grammatical pat-

terns) இலக்கணப்பயன்பாடும் (grammatical usage) கொண்டவையாக இருக்கும். மாறாகப் பகுதிப்பெயர்ப் பன்மைச் சொற்கள் அடிப்படையில் வேறுவேறு இலக்கணக் கூறுகளைச் சார்ந்து எந்தவித விகுதிகளும் சேர்க்கப்படாத நிலையில் தான் பெயர்ப்பன்மைச் சொற்களாகச் செயல் படுகின்றன. இவ்விரண்டு வகை களையும் பின்வரும் எடுத்துக் காட்டுகளில் காணலாம்:

| மு. பெ. ப. சொற்கள் | ப. பெ. ப. சொற்கள் |
|---|---|
| மாலை 1 (பெ) 'மாலைவேளை' | அடி 1 (பெ) 'அளவுகோல்' |
| மாலை 2 (பெ) 'பூமாலை' | அடி 2 (வி) 'அடித்தல்' |
| நூல் 1 (பெ) 'தைக்கும் நூல்' | தண்டு 1 (பெ) 'செடி, கொடியின் தண்டு' |
| நூல் 2 (பெ) 'புத்தகம்' | தண்டு 2 (வி) 'வசூலித்தல்' |

முழுப்பெயர்ப்பன்மைச் சொற்கள் சொல் நிலையிலும் இலக்கண வாய்பாட்டு நிலையிலும் ஒன்றாகக் காணப்படுவதால் இச்சொற்களைச் சொல் பெயர்ப்பன்மைச் சொற்கள் (Lexical homonyms) என்று கூறலாம். பகுதிப் பெயர்ப்பன்மைச் சொற்கள் சொல் நிலையிலும் இலக்கண வாய்பாட்டு நிலையிலும் வேறுபட்டுக் காணப்படுவதால் இவற்றைச் சொல்-இலக்கணப் பெயர்ப்பன்மைச் சொற்கள் (Lexico-grammatical homonyms) என்று அழைக்கலாம். பகுதிப்பெயர்ப்பன்மைச் சொற்களைத் தெரிவு செய்து பதிவு செய்யும்பொழுது அகராதியியலாளன் கவனமாகச் செயல்பட வேண்டும். பின்வரும் சொற்கள் மயக்கத்தைக் கொடுக்கும்:

(எ.டு)

| | | | |
|---|---|---|---|
| அஞ்சி (பெ) | 'ஒருமன்னன்' | உள்ளி (பெ) | 'வெங்காயம்' |
| அஞ்சி (வி) | 'பயந்து' | உள்ளி (வி) | 'நினைந்து' |
| | | புரைஇ1 | 'காத்து' |
| | | புரைஇ2 | 'போன்று' |

**பெயர்ப்பன்மை தோன்றக் காரணம்:** பெயர்ப்பன்மைச் சொற்கள் கீழ்வரும் சில காரணங்களால் தோன்றலாம்.

**ஒலிக்கூட்டுவளர்ச்சி** (Convergent phonetic development) ஒரு சொல்லி லுள்ள எழுத்து, அசை அல்லது விகுதிகள் விடுபடுவதன் மூலம் அல்லது மாறுபடுவதன் மூலம் பெயர்ப்பன்மைச் சொற்கள் தோன்றுகின்றன. மொழி களில் காணப்படும் பெரும்பாலான பெயர்ப்பன்மைச் சொற்கள் இம் முறையில் தோன்றியவைதான். இவ் வகைச் சொற்கள் பாலி, பிராகிருத மொழிகளில் மிக அதிகம். தமிழிலும் இவ்வகைச் சொற்கள் அதிகம் காணக் கிடைக்கின்றன.

(எ. டு)

| | | | |
|---|---|---|---|
| கஞ்சி1 | காஞ்சி | 'ஒரு ஊர்' | (கா>க) |
| கஞ்சி2 | 'நீர் ஆகாரம்' | | |
| களம்1 | களத்தரம் | 'மனைவி' | (த்தர > 0) |
| களம்2 | 'நெற்களம்' | | |
| ஒத்தி1 | ஒருத்தி (ரு-> 0) | | |
| ஒத்தி2 | 'அடமானம்' | | |
| நாரங்கி1 | 'நாரத்தை' | நாரங்கம் | (ம்>0) |
| நாரங்கி2 | 'தாழ்ப்பாள்' | நாதங்கி | (த்>ர்) |
| கால் 1 | காலம் | கால 'நேரம்' | (ம்>0) |
| கால்2 | 'உடல் உறுப்பு' | | |
| கழுநீர்1 | கழுவுநீர் | 'தானியம் கழுவிய நீர்' | (வு>0) |
| கழுநீர்2 | 'செங்குவளை' | | |

**பொருள் வளர்ச்சி (divergent sense development):** சில சொற்களின் தொடர்புடைய பொருள்கள் வளர்ச்சி பெற்றுத் தொடர்பற்ற நிலையை அடைகின்றன. இவ்வகைச் சொற்கள் மிகவும், நெகிழ்வானவை. வகைப் படுத்துவாருள் ஒருவருக்கு ஒருவ ரிடையே உள்ள வேறுபாட்டால் இச் சொற்களை வகைப்படுத்துவது மாற்றம் பெற்றுக் காணப்படுகிறது.

**கடன் வாங்குதல்:** பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்குவதன்மூலம் ஒரு மொழியில் பெயர்ப்பன்மைச் சொற்கள் தோன்றுகின்றன. கடன் வாங்கப்பட்ட சொற்களில் எண்ணிக்கைக்கேற்ப பெயர்ப்பன்மைச் சொற்களில் எண்ணிக்கையும் அதிக மாகிறது. கீழ்வரும் சொற்களை இவ்வகைக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்:

| | | | |
|---|---|---|---|
| மாலை 1 | 'மாலைப்பொழுது' | < | (திராவிடச்சொல்) |
| மாலை 2 | 'பூமாலை' | < | (இந்திய-ஆரியச்சொல்) |
| கவி 1 | 'கவிஞன்' | < | கவி (சமஸ்கிருதம்) |
| கவி 2 | 'குரங்கு' | < | கபி (சமஸ்கிருதம்) |
| ஆவி1 | 'உயிர்' | | |
| ஆவி 2 | 'நீர்நிலை' | | வாபி (சமஸ்கிருதம்) |
| கடிகை 1 | 'துண்டம்' | < | கடி |
| கடிகை 2 | 'நாழிகை' | < | ghatika (சமஸ்கிருதம்) |
| அக்கி 1 | 'கண்' | < | அக்ஷி (சமஸ்கிருதம்) |
| அக்கி 2 | 'தீ' | < | agni (சமஸ்கிருதம்) |
| கசம் 1 | 'யானை' | < | gaja (சமஸ்கிருதம்) |
| கசம் 2 | 'தாமரை' | < | ka-ja (சமஸ்கிருதம்) |
| கசம் 3 | 'மயிர்' | < | kaca (சமஸ்கிருதம்) |

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் ஒரு சொல் திராவிட அல்லது தமிழ்ச் சொல்லாகவும் மற்றொரு சொல் கடன் வாங்கப்பட்ட சொல்லாகவும் அல்லது இரண்டு சொற்களுமே கடன் வாங்கப்பட்ட சொற்களாகவும் காணப்படுகின்றன. 'கசம்' என்ற எடுத்துக்காட்டில் இரண்டு சொற்கள் கடன் வாங்கப்பட்டன.

4. முடிவுரை: பெயர்ப்பன்மை, பொருட் பன்மைச் சொற்களைக் கொள்கை அளவில் விளக்குவது சுலபம். ஆனால் இச்சொற்களைச் சொற்பொருண்மை அடிப்படையில் கண்டறிந்து பேரகராதி அல்லது அகராதியில் பதிவு செய்வது கடினமான செயலாகும். சொற்பிறப்பு, வரலாறு, மொழிச்சூழல், சமூகச்சூழல் போன்ற வற்றின் அடிப்படையில் செயல்பட வேண்டிய இத்துறையில் வெறும் மரபு நோக்குடனும் தன்னிச்சையுடனும் செயல்படலாகாது.

இக்கட்டுரையில் கொடுக்கப் பட்டிருக்கும் காரணங்களால் மட்டும் இந்நிலையில் தமிழில் இச்சொற்கள் தோன்றியுள்ளன என்று உறுதியாகக் கூறவியலாது. சங்ககாலம் முதல் இன்று வரையுள்ள தமிழ்ச் சொற்களைத் தொகுத்து அவற்றின் பொருட்களை மேற்கூறியவற்றின் அடிப்படையில் ஆய்ந்தால் மேலும் பல காரணங்களை அறியலாம்.

துணை நூற்கள்


Geoffery Leech. (1981). *Semantics*, Second Edition, Penguin Books, New York.

John Lyons. (1977). *Semantics*, Cambridge University Press, Cambridge.

Katre, S.M. (1965). *Lexicography*, Annamalai University, Annamalai Nagar.

Palmer, F. R. (1981). *Semantics*, Second Edition, Cambridge University, Cam-bridge.

Singh, R.A. (1982). *An Introduction to Lexicography*, Central Institute of Indian Language, Mysore.

Stephen Ullmann, (1962) *An Introduction to the Science of Meaning*, Basil Blackwell Oxford.

Subramanian, S.V. (1965) *Cilappatikaram - Descriptive Grammar with index*. Jayakumari Stores, Nagercoil.

Subramoniam, V. I. (1962) *Index of PuRanaanuuRu*, University of Kerala, Trivandrum.

Zgusta, Ladislav. (1971) *Manual of Lexicography*, Mouton The Hague.

தமிழ்க்கலை
தமிழ் 7, கலை 1, 2

# சோழர்காலக் கல்வெட்டுகளில் புதியசொற்களும் அகராதியும்

சி. கோவிந்தராசனார்

தமிழகத்தில் உள்ள கோயில்களிலும், மலைப்பாறைகளிலும், குகைகளிலும், தனித்து நிறுத்தப்பட்ட பலவகைக் கற்கள் கம்பங்கள் ஆகியவற்றிலும் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக் கணக்கிலுள்ள இக்கல்வெட்டுகள் பல்லவர். பாண்டியர், சோழர், ஒய்சலர், வாணர், நாயக்கர், மராட்டியர் ஆகிய மன்னர்களின் ஆட்சிக்காலங்களில் பொறிக்கப் பட்டுள்ளன. கல்வெட்டுகளைப் போன்றே அரசர்களால் செப்பேடுகளில் அறச்சாசனங்களும் செய்தளிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுச் செய்திகளில் பெரும்பான்மையாக அமைந்திருப்பது அறநிவந்தங்களைப் பற்றியதாகவே உள்ளதென்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழகக் கல்வெட்டுகளின் தொடர்நிலைக்கால அளவினை, கிபி. ஏழாம் நூற்றாண்டு முதலாக கி.பி. பதினேழாம் நூற்றாண்டளவினதாக ஓராயிரம் ஆண்டளவினைக்ககணித்தலாகும்.

**எல்லை :** பிற்காலச் சோழர் மரபினைக் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் தோற்றுவித்த விசயாலய சோழனின் மரபினர் கி.பி. பதினோராம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையில் ஆட்சி செய்துள்ளனர். தொடர்ந்து கீழைச்சளுக்கிய சோழ குலத்தவர்களின் ஆட்சி கி.பி. 1279 வரையில் நிகழ்ந்துள்ளது.

நான்கு நூற்றாண்டுகட்கும் மேலாக நிகழ்ந்த இச்சோழப் பேரரசில், சோழ மண்டலத்தினைச் சார்ந்ததாக, தொண்டைநாடு, சேரநாடு, கொங்குநாடு, ஆகிய தமிழகப் பகுதிகள் அடங்கியிருந்துள்ளன. ஆட்சி எல்லைக்கும் வடபுறத்தே ஆந்திரநாடு, கன்னடநாடு, முதலாகக் கங்கைக்கரை வரையிலும் தொடர்ந்த போர்நிகழ்ச்சிகளினால், ஒருசில பகுதிகளில் சோழரின் செல்வாக்கும் ஆட்சியும் நிகழ்ந்து உள்ளன. மற்றும் தமிழகத்திற்கு வெளியே கடல் கடந்த இடங்களாக, கடாரம் என்னும் பர்மாதேசம், மலேயா நாடு, கிழக்கிந்தியத் தீவுகளில் சுமத்திரா, ஜாவா ஆகிய நாடுகள், ஈழமெனும் இலங்கை நாடு ஆகிய மொழி வேறுபட்ட நாடுகளும் சோழரின் செல்வாக்கிடங்களாகவும் உரிமையிடங்களாகவும் அவ்வப்போது இருந்துள்ளன.

**மொழிநிலை :** நானூறு ஆண்டுகள்

மேலாகத் தொடர்ந்திருந்த பேரரசொன்றின் ஆட்சிக்காலத்தில், சோழநாட்டில் வாழ்ந்திருந்த மக்களுடன் பிறநாட்டு மக்களின் கூட்டுறவும் அரசியல் பிணைப்பும் ஏற்படுவது வாழ்வியல் நிலையேயாகும். இவ்வாறமைந்த சமூகவிணக்கத்தினால் மொழிவழக்கில் பிறமொழித்தாக்கங்கள் இன்றியமையாத நிலையில் ஏற்பட்டமைந்து வழக்கில் தொடர்வது இயல்பாகும். இவ்வாறமைந்த மொழித்தாக்கக் கலப்புருச்சொற்களை, கொங்கு நாடு, சோழநாடு, பாண்டியநாடு, ஈழநாடு, வடுகநாடு ஆகிய நாடுகளில் கிடைத்துள்ள கல்வெட்டுகளில் காணமுடிகின்றது.

பேசுவது தமிழாயினும் வழக்கில் பயிலப்பெறும் சொற்கள் பல்வேறுபட்ட வடிவங்களில் வருவதுடன் பொருட்பாடு கருத்துக்கும் நிகழ்ச்சிக்கும் ஏற்ப மாறுபட்டதாக வழங்கப் பெற்றுள்ளதனைக் கல்வெட்டுச் செய்திகட்கமைந்த சொற்களின் பொருளமைதியினால் அறியமுடிகின்றது. எடுத்துக்காட்டாக, விடுதல் என்ற சொல்லிற்குச் சோழநாட்டார், தொடர்பினை, பற்றினை விட்டுவிடுதல், அதனினின்றும் நீங்கிவிடுதல், ஆகிய பொருள்நிலையினையே குறிக்கின்றனர். இச்சொல் தென்பாண்டி நாட்டில் மிகுதியாக வார்த்தல், மேலும் ஊற்றுதல் என்ற குறிப்புப் பொருளுரையில் இன்று வழங்கப்படுகின்றது. இந்நிலையினை ஆராயின், சோழநாட்டு வழக்கு பழந்தமிழ் வழக்கென்பதும் தென்பாண்டிநாட்டு வழக்கு பிற்காலத்தில் கன்னடமொழித் தாக்கத்தால் பயிலப்பெற்று வருவதென்பதும் அறியமுடிகின்றது. மற்றும், சோழர்கள் பிறநாட்டினருடன் நிகழ்த்திய போர்களினாலும் பிற நாடுகளில் ஆட்சியை நிறுவியதினாலும் அரசியல் அதிகாரநெறியில் திசை மொழியாளர்களின் இடமாற்றத்தால் இயல்பாகவே மொழித் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

சோழரின் பெண்வழி உரிமை அரசனான குலோத்துங்கனது உரிமைநாடு கீழைச்சளுக்கிய வேங்கி நாடாகும். அந்நாட்டின் தொன்மையான மொழி வடுகு என்பதாகும். இதனையே தெலுங்கு என்பர். இவர்களுடைய தொடர்பு அரசியல் உரிமைகளுடன் தமிழகத்தில் இருந்துள்ளது. இதைப்போன்றே வடகொங்கு நாட்டவராகிய கன்னட மொழியினரின் இணக்கமும் வடமொழியை மிகுதியாகக் கொண்ட கேரளரின் பிணைப்பும் சோழவரசில் இடப்பெயர்ச்சியாகவும் கலந்துறை மனைவாழ்க்கையாகவும் நிகழ்ந்துள்ளன. ரேணாண்டு சோழர் என்றே தெலுங்கச் சோழர் மரபொன்று தோன்றிப் பெருகியிருந்ததனை வரலாறு கணிக்கின்றது.

மன்னர்கள் பிறமொழி மன்னர்களிடம் பெண்கொண்ட நிலையிலும், பிறவரசரால் கொடுக்கப்பட்ட பெண்வழி நிலைப்பினாலும் அரச சுற்றத்தில் மொழிநிலைக் கலப்பும் குறிப்பும் ஏற்பட்டிருத்தற்கு இயல்புளது. வெற்றிபெற்ற பிறமொழித் தேயங்களில் வீரர்கள் கொணர்ந்த மங்கையரை வாழக்கைக்கு இலக்காக்கிக் கொண்ட நிலையிலும் சோழர்காலத் தமிழில் புதியசொற்களும் சொல்திரிபுகளும் மக்கள் வழக்கில் தாக்கம் பெற்றுள்ளன. இவற்றிற்கும் மேலாகச் சோழ நாட்டு, பிறநாட்டு வணிகக்குழுவினரும் மக்களோடு

பொருளியல் தொடர்புடையராக இருப்பது வணிகநிலையாதலின், அதனால் மொழிக் கலப்பினையும் திரிபுநிலை மரபினையும் படைத்துக் கொள்ளும் ஓர் வழக்கும், அங்காடி, சந்தை, நகரம் ஆகிய வணிகவிடங்களின் வழியே மக்களிடம் எளிதில் தாக்கமுற்று வழக்கில் சொல்லிலும் பொருள்நிலையிலும் புதியதோர் படைப்பினை ஆக்கிக் கொண்டுள்ளதனை அறியமுடிகின்றது.

இவ்வாறான மொழி நிலையில் சோழராட்சியில் தமிழ் மொழி நாட்டுவழக்கிலும் ஏட்டுவழக்கிலும் இருந்த காலத்திலேதான் பல்லாயிரக் கணக்கான கல்வெட்டுகள் தோன்றி யுள்ளன என்பதுடன், ஆட்சியில் அரசியல் மதிப்புடன் வாழ்ந்திருந்த வடமொழிப் பண்டிதர்களின் தொடர் பினாலும், அரசு செய்தளித்த அறச் செயல்களையும் ஆணைகளையும் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் செதுக்குவதற்குரிய நிவந்த வாசகங் களைப் பெரும்பான்மையும் வட மொழிப்பண்டிதர்களே எழுதியளித் துள்ளமையினாலும் தமிழ்மொழி வழக்கில் வடமொழியின் தாக்கம் மிகுந்த புதிய பல சொற்கள் இடம் பெற்றுள்ளதனையும் அறியமுடிகின்றது.

இவ்வாறாக, சோழர்கால ஆட்சியில் நிலவிய மொழி நிலையில் தோன்றியுள்ள கல்வெட்டுகள், செப் பேடுகள் ஆகியவற்றில் இடம் பெற்றுள்ள அரிய புதிய சொற் களுள் ஒருசிலவற்றை அகர வரிசையில் பொருளமைதியுடன் தொகுத்துரைப்பது ஏற்புடையதாகும்.

அகராதிக் கலை பற்றிய மதிப்பீட்டில் இதுவரையில் தமிழ் மொழியின் கணிப்பாக வெளி வந்துள்ள நிகண்டுகளும் அகராதி களும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு அமைந்த களத்தில் தக்க மதிப்பீட்டினைப் பெற்றுள்ளன. இக் காலத்தில் பல்கலைக் கழகங்களில் உருவாக்கம் பெறும் அகராதிகள் மொழி வளர்ச்சிக்குரிய கூறுபாடு களைக் கொண்டதாக விரிவு நிலை பெறுவது நன்முயற்சியாகும் எனினும், அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள கல்வெட்டுகளில் புதிய அரிய சொற்கள் பல்வேறு பட்ட நிலைகளில் உள்ளன. அவற்றை நிகண்டுரையளவில் கூறுத லோடு, வட்டார வழக்கில் அவ்வக் காலத்தில் அச்சொல் பெறும் பொருளுரையினையும் ஏற்புடைய சான்றமைதியுடன் அகராதிகளில் இடம் பெறச் செய்யின் இருபதாம் நூற்றாண்டளவில் மொழிநிறை வினைத் திட்டஅளவில் அகராதி பெற்றதாகும்.

**சொல்லும் பொருளும் :** அகர முதலியாகும் அகராதிகளில் முதற் பகுதியில் தொடக்கமுற்று நிகழ்வது அகரவரிசைச் சொற் களாகும். அவற்றுள் கல்வெட்டுகள் குறிக்கும் நாணய மதிப்பீட்டுப் பெயர்களுள் ஒன்று அக்கம் என்பதாகும். இவ்வக்கம் பகர வரிசையில் புத்தக்கம் என்றும் இடம்பெறும். அகம் என்பதன் திரிபே அக்கமாகும். அகுதல் மதிப்பில் குறைதல். ஒரு காசு என்பதன் மதிப்பிற்கு ஈடான பின்ன மதிப்பீட்டின் பகுதியே அக்கமாகும். சோழர் காலத்தில் 12 அக்கம் கொண்டது ஒருகாசு. 6 அக்கம் கொண்டது ஒரு காசு [illegible] அளவீடு பரவலாகப் [illegible] மதிப்பீட்டில் இருந்தபோது

பராந்தகன் ஆட்சியில் ஈழநாட்டுப் பொற்காசு சோழ நாட்டிலும் வழக்கில் நிலவியுள்ளது. ஈழப் பொன்னின் உயர்தரத்திற்கேற்ப அதன் பின்ன , நாணய மதிப்பீட்டினை அரசு 7 1/2 அக்கம் கொண்டது ஒரு காசு என்ற அளவில் வழங்கியுள்ளது. இவ்வாறு ஈழக் காசுக்குரியதாகப் புதிதாகப்பின்ன மதிப்பீடு செய்யப்பெற்ற அக்கமே புத்தக்கம் என்ற பெயரால் வழங்கப் பட்டுள்ளது.

**அகரம் -** இப்பெயர்ச்சொல்லிற்கு, பார்ப்பனச்சேரி, பிராமணர்கள் வாழுமிடம் என்ற அளவில், பொருள் விளக்கம் செய்துள்ளனர். கல்வெட்டு களில் காணப்பெறும் தானவகைகளைக் கொண்டு இச்சொலிலிற்கு விளக்கம் காண முடிகின்றது. அக்ரஹாரம் என்ற, சொல்லிற்குத் தமிழிலமைந்த குறிப்புப்பெயரே அகரம் என்பதாகும். அகரம் என்பது சதுர் வேதியர்களான பிராமணர்கட்குத் திருக்கோயில்களில் உச்சியம்போதில் மரியாதை செய்து குறித்த அளவில் கொடுக்கப்பட்ட உணவு நியதிதானமாகும். அக்ர தானத்தினை நாளும் பெறும் வேதியர்கள் ஒரு சேர வாழ்ந் திருப்பதற்கு அறநிலையில் தனிப்பட வரிசையாக அமைக்கப்பட்ட குடியிருப்பிடமே ஹாரம் எனப்பட்டது. இவ்வாறான அக்ரம் பெறும் வேதியர் குடியிருப்பிடமே அகரம் எனக் குறிக்கப்பட்டது. பார்ப்பனச்சேரி வேறானதாகும். சோழர்காலக் கோயில்களில் அற நிவந்த உணவுத் தானத்தினை வேதியர்கள் நாளும் பெறுதற்கென்று அமைக்கப்பட்ட மண்டபம் அக்ரமண்டபம் எனப் பட்டது. அக்ர என்பது முதன்மை என்ற பொருள்தருவதை, பட்டத்தரசி அக்ரமஹாதேவி என்ற கல்வெட்டுச் செய்திகள் குறிப்பதிலிருந்து அறிய முடிகின்றது.

**அகை -** இச்சொல் எச்சவமைதி பெற்றதோர் சொல் கல்வெட்டுச் செய்திகளால் இச்சொல்லிற்குப் பிரித்த வகுத்த, பிரிக்கும் என்ற பொருள்கள் அமைகின்றன. பெரிய நீர்க்கா விலிருந்து பாசனத்திற்கு பிரிக்கப் பெறும் சிறுகால் (சிறுவாய்க்கால்) அகைத்தல் பெற்றது என்ற தொழிற்பாட்டின் ஆக்கப்பெயராகக் குறிக்கப்பட்டுள்ளது. அகைக்கால் என்பது நிறைபொருள் தரும் சொல்லாகும்.

**அங்காடி மாற்றத்தண்டம் -** சோழ வரசில் விதிக்கப்பட்ட அபராதக் காசு என்ற தண்டனைகளுள் ஒன்று. ஊர்ப்பொதுவிடத்தில் குறித்த இடத்தில் அன்றாடம் சிறுவியாபார செய்வானொருவன், அவ்விடத்தை மாற்றம் செய்தோ விற்பனைப் பொருளை வேறொன்றாக மாற்றம் செய்தோ இருப்பானாயின், அதிகாரிகள் அதற்கு விதிக்கும் தண்டக்காசே அங்காடி மாற்றத் தண்டமாகும்.

**அஞ்சினான்புகலிடம் -** அச்சமுற்றவன் அடைக்கலமாகப்புகுமிடம். சோழர் காலச் சமணர் பள்ளியும் பாழியும் இப்பெயர் பெற்றிருந்தன. வாழ்வில் நேர்ந்த கொடுமைகட்கும் தீய தாக்கங்கட்கும் அறிவறிந்தும் நீக்கம் காணவியலாதவன், அஞ்சிய நிலையில் அடைக்கலம் புகுந்து துறவி நிலை பெறும் இடங்களாகச் சமணர் பாழிகள் அன்றிருந்த மேன்மையி னாலேயே, அஞ்சினான் புகலிடம்

என்று குறிக்கப்பட்டன.

(வீரசிகாமணிக்கல்வெட்டு)

**அடிக்காசு** - வரி அங்காடி கூடுமிடத்தில் விற்பனைப் பொருள் களைப் பரப்பிய இடத்திற்காக, அரசு பெறும் வரி, அடியிட வரிக்காசு என்பதாகும்.

**ஆக** - எச்சச்சொல் இதன்பொருள் கூடியதாக, கூடுதலாக, அளவாக, இத்தனையாக, ஏற்புடையதாக, செய்ததாக, செய்வதாக, செய்ய வேண்டியதாக என்ற பொருள் வேறுபாட்டுடன் கல்வெட்டுச் செய்தி களுக்கேற்பப் பொருள் மாற்றம் பெற்றுள்ளது.

**இசங்குதல்** - இச்சொல் உடன்படுதல் என்னும் கருத்திற்கு இடனாகத் தொண்டை நாட்டில் வழங்கப்பட்ட தோர் சொல். இச் சொல்லே 'இசங்கும் வழி இசங்குவிப்பதாகவும்' என்ற கிராம சபையாரின் தீர்ப்புரையாக்வும் கல்வெட்டுகளில் இடம் பெறும் போது, இயன்ற வழிமுறைகளில் கட்டுப் படுத்த வேண்டியது என்ற விளக்கமாகவும் அமைகின்றது.

**இசைகிடாய்** - இப்பெயர்ச்சொல், கொங்குநாட்டார் வழக்கிலுள்ளது. பொலிதகர், இனப்பெருக்கத்திற்கென்று அனுமதித்த ஆட்டுக்கடா. கடா வழக்கில் கிடாய் என்று திரிந்துள்ளது.

இரிஞ்ஞாலம் - கேரளநாட்டார் வழக்குச் சொல். பிரிக்கப்பட்ட தரை. இடையே பறித்தோடிய நீரோட்டத்தால் இரண்டாகப் பிரிந்த நிலம், நாடு.

**உசாவடி** - சோழராட்சியில் கிராமங்கள் தோறும் குறித்த காலங்களில் அரசியலதிகாரிகள் எழுந்தருளி இறை, வரி, ஊர் விசாரணை ஆகியவற்றைச் செய்யும் கொட்டகாரம், தனியிடம்.

**உவச்சு-கொத்து** - ஊர் நன்மை தீமைகட்கும், கோயில் விழாக்களுக்கும் தாரை, தம்பட்டை, சகடை ஆகிய இசைக்கிருவிகளை முழக்கும் தொழில் உவச்சு எனப்படும். குழுவினராக அவ்விசைத்தொழிலாளர் செயற் படுதலால் அக்குழு கொத்து என்னும் கலைச்சொல்லால் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளது. கொத்துபலர் சேர்ந்து செய்யும் தொழில்.

**ஏம்பல்** - மழைநீர் வார்ந்தோடி வந்து தேங்கி நிற்கும் பள்ளத் தாழ்வு நிலம் (ஏரிவகையுள் ஒன்று)

**ஏற்றம்** - இச்சொல் நீரிரைக்கும் ஏற்றத்திற் குரியதாகக் கொள்ளப் பெறுகின்றது. இதனால் பெயர் சொல் நிலைபெறினும் கல்வெட்டுகளில் இச்சொல் உரிச்சொல்லாக்கமாகப் பொருள் தந்து நிற்கின்றது.

**ஏற்றம்** - இறுத்து என்ற தொடர் நிலையில் மிகுதியாக என்றும் ஏற்றம் செய்து என்ற நிலையில் கூடுதல் செய்து என்றும் இச்சொல் பொருள் தந்து உள்ளதனை அறிய முடிகின்றது.

**ஒட்டி** - என்ற எச்சச் சொல், கல்வெட்டுச் செய்திகளில் சேர்த்து, இணைத்து, அதனுடன் என்ற பொருள் வேறுபாட்டுடன் இடம் பெற்றுள்ளது. ஒட்டிக்குடுத்தோம், ஒட்டிக்கொள்ளவும், இச்செயல் ஒட்டியதாகவும் என்ற தொடர்நிலைகளால் அறியப்

பெறுவதாகும்.

**ஒழுகு** - ஒரேதரமாகவும் திட்டமாகவும் எக்காலத்திலும் எதனானும் மாற்றம் பெறாமல் ஒரே அளவையாக அரசு பெறும் முறை, வரி. கிராமநிலங்களை முறையாக அளவிட்டுப் புரவு வரிக் கணக்கில் இடுவதும் ஒழுகு என்ற கலைச்சொல்லால் குறிக்கப் பெறுகின்றது.

இவ்வளவில் ஒரு சில கல்வெட்டுக் கலைச்சொல்லாக இருக்கும் உயிர்ச் சொல் அகர நிலையினைக் காட்டிய தாயிற்றாயினும் இதனைப்போன்று நூற்றுக் கணக்கில் சொற்கள் உளவாயினும் கட்டுரை அமைதிநோக்கி மேல்மேய் யெழுத்தியல் முறைக் கமைந்த சொற்களைக் முறைப்படுத்திக் கூறுதலமையும்.

**கடவது** - இச்சொல் செய்வது என்ற பொருள் தருவதாயினும், கல்வெட்டுச் செய்திகளில் இடம் பெறும் போது, கடவதல்ல, கடவோமாக கடவர்களாக, கடவரானவராக, கடவரானமைக்கு என்றெல்லாம் விரிந்துநின்று, தன்மை முன்னிலைகளில் ஒருமைப் பன்மை அமைப்பிலும், உடன்பாடு எதிர்மறைப் பொருளிலும் ஏவலாகவும் செய்தி கட்கேற்பச் சொற்றொடர்களில் பகுதிப் பொருள் கருவியாக நின்று பொருளமைதி பெறுகின்றது.

**கண்ணாலக்காணம்** - வரிவகையுளொன்று, திருமணத்தின் போது, பெண் கொள்வாரும் கொடுப்பாரும் தனித்தனியே அரசுக்குச் செலுத்தும் மகமைக்காசு 'கண்ணாலங்களில் கொண்டவனொரு சின்னமும் குடுத்தவனொரு சின்னமும் இடக் கடவார்களாகவும்.'

(கல்வெட்டு)

**கண்ணாறு** - வேளாண்மைக்கு ஏற்புடையதாக, ஆற்றிலிருந்து பிரிக்கப் பெறும் தலைக்காலில், நிலத்தில் நீர் மடைவழிப் பாய்ச்சுவதற்கு இயல்பானதாக, கிளைத்து எடுக்கப் பெறும் சிறுகால்வாய் கண்ணாறு என்றுபெயர் பெறும். இச்சிறுகால், மடைவாய்களாகிய கண்ணகத்தினை ஆங்தாங்கே பாங்குடன் பெற்றிருப்பதால் கண்ணாறு என்ற காரணப் பெயரினைப் பெற்றுள்ளது. சோழர் காலக் கல்வெட்டுகளில் வேளாண்மை பற்றிய செய்திகளில் இக்கண்ணாறு குறிக்கப் பெற்றிருப்பது, அன்றைய நீர்ப்பாசன அனுபவ நுட்பத்தினைப் புலப்படுத்துவதாகும்.

**கபாலம்** - தலையோடு என்று குறிப்பது இப்பெயர்ச்சொல்லாயினும், சோழ மன்னர்கள் திருக்கோயில் களுக்குச் செய்தளித்துள்ள உலோகத் திருமேனிகளில், சிவமூர்த்தங்களாகும் சிலைகளில், சிவபெருமான், பிச்சதேவர் ஆகியோர் திருமேனிகளின் கை யொன்றில் தலையோடு போன்று அமைக்கப் பெறும் குழிந்த பாத்திரம் போன்ற அமைப்பும் கபாலம் என்றே குறிக்கப்படுகின்றது. மற்றும் கருவறையில் வழிபாட்டில் அர்ச்சகர் திருநீறு வைத்தளிக்கும் பாத்திரமும் கபாலம் என்றே பெயர் கூறப்பட்டுள்ளது. அமைப்புத் தோற்றத்தால் இப்பெயர்கள் குறிக்கப் பட்டுள்ளன.

**கருமாளிகை** - இன்றியமையாத

அங்கங்களுடனும், சுருங்கை வழிக ளுடனும், பதுங்கு மதிலகங் களுடனும் திண்மையாகக் கட்டப் பட்ட அரசு மாளிகை. அந்தரங்க சபைகூடும் மாளிகை என்பதுமாம்.

'அரசுறை கருமாளிகை பொடி யாக்கி"

_ கல்வெட்டு

**கல்லும் கள்ளியும் நாட்டி** - அரச னால் அறமாகச் செய்யப்பட்ட நிலம், கிராமம், ஊர், ஆகியவற்றி லொன்றின் எல்லைகளைக் கண்டு உறுதி செய்வதற்கு, ஊர்ப் பெரு மக்களும் அதிகாரிகளும் பிடி சூழ்ந்து பிடாகை நடந்து, எல்லைளைத் திட்டப்படுத்தி அவ்வவ் விடங்களில் எல்லைக் கல்லும், எக்காலத்தும் அழியாது கிளைக்கும் நெடுங்கள்ளியும் நாட்டிச் செல்லும் செயலாக்கத்தினை, நிலநிவந்தக் கல் வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் சாசன விளக்கப் பகுதியில் குறிப்பது வழக்கமாகும்.

_ (ஆனைமங்கலச் செப்பேடுகள்)

**கற்படி மாற்று** - கற்களில் பொறிக் கப்பட்ட சாசனச் செய்தியை உள்ள வாறே புத்தகத்தில் படியாக மாற்றி எழுதிவைப்பது. பொத்தகப் படி என்றும் பெயர்பெறும்.

**காடி** - புளித்த நீர், கள் என்ற பொருள் தரும். சொல்லாயினும், கல்வெட்டுச் செய்திகளில், நெல் அளவையினைக் குறிக்கும் கலைச் சொல்லாகக் குறிக்கப்பட்டுள்ளது. நெல்லளவைகளுள் உயர்தர அளவை யினைக் குறிக்கும் இச்சொல் பல்லவர் ஆட்சியில் பெருவழக்காகி நின்றதுடன் சோழராட்சியில் அருகிய வழக்காகத் தொண்டை நாட்டில் இருந்துளது.

பல்லவர் ஆட்சியில் 5 குறுணி அல்லது 40 நாழி கொண்டது ஒரு காடி என்றிருந்துள்ளது. சோழர் ஆட்சியில், 3 காடி கொண்டது ஒரு கலம் என்ற திட்டம் செயல் பட்டுளது.

**சந்து விக்கிரகப்பேறு** - அரசுபெற்ற வரிகளுள் ஒன்று. பகையை விசாரித்து சமாதானம் செய்வதும், பகைமுற்றில் குற்ற முடையாரைத் தண்டித்து அடக்கலும் ஆகிய மக்கள் வழக்குத் தீர்க்கும் அரச ஆணைக்குப் பெறும் வரி.

**சமைதல்** - அமைதல், பூப்படைதல் ஆகிய பொருள்கட்குரிய சொல்லா யினும், கல்வெட்டுகளில் நாட்டு வழக்கியல் சொல்லாகக் கையாளப் பட்டுள்ளது. சமைதல் கிராம சபையார்கள் ஆராய்ந்த திட்டங்களை நிறைவு செய்தல், செய்தற்குத் தகுதி களைத் திட்டமிடல், பொறுப்பேற்றல், பொருந்துதல் என்றெல்லாம் பொருள் மாற்றம் பெறும் நிலையில் இச்சொல் அமைந்துள்ளது.

**சயிஞை** - இச்சொல் சமிஞ்ஞை என்றும் கல்வெட்டுகளில் குறிக்கிப்பட்டுள்ளது. இதன் பொருள், கையினால் சைகை செய்து காட்டும் தள்ளாமை நிலை. இந்நிலையெய்திய முதியோர் ஆவணக் களரி எனும் சாசனப் பதிவகத்தில் ஆவணச்சாசனத்தில் கையொப்பமிட வேண்டியதாயின் தனது அனுமதி யினைச் சைகையால் தெரிவிக்க அவர்க்குப் பதிலாக, பிறரொருவர் கையெழுத்திடுதல் அக்கால வழக்காகும். சைகை காட்டும்

அளவில் தளர்ந்த முதுமை என்பது சுருக்கப் பொருளாகும். தறகுறிக்கு மாட்டெறிதல் வேறாகும்.

**சொறு** - இச்சொல் அரசுபெறும் பெருவரிகளாகிய இறை, புரவு வரி ஆகியவற்றுடன் கூடியதாகப் பெறும் சிறுவரிகள் என்னும் குறிப்புச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எச்சொறும் எத்தகைய உள்வரிகளும் என்ற விளக்கம் பெறுகின்றது.

**சாவா மூவாப் பசு** - கோயில்கட்கமைந்த திருவிளக்கு நிவந்தங்கட்கு மூலப்பொருளாக ஆடுகளையும் பசுக்களையும்அளித்து நிவந்தத்தினை என்றும் குறையாமல் திட்டப் படுத்துவது வழக்காகும்.

நிவந்தப் பசுக்களைப் பெற்றார் பசுக்கள் எண்ணிக்கையில் குறை யாமல் குட்டிகளைக் கொண்டு ஈடுசெய்து காக்கும் பசுநிரை என்னும் விரிந்த பொருள் தரும் தொடராகும்.

**தலைச்சமாடு** - முதலீட்டுப்பொருள், முதன்மை பெறும்செல்வம், முதலுக் குரிய் மூலதனம், முதல்தர மதிப்புடைய நிலம்,தலைப்பாக அமைந்த நிலம் என்ற பொருளமைதிகளில் இச் சொல் கல்வெட்டுகளில் பயின்று வந்துள்ளது.

**தலைமாறு** - பரிவர்த்தனை என்ற பொருள் தரும் சொல்லாகும். நிலத்திற்கு நிலமோ, நிலத்தின் மதிப்பீட்டிற்கு ஈடான வீட்டு மனையோ மாற்றாக உரிமை செய்யப்பெறும் செயல் தலைமாறு என்னும் சொல்லால் குறிக்கப் படுகின்றது.

**தன்னேற்றம்** - தன்னோடு கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளும் நிலை. இஃது ஆள், உரிமை, செயல், பெருக்கம் ஆகிய பொருள் நிலைகட்குப் பொதுவாகக் குறிக்கப் பெறும் சொல்லாகும்.

> "தாமோதரன் செட்டிக்குத் தன்னேற்றம் ஆள் பதினொரு வர்க்குப் பேரால்"
>
> - (கல்வெட்டு)

**தடி** - வயல் என்ற பெயர் குறிப்ப தாயினும் பரந்துபட்டதாகக் கிடக்கும் நஞ்செய் நிலத்தை, நீர்ப் பாசன தகுதிக்கேற்ப வரப்பிட்டு, துண்டு நிலங்களாக அமைந்திருப்பதே தடிதலாகிய செயலுடைய நிலம் என்ற ஆக்கப்பொருள் நிலை தரும் பெயர்ச்சொல்லாகியுள்ளது. தடி_தடிக்கப்பட்ட நிலம்.

**நகரம்** - வணிகவளமும் வணிகரும் சிறந்து பொருந்தியுள்ள ஊர்ப்பகுதி வணிகமையமாக மாற்றம் பெற்ற ஊரே நகரம் எனப்பட்டுள்ளது.

**நகரவாரியம்** - நகரமாகக் கொள்ளப் பட்ட ஊர்களில் வணிகத் தொடர்பான செயல்களனைத் தினையும் கண்காணிக்கும் கிராம சபையின் உட்குழு, இவ்வாரியம் சிறந்த வணிகர் வாழும் நகரங்களில் அமைக்கப்பெறுதலினால் நகரவாரியம் என்று பெயர் பெற்றது.

**நிச்சம்** - (நித்தம்) நாள்தோறும், நாளும். இச்சொல், ஒருசில

கல்வெட்டுகளில் நிச்சில் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. முதல் இராசராசன் ஆட்சியில் இச்சொல்லிற்கு ஈடாக நிசதம் என்ற சொல்லே இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

**பரிசு** - இச்சொல் வழக்கில் எளிமையாகப் பயன்படும் சொல் லாகும். இதனால் பெறும் பொருள் கொடை, அன்பளிப்பு, இனாம் என்பன போன்றவனாயினும் கல்வெட்டுக்களில் பரிசு என்னும் சொல். முறைமை, தீர்மானம், முடிபு, செயல்திட்டம், ஒருமனமாகச் செய்த திட்டம், அனுமதி, என்பன போன்ற பொருள் தரும் நிலையில் செய்திகட்கேற்ப இடம்பெற்றுள்ள தனை அறிய முடிகின்றது.

**பாகாசிரியம்** - பங்குக் காணியாட்சி யாகக் கொடுக்கப்பட்ட நிலப்பகுதி பருவகாலத்தில் பாசனத்திற்கு அவ்வவ்வூர்களின் பங்கு முறைமை யாக விடப்பெறும் முறைநீர் அளவீட்டுரிமையும் கொள்ளப் பெறுகின்றது. இவ்வாறான இரண்டு நிலையில் இக்கூட்டுச் சொல் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளது.

**பிரமாதல்** - (பிரமாதம்) வடசொல் தமிழாக்கமாக வந்துள்ளது. நாட்டு வழக்கில் பிரமாதமாகப் பேசினான், பிரமாதமாக நடித்தான் என்பன போன்ற இடங்களில் பாராட்டுதலுக் குரிய சொல்லாகவும் மிகமேலான உயர்ந்த செயல் என்பதற்குரிய தாகவும் இச்சொல் பயன்படுத்தப் படுகின்றது. இச்சொல்லின் வட மொழிநிலை-ப்ரமாதம் என்பதாகும்.

கல்வெட்டுக்களில் இச்சொல், எதிர்பாராத கைப்பிழையால் கொல்லப்படுதல் என்னும் பொருளைத் தருவதாகவே குறிக்கப்பட்டுள்ளது.

> "என் சிற்றப்பன் உபகாரி மல்லன், பருக்கலுடையான் பிரிதி வெண்காடநங்கையிலேய் பிரமாதல் பட்டமையில் இவனைச் சார்த்தி வைத்த விளக்கு."
>
> _ (கல்வெட்டு)

தமிழாக்கமாக பிரமாதல் என்று ஒருசில கல்வெட்டுகளிலும், பிரமாதப்பட்டான் என்று ஒரு சில கல்வெட்டுகளிலும் இடம்பெற்றுள்ளன.

**பொற்றை** - மண்ணடைவுடைய குறுங்குன்று பொச்சை, பொத்தை என்பன தென்பாண்டி நாட்டு வழக்கு.

**மன்றுபாடு** - கிராம நியாய விசாரணை சபையார் செய்த தீர்ப்புப்படி குற்றவாளி வாரிய மன்றத்திலே செலுத்தும் அபராதக் காசு

> "இவ்வூர் குடிகளைக் குற்றந் தோறும் மன்றுபாடு சபையாரே தண்டித்துக் கொள்வதாகவும்"
>
> _ (கல்வெட்டு)

**மீயாட்சி** - நிலவுரிமையாளர், குத்தகைப் பங்குரிமையும் பெறுதல் மீயாட்சி எனப்படும். நிலவுரிமை முதலாக, விளைவிலுரிமை பெறுதல் அதன்மேலுரிமையும் சிறப்புரிமையு மாதலின் மீயாட்சி எனப்பட்டது.

வாமனக்கல் - வாமன உருவம் பொறித்ததும் அறச்செயல் பொறிக்கப் பட்டதுமான அறநடைக்கல் திருமால் வாமன பிராமணனாக மகாபலியிடம் வந்த வடிவினை, பிராமணர்கட்கு வழங்கும் தான சாசனமுள்ள கல்லிலும் பொறித்து, வேதியர்கட்களிப்பது வாமனக்கல் என்பதால் இதனை பிர்மதேய சாசனக்கல் என்றும் குறிப்பது வழக்கமாகும்.

இதுவரையில் சோழர்காலக் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ள கலைச்சொற்களுள் ஒருசிலவற்றிற்குப் பொருளுரை தரப்பட்டுள்ளது. சோழர்காலத்தில் நிலவிய வரி வகைகள் நூற்றுக்கும் மேலாக உள்ளன. நவமணிகளின் எண்ணிக்கை முப்பத்திரண்டு வகையினவாக இருப்பதனை, அரசர்களும் பிறரும் திருமேனிகட்குச் செய்தளித்துள்ள திருவாபரண விளக்கக் கல்வெட்டு களால் அறிய முடிகின்றது. மற்றும் அரசியல், வழக்கியல், சமயவியல், சமுதாயவியல், வணிகவியல், வேளாணியல், பொருளியல், கலை யியல் ஆகிய துறைகட்கிலக்காகக் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ள கலைச்சொற்களில் புதிய சொற்கள் மிகுதிக் குறையாக இரண்டாயிரத் திற்கும் மேலானவை யாகும். அவற்றை யெல்லாம் சொற்பொருளாக்க முடன் கட்டுரையளவில் தொகுத் துரைத்தற் கியலவில்லை. ஒரு சில சான்றுகளையே இக்கட்டுரை கொண்டுள்ளது.

இவ்வளவில், சோழர்காலத்தில் தமிழகத்தில் நிலவிய மொழிநிலை ஆய்வுரைக்குறிப்புடன், அகராதிக் கலைக்குரிய ஆக்க நிலைகட்குக் கருதிய குறிப்பும் சுருக்கமாகக் கூறப்பெற்றுள்ளதுடன் சான்றாக கல்வெட்டுச் சொற்கள் சில வற்றினை எடுத்துக்காட்டிப் பொருளுரை விளக்கமும் குறிக்கப் பெற்ற அளவில் நிறைவுபெறுவதாகும்.

தமிழ்க் கலை
தமிழ் 7, கலை 1, 2

# பெரியபுராணச் சிறப்புப் பெயரகராதியில் ஒரு பதிவு

தா. வே. வீராசாமி

கங்கை ஆறு வடநாட்டில் ஓடும் ஆறாக இருப்பினும் அதுபற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில்[1] பரவலாகக் கிடைக்கின்றன. அச் செய்திகளால் கங்கை தோன்றும் இமயச்சூழல், கங்கையின் வளம், கங்கை கடலில் கலக்கும் காட்சி ஆகிய இயற்கை அழகைத் துய்த்த நிலையை அறிய முடியும். அதனைக் கடக்கும் அரிய செயலை வியத்தகு முறையில் காணலாம். வற்றாத நீர் வளத்தைக் கண்டு மகிழ்ந்த நிலையையும் உணரலாம். இவற்றைப் பார்க்கும் போது சங்கப் பாடல்கள் அகம் புறம் ஆகிய நிலையை விளக்குமிடத்து வள்ளல்களின் வற்றாத வள்ளன்மை, அரசர்தம் பெருமை பற்றிக் குறிக்கவும் வள்ளல்களின் ஈகைப் பெருக்கத்தை வெளிப்படுத்தவும் கங்கை பயன் பட்டதை அறிகிறோம்.[2]

இம்மரபுச் செல்வத்தைக் கொண்டு பெரியபுராணத்தில் கங்கை பற்றிய செய்திகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது கங்கை பற்றிய செய்திகளின் நிலை பலநெறிகளில் புதிய கலவைகள் கலந்துள்ளதாய் உள்ளதை அறிய முடிகிறது. எனவே பெரியபுராணச் சிறப்புப் பெயர கராதியில் கங்கை என்ற பதிவினை ஏற்கும்போது இம்மரபுச் செய்திகளை மனத்தில் கொண்டு விளக்கம் எழுதும் போது பதிவின் பொருட் செறிவு மேலும் வலிவுபெற வாய்ப்பேற் படுகிறது.

மூவர் தேவாரத்தில் கங்கை பற்றிப் பல குறிப்புகள் இருப்பினும் 'உரை'ச் சான்றாகச்[3] சிலவற்றைக் காணும் போது.

கங்கையைச் சிவபெருமான் தரித்துள்ள செய்தியை அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் பொதுவாகக் கூறிச் செல்வர். கங்கையை இறைவன் சடையுள் கரந்து வைத்தது பற்றி அப்பரும் சம்பந்தரும் கூறும்போது பகீரதன் வானிலிருந்து கங்கை கொணர்ந்தபோது சிவன் அதனை அருளால் தாங்கிய செய்தியை 'மன்னிய பகீரதற்கு, வெஞ்சின முகங்களாகி விசையொடு பாயுங்கங்கை செஞ்சடை ஏற்றார்' என்ற அப்பரின் திருச்சேறைப் பதிகத்தின் 4-ஆம்[4] பாடல் வாயிலாக அறிகிறோம். மேலும் கங்கையைச் சடையுள் வைக்கக் கண்டு உமை ஊடியதாக அப்பர் திருமறைக்காட்டு 'தேரையு மே... கடாவி' என்று தொடங்கும் பதிகத்தில் குறிக்கும் போது அகத்துறை ஊடல்

நிகழ்ச்சி சங்கமரபில் கற்பனை வடிவு கொள்கிறது. ஆயினும் அதைத் தொடர்ந்து, அப்பர் பாவநாசத் திருக்குறுந்தொகையில் 'கங்கையாடி லென் . . . . . . எங்குமீசனெனா தவர்க்கில்லையே' எனக்கூறும் போது கங்கை நீர் புனிதமானது, அதில் ஆடின் பாவம் அழியும் என்ற கருத்து பரவி வந்த செய்தியை உணர முடிகிறது. இக்கருத்துச் செல்வம் சங்ககாலத்திலிருந்த நிலையிலிருந்து பெற்ற வளர்ச்சி நிலையாகும்.

இதனையும் மனத்தில் கொண்டு காணும்போது பெரிய புராணத்தில் பயின்ற கங்கை என்ற சொற்பதிவைச் சிறப்புப் பெயரகராதியில் எங்ஙனம் விளக்குவது என்பது இன்னும் தெளிவாக அமையும்.

பெரியபுராணச் சிறப்புப் பெயரகராதியில் 'கங்கை' என்ற சொல் பற்றிப் பார்ப்போம். பவானந்தம் பிள்ளையின் 'தற்காலத் தமிழ்ச் சொல்லகராதியில் (1925) 'கங்கை - ஒரு நதி' எனப் பதிவமைந்துள்ளது. சென்னைப் பல்கலைக் கழகம் தொகுத்த பேரகராதியில் (1939) இச் சொல்லுக்கு 1. ஒரு நதி 2. நதி 3. கங்கைக்குணன் (நவச்சாரம்) என மூன்று பொருள்கள் கொடுக்கப் பட்டுள்ளன. அப்பெயர் அடிப் படையில் வடநாட்டில் இமயத்தில் தோன்றி கிழக்காகச் சென்று பின் வங்கக் கடலில் கலக்கும் கங்கை என்ற பெயருள்ள ஒரு தனிப்பட்ட ஆற்றைக் குறிக்கும் சிறப்புப் பெயராக முதலில் அமைந்தும் பின் எல்லா ஆறுகளையும் கங்கை எனக் குறிக்கும் பொதுப் பெயராக அமைந்தும் உள்ளது ஒரு நிலை. அடுத்து உலோகங்களை ஒட்ட வைக்கும் பற்றாசாம் நவச்சாரத்திற்கும் இது பெயராக அமையும் நிலையையும் காணமுடிகிறது. கங்கைக்குணன் என்ற பெயர் கங்கை என்ற அளவிலே நின்று இப்பொருள் படுவதால் இதனைப் பல பொருள் ஒரு சொல்லாகக் கொள்வோம்.

கங்கை என்ற பெயரைப் பல நிகண்டுகள் பல் வேறு பெயர்களில் குறித்துள்ளன.

| | திவாகரம் (9நூ) | பிங்கலம் (10நூ) | கயாதரம் (15நூ) | சூடாமணி (16நூ) |
|---|---|---|---|---|
| 1. கங்கை | • | • | • | • |
| 2. இடைச்சுரசிந்து | - | - | • | - |
| 3. உமைசுரநதி | - | • | - | - |
| 4. சானவி | • | • | • | • |
| 5. சிரநதி | - | • | - | - |
| 6. சுரநதி | • | • | - | • |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | தசமுகநதி | - | • | - | - |
| 8. | திரிபதகை | • | • | (திரிபதை) | • |
| 9. | தெய்வநதி | - | • | - | - |
| 10. | பகீரதி | • | • | (பாகீரதி) | • |
| 11. | மந்தாகினி | • | • | • | • |
| 12. | வரநதி | • | • | • | • |
| 13. | வானதி | • | • | • | - |
| 14. | விமலை | - | • | • | - |

பெரியபுராணத்தில் 'கங்கையைப் பற்றிய குறிப்புக்கள் 61 இடங்களிலும் 'சுரநதி' என்ற பெயர் இரு இடங்களிலும் காணப் பெறுகின்றன.

முதலில் இவற்றைத் தொகுத்த பின் அவற்றின் செய்திகளின் அடிப் படையில் விளக்கம் எழுத வேண்டி யுள்ளது. முழுமையும் காணும்போது கங்கை பற்றித் தமிழில் வழங்கும் பதினான்கு சொற்களில் பெரியபுராண ஆசிரியர் இரண்டை மட்டும் பயன்படுத்தியுள்ளார். மற்றவை இந் நூலில் வழங்கப் பெறவில்லை என்ற உண்மை புலனாகிறது. இவற்றில் 'இசைசுர சிந்து' மடல் இந்நூலுக்குப் பின்னர் வந்த கயாதரத்தில் காணப் பெறுவதால் அதனைப் பிற்கால வழக்கு எனக் கொள்வதற்கு இடமுண்டு. எனவே பெரியபுராண ஆசிரியர் அதனைப் பயன்படுத்த வாய்ப்பில்லை எனக் கூறினும் உமைசுர நதி, சானவி, சிரநதி, தசமுகநதி, திரிபதகை, தெய்வநதி, பகீரதி, மந்தாகினி, வரநதி, வானதி, விமலை ஆகிய பெயர்கள் வழங்கப் பெற வில்லை என்ற பொதுவுண்மை அடிப் படையில் காணும்போது தமிழகத்தில் சங்க காலந்தொட்டு வழங்கும் கங்கை என்ற பெயர்க்கே ஆசிரியர் முதலிடம் கொடுப்பது நன்கு புலனாகிறது. எனவே இதனையே தலைச்சொல்லாகக் கொண்டு விளக்கம் எழுதும்போது 'சுரநதி'யை இதன் மற்ற பெயராக ஏற்க முடிகிறது.

இந்திய நாட்டில் இமயத்தில் தோன்றிப்பாயும் ஆறு என்பதைப் பொதுவாகக் குறிக்கும் வகையில் ஓர் ஆறு என்று குறிப்பது முதல்நிலை (பின்னிணைப்பில் 1.0 -இல் காண்க). ஆனால் பெரியபுராணப் போக்கிற் கேற்ப 'வானப் பேராறு' என்ற புராணக்கருத்தைச் சுட்ட வேண்டியது அடுத்தநிலையாகும் /1.1/6| மண்ணில் ஓடும் ஆறு என்பது உண்மைநிலை. ஆயினும் அது விண்ணிலிருந்து மண்ணிற்குக் கொண்டு வரப்பெற்றது என்பது புராணக் கருத்து.

பகீரதன் என்ற மன்னன் தன் மூதாதையர்க்கு ஏற்பட்ட சாபம் நீங்க வானதியாம் கங்கையை மண்ணில் கொணரும்போது அதனைச் சிவன் தன் செஞ்சடையில் ஏற்றார் என்ற செய்தியைச் சுருக்கமாகவும் விளக்க மாகவும் மூவர் தேவாரம் கூறுவதை முன்னர்க் கண்டோம். ஆயின் பகீரதன் கதைக் குறிப்பே பெரியபுராணத்தில் காணப் பெறவில்லை. (இதன் காரணத்தை ஆய்வது இங்குப் பொருத்தமன்று. சங்ககாலத்தில் சிபியின் கதை தக்க இடம் பெற்றி ருந்தும் பிற்கால வழக்கில் அஃது அருகி வழங்கியதை இத்துடன் ஒப்பிட்டுக் காணலாம்.) பெரிய புராணப் பெருங்கடவுளாம் சிவ பெருமானின் முடியில் கங்கை அமையப் பெறுதல் கங்கையின் புனிதத்தன்மை, சிவன் அதில் ஆடுதற்குரிய பெருமை ஆகிய நிலையும் பண்பும் கூறிக் கங்கையைப் பற்றிக் குறிப்பிடும் நிலை அடுத்து அமைகிறது.(1.2)

இல்லையெனில் பெரிய புராணத்தில் 1 முதல் 4281 பாக்கள் வரை (சி.கே. சுப்பிரமணிய முதலியார் பதிப்பின்படி) உள்ள கங்கை பற்றிய செய்திகளை அவ்வாறே தரின் அதில் செய்தி நல்வடிவம் பெறாமல் நேர்கோட்டு நிலையில் எவ்விதத் தொடர்புமின்றிப் புலப்படும். அதனைத் தவிர்க்க மேற்கண்ட செய்திகள் முன்னர் வைக்கத் தேர்ந் தெடுக்கப்படும் நிலை பொருத்தமாகும்.

சிவனடியார்களில் கங்கையினை நேரே கண்டு அதில் நீராடியவர்கள் அப்பரும் திருமூலருமாவர். அடியார் களுடன் நேர் உறவை மனத்தில் கொண்டு இவ்விரு அடியார் செயல்களும் முறையே வைக்கப்பெறும் போது பெரியபுராணத்தில் மூவர் முதலிகளில் மூத்தவராகவும் இப்புராண அமைப்பில் முதலிடம் பெறுபவராகவும் விளங்கும் அப்பர் கங்கையைக் கண்டு நீராடிப் பின் அதன் கரையில் கயிலை நோக்கிச் சென்ற செய்தி முதலிலும் (2.1) அடுத்துத் திருமூலர் செய்தியும் தொகுக்கப் பெறும் (2.2) பெரிய புராண அமைப்பையும் அடியவர் நிலையையும் கருத்தில் கொண்டு இவ்விரு செய்திகளும் முன் பின்னாக வைக்கப்பெற்றன.

புண்ணிய நதியாம் கங்கை தமிழகத்தில் உள்ள திருவையாறு (3.1) குடமூக்கு (3.2) ஆகிய தலங்களுக்கு மற்ற தெய்வ நதிகளுடன் வந்து நீராடும் செய்தி அமைகிறது. 'புண்ணிய கங்கை' (671) தன் பாவத்தையும் தன்னைப் போன்ற பிற தெய்வ நதிகளின் பாவத்தையும் போக்கிக் கொள்ளும் வகையில் தமிழகச் சிவதீர்த்தங்கள் உள்ளன என்பதைப் பெரியபுராணம் சுட்டும். இதனை உணரும் வகையில் அடுத்த பகுதி விளக்கப் பெறுகிறது.

காப்பிய நோக்கில் கங்கை உவமையாகப் பயன்படுகிறது. காவிரி, கெடிலம் ஆகிய ஆறுகள் கங்கை ஆற்றுடன் ஒப்புமை ஆவது ஒத்த நிலையின் அடிப்படையிலாகும். காஞ்சி வீதிகள் உவமையாவது பண்டைய சங்க மரபின் அடிப்படையிலாகும். இவ்வாறு ஒத்தநிலையிலும் மரபு நிலையிலும் உவமையாகும் நிலை முதலில் அமைகிறது(4.1)

அடுத்து அருவ நிலையில் அடியார்களின் மகிழ்ச்சி ஆரவார

ஒலிக்குக் கங்கை ஆர்ப்பு உவமை ஆவது புலன் நிலையிலமையும் உவமையாகும் (4.2)

ஆயின் சம்பந்தரின் இரு செயல்களுக்குக் கங்கை உவமையாவது இல் பொருள் நிலையில் வியப்பூட்டும். பாண்டி நாட்டில் வராத கங்கையை வந்தது போலக் கூறி அமண் இருள் நீக்கும் செயலை அறிவுறுத்தும் (4.3) பொன்மயமான இமய மலையிலிருந்து கங்கை விலகிச் செல்வது இயல்பு. ஆயின் கங்கையே அதனுள் புகுவது இயற்கையில் காணப்பெறாத இல்பொருள் நிலை. இதனை உவமையாக வடித்துப் பொன் மாளிகையில் புகும் சம்பந்தரைப் பொன்னிமயமலையில் கங்கைக் கொழுந்து புகுந்தது எனக் காட்டும்போது (4.4) அணிநயத்தை அழகுபடுத்தும் அமைப்பு அடுத்து வைக்கப்பெறும்.

இறுதியாகக் கங்கை நீரின் தூய்மை கண்ணப்பர் திருவாய் நீருடன் ஒப்பிடப்பெற்று அதன் பெருமை விளங்கக் கங்கையின் புனிதப்பண்பு தாழ்கிறது (4.5)

இதனால் சிவனடியார் நிலை கங்கை நிலையிலும் உயர்ந்தது என்று கருதும் பெரியபுராண அடிப்படை நோக்கம் புலனாகும். இதுவே இந்நூலின் தலையாய கொள்கை ஆதலின் கங்கை அதனை உணர்த்த ஒரு கருவி ஆகிறது என்பதை (5.0) அறிவுறுத்த இப்பதிவு துணை செய்யும் வகையில் விளக்கப்பெற்றுள்ளது.

இவ்வாய்வு வழி, இச்சிறப்புப் பெயரகராதிப் பதிவுகளைப் பின் வருமாறு அமைக்க இயலும்.

1. சிறப்புப் பெயர் பற்றிய வரவுகள் அனைத்தையும் ஒன்று விடாமல் முதலில் தொகுக்க வேண்டும்.

2. தொகுத்த செய்திகளை நிரல்பட அமைக்கும் போது பொதுச் செய்திகளுக்கு முதலில் இடம் தரவேண்டும்.

3. மரபுச் செய்திகளில் கூறப்படும் முதன்மை நிலை, அகராதிக்கென எடுத்துக் கொண்ட நூலில் உள்ளதா என ஒப்பிட்டுப் பார்த்து அதற்கேற்ப நூல் மரபை அறிந்து விளக்கம் எழுதிச் சொல்லவேண்டும்.

4. பருப்பொருள், நிகழ்ச்சி ஆகியவற்றின் சிறப்பைக் கருதி முன்பின் வரிசைப் படுத்தலாம்.

5. எடுத்துக் கொண்ட பொருளின் இயல்பு நிலை, அணிநிலை ஆகிய இரண்டையும் பகுத்தறிந்து இயல்பு நிலைக்கேற்ப உண்மைகளை வெளிப்பட உரைக்க வேண்டும். அணிநிலை பற்றி விளக்கம் தரும்போது எடுத்துக் கொண்ட பொருளின் அடிப்படை நோக்கம் சிறந்திட, விளக்கம் மரபுநிலை உணர்ந்த வகையில் அமைய வேண்டும்.

6. சிறப்பகராதிக்கு மொழிப் பண்பாட்டுச் சூழல் பெரிதும் துணை செய்வதால் பண் பாட்டடிப்படையில் காணும் செய்திகளை வேண்டுமளவு தெளிவாக அகராதிக் கலைஞர் அறிவது இன்றியமையாததாகும்.

அடிக்குறிப்புகள்

1. அகம், 265; நற்றிணை 189, 369; பட்டினப்பாலை 190; பதிற்றுப்பத்து 5; பதி, பரிபாடல் 16; புறம் 161; பெரும்பாண் 429_431; மதுரைக்காஞ்சி 694_697.

2. தா.வே. வீராசாமி, சங்கப்பாடல்களில் கங்கை, பதினாறாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை தொகுதி 1 இ.ப.த. மன்றம், அண்ணாமலைநகர், 1984 பக்.524.

3. மூவர் தேவாரம் திருப்பனந்தாள் பதிப்பு, ஸ்ரீவைகுண்டம் 1968. பக்கம். 36, 93, 373, 408, 617, 709, 837, 866, 869, 948, 1051, 1373, 1405, 1498, 1502.

4. பகீரதன் கங்கை கொணர்ந்த கதை பற்றிய தேவாரக் குறிப்புகள்; அப்பர் - 4.73_4; 4.65_7; சம்பந்தர் 3.121_3; சுந்தரர் 7.57_7; திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரப் பதிகங்கள் (1973) திருநாவுக்கரச சுவாமிகள் தேவாரப் பதிகங்கள் (1973) சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரப் பதிகங்கள் (1973). கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் பதிப்பு கழகம், சென்னை.

5. கங்கை : 22, 45, 55, 147, 233, 235, 245, 311, 388, 516, 518, 671, 830, 837, 848, 897, 1036, 1096, 1108, 1143, 1167, 1399, 1601, 1618, 1642, 1945, 2086, 2202, 2221, 2302, 2307, 2353, 2365, 2469, 2549, 2882, 2975, 3023, 3128, 3160, 3216, 3307, 3316, 3386, 3450, 3495, 3523, 3566, 3567, 3788, 3826, 3860, 3893, 4067, 4096, 4151, 4174, 4250, 4256, 4273.

சுரநதி : 1227, 2429.

6. சாய்வுக் கோட்டகத்து உள்ளவை இதன் பின்னிணைப்பில் காணும் எண்கள்.

**பின்னிணைப்பு**

பதிவுப்பகுப்பு விளக்கம்

கங்கை : (சுரநதி)

1.0 இஃது ஓர் ஆறு.

1.1 இஃது ஒரு வானப் பேராறு (3860)*

1.2 (பகீரதன் செய்த தவத்தால் நிலவுலகை நோக்கிப் பாய்ந்த போது) சிவ பெருமான் இதனைத் தன் சடையில் கரந்து வைத்தார். (233)

(இக்குறிப்பே பெரியபுராணத்தில் பெரிதும் காணப்பெறுகிறது) சிவபெருமானின் முடியிலுள்ளது கங்கை எனப் போற்றப்பெறும் இதனைப் 'புண்ணிய கங்கை' எனப் புகழ்வர் (671). கங்கை நீர் சிவபெருமான் ஆடுதற்குரிய மஞ்சன நீராகப் போற்றப்பெறும் (518, 1096).

2.1 அப்பர் கைலாயம் காணச் சென்ற போது கங்கை வலமாகச் செல்லும் வாரணாசியில் தங்கினார் (1618).

தம்முடன் வந்த அடியவர்களை அங்கிருக்கச் செய்து அப்பர் தாம் மட்டும் கங்கைக் கரை வழிச் சென்று கற்சுரம் அடைந்தார் (1618).

2.2 நேபாளத்தை விட்டுத் திருமூலர்

தூய நீர்க்கங்கையின், அன்னம் மலிந்த அகனற துறைநீர்க் கரையை அடைந்து கங்கையில் நீராடிக் காசியைப் பணிந்தார். (3566).

3.1 திருவையாற்றில் கங்கை மற்ற தெய்வ நதிகளுடன் மங்கல *நீர்ப்பெருந்தடமாக வந்து சிவபெருமானை வணங்கியது(1 642).

3.2 குடமூக்கில் 'மகாமகம்' ஆடுதற்குக் கங்கை முதல் பெருந்தீர்த்தங்கள் காரோணக் கோயிலுறையும் சிவபெருமானை வணங்கின (2307).

4.1 காவிரிக்கும் கங்கைக்கும் மலையிற் பிறப்பதாலும் சிவன் முடியில் தோய்தலாலும் ஒப்புமை உள்ளதாகக் கூறுவர் (55).

மேலும் திருக்கெடில நதியையும் (235), காஞ்சியில் உள்ள வீதியையும் (1167) கங்கையுடன் ஒப்பிட்டுக் காண்பர்.

4.2 நம்பியாரூரர் வஞ்சி நகர்க்கு வந்தருளியபோது சிவனடியார்கள் மகிழ்ச்சியால் செய்த ஆர்ப்பு கங்கை ஆர்ப்புப் போலிருந்தது (4250).

4.3 மதுரையில் அமணிருள் நீக்கவந்த சம்பந்தர் வரவு கங்கை பாண்டிய நாட்டில் வந்து சேர்ந்தது போலிருந்தது (2549) என்பர்.

4.4 நம்பியாண்டார் நம்பியின் பொன் மாளிகையின் மணவரையில் சம்பந்தர் புகுந்தது பொன்னிமய மலையில் கங்கைக் கொழுந்து புகுந்தது போலிருந்தது (3128).

4.5 குழந்தையாம் கண்ணப்பரின் திருவாய் நீர் கங்கை நீரிலும் புனிதத்தன்மை உடையது (671).

5.0 சிவன் கோயில்கள் உள்ள ஊர்களில் பாயும் ஆறுகள், அவ்வூர் வீதிகள், அடியார்களின் செயல் ஆகியவற்றைக் கங்கையுடன் ஒப்பிடுவதுடன் அடியவர் திருவாய்நீர் கங்கை நீரினும் புனிதம் படைத்தது எனக் கருதுவதைப் பெரியபுராணம் சுட்டும்.

* அடைப்பில் கொடுத்துள்ள எண்கள் திருத்தொண்டர் புராணம் சி.கேசுப்பிரமணிய முதலியார் உரை *I - VII* தொகுதிகளில் காணும் பாடல் எண்களாம்.

தமிழ்க் கலை
தமிழ் 7, கலை 1, 2

# தொகுப்பியலில் வைணவச் சொற்கள்

சு. வேங்கடராமன்

**முன்னுரை:** வைணவத் திருக்கோயில்களிலும் வைணவர்களின் இல்லங்களில் அன்றாட வாழ்விலும் பல சொற்கள் வழங்கி வருகின்றன. இச்சொற்கள் வழிபாட்டுச் சடங்குகள், அணிகலன்கள், பொருட்கள், விழாக்கள், கலை, வாழ்வியல், கருவி, உணவு, ஆடை என்ற பல்வேறு நிலைகளில் வழங்கி வருகின்றன. இச் சொற்கள் தமிழக வைணவத் திருக்கோயில்களில் பல்வேறு நிலைகளில் மரபு வழியாக வழங்கி வருகின்றன. இலக்கியம், வரலாற்று ஆவணங்கள், மக்களின் பேச்சு வழக்கு ஆகிய நிலைக்களன் களிலிருந்து எடுக்கப்பெற்ற இச் சொற்கள் கோயில் நிறுவனஞ் சார்ந்தவர்களுக்கு மட்டும் பொருள் விளங்கும் படியான மரபுச் சொற்களாகத் (பரிபாஷைச் சொற்களாகத்) தொன்றுதொட்டு வழங்கி வருகின்றன. வைணவ சமயத்திற்கே உரிய முருகியல் - அழகியல் - கூறுகள் இச்சொற்களில் மேலோங்கியுள்ளன. இச்சொற்கள் இன்று அருகிய வழக்குடையனவாக உள்ளன. தமிழர்களின் சமய, பண்பாட்டு வாழ்வியல் சார்ந்த இச்சொற்கள் முறையாகத் தொகுக்கப் பெற்று, சொற்கள் - அவற்றின் திரிந்த - ஒலிக்கின்ற வடிவங்கள், சொற் பொருள்கள், அவை வழங்கப்பெறும் சூழல், அவற்றிற்குரிய இலக்கிய/வரலாற்று ஆவண/பேச்சு வழக்குச் சான்றுகள் ஆகிய விவரங்களுடன் விளக்கப்பெற்று அவை பேரகராதியில் - சிறப்பகராதியில் பதிவு செய்யப்பெற வேண்டும் என்பதை முன்வைப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இச்சொற்கள் முழுமையாகவும் உருமாறிச் சிதைந்தும் வழங்கப் பெறுகின்றன. சில சொற்கள் பொதுவாக வைணவர் இல்லங்களிலும் திருக்கோயில்களிலும் வழங்குகின்றன. சில கோயில்களில் மட்டும் வழக்கில் உள்ளன. சில சொற்கள் பல கோயில்களில் வழங்கப்பெற, சில ஏதேனும் ஒன்றில் மட்டும் வழக்கில் உள்ளன. இச்சொற்களின் பயன்பாடு அக்குறிப்பிட்ட சூழலில் அவர்களுக்கு மட்டும் உரியதாகையால் இவற்றின் வழக்காறும், எல்லை நிலமும் வரையறை உடையன. இச் சொற்களுக்குப் பொருள் கொள்ளும் முறையில் இரு தன்மைகள் உள்ளன. (1) நேரடிப் பொருள் தரும் சொற்கள் (2) குறிப்புப் பொருள் தரும் சொற்கள். இக்கட்டுரையில் இத்தகைய இரு வேறு தன்மைச் சொற்களும்

காட்டப்படுகின்றன.

இக்கட்டுரையில் திருவரங்கம், திருவில்லிப்புத்தூர், ஆழ்வார் திருநகரி, திருமாலிருஞ்சோலை, மதுரை ஆகிய தலங்களில் உள்ள வைணவத் திருக்கோயில்களில் வழங்கப்பெறும் சொற்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளன. சொற்கள் தொகுக்கப்பெற்று அவற்றின் நேர் அல்லது குறிப்புப் பொருள், அச்சொல் வழங்கும் சூழல், அச்சொல்லுக்கு இலக்கிய/வரலாற்று ஆவண/ மக்களின் பேச்சு வழக்கு ஆகியவை காட்டப்படுகின்றன. பேரகராதியில் சமயச் சிறப்பகராதியில் இவை பதிவு செய்யப்பெற வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. இதன் விளை வாகத் தமிழக வைணவத் திருக் கோயில்கள் அனைத்திலும் சென்று முழுமையாகக் கள ஆய்வு செய்யப் பெற்று இத்தகைய வைணவச் சிறப்பகராதி உருவாக்கப் பெற வேண்டும். இக்கட்டுரையில் முற்கூறிய திருக்கோயில்களில் இந்த ஆய் வாளரால் தொகுக்கப்பெற்ற சொற்கள் சான்று மூலங்களாகக் கொள்ளப் பெற்றுள்ளன.

**சொற்கள் வழங்கப்பெறும் முறை - சில பொதுப்பண்புகள்** : சமயச் சொற்களின் வழக்காற்றிற்குரிய பொதுமைக்கூறான திரு என்னும் அடைமொழி சேர்த்தே பல சொற்கள் வழங்கப் பெறுகின்றன. சான்றாக திருக்காப்பு, திருக்கோலம், திரு மஞ்சனம், திருச்சுற்று, திருத்துழாய், திருமேனி உபசாரம், திருப்பவள உபச்சாரம் என்பன.

ஒரு சொல்லை அடியாக- மையமாக்கொண்டு பல சொற்களைப் பொருள் வேறுபாட்டுடன் உருவாக்கிக் கொள்கின்றனர். இறைவனுக்கு படைக்கப்படும் உணவை அமுது என்ற சொல்லால் குறிக்கின்றனர். இதனடியாக நிறையச் சொற்கள் ஆக்கம் பெற்றுள்ளன. திருக் கண்ணமுது - பாயாசம்; பருப்பமுது - சாம்பார் (குழம்பு); சாற்றமுது - ரசம்; கறியமுது - வியஞ்சனம்; புட்டமுது - புட்டு; அடைக்காயமுது, வெற்றிலைப் பாக்கு; சுருளமுது - என்பன சான்று ஆகும். இச்சொற்கள் வைணவர் இல்லங்களிலும் திருக்கோயில்களிலும் வழக்கில் உள்ளன.

சொற்களில் சிறு மாற்றஞ்செய்து பொருள் வேறுபாடு புலப்படுத்தப் படுகின்றது. கைகூப்பி வணங்குதலைச் சேவித்தல் என்ற சொல்லால் குறிக்கின்றனர். சேவி, சேவிச்சுக்கொள் என்றெல்லாம் சொற்கள் உள்ளன. சேவை என்ற சொல் பணி-கைங்கர்யம் என்ற பொருளில் வழங்குகிறது. திருமுடி சேவை, கைத்தலசேவை, அரையர் சேவை என்பவை சான்றுகள் தரையில் தாளும் தடக்கைகளும் கூப்பி வணங்குதலை — நிலந்தோய்ந்து வணங்குதலைத் தண்டனிடல், தண்டம் சமர்ப்பித்தல் என்ற சொற்களால் கூறுவர். சேவித்தல், தண்டனிடல் வேறுவேறு பொருளு டையவை. சாதித்தல் என்றொரு சொல் வழங்குதல், பொருத்துதல், சூட்டுதல் என்ற வெவ்வேறு பொருள்களில் வழங்கப் பெறுகின்றது. சூழல் நோக்கிப் பொருள் வேறுபாடு அமையும். திருத்துழாய் சாதித்தல், தீர்த்தம் சாதித்தல், வழங்குதல் எனவும் பரிவட்டம் சாதித்தல், சடாரி சாதித்தல் என்பன முறையே சூட்டுதல், பொருத்துதல் எனவும் பொருள் பெறும். 'ஆரையினிக்கொண்டு என்

சாதிக்கின்றது' (திருவாய்மொழி 7.3.7) என்று நம்மாழ்வாரின் திருவாய் மொழியில் இச்சொல்லிற்கு இலக்கிய வழக்கு உள்ளது.

ஒரே பொருளுடைய சொல் சூழலுக்கு ஏற்ப வேறுவேறு ஆக உருமாறி வழங்குகின்றது. பொருள் வேறுபாடு இல்லாவிடினும் சொல் வேறுபடுகின்றது. **பணியாரம்** என்னும் உணவு வகை (இறைவன் அமுது செய்வதற்காக படைக்கப்படுவது) பணியாரம். **அப்பம், இளகல், உருப்படி** என்ற பல்வேறு சொற்களால் வழங்கப்பெறுகின்றது. (இளக்கமான பாகில் ஆனது இளகல், கல் போன்று கெட்டியாக இருப்பது உருப்படி).

**வழிபாடு - விழா** : சொற்கள் பல்வேறு நிலைகளில் பயன்படுத்தப்படுகின்றன. வழிபாடு, உணவுப்பொருள், பணியாளர், தொழிற்கருவி என்ற பல்வேறு வகைகளில் அச்சொற்கள் உள்ளன. வழிபாடு என்பதில் சடங்கு, வழிபாட்டுக் காலம், விழாவின் பெயர், வழிபாட்டிற்குரிய பொருள், செயல், ஆடை அணிகலன் என்ற பல்வேறாக அமைகின்றன. இச்சொற்கள் தூய தமிழ்ச் சொற்களாக உள்ளன. ஒரு சொல்லிலிருந்து பல சொற்கள் உருவாகக் கூடியனவாக உள்ளன. சான்றாக **படி** என்ற ஒரு சொல் அழகு, புனைவு என்ற பொருள் களில் வழங்குகிறது. **படிக்கோலம்**- இயற்கையான புனைவு. **படி களைதல்**-புனைவை நீக்குதல் என்று சொற்கள் உருவாகின்றன. வட சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களை உருவாக்கி வழங்கி வருகின்றனர். பிரகாரம் என்ற சொல் **திருச்சுற்று** என வழங்கி வருகிறது. திருச்சுற்றைச் சுத்தஞ்செய்பவன் **திருச்சுற்றுக்காரன்** என்று வழங்கப் பெறுகிறான். **திருமுளைச் சாந்து** என்று ஒரு சொல் விழாக் காலங்களில் வழங்கப்படுகிறது. பெருவிழா (பிரம்மோற்சவம்) தொடங்கும் இரு நாட்களுக்கு முன்னதாக, விழா தடங்கலின்றி நன்கு நடைபெற வேண்டும் என்ற கருத்தில் பாலிகை தெளிக்கப்பெறும். பாலிகை தெளித்தலே **திருமுளைச்சாந்து** என்று வழங்கப்பெறுகிறது. இந்த நிகழ்ச்சி திருமுளைத்திருநாள் என அழைக்கப் பெறுகிறது (ஆழ்வார் திருநாள் என்று சொல்வது வெளிப்படை - அப்பு. அரும்பதம்). இந்த முளைச்சாந்திற்காக மண் எடுக்கும் நிகழ்ச்சி **மேதினிப் பூசை** என்று அழைக்கப்பெறும். ஆகம நூற்களில் மிருத்சங்கரணம் என்று வடசொல்லால் கூறப்படும் நிகழ்ச்சி இதுவே. பொதுவாக வைணவ உரையாசிரியர்களும் நாலாயிர திவ்யபிரபந்த அகராதி தொகுத்தவர் களும் சொற்களுக்குப் பொருள் கூறும்போது, ஒரு மொழிச் சொல்லுக்கு மற்றொரு மொழியில் (வடசொல்லிற்குத் தமிழிலும் தமிழ்ச் சொல்லிற்கு வடமொழியிலும்) பொருள் கூறினர்.[1] இது ஒரு மரபாக வைணவத்தில் வளர்ந்து வந்துள்ளது. தமிழ், வடமொழி ஆகிய இரண்டிலும் வல்லவர்களான உபயவேதாந்திகளான வைணவச் சான்றோர்கள், இம் மரபைப் போற்றினர். அதன் விளைவாக ஏற்ற புதிய சொற்களை உருவாக்கலாயினர். இவ்வகையில் உற்சவர் என்ற சொல்லிற்கு ஏற்ற சொல்லாக **வீதியாரவருவார்** என்று நாச்சியார் வழங்கிய தொடரை (14 பட்டி மேய்ந்து, 5) வைணவ வழக்காக்கி வழங்கி வருகின்றனர்.

வழிபாட்டில் நிகழும் நிகழ்ச்சி யைக் கொண்டு சில சொற்கள்

உருவாக்கப்பட்டு வழக்கில் வந்தன. **வழிப்பறி அடிசோதித்தல்** என்ற சொல் இவ்வாறு வந்தது. திருமங்கையாழ்வார் வழிப்பறி செய்யும் நிகழ்ச்சி நடைபெறும் விழாவை இது குறிக்கும். இறைவன் வடிவைத் தாங்கி வந்து நம்மாழ்வார் திருமேனியின் (விக்கிரகத்தின்) தலைமீது இறைவன் திருவடிபடுமாறு சேர்ப்பதான நிகழ்ச்சி **திருமுடிசேவை** என்று வழங்கப் பெறுகிறது. அவ்வாறே இறைத் திருமேனியைக் கையில் எடுத்து வருவது **கைத்தலசேவை** என்று கூறப்பெறுகிறது. **முடித்தல்** என்ற பொருளை உணர்த்தத் **தலைக்கட்டுதல்** என்ற சொல் ஆளப்பெறுகிறது. இவ்வாறே துயிலுதல் என்பதைக் **கண்வளர்தல்** என்ற சொல்லாலும் சுத்தஞ்செய்தலை, நறுக்குதலை (அரிதலை) **திருத்துதல்** என்ற சொல்லாலும் வழங்கி வருகின்றனர். இந்த வழக்கு வைணவர்களின் வீடுகளிலும் உள்ளது.

**ஆடை, உணவு, வழிபாடு** : வழி பாட்டில் பயன்பெறும் ஆடைகளுள் ஒன்றான நீண்ட உடை - கழுத்து முதல் பாதம் முடிய அணியும் நீண்ட ஒரே உடை - **நிலையங்கி** என்றும் மேல் வேட்டிக்குள்ளாக அணியப்பெறும் உடை **உள்சாத்து** என்றும் வழங்கப்பெறுகின்றன. ஒருவகை அணிகலனுக்கு **கம்பன்குச்சு** என்று பெயர் உள்ளது. அக்காரம் சேர்த்து உருவான உணவு **அக்கார அடிசில்** என்றாகிறது. அத்தாள பூசையின் போது (அத்தாளம்-இரவு; அத்தாளப் பட்டினியும் அப்படியே என்று சரவணப் பெருமாள் கவிராயரின் பணவிடுதூது நூலில் வருகிறது) படைக்கப்படும் உணவு **அத்தாளத் தளிகை** என்றும் அர்த்தசாமப் பூசைக்குரிய உணவு **அரவணைத் தளிகை** என்றும் வழங்கப்பெறும். தளிகை என்ற சொல் இறைவனுக்கு படைக்கப்படும் சமைத்த உணவு என்ற பொருளுடையது. சமைத்த உணவு என்ற பொருளில் இன்றும் வைணவர் வீடுகளில் இச்சொல் வழக்கில் உள்ளது. இறைத் திருமேனியைத் திருமஞ்சனமாட்டி (நீராட்டி) ஈரத்தைத் துடைத்து அந்த ஈர ஆடையை விரித்து அதன்மீது தட்டில் வைக்கப்படும் உணவு **ஈரஆடைத் தளிகை** என்று குறிக்கப்பெறுகிறது. பகல்பூசையில் (உச்சிக்காலபூசையில்) படைக்கப்படும் பெரு உணவு (மகாநைவேத்யம்) **திருப்பாவாடைத் தளிகை** என்று குறிக்கப்பெறுகிறது. திருமஞ்சனம் என்பது நீராட்டலைக் குறிக்கும். பல்வேறு மணப் பொருட்களால் ஆன கலவைநீரால் நீராட்டுவது **அலங்காரத் திருமஞ்சனம்** என அழைக்கப் பெறுகிறது. பெருமாளும் நாச்சியாரும் சேர்ந்திருக்க இருவருக்கும் சேர்த்து நீராட்டுவது **சேர்த்தித் திருமஞ்சனம்** ஆகும். தனியே ஒருவருக்கு நீராட்டுவது **ஏகாந்தத் திருமஞ்சனம்** ஆகும்.

**பணியாளர்:** கோயில் பணியாளர் களைக் குறிக்கும் சொற்கள் சில வழக்கில் உள்ளன. **அரையர், விண்ணப்பஞ்செய்வார்** என்ற சொற்கள் இசையுடன் பாசுரம் பாடி அபிநயித்து உரைகூறும் முத்தமிழ்க் கலையாம் அரையர் சேவை செய்வாரைக் குறிக்கும் சொற்கள். அறை என்ற அடிச்சொல்லில் இருந்து (அறை-சொல்) இச்சொல் உருவாகி வந்துள்ளது. விண்ணப்பஞ்செய்தல், இறைவன் திருமுன் சொல்லுதல் என்ற பொருளில் வழங்கும் ('அடியேன்

செய்யும் விண்ணப்பமே' என்பது நம்மாழ்வாரின் திருவிருத்தத்தில் (பாடல் 1) வரும் தொடராகும்) சொல் ஆகும். வழிபாட்டுப்பணி உள்ளிட்ட திருக்கோயில் செய்யும் கூட்டத்தாரைக் குறிக்கக் **கொத்து** என்ற சொல்லை வழங்குகின்றனர். இறைத் திருமேனியில் அணிவிக்கும் ஆடைகளைத் துவைத்துச் சலவை செய்பவரை **ஈரங்கொல்லி** என்று குறிப்பிடுகின்றனர். திருவரங் கத்தில் இறைவன் அரங்கனுக்கு அந்தரங்கமான பணியாள் **திரு விளக்குப் பிச்சன்** என்று அழைக்கப் படுகிறார்.

இறைவனுக்குப் பணிசெய்யும் அடியார்களை இறைவன் விளிப்பதற்கு (அர்ச்சகர் வழியாக இறைவன் அழைப்பது மரபு) அருளப்பாடு (அளிப்பாடு) என்ற சொல் வழங்குகிறது. அரையரை **இசையறிவும் பெருமாள், நம்பாடுவான்** எனவும் நெற்களஞ்சியத்தில் நெல் அளப்பவ னுக்குக் **காரளப்பான்** எனவும் வண்ணானுக்கு **ஈரங்கொல்லிதாசர்** எனவும் தீபத்தட்டை ஏற்றித்தரும் பரிசாரகரை **இராமாநுசன் பிடித்தான்** (இராமாநுசன் என்பது தீபாராதனைத் தட்டிற்கு பெயர்) எனவும் அருளப்பாடு வழங்கப்பெறும், அருளப்பாடு அழைக்கபெற்ற அடியார்கள் தம் இருப்பைப் புலப்படுத்தி பணிபுரியும் இசைவினைத் தெரிவித்து வருகையைப் பதிவு செய்வதற்கு **நாயிந்தே** என்ற மறுமொழி கூறுவர் (நாயேன் - இந்தோ - நாயிந்தே என்று வழக்கில் உள்ளது).

திரிபும் மருவும் : சில சொற்கள் திரிந்தும் மருவியும் வழங்குகின்றன. **குப்பாயம்** என்ற சொல் (சட்டை என்பது பொருள்) கபாய் என மருவி வழங்குகிறது (குப்பாயம் என நின்று காட்சிதரும் - பெரியாழ்வார் திருமொழி (3.5.6) இலக்கிய வழக்குள்ளது). **திருச்சேர்த்தி** (பெருமாளும் தாயாரும் இணைந்து காட்சி தருவது) என்ற சொல் திருச்சி எனச் சிதைந்து வருகிற து. பொலிவூட்டு, என்ற சொல் (பொலிவு - வருமானம், நிலையான தொகை வைப்பிலிருக்க அதன் வட்டித் தொகையான வருமானம் பொலிவு என்று குறிக்கப்பெறும். பொலியூட்டு, வட்டி வருமானம் கொண்டு செய்யப்பெறும் நிலையான கைங் கர்யம்) புலியூட்டு என்று மருவி வழங்குகிறது. (பொலிசெய் என்று வட்டி என்னும் பொருளில் கல்வெட்டில் உள்ளது). **அருள்மாரி** என்ற சொல் **அருமாலி** என்று திரிந்து வழங்குகிறது. (அருள்மாரி என்பது திருமங்கையாழ்வாரின் விருதுப் பெயர்களுள் ஒன்று. இந்த வழக்கில் அது, மாலை கட்டும் நாரினைக் கிழிக்கப் பயன்பெறும் சிறு கத்தி என்ற பொருளில் வழங்குகிறது).

**பிறமொழிச் சொற்கலப்பு:** பிறமொழிச் சொற்களுடன் தமிழ்ச் சொல் இணைந்து வழங்கும்நிலை சில சொற்களில் உள்ளது. **கிள்ளாக்கு** என்றொரு சொல். ஆகு என்பது தெலுங்கு சொல். இலை என்பது பொருள். கிள்ளின ஆகு என்பது கிள்ளாக்கு என்றாகிறது (கரு வூலத்திற்குப் பொறுப்புடைய அதிகாரி. வெற்றிலையில் கிள்ளித் தருவார், பணியாள் அதைக்காட்டி கரு வூலத்திலிருந்து வெள்ளி, தங்கம் போன்றவற்றைப் பெற்று வருவர். பிறகு அதைக்காட்டிப் பொருளைத் திருப்பிக் கொடுப்பர்). **பீகமுத்திரை** என்றொரு சொல் பூட்டில் முத்திரையிடுவது என்ற பொருளில் வழங்குகிறது. பீக என்ற

தெலுங்குச் சொல், பூட்டு என்று பொருள் தரும். தாளிட்டுப் பூட்டி முத்திரைவைக்கும் பணி என்பதை இது குறிக்கும். தெலுங்கு மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் இவ்வழக்கு வந்திருக்கும்.

**வழக்குச் சொற்களில் குறிப்புப் பொருள்:** இதுவரை நாம் கண்ட வழக்குச் சொற்கள் நேராக, மருவி, திரிந்து, பிற சொற்களுடன் இணைந்து அடைசேர்ந்து எவ்வாறு வழங்கி னாலும் பொருள் தரும் நிலையில் நேராகப் பொருள் தருகின்றன. இவற்றிற்கு மாறாகச் சில வழக்குச் சொற்கள் நேர்பொருள் ஒன்றிருக்க, அவை குறிப்பாக வேறு ஒரு பொருள் தந்து நிற்கின்றன. அச்சொற்கள் வழங்கும் சூழல் காரணமாக இவ்வாறு பொருள் விரிவு பெறுகின்றன. சமயத் தத்துவம் வளர்ந்த பின் பெரியவர்களின் நினைவைப் போற்று வதற்காக இவை வந்துள்ளமையை உணர முடிகின்றது. இவ்வாறு சொற்களுக்குப் பொருள் கொள்ளும் நிலையில் நேர்பொருள், குறிப்புப் பொருள் என்று இருவகைப் பொருள் கொள்ளும் மரபை வைணவ உரைநூற்களில் மிகுதியும்[2] காணலாம் என்பதால் இது வைணவ மரபு என்று கொள்ளலாம். இத்தகைய சொற்கள் குறைவாகவே வழக்கில் உள்ளன.

**ஆண்டாள்:** ஆண்டாள் என்பது கோதை நாச்சியாருக்குரிய இயற்பெயர். திருவரங்கத்தில் இறைத்திருமேனியை வாகனத்தில் ஏழச் செய்கையில் துணிகளை ஒன்றுடன் ஒன்று இணைக்கப் பயன்படுத்தும் சிறு குண்டூசிக்கு ஆண்டாள் என்று பெயர். ஊசி என்று இரவுக்காலங்களில் சொல்வது கூடாது என்னும் மரபு வழி நம்பிக்கையின் காரணமாக ஒரு காலத்தில் ஏற்பட்ட இச்சொல், பிறகு அதுவே குண்டூசிக்குப் பெயராக மாறி வழங்கத் தலைப்பட்டுள்ளது என்று கொள்ளலாம். வைணவ தத்துவத்தில் உயிர்களையும் பெருமாளையும் இணைக்கும் பணியைப் பெரிய பிராட்டியாரான திருமாமகள் செய்வ தாகக் கூறும் மரபு, இங்கு ஒன்றொடொன்று இணைக்கும் பொருளுக்குப் பெயர் சூட்டுவதாக மலர்ந்துள்ளது.

**இராமாநுசன்:** தீபாராதனை செய்யும் தட்டிற்கு இராமாநுசன் என்று பெயர். வைணவ சமயம், திருவரங்கம் பெரியகோயில், அன்றாட வாழ்க்கை என்ற அனைத்திற்கும் பெரும்பணி ஆற்றிய - ஒளிகட்டிய - இராமாநுசரின் நினைவு போற்றுவதற்காக ஏற்பட்ட சொல். திருவரங்கம் கோயிலில் இச்சொல் உள்ளது.

**நாதமுனி:** திவ்வியப் பிரபந்தமாக நாலாயிரம் பாசுரங்களைத் தேடிக் கண்டு திரட்டித் தொகுத்து அவற்றை இயலும் இசையுமாக்கிப் பரப்பியவர். ஆழ்வார்திருநகரி ஆலயத்தில் இராப் பத்து நாட்களில் அரையர் பயன்படுத்தும், அளவில் பெரியதான தாளத்திற்குப் பெயர் நாதமுனி ஆகும். அரையர்சேவை கலையை ஏற்படுத்தி, பாசுரங்களுக்கு இசையும் தாளமும் வகுத்த வள்ளலான பெரியவரைப் போற்றுவதற்காக அவர் பெயரைத் தாளத்திற்குச் சூட்டினர்.

**பாவைக்களம்:** திருப்பாவையில் பாவைநோன்பு நோற்குமிடம் என்ற பொருளில் வழங்கும் இச்சொல்லை

நடைமுறையில் வில்லிப்புத்தூரில் இன்று ஆண்டாளுக்கு எண்ணெய்க் காப்பு விழா நடக்கும் மண்டபத்தைக் குறிக்கப் பயன் படுத்துகின்றனர். இவ்விழாவில் திருப்பாவைப் பாடல்கள் முப்பதும் நாள் பாட்டாகப் பாடப் பெறுகின்ற படியால், விழா நடைபெறும் மண்டபத்தையே இச்சொல்லால் குறிக்கின்றனர்.

அருள்மாரி: அருள்மாரி என்பது திருமங்கை ஆழ்வாருக்குரிய விருதுப்பெயர்களுள் ஒன்று (ஆலி நாடன் அருள்மாரி பெரிய திருமொழி 3.4.10; திருமாமகளால் அருள்மாரி பெரிய திருமொழி 8.6.10 இலக்கிய வழக்கு). மாலை கட்டுவதற்கு நாரைக் கிழித்திடப் பயன்படுத்தப்பெறும் சிறு கத்திக்கு அருள்மாரி என்று பெயர். திருவரங்கத்தில் வழக்கில் உள்ள சொல். இச்சொல் சிதைந்து அருமாரி என்று வழங்குகிறது.

சொற்கள் தொகுத்தல்: இவ்வாறு வழங்கும் மரபுச் சொற்களை உடனடியாகத் தொகுக்க வேண்டும். தமிழகம் முழுவதிலும் உள்ள திருமால் கோயில்கள் அனைத்தினின்றும் களஆய்வு மேற்கொண்டு சொற்கள் தொகுக்கப் பெற வேண்டும். இவ்வாறு தொகுக்கும்போது அச்சொற்களின் ஒலிப்பு வடிவம், வரிவடிவம், சொற்பொருள், வழக்காறு (இலக்கிய வழக்கு/பேச்சுவழக்கு), வழங்கப்படும் சூழல் என்ற அனைத்து விவரங்களும் தொகுக்கப்பெற வேண்டும். சொற்களின் வழக்கு வைணவர்களின் வீடுகளிலும் உள்ளதா? திருக்கோயில் களில் மட்டும் உள்ளதா என்று அறிய வேண்டும். சொற்கள் ஒரு கோயிலில் மட்டும் வழங்குகின்றவா? ஒன்றிற்கு மேற்பட்ட கோயில்களிலும் வழங்கு கின்றனவா? என்ற செய்தியும் ஒப்பிட்டு அறியப்படவேண்டும்.

**அகராதியில் பதிவு செய்யும் முறை:** இவ்வாறு மரபுச்சொற்கள் முழுமை யாகத் தொகுக்கப்பெற்று, அவை பேரகராதியில் பதிவு செய்யப் பெறவேண்டும். இதுவரை வந்துள்ள இரு திவ்வியப்பிரபந்த அகராதிகளிலும் இத்தகு சொற்கள் முழுமையாகவும் சரியாகவும் முறையாகவும் தொகுத்துத் தரப்படவில்லை. சென்னை கீழ்த்திசைச் சுவடி நூலகம் வெளியிட்டுள்ள திருமலை நல்லான் இராமகிருஷ்ண அய்யங்கார் தொகுத்து வெளியிட் டுள்ள நாலாயிரத் திவ்யப் பிரபந்த அகராதியில்[3] இத்தகு மரபுச் சொற்கள் எவையும் இடம்பெறவில்லை. பார்த்தசாரதி அய்யங்கார் தொகுத்து வெளியிட்டுள்ள நாலாயிரத் திவ்யப் பிரபந்த அகராதியில்[4] கோயில் தமிழ் என்னும் தலைப்பில் சில சொற்கள் பொருள் விளக்கம் மட்டும் தரப்பெற்று இடம் பெற்றுள்ளன. அண்மையில் வெளிவந்துள்ள இக்கட்டுரையாளரின் அரையர்சேவை[5] நூலில் அக்கலையுடன் தொடர்புடைய மரபுச் சொற்கள் முறையாகப் பொருள், வழக்கு வேறுபாடு, தலஒப்பீடு, சூழல் என்ற பல விவரங்களுடன் தரப்பட்டுள்ளன.

இத்தகு மரபுச் சொற்கள் முழுமையாகத் தொகுக்கப்பெற்றுப் பேரகராதியில் பதிவாய் அமைக்கப் படும்போது சொல் வடிவம், அதன் வேர்ச் சொல், ஒலிப்பு-எழுத்து வடிவ மாறுபாடுகள், பொருள், சொல் வழங்கப்பெறும் சூழல், வழங்குமிடம், பிற கோயில்களில் வழக்கு, இலக்கியம், பேச்சுவழக்கு, வரலாற்றுச் சான்று என்ற வழக்காறு ஆகிய விவரங்க

ளுடன் தரப்பட வேண்டும். அத்துடன் அடையடுத்துள்ள நிலை, அச்சொல் வடிவத்திலிருந்து பிற சொல் ஆக்கம் உள்ளதா என்பன போன்ற செய்திகளும் தரப்பட வேண்டும்.

சமூக நிறுவனமாகிய திருக் கோயில்களில் பணியாளர்களிடையில் மட்டும் மரபுவழியாக வழங்கி வரும் சொற்கள் இவ்வாறு தொகுக்கப் பெற்றுப் பேரகராதியில் இடம் பெறுவதன் வழி நம்முடைய பண்பாட்டு மரபுக் கூறுகளையும் மொழியின் சொல்-பொருள் வளத்தையும் பின்வருவார்க்கும் உலகத்திற்கும் வெளிப்படுத்தியவர் களாவோம்.

## குறிப்புகள்


1. சு. வேங்கடராமன், "திருப்பாவை பெரிய வாச்சான்பிள்ளை உரையில் அவதாரிகை", **பத்தொன்பதாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை**, தொகுதி-4, ப.352, அண்ணாமலை நகர், இ.ப.த. மன்றம்,

2. சு.வேங்கடராமன், "பெரியவாச்சான் பிள்ளையின் திருமடல் உரைத் திறன்" **பதினேழாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை**, தொகுதி 1, அண்ணாமலை நகர், இ.ப.த. மன்றம், 1985.

3. தி. இராமகிருஷ்ண ஐயங்கார், **திவ்யப்பிரபந்த அகராதி**, சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், 1961.

4. பார்த்தசாரதி அய்யங்கார், **நாலாயிரத் திவ்யப்பிரபந்த அகராதி** பக்.822-831, ஸ்ரீரங்கம், தேவத்தான பத்திரிகை அலுவலகம், 1963.

5. சு. வேங்கடராமன், **அரையர் சேவை**, பக்.121-134, சென்னை தமிழ்ப் புத்தகாலயம், 1985.

தமிழ்க் கலை
தமிழ் 7, கலை 1, 2

# அகராதியில் மீட்டுருவம் - ஒரு குறிப்பு

வ. அய். சுப்பிரமணியம்

அகராதிக்கலை பற்றி ஆராய்கின்றவர்கள் சொற்சான்றை அடுக்கும்போது காலவரம்பு அடிப்படை என்கின்றனர். ஆனால் அஃது எது என்பதை ஓரளவு தெளிவு செய்யவில்லை, என்ற ஒரு கருத்து இப்பொழுது நிலவுகின்றது. இரு வகையான காலவரம்பைச் சுட்டலாம். ஆவணங்கள், அல்லது இலக்கியங்கள் இவற்றில் ஒரு சொல் காணப்படுமேயானால், அது பழமையானது என்று கருதி அதற்குப் பின்னர் வருகின்ற சொற்றெளிவை வரிசையாக அடுக்கிக் கொடுப்பதை ஒரு வகையான காலவரம்பு என்கிறோம். வரலாற்று முறை அகரமுதலியில் (Historical Dictionary) இதைப் பின்பற்றுகின்றனர். இஃது ஓரளவு ஒப்புக் கொள்ளத் தக்கதாக இருந்தாலும் கூட இப்பொழுது இந்தக் கருத்தில் ஒரு மாற்றம் வந்துள்ளது. ஏனென்றால், ஒரு சொல்லுக்குப் பல உருவங்கள் இருக்குமேயானால் அஃது ஒரு மொழியைச் சார்ந்ததாக யிருக்குமேயானால் அதை மீட்சி உருவம் செய்யமுடியும் (*Internal Reconstruction*). எனவே இந்த 'அக நிலை மீட்சி உருவம்' செய்வோமானால் முன்னுருவம் எது பின்னுருவம் எது என்று நாம் அறிய முடியும். தமிழிலேயே நாம் ஒரு சிறு சொல்லை எடுத்துக்கொள்வோம்.

'நற்றிணை' என்றிருக்கின்றது. 'நல்லவன்' என்றிருக்கின்றது. 'நன்மை' என்றிருக்கின்றது. அவ்வாறானால், 'நல்' என்பதில் லகர ஈறு இருக்கின்றதே அதைப் பெரும்பாலும் நாம் பகுதி என்று கருதுகிறோம். 'நன்மை' என்பதில் லகரம் னகரமாக மாறியது. ஏனெனில் மகரம் வந்திருக்கின்றது என்று நாம் காரணம் கூறுகின்றோம். 'நற்றிணை' என்று வருகின்ற சமயத்தில் 'ல', 'ற' வாக மாறியது என்று கருதுகின்றோம். 'நற்றிணை' என்று வருகின்ற சமயத்தில் 'ல', 'ற' வாக மாறியது என்று கூறினால் நமக்கு வேற்றுமை, அல்வழி என்ற இருவகைச் சந்தியில் இங்கே இஃது அல்வழிச் சந்தியாக வருகின்ற காரணத்தால் இந்த 'ல' 'ற' வாக மாறுவது இடர் தரும். எனவே இலக்கணப் பிழையாக நிற்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இதை வேறொரு வழியில் பார்க்க வேண்டும். அதுவும் அதனை அகநிலை மீட்டுருச் செய்கின்றவர்கள் 'நற்' அல்லது 'நறு' என்று எடுத்து அது 'ன' ஆகும், என மாற்றிப் பின்னர் அது 'ல' ஆகும் என்று கூறுவர். ற் > ன் > ல் என்று வாய்பாடாக்கிக் கொள்ளலாம்.

இந்த டகர, ணகர, ளகரமும் முன் வாய்பாடு போன்றே ஒலி மாறும். எனவே ஒன்றைத் தெளிவாக்கக் கூடிய நேரத்தில் ஒரு விதியை அமைத்துக் கொண்டு அந்த விதி ஏனைய வற்றிற்கும் பொருந்துகின்றதா எனப் பார்ப்பதும் மிகவும் தேவை. ஏனென்றால் மீட்டுருவம் பற்றி ஆராய்கின்றவர்கள் அது தர்க்க ரீதியாக இருக்கவேண்டும்; அதோடு அதனுடைய ஒலி மாற்றம் சிறுகச் சிறுக மாறுவதாக இருக்கவேண்டும்; ஒத்த சூழ்நிலையிலும் அதைப் போன்ற ஒத்த எடுத்துக் காட்டுக்களிலும் அது பொருந்துவதாகவும் இருக்க வேண்டும் என்பர்.

மற்றொரு வகையான புற நிலை மீட்டுருவம் அல்லது External Reconstruction என்று சொல்வது கிளை மொழிகளை அடிப்படையாகக் கொண்டமைப்பது. இதிலிருந்து தான் மொழிகளினுடைய உறவு, அவை எவ்வாறு பிரிந்தன என்பன போன்றவற்றிற்குச் சான்று கிடைக்கும். திராவிட வேர்ச்சொல் அகராதி (DED) (பர்ரோ எமனோ தொகுத்தது) இந்தப் பணிக்கு மிக உதவியாக இருக்கும்.

முன்னர்க் குறித்த அக மீட்டுருவை மேற்கொள்ளும்போது 'நறு' என்ற மீட்டுருவச்சொல்லைப் பழைய இலக்கியங்களிலும் கண்டிட முடியும். அதைப்போல வெகு அண்மையில் தோன்றிய ஓர் இலக்கியத்திலும் காண முடியும். இதைப் போல ஒரு சொல்லுக்குப் பழைய இலக்கியத்தில் அல்லது ஆவணத்தில் எடுத்துக்காட்டு இல்லாவிட்டால் கூட நடுக் காலத்திலோ, பிற்காலத்திலோ அந்தச் சொல்லின் எடுத்துக் காட்டுக்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக ஜப்பானில் டோக்கியோவிலிருந்து வெளிவரக்கூடிய ஓர் ஆசிய இதழில் சைன, திபேத்தியன் மொழியில் எவ்வாறு புற மீட்டுருவம் அமைப்பது என்பது பற்றிய ஒரு விவாதம் எழுந்தது. அச்சமயத்தில் நிறையக் கிளை மொழிகளில் இணைச் சொற்கள் (Cognate) இருக்க வேண்டும் என்ற வாதத்தை அவர்கள் மறுத்து ஒரே ஒரு மொழியில் மட்டும் 'ட்' இருக்கிறது. எனவே இந்தச் சைன திபேத்திய குடும்பத்தில் இந்த டகர உருவம் முதல் நிலையில் இருக்கத்தான் வேண்டும் என மிக வன்மையாக வாதித்தனர். மீட்டுருவம் உருவாகின்ற போது கிளைமொழிகள் அத்தனை யிலும் இந்த உருவம் இருக்கின்றதா என்று பார்ப்பது மட்டும் போதாது. ஒரு மீட்டுருவ நிலையைத் தோற்றுவித்தேன் எனின் வேறு ஒரு விளக்கம் எதுவும் என்னால் தர முடியாது என்ற நிலையும் இப்போது ஒப்புக் கொள்ளத்தக்கது. மீட்டுருவம் அளிக்கின்றவர்கள் இப்பொழுது இன மொழிகளை மட்டும் பார்ப்பதில்லை. ஒரு மொழியின் ஒலி மாற்றத்திற்கு வேறொரு விளக்கமும் வழங்க முடியாத நிலையேற்படின் அதனடிப்படையிலும் மீட்டுருவத்தை அமைக்கலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இரண்டாவதாக, எவ்வாறு அகராதி அமைக்கவேண்டும், என்னென்ன முறையில் அமைக்க வேண்டும். எந்தெந்த எடுத்துக் காட்டுக்களைத் தரவேண்டும், எவ்வாறு வரிசைப்படுத்தப்பட வேண்டும், எவ்வாறு பொருள் முறை அமைக்கப்படவேண்டும் என்றெல்லாம் ஆராயவேண்டும். இவை அகராதிக்கு மிகவும் தேவை. ஆனால் அகராதியில் மற்றோர் அம்சமும் இருக்கிறது.

ஒரு மொழியினுடைய கலாச்சாரத்தின் கோர்வையாக அகராதியைக் கருது கின்றார்கள். அந்தக் கோர்வையை நிச்சயமாக நாம் ஊன்றி ஆய்ந்தோம் எனில் அதிலிருந்து பல கூறுகள், செய்திகள் நமக்குத் தெளிவாகும். எடுத்துக் காட்டாக மெலினொவெஸ்கி (Melinowski) எனும் ஆய்வாளர் பசிபிக் தீவுகளில் வாழ்கின்ற பழங்குடி மக்களுடைய சொற்களையெல்லாம் தொகுத்து அவை எவ்வாறு இணைந்திருக்கின்றன என்று பார்த்து, அவற்றிற்கு மாறான சொற்கள் எவை எனத் தெரிந்து, அந்த இணைப்பி லுள்ள உறுப்புக்கள் ஒழுங்காக இருக்குமேயானால் அவற்றில் ஓர் 'அண்டமாக (Universe) இருக்கின்றது' என்றும் அந்த வட்டத்தில் ஏதேனும் விடுபட்டுப் போய்விட்டதென்றால் அவர்களுடைய கலையமைப்பில், சிந்தனையில் ஏதோ ஒன்று விடுபட்டுப் போய்விட்டது என்பார்கள்.

எனவே, ஓர் அகராதி, சொல்லடுக்கு மாத்திரம் அன்று, பொருளடுக்கு மாத்திரம் அன்று, அந்த மொழியைப் பேசுகின்ற மக்களின் கலையை ஊகிப்பதற்கு ஒரு பெருங்கருவியாக இருக்கின்றது.

சொற்கள் அத்தனையையும் மூன்று நான்கு கூட்டமாக அமைத்துக் கொள்வார்கள்.

1. ஒன்றுக்கு ஒன்று அடங்கக்கூடிய கூட்டம். உதாரணமாக ஒரு கூட்டதினுள்ளே சிலர் பேரா சிரியர்கள், சிலர் தமிழ் நாட்டைச் சார்ந்தவர்கள், சிலர் பிற மாநிலத்தைச் சார்ந்தவர்கள் என்றெல்லாம் பாகுபடுத்திப் பெரும் குழுவுக்குள் இந்தச் சிறு குழுக்களை அமைக்கின்றோம். இதை உட்குழு அமைப்பு என்று சொல்வார்கள்.

2. அடுத்தாற் போன்று ஒரு பூங்காவைப் பார்த்தால் அங்கே தென்னை மரம் இருக்கும்; புளிய மரம் இருக்கும். இவ்வாறு வகை செய்து கூட்டமாகத் தொகுப்பது மற்றொன்று.

3. மூன்றாவது நன்மை என்று கூறினால் 'தின்மை' அல்லது 'தீமை' என்று நாம் கூறுவோம். நல்லது என்று கூறுகிற சமயத்தில் 'பொல்லாதது', 'அல்லது' என்று கூறுகின்றோம். இந்த மாதிரி எதிர்மறைக் குழு அமைப்பும் ஒன்றுள்ளது.

இன்னும் பல குழு அமைப்புக்களை இந்தக் கணக்கிய லாளர்கள் 'Set Theory' என்பதில் கூறியிருக்கிறார்கள். 'k' and 'k' not என்று சொல்வார்கள். 'K' என்பது ஒரு குழுவின் இயல்புக் கூறு. 'K' not என்பது இந்த இயல்பு அல்லாததைக் குறிக்கும். எனவே முதலில் ஒரு பெரும் பகுப்பாக ஒரு குழு, ஒரு குழு அல்லாதது என இரண்டாகப் பகுத்துக் கொண்டு, ஒவ்வொரு பெருங்குழுவும் எவ்வாறு அமைகின்றது என்பதைப் பற்றி இந்த 'Set Theory' யாளர்கள் மிக விளக்கமாகக் கூறுகிறார்கள். இதையும் நாம் அகராதியில், பொருத்திப் பார்த்தோம் என்றால் நம்முடைய பண்பாடு, கலாச்சாரம் முதலியவை பற்றி ஊகிப்பதற்குத் துணை செய்யும் என்பது மட்டுமன்று, நாம் அகராதியை இந்தத் துறையிற் புறக்கணிக்க இயலாது எனலாம்.

முன்னரெல்லாம் மராட்டிய நாட்டிலிருந்து தின்பண்டமாகிய 'போளி' வந்ததென்று சொல்வார்கள். ஏனென்றால், 'போளி' என்ற சொல் மராட்டிய மொழியைச் சார்ந்தது. தமிழகத்தில் மராட்டியர்கள் வந்ததற் கப்புறம்தான் இந்தப் போளியை நாம் உணவாக அல்லது பண்டமாகக் கொள்ள நேர்ந்தது என்று கூறுகின்ற ஊகம், சொல்லை அடிப்படையாகக் கொண்டு ஆராய்கின்ற ஒன்றுதான். இதைப்போலச் சொல்லை அடிப்படை யாகக் கொண்டு, கருவியாகக் கொண்டு, நாம் பலவற்றை ஊகிக்க முடியும் என்பதை மட்டும் நான் உங்களுக்குக் கூறி அகராதியைக் கலை ஆய்வு அல்லது கலை மீட்டுருவம் என இதனை நாம் மேற்கொண்டோம் என்றால் இது வரைக்கும் தோண்டி எடுக்காத புதையல்கள் பல நமக்குக் கிடைப்பதற்கு வாய்ப்புண்டு என்பதை வற்புறுத்த விரும்புகிறேன்.

# கூட்டுவினைகளும் பொருண்மையும்

ஆ. கார்த்திகேயன்

மொழி பேசுவோரின் கருத்துப் புலப்படுத்த விருப்பத்திற்கேற்ப வாக்கியங்களில் சொற்கள் அமைகின்றன. பேசுவோரின் கருத்துப் புலப்படுத்த நோக்கம் மாறுபட்டால் வாக்கியங்களுக்கு வாக்கியம் சொற்களின் சேர்க்கையும் மாறுபடும். உதாரணமாக:

நல்ல ஊர், சிறிய ஊர், நேற்று வந்தான், நேற்றுப் படித்தான் போன்ற தொடர்கள் மொழியில் இருக்கக் காண்கிறோம். இத்தகைய தொடர்கள் கருத்துப்புலப்படுத்தும் நோக்கத்தின் அடிப்படையில் அந்தந்த நொடிகளில் தோற்றுவிக்கப் படுகின்றன. இத்தொடர்களின் பொருள் அவற்றில் உள்ள சொற்களின் பொருளை இணைத்துத் தீர்மானிக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் கட்டிலாச் சேர்க்கைகள் (Free Combinations) என்று அழைப்பார்கள். இவை சொல் அலகுகளாகக் (Lexical Unit) கருதப்படுவனவல்ல.

மாறாகக் கீழ்வரும் சொற்சேர்க்கைகளையும் அவை பயின்று வரும் வாக்கியங்களையும் நோக்குவோம்.

| | | |
|---|---|---|
| தலையிடு | - | (நான் உன் வாழ்க்கையில் தலையிடமாட்டேன்) |
| கோட்டை விடு | - | இம்முறை ஆத்தா வேடத் தேர்வில் கோட்டை விட்டு விட்டார்) |
| ஆசைப்படு | - | (நாம் அடிக்கடி சந்திக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்) |
| புன்னகை செய் | - | நாணயமும் பரிவும் தெரிய அவன் புன்னகை செய்தான்) |
| கண்டுபிடி | - | (என்னை மோசடி செய்தவரைக் கண்டு பிடிப்பேன்). |

மேற்கண்ட சொற்சேர்க்கைகள் (அஃதாவது தலையிடு, கோட்டைவிடு, போன்றவை) முன்னர் கொடுக்கப்பட்ட தொடர்கள் போல் அல்லாமல் தனிச்சொற்கள் பொருள் உணர்த்துவதைப் போலவே வாக்கியத்தில் பயின்று வருவதைக் காணலாம். **தேர்வில் கோட்டை விட்டார்** என்பது **தேர்வில் தோற்றார்** என்பதைக்

குறிக்கின்றது. எனவே இத்தகைய சேர்க்கைகளைக் கட்டுடைய சேர்க்கைகள் (Set Combinations) அல்லது கூட்டுச் சொற்கள் என்று கூறலாம். அஃதாவது கூட்டுச்சொல் தனிச் சொல்லைப் போலவே ஒரு கருத்தை (designatum) உணர்த்துகின்றது.

தமிழில் அதிலும் குறிப்பாகத் தற்காலத் தமிழில் ஏராளமான கூட்டுச் சொற்கள் படைக்கப்படுகின்றன. ஒரு மொழியின் வளர்ச்சி நிலையில் இவ்வாறான புதியகூட்டுச் சொற்கள் தோன்றுவது இயல்பான நிகழ்ச்சியாகும். இத்தகைய கூட்டுச் சொற்களைக் கண்டறிந்து அவற்றை முறையாக அகராதியில் சேர்ப்பது அகராதியியலாரின் தலையாய பணியாகும். இக்கட்டுரையில் (1) கூட்டுச் சொற்களைக் குறிப்பாக கூட்டு வினைகளைக் கண்டறியப் பயன் படும் விதிகள் பற்றியும். (2) கூட்டு வினைகள் எவ்வாறு சொற்பொருளை உணர்த்துகின்றன என்பது பற்றியும் சுருக்கமாகக் காண்போம்.

**கூட்டுவினைகளைக் கண்டறிதல்:** கூட்டுச் சொற்களைக் கண்டறிய சொகுஸ்தா ஒன்பது விதிகளைத் தருகின்றார். அவற்றில் சில தமிழ் மொழியிலுள்ள கூட்டு வினைகளையும் கண்டறியப் பயனுடையனவாக உள்ளன. மேலும் சில விதிகள் இக்கட்டுரையில் தரப்பட்டுள்ளன. கூட்டு வினைகளைக் கீழ்க்காணும் விதிகளால் கண்டறியலாம்.

**இரண்டாம் வேற்றுமை உருபைச் செருகுதல்** : பெயர் வினை என்ற அமைப்பில் உள்ள கூட்டு வினைகளில் அவற்றின் இடையில் இரண்டாம் வேற்றுமை உருபான ஐ-யைச் செருக முடிவதில்லை. எடுத்துக்காட்டாக **குணப்படுத்து**, **முயற்சியெடு**, **புன்னகைசெய்** போன்ற கூட்டுவினைகளில்-**ஐ** உருபைச் சேர்த்தால் உண்டாகும் ***குணத்தைப் படுத்து**, ***முயற்சியை எடு**, ***புன்னகையைச்செய்** போன்ற தொடர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. ஆனால் செயப்படுபொருள், பயனிலைத் தொடர்களாக வரும் சேர்க்கைகளில் -**ஐ** வேற்றுமையை எளிதாகச் செருக முடியும்.

எடுத்துக்காட்டு: மரம்வெட்டு : மரத்தை வெட்டு; புத்தகம் படி: புத்தகத்தைப்படி; பானைசெய் : பானையைச் செய். இதனைக் கொண்டு **குணப்படுத்து**, **முயற்சியெடு** போன்றவைக் கூட்டு வினைகள் என்றும் மரம்வெட்டு போன்றவை தொடர்கள் என்றும் தீர்மானிக்கலாம்.

**அடையேற்கும் நிலை:** பொதுவாக தொடர்கள் கட்டிலா நிலையில் வரும்போது பெயர்ச்சொல்லைப் பெயரடையும் வினையை வினையடையும் தழுவி வரலாம். உதாரணமாக: பெரிய மரத்தை வேரோடு வெட்டினான் என்ற வாக்கியத்தில் மரம் என்ற பெயர்ச்சொல்லை **பெரிய** என்ற பெயரடையும்; **வெட்டினான்** என்ற வினையை **வேரோடு** என்ற வினையடையும் தழுவி வருகின்றன. கூட்டு வினைகளில் முதலில் வரும் பெயர்ச் சொல்லை ஒரு பெயரடையோ, அடுத்து வரும் வினையை வினையடையோ தழுவி வராது.

* நல்ல உரையாடினார்
* குணம் முழுதும் படுத்தினார்

என்று வரும் தொடர்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கவை அல்ல. இந்நிலையில் உரையாடு, குணப்படுத்து போன்ற வற்றைக் கூட்டு வினைகளாகக் கொள்ளலாம்.

**பலசொல் ஒருபொருள் நிலை :** பெயர் + வினை என்ற அமைப்பில் உள்ள சொற்கள் உணர்த்தும் பொருளை அதே மொழியில் அல்லது வேறு மொழியில் உள்ள தனிச்சொல் உணர்த்துமாயின் அப்பெயரை + வினைத்தொடர் கூட்டுவினை என்று கொள்ளலாம்.

எடுத்துக்காட்டு : காதல் பண்ணு - காதலி, கொலைசெய்-கொல், வாதம் செய் - வாதாடு (cf. Eng. argue) கூறிடு (cf. Eng. divide)

**சமநிலை இணைப்பு:** பொதுவாக எல்லா மொழிகளிலும் கீழ்க்கண்ட வாக்கியங்களில் காணப்படும் இரண்டு பெயர்த்தொடர்களை இணைத்து ஒரே வாக்கியமாகக் கூறமுடியும்.

நான் இராமனை அடித்தேன், நான் கண்ணனை அடித்தேன், நான் இராமனையும் கண்ணனையும் அடித்தேன். ஆனால் கூட்டு வினைகளில் வரும் இரண்டு பெயர்களை இவ்வாறு இணைத்துக் கூறமுடியாது.

முருகன் வழக்காடினான்,
முருகன் வாதாடினான்

*முருகன் வாதும் வழக்கும் ஆடினான்

இதனால் வாதாடு, வழக்காடு போன்றவை கூட்டு வினைகள் என்று உணர்ந்து கொள்ளலாம்.

**மாற்றியமைத்து வினாவுதல்:** தமிழ் மொழியில் ஒரு வாக்கியத்தில் உள்ள தனிவினைச்சொல்லை **என்னசெய்** என்ற வினாத்தொடரால் மாற்றி அமைக்கலாம். எடுத்துக்காட்டாக : **இராமன் கல்லூரியில் படிக்கிறான்** என்ற தொடரை **இராமன் கல்லூரியில் என்ன செய்கிறான்?** என்று மாற்றி வினா வாக்கியமாக அமைக்கலாம். இதே போலக் கூட்டு வினையில் இரண்டாவது பகுதியாக வரும் வினைச்சொல்லை மாற்றி யமைத்துக் கூறமுடியாது.

இராமன் மாலாவைக் காதல் செய்தான்

*இராமன் மாலாவைக் காதல் என்ன செய்தான்?

எனவே **காதல் செய்** என்பது கூட்டு வினை என்று தீர்மானிக்கலாம்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள விதிகளால் தமிழிலுள்ள கூட்டு வினைகளை ஒருவாறு அடையாளம் காணலாம். எல்லாக்கூட்டு வினை களையும் கண்டறியும்படியான ஒரு விதி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**கூட்டுவினைகளில் சொற் பொருள்:** அகராதிப் பணியில் சொற்பொருளை அறிவது மிகவும் முக்கியமான ஒன்றாகும். சொற்களின் பொருண் மையை நன்றாக அறிந்திருக்கின்ற அகராதியியலார் நன்றாகச் செயலாற்ற முடியும். சொற்பொருள்

பொதுவாக மூன்று முக்கியக் கூறுகளாகப் பிரித்து அறியப்படும். அவையாவன :

1. கருத்துப் பொருள் : (designation)

2. குறிப்புப் பொருள் : (connotation)

3. சொற்பயன்பாட்டெல்லை : (range of application)

கூட்டுவினைகள் சொற்பொருள் உணர்த்தும் தன்மை குறித்து ஒரு சில எடுத்துக்காட்டுக்களுடன் விளக்கு வோம்.

கூட்டுவினைகள் சில சொற் பொருளில் குறிப்புப் பொருள் ஏதும் உணர்த்தாமல் கருத்துப் பொருளை மட்டுமே சுட்டுகின்றன. இவற்றில் கூட்டுவினை சுட்டும் கருத்துப்பொருள் அடிநிலைக் கிளவியாக விளங்கும் பெயர்ச்சொல்லிலிருந்து பெரிதும் பெறப்படுகின்றது. இத்தகைய கூட்டு வினைகளில் இரண்டாவதாக வரும் வினைச்சொல் பெயரை வினையாக மாற்றுகின்ற செயலை மட்டுமே செய்கின்றது. எனவேதான் இவற்றை வினையாக்கிகள் என்று கூறுவர். எடுத்துக்காட்டாக **உதவி செய், கல்யாணம் செய்** போன்ற கூட்டு வினைகள் குறிப்புப் பொருள் ஏதும் உணர்த்தாமல் **உதவுதல், மணத்தல்** ஆகிய கருத்துப் பொருட்களை மட்டுமே தெரிவிக்கின்றன. இவற்றில் **செய்** என்ற வினை வினையாக்கியாகச் செயல்படுகின்றது.

இன்னும் சில கூட்டு வினைகள் கருத்துப் பொருளையும் குறிப்புப் பொருளையும் சேர்த்து உணர்த்து கின்றன. இவ்வகையான கூட்டு வினைகளில் கருத்துப்பொருள் பெயர்ச்சொல்லிலிருந்தும் குறிப்புப் பொருள் வினைசொல்லிலிருந்தும் பெறப்படுவதைக் காணலாம்.

எடுத்துக்காட்டாக: **பெருமையடி** - என்ற கூட்டு வினையை எடுத்துக் கொள்வோம். இச்சொல் கீழ்வரும் வாக்கியத்தில் விரும்பத்தகாத செயலைக் காட்டுகின்றது.

அவர் மிகவும் பெருமை அடித்துக்கொள்கிறார் என்று கூறும் போது அதில் ஒரு இழிவுப் பொருள் இருப்பதை உணரலாம். "விரும்பத் தகாத" என்ற பொருளை அக்கூட்டு வினையில் உள்ள அடி என்ற வினையே தருகின்றது. ஏனெனில் **பெருமைப்படு, பெருமை யாகப் பேசு** என்பன போன்றவற்றில் "விரும்பத் தகாத" என்ற குறிப்புப் பொருள் இல்லை. இவ்வாறே **கட் அடி** என்ற வினைச்சொல் வகுப்புக்குச் செல்லாமல் **கட் அடித்தான்** போன்ற வாக்கியத்தில் "விரும்பத்தகாத" என்ற குறிப்புப் பொருளைத் தருகின்றது. ஆனால் **கட்பண்ணு** என்ற கூட்டு வினையில் "விரும்பத்தகாத" என்ற குறிப்புப் பொருள் இல்லை. கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகளையும் நோக்குக:

அரட்டையடி, கும்மாளமடி, போரடி, கொட்டமடி, கிண்டலடி, நாற்றமடி, கூத்தடி, காய்ச்சலடி, சைட்அடி. ஆனால் நீச்சலடி, அச்சடி போன்ற சில கூட்டுவினைகளில் "விரும்பத் தகாத" என்ற குறிப்புப்பொருள் இல்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

எடு என்ற வினைச்சொல்லுடன் கூடிய சில கூட்டு வினைகளை அடுத்து நோக்குவோம். எடுத்துக்காட்டு : ஓட்டமெடு (ஒப்பிடுக : ஓடு) நடுக்கமெடு (நடுங்கு), நோவெடு (நோ), பசியெடு (பசி_) வலியெடு (வலி_), முயற்சியெடு (முயல்_). மேலே தரப்பட்டுள்ள கூட்டு வினைகள் "செயல் தொடக்கம்" என்ற குறிப்புப் பொருளை உணர்த்துகின்றன. பசியெடுக்கிறது என்று கூறும்போது பசி ஆரம்பிப்பதைக் குறிக்கின்றது. இங்கும் எடு என்ற வினையே குறிப்புப் பொருளைத் தருகின்றது.

ஆடு – என்ற வினைச் சொல்லுடன் கூடிய கூட்டுவினைகள் 'இருவருக்கு இடையில் ஏற்படும் செயலைக்' குறிக்கின்றன. எடுத்துக்காட்டு : உரையாடு, வழக்காடு, வாதாடு, ஆட்டமாடு, உறவாடு, வேட்டையாடு. மேலும் தள்ளாடு, திண்டாடு, திக்குமுக்காடு போன்ற செயல்கள் இருவர்க்கு இடையில் நிகழாவிட்டாலும் இரண்டு நிலைகளுக்கு இடையில் நிகழும் செயலைக் குறிக்கின்றன. இவ் வகையான கூட்டு வினைகளில் ஆடு- என்ற வினையே குறிப்புப் பொருளைத் தோற்றுவிக்கின்றன.

இக்கட்டுரையில் கூட்டு வினைகளைக் கண்டறிவதற்கான சில விதிகள் கொடுத்து விளக்கப்பட்டன. அடுத்துக் கூட்டு வினைகளில் அடிநிலைக் கிளவியாக விளங்கும் பெயர்ச்சொல் அக்கூட்டு வினையின் கருத்துப் பொருளைத் தருகின்றது என்றும் வினைச்சொல் குறிப்புப் பொருளைதந்து, சில இடங்களில் பொருளேதும் தராமல் வருகின்றது என்றும் சுருக்கமாகச் சுட்டிக் காட்டப்பட்டன.

**துணை நூல்கள்**

Karthikeyan, A. 1983. *Compound Verbs in Tamil*. Unpublished Ph.D., thesis. Annamalai University, Annamalainagar.

Zgusta, L. 1971. *Manual of Lexicography*, Mouton, The Hague, Paris.

தமிழ்க் கலை
தமிழ் 7, கலை 1, 2

# அகராதிப் பணியில் சில மொழிபெயர்ப்புச் சிக்கல்கள்

அ.அ. மணவாளன்

ஒருமொழி அகராதி, இருமொழி அகராதி, பன்மொழி அகராதி என, பதிவுபெறும் மொழியின் அடிப் படையில் அகராதிகள் மூவகைப்படும். இவற்றுள் ஒரு மொழி அகராதியில் மொழிபெயர்ப்புக்கு இடமில்லை. ஏனைய இரண்டுவகை அகராதிகளும் மொழிபெயர்ப்பின் துணையால் உருப்பெறுவன. இவ்வாறு நிகழும் அகராதி மொழிபெயர்ப்பில் எழும் சில சிக்கல்களை எடுத்துமொழிவதே இக் கட்டுரையின் தலையாய நோக்கம். தமிழ்-ஆங்கில இருமொழி அகராதி இங்கு ஆய்வுக்காக மேற்கொள்ளப் படுகிறது.

**அகராதிச் சொற்கள்:** இருவகை. ஒருமொழியில் வழங்கும் சொற்களுக்கு இணையான மற்றொரு மொழிச் சொற்களைத் தருவது இருமொழி அகராதியின் பணி எனலாம். இவ்வாறு அகராதியில் பதிவுபெறும் சொற்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று, பொருண்மை சுட்டும்வகை. அதாவது, ஒவ்வொரு சொல்லும் தனக்குப் புறமாய ஒரு பொருண்மைக்கு உரிய குறியீடாக நிற்றல். 'புலி' என்னும் சொல் (ஒலித்திரள் என்னும்) தனக்குப் புறமாய ஒரு விலங்கினை உணர்த்தும் குறியீடு. இத்தகைய பொருண்மை உருவமாகவும் இருக்கலாம்; அருவ மாகவும் இருக்கலாம். இத்தகைய குறியீட்டுச் சொற்களைப் **பொருண்மைப் பதிவு** (designation) என்பர் அகராதியியலார். தமிழ் மொழியில் அமைந்த பெயர், வினை, உரிச்சொற்களும் இடைச் சொற்களில் ஒரு சிலவும் இவ்வகையைச் சார்ந்தன. அடுத்தவகைச் சொற்கள் தமக்குப் புறம்பாய பொருண்மையைச் சுட்டாமல், பொருண்மை சுட்டும் சொற்களுக்குப் பொருண்மை சுட்டும் பணியில் துணையாக நிற்பன; தம்மளவில் தத்தம் சொல்நிலையை மட்டும் சுட்டுவன. இவற்றை இலக்கணச் சொற்கள் என்று கூறுவர். அகராதிப்பதிவில் **சொன்மைப் பதிவு** (non - designative or grammatical) என இவற்றைக் குறிப்பிடுவர். வேற்றுமை உருபுகள், கால இடைநிலைகள், அசைநிலைகள் போன்றன இவ் வகையைச் சாரும். ஆக, அகராதிப் பதிவுகள் இவ் இருவகைச் சொற்களைக் கொண்டிருக்கும் என உணர்கிறோம்.

**அகராதிப் பதிவின் அமைப்புக் கூறுகள்:** தருமொழிச் சொல் ஒன்றை நிறுத்தி அது குறிக்கும் பொருண்மை

யைப் பெறுமொழிச் சொல்லால் அல்லது சொற்களால் குறிப்பதை அகராதிப் பதிவு என்கிறோம். அமைப்பு வகையில் இந்த அகராதிப் பதிவு இரு கூறுகளை உடையது. முதற் கூறு, நிறுத்த சொல்லாகிய தருமொழிச் சொல்லின் ஒலிப்புமுறை, இலக்கணத் தன்மை அல்லது தகுதி, பெயராயின் பன்மை வடிவம், வினையாயின் காலவேறுபாட்டால் பெறும் வடிவ மாற்றம் ஆகிய விவரங்களைக் கொண்டிருக்கும். இவ்விவரங்கள் எல்லாம் சொல்லின் தன்மை பற்றியனவாதலின் இப்பகுதியைச் **சொன்மைக்கூறு** (Lemma) என அழைப்பர் அகராதியியலார். அடுத்து, நிறுத்த சொல் குறிக்கும் பொருண்மையைப் பெறுமொழிச் சொற்களால் குறிப்பதும் அல்லது விளக்குவதும் ஆகிய அமைப்பைப் **பொருண்மைக் கூறு** (semantic representation) என அழைப்பர்.

இருமொழி, பன்மொழி அகராதிகளைத் தயாரிக்குமிடத்து மேற்கூறிய இருவகைக் கூறுகளிலும் மொழிபெயர்ப்பு தொழிற்படுகிறது. உலகில் பொதுப் பொருண்மையும் (universal designata) மொழியியல் பொதுச் சொன்மையும் (linguistics universals) பதிவு பெறுமிடத்து மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் பெரும்பாலும் தோன்றுவதில்லை. காட்டாக மரம், கல், ஆறு, புலி, நாய் என்னும் தொடக்கத்துப் பொருண்மைப் பதிவுகள் உலகப் பொதுமை உடையனவாதலின் இவற்றின் பொருண்மைக் கூறுகளைப் பதிவு செய்வதில் மொழிபெயர்ப்பு இடர்ப்படுவதில்லை. இவ்வாறே, பெயர்ச்சொல், வினைச்சொல், வேற்றுமை உருபு என்னும் சொற்பாகுபாடுகள் மொழியியல் பொதுமையினவாகலின் இவற்றின் சொன்மைக் கூறுகளைப் பதிவு செய்வதிலும் பெரும்பான்மையும் சிக்கல்கள் விளைவதில்லை.

**மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் தோன்றுமிடம்: பொருண்மைக்கூறு**

ஆனால் தமிழ்-ஆங்கிலம் என்னும் இருமொழிப் பண்பாட்டில் காணப்படும் வேற்றுமைகள் இம்மொழிகள் பயன் படுத்தும் சொற்கோவைகளிலும் காணப்படுவதால் அத்தகைய பண்பாட்டுச் சொற்களின் பொருண்மைக் கூறுகளைப் பதிவதில் மொழிபெயர்ப்பு இடர்ப்படுகிறது. இவ் இடர்ப்பாடு இருவகை நிலைகளில் தோன்றுகிறது.

முதல்வகை, தருமொழி, பெறுமொழி ஆகிய இரு பண்பாடுகளிலும் பொருண்மை வழக்கு பொதுவாக இருந்தும் சொன்மை வழக்கு இல்லாதிருப்பது. அதாவது, உலகியற் பொருள், கருத்து, கருதுகோள் என்னும் பொருண்மைகள் இரு பண்பாடுகளிலும் வழக்கிலிருக்கவும் அவற்றைக் குறிக்கும் சொற்கள் ஒரு மொழியிலிருக்க மற்றொன்றில் இல்லாதிருத்தல். சில எடுத்துக்காட்டுகள் இதனைத் தெளிவாக்கும்.

பிஞ்சு, காய் என்னும் சொற்களுக்கான பொருண்மையை ஆங்கிலத்தில் சுட்டுமிடத்து மொழிபெயர்ப்பு தயங்குகிறது. 'பிஞ்சு' 'காய்' என்னும் இருவகைத் தாவரப் பொருண்மை இரு பண்பாடுகளிலும் உள்பொருள்களாயினும் சொல் வழக்காக ஆங்கிலத்தில் இவற்றிற்கான நேரிணைக் குறியீடுகள் (identidal designatum) இல்லை. எனவே

மொழிபெயர்ப்பில் சிக்கல் நேருகிறது. தற்போதுள்ள அகராதிகளிற் சில இவற்றை எவ்வாறு குறிக்கின்றன எனக் காண்போம்.

பிஞ்சு *n (a)* a fruit newly come forth from the blossom; a young tender immature fruit (Fabricius)

காய் *(b)* young. tender fruit (Tamil Lexicon, Madras University)

காய் *n. (a)* unripe fruit (Fabricius)

*(b)* unripe fruit (Tamil Lexicon, Madras University)

இப்பதிவுகள் பெறுமொழிக் குறியீடுகளைத் தரவில்லை. காரணம் பெறுமொழி வழக்கில் இவற்றுக்குரிய குறியீடுகள் இல்லை. எனவே பெறுமொழிப் பதிவுகள் குறியீடுகளாக அமையாமல், விளக்கங்களாக அமைந்துள்ளன.

2. பாம்பு

படம் *n :(a)* the hood of a cobra (Fabricius)

*(b)* Cobra's hood (Tamil Lexicon)

படம் எடுத்தல்

*(a)* to spread hood as a cobra (Tamil Lexicon)

இங்கும் பொதுப்பொருண்மை இருக்கிறது. ஆனால் அதைக் குறிக்கும் குறியீட்டுப் பொதுமை ஆங்கிலத்தில் இன்மையால் குறியீட்டுக்குப் பதிலாக விளக்க மொழிபெயர்ப்பாகத் தரப்பட்டிருக்கக் காண்கிறோம்.

இரண்டாவது வகை, பண்பாட்டு வேறுபாட்டால் விளைவது. அதாவது தருமொழிப் பண்பாட்டில் காணக்கிடைக்கும் பொருண்மை பெறுமொழிப் பண்பாட்டில் இல்லாதிருத்தல்; விளைவாகப் பெறுமொழிக் குறியீடுகளும் இல்லாத நிலைமை. இந்த இரண்டாவது வகைதான். மிகுதியான மொழிபெயர்ப்புச் சிக்கலை விளைவிக்க காண்கிறோம். பண்பாட்டுச் சேய்மைக்கேற்ப இத்தகைய சிக்கல்களின் எண்ணிக்கை மிகுகிறது. இப்பொருண்மையும் உலகியற்பொருள், கருத்து, கருதுகோள் என்னும் பலநிலைகளில் காணப்படுகிறது. சில எடுத்துக் காட்டுகளைக் காணலாம்.

1. அகம் : *n 9. love-theme*

அகப்பொருள் : *n 1. love-theme,*

*2. love literature*
(Tamil Lexicon)

தமிழ்-ஆங்கிலம் ஆகிய இரு பண்பாடுகளுக்கும் உரிய பொதுப் பொருண்மை எனக் கருதி மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. அகம் என்பதைக் காதற்பொருட் பாடல், காதல் இலக்கியம் என்று கருதியது கருத்துப் பிழை, காதல் இலக்கியம் எல்லாம் அகமல்ல; அகமாயின், இது தமிழர்க்கே உரியது என்னும் கருத்து பிழைபடும். அகம் என்பது ஓர் இலக்கிய வகை; ஒரு குறிப்பிட்ட

நெறியில் ஒழுகும் காதலை மட்டும் குறிப்பது. இப் பொருண்மை ஆங்கிலப் பண்பாட்டில் இல்லை. எனவே நேரிணைக் குறியீடு பெறு மொழியில் காணப் பெற வில்லை. ஏறக்குறைய பல இலக்கிய வகைகளுக்கும் இதே நிலைதான்.

2. அங்கவஸ்திரம் n. : upper cloth (Tamil Lexicon) : இருமொழிப் பொருண்மை யற்றது. தமிழில் மட்டும் இருந்த, ஒரோவழி இருக்கின்ற, பண்பாட்டுக் கூறு. நேரிணைக் குறியீடு ஆங்கிலத்தில் இல்லை. எனவே மொழிபெயர்க்க இயலாதது. மேலே தரப் பட்டுள்ள ஆங்கில விளக்கம் பொருத்தமற்றது; அல்லது போதாதது (under specific).

3. அஃறிணை n

(a) neuter gender in Tamil (Fabricius)

(b) inferior class of beings, whether animate or inanimate, neuter (Tamil Lexicon)

அஃறிணை என்னும் இலக்கணக் கருத்தீடு ஆங்கிலப் பண்பாட்டில் இல்லை. பொருண்மைப் பொது மையில்லாமையால் நேரிணைக் குறியீடும் இல்லை. எனவே மொழிபெயர்க்க இயலாதது. மேலே தரப்பட்டுள்ள ஆங்கில விளக்கம் இலக்கணச் சார்பை உணர்த்தா மையின் பொருத்த மற்றது என்பது எளிதில் விளங்கும். "(neuter)" என்னும் குறியீட்டைத் தந்துள்ளமையால் தருமொழி பொருண்மையே சிதைகிறது. திணையும் பாலும் மயங்கிய நிலை.

4. கற்பு n :

(a) Chastity, female virtue, conjugal fidelity (Fabricius)

(b) conjugal fidelity; chastity (Tamil Lex icon)
தருமொழிப் பண்பாட்டுக் கருத்தீடும் பெறுமொழிப் பண்பாட்டுக் கருத்தீடும நேரிடையானவை அல்ல. எனவே பொருண்மைப் பொதுமை யில்லை. மேலே தரப்பட்டுள்ள மொழிபெயர்ப்பு ஒருபுடைப் பொருண்மையை மட்டும் குறிக்கும். நேரிணைக் குறி யீட்டால் மொழிபெயர்க்க இயலாதது.

மேலே காட்டிய எடுத்துக்காட்டுகள் தற்போதைய அகராதிகள் குறை பாடுடையன என்பதைக் காட்ட வில்லை; மாறாக, பண்பாட்டு வேறுபாட்டால் இருமொழி அகராதிகள் எவ்வாறு மொழி பெயர்ப்புச் சிக்கல்களுக்கு உள்ளாகின்றன என்னும் உண்மையை உணர்த்துகின்றன.

**மொழிபெயர்ப்புச் சிக்கல்: சொன்மைக் கூறு:** பொருண்மைக் கூறுகளின் எதிர்ப்படுவதைவிட மிகுதியான சிக்கல்கள் சொன்மைப் பதிவுகளிலும் அவற்றிற்குத் தரப்படும் சொன்மைக் கூறுகளிலும் தோன்றுகின்றன. இலக்கணச் சொற்களைப் பதிவு செய்யுங்கால் அவற்றிற்கிணையான பெறுமொழிக் குறியீடுகளைத் தருதல்

வேண்டும். ஆனால் மேலே கூறியவாறு மொழியியல் பொதுமைச் சொற்கள் மட்டுமே இணையான குறியீடுகளைப் பெறும். பெயர், வினை, இணைப்புச் சொல் போன்ற பொதுக் குறியீடுகளுக்கு முறையே noun, verb, conjunction என்னும் குறியீடுகளைத் தரலாம். தருமொழிக்கே உரிய இலக்கணக் குறியீடுகளாகிய இடைச் சொல், உரிச்சொல், இலக்கணத் தொழிற்பாடுகளாகிய அசைநிலை, இசைநிறை, அளபெடை போன்ற வற்றைப் பெறுமொழிக் குறியீடுகளால் தர இயலவில்லை. இணைக் குறியீடுகளற்ற இத் தன்மையை "anisomorphism" என வழங்குவர் அகராதியியலார் (Zgusta, 294). குறிப்பாக இலக்கணக் குறியீடுகளற்ற தன்மையை absence of "categorical equivalence" of the "parts of speech" என்று கூறுவர் (Zgusta, 314). சில எடுத்துக்காட்டுகள் மூலம் இச் சிக்கல்களைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

இடைச்சொல் n

(a) a particle (Fabricius)

(b) one of the four parts of speech in Tamil grammar;
particle which cannot be used by itself in any sense.... (Tamil Lexicon).

உரிச்சொல் n

(a) no entry (Fabricius)

(b) one of four parts of speech in Tamil; one of a few indeclinables which always have the force of adjective or adverb (Tamil Lexicon).

அசைச்சொல் n

(a) words as particles - an expletive. (Fabricius).

(b) expletive particle (Tamil Lexicon)

அளபெடை n

(a) no entry in Fabricius

(b) lengthening of sound in poetry, etc. (Tamil Lexicon).

இசைநிறை n

(a) no entry in Fabricius

(b) part : expletive used to fill a gap in the metre (Tamil Lexicon).

மேற்காணும் அகராதிப் பதிவுகள் நேரிணைக் குறியீடுகளாக அமையவில்லை. மாறாக, தருமொழிப் பதிவுகளாகிய இலக்கணச் சொற்கள் மொழியிடை எவ்வாறு வழங்குகின்றன என்பதை விளக்குகின்றன. இம் முறையை அகராதி இயலார் ஏற்கின்றனர். எனினும் இவ் விளக்கங்களில் சில பெறுமொழி யாளர்க்குப் பயன் படுவதாக அமையவில்லை. காட்டாக இடைச் சொல், உரிச்சொல் என்பவற்றிற் கமைந்த விளக்கம் ஓரளவு அவ் இலக்கணக் குறியீடுகளை உணர்ந்து கொள்ள உதவுமேனும், அளபெடை, இசைநிறை என்பவற்றிற்கமைந்த விளக்கம் தருமொழிக் குறியீடுகளை

விளக்குவனவாக அமையவில்லை. அசைச்சொல்லும் இசைநிறையும் ஒரே பொருளனவாய்த் தோன்றுமாறு விளக்கம் அமைந்திருக்கக் காண் கிறோம். மேலும் இவற்றின் இலக்கணத் தகுதியைக் குறிப்பிடுங்கால் அளபெடை, அசைச்சொல் இரண்டும் noun எனக் குறிக்கப்பட்டிருக்க, இசைநிறை மட்டும் *particle* எனக் குறிக்கப்பட்டிருக்கும் வேறுபாட்டையும் காண்கிறோம். மொழிபெயர்ப்பில் விளையும் சிக்கலுக்கு இதனை நல்லதொரு சான்றாகக் கூறலாம்.

**வினைப் பதிவுகள்:** தமிழ் வினைச் சொற்களைப் பதிவு செய்யும்போதும் சில சிக்கல்கள் எழுகின்றன. வினைச் சொற்களைப் பதிவதில் இருவகை முறைகள் பின்பற்றப்படுகின்றன. ஒன்று வினைப் பகுதிகளை ஏவற்பொருண்மைப் படப் (நட, வா, முடி, சீ என்னும் வாய்பாட்டில்) பதிவு செய்வது. மற்றொன்று வினைப் பகாப்பதத்துடன் 'தல்' விகுதி சேர்த்து நடத்தல், வருதல் என்று பதிவு செய்வது. சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி இரண்டாம் முறையைப் பின்பற்றுகிறது. இதன்படி வினைப் பதிவுகள் ஏவல் வடிவம் பெற்று நிற்றல் வேண்டும். நிற்க, பெறுமொழியில் பொருள் தருவதும் ஏவல் வடிவத்தில் அமையும். காட்டாக,

கொடு vt : give

செல் vi : go

என அமையும். இதில் தருமொழி பெறுமொழி இரண்டும் பொருண்மைக் கூறு, சொன்மைக் கூறு ஆகிய இரண்டு நிலையிலும் நேரிணைக் குறியீடுகளைப் பெறுகின்றன. ஆனால், சில இடங்களில் இடர்ப்பாடுகள் நேர் கின்றன. காட்டாக, வேண்டும், போதும், முடியும், தெரியும், புரியும் போன்ற சொற்களை ஏவல் வடிவத்தில் நிறுத்துவது எவ்வாறு என்னும் வினா எழுகிறது. இவற்றுள் **போதும்** என்ற சொல்லுக்குரிய பதிவு மேற்காட்டிய அகராதியில் இல்லை.

**வேண்டும்** என்பதை

**வேண்டும்** V.opt. என்றும்

**முடியும்** என்பதை

முடி V.intra என்றும்

**தெரியும்** என்பதை

தெரி V.intra & V. tr. என்றும்

**புரியும்** என்பதை

புரி V.i. என்றும்

தந்துள்ளது. இவற்றிற்குத் தரப் பட்டுள்ள பொருண்மைக் கூறுகள் இவ்வடிவத்தோடு பொருந்தவில்லை. இவ் வினைகளில் வேண்டும், போதும், தெரியும், விளங்கும், புரியும் என்பனவும் நான்காம் வேற்றுமை அமைப்பை உடையன (dative construction). முடியும் என்பது மூன்றாம் வேற்றுமை அமைப்பை இயல்பாகவும் நான்காம் வேற்றுமை அமைப்பை ஒரோவழியும் உடையது. ஆனால் இவற்றிற்கு அமைந்த பெறுமொழிப் பொருண்மைகள் எழுவாய் வேற்றுமை அமைப்புக்குப் பொருந்துவனவாய் உள்ளன. இந்த இடர்ப்பாட்டுக்குக்

காரணம் ஆங்கிலமொழியின் அமைப்பு எழுவாய்க்குரியது (nominative construction). எனவே சிக்கல் எழுகிறது. கீழ்வரும் பகுதி இதனை விளக்கும்.

போதும் : sufficient, enough

வேண்டும் : want, require, must

தெரியும் : understand, know, perceive

இருமொழிகளுக்கும் இடையே அமைந்த அமைப்பு வேறுபாட்டால் இச் சிக்கல் எழுகிறது.

இதே போன்று குறிப்பு வினைகளாக உள்ளவற்றைப் பதிவு செய்வதிலும் சிக்கல் எழுகிறது. காட்டாக **உள்ளது** என்னும் வினையை எவ்வாறு நிறுத்துவது?

**உள்** : the root of a symbolic verb signifying 'being' opp. to . (Fabricius)

**உள்** : base of a tenseless verb meaning,

(1) "to be" as in உள்ளேன்.

(2) "to have" as in யான் பொருள் உள்ளேன் (Tamil Lexicon).

மேலே காணும் இரு அகராதிகளும் **உள்** என்பதற்குரிய இலக்கணத் தகுதியைக் குறிக்கவில்லை. பொருள் விளக்கப் பகுதியில் மட்டும் வினை என்னும் குறிப்பைத் தருகிறது. பொருண்மை சுட்டுமிடத்தும் இரண்டும் வேறுபாட்டுக்குக் காரணம் மொழிபெயர்க்க இயலாத தன்மை தான்.

இதுபோன்றே குன்றிய வினை, குன்றாவினை என்னும் இலக்கணக் குறியீகள் தமிழ்-ஆங்கிலம் இரண்டு மொழியிலும் ஒரே தன்மையவாகக் காணப்படவில்லை. வினைப் பதிவு களில் இதனைத் தரவேண்டும் என்பது ஆங்கிலமொழியில் இன்றி யமையாத கூறு. தமிழில் இந்த இன்றியமையாமை இல்லை. எனினும் இருமொழி அகராதி தயாரிக்கும்போது பெறுமொழி ஆங்கிலமாதலின், அகராதியியலுக்கேற்ப இக்குறிப் பினைத் தரவேண்டிய அவசியம் நேர்கிறது. பெரும்பாலான பதிவுகளில் சிக்கல் நேருவதில்லை. சிற்சில பதிவுகள் இக்குறிப்பினைத் தருமளவுக்கு இணக்க மாக இல்லை.

மேலே கண்ட செய்திகள் தமிழ்-ஆங்கில அகராதிப்பதிவில் நேரும் சில மொழிபெயர்ப்புச் சிக்கல்களை விளக்குகின்றன. அகராதி யியல் முறையில் இதனைத் தீர்ப்பதற்கான வழி புலப்படவில்லை. இந்தச் சிறுச்சிக்கல்களால் அகராதிப் பணி நின்றுபோவதில்லை என்பது உண்மையேயாயினும் இவற்றைத் தீர்ப்பதற்கு அறிஞர்கள் முயல்வது அகராதித்துறைக்குச் செய்யும் சிறந்த தொண்டாகும் எனலாம். தமிழ் வினைகள் தனித்தன்மை உடையன வாயினும் பிற மொழியாளர்களின் பயன் பாட்டிற்காகச் சில பொதுமைக் கூறுகளை (ஆங்கில மொழிக்கு ஹார்ன்பி செய்ததுபோல) அமைத்துக் கொள்வது நல்லது. தமிழ் மொழியியலார் இதில் சற்று ஈடுபட்டு உதவினால் அகராதித்துறைக்குப் பேருதவியாக இருக்கும்.

இத்தகைய தலைச்சொல் பதிவுகளேயன்றி உள்பதிவுகள் சில வற்றிலும் மொழி பெயர்ப்புச் சிக்கல்கள் தோன்றுகின்றன. காட்டாக, மரபுத் தொடர்கள், பழமொழிகள் போன்றவற்றைக் கூறலாம். கருத்து வேறுபாடற்ற மொழிபெயர்ப்புகள் கிடைக்குமாயின் அகராதி தொகுப்போரின் பணி எளிமையும் முயற்சிச் சுருக்கமும் உடையதாக அமையும். மொழி பெயர்ப்புத்துறை இதனைச் செய்துதவலாம். இவ்வாறு மொழியியல் துறையும் மொழிபெயர்ப்புத்துறையும் மேற்கூறிய சிக்கல்களைக் களைந்து உதவினால் அகராதித்துறை தொகுப்புப் பணியையும் பதிவுப் பணியையும் செய்து உரிய காலத்தில் அகராதிப் பணியை முடிக்க வாய்ப்பாக இருக்கும். இவற்றை அகராதித் துறையே செய்ய முயலு மானால் காலவிரயமும் முயற்சிப் பெருக்கமும் ஏற்பட்டு வினை முற்றுவதில் தாமதமாகலாம். பணியின் தரமும் சுமாராகத்தான் இருக்கும். ஏனெனில் மொழியியற் புலமை, மொழிபெயர்ப்புப் புலமை, அகாரதி யியற் புலமை ஆகியனவெல்லாம் நிரம்பப் பெற்றவர்கள் அகராதித் துறைக்குக் கிடைப்பார்கள் என்பது எதிர்பார்க்க இயலாத ஒரு நடைமுறைச் சிக்கல் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். எனவே கூட்டுமுயற்சிக்கு வழிதேடுவோமானால் இச்சிக்கல்கள் மெள்ள மெள்ள அவிழலாம்.

**துணை நூல்கள் :**


1. ***தமிழ்ப் பேரகராதி***, சென்னைப் பல்கலைக்கழகம், 1936.
2. Fabricius, J.P. *Tamil and English Dictionary,* Tranquebar ELMP House, 1972
3. Ladislav Zgusta, *Manual of Lexicography,* Mouton, 1971.

# மானுடவியல் மொழிபெயர்ப்புச் சொற்களை அகரவரிசைப்படுத்தும்போது நேரும் சிக்கல்கள்

க.ப. அறவாணன்

ஒரு மொழியின் வாழ்வு அது மக்களுக்குப் பல முனைகளில் பயன்படுவதைப் பொறுத்தே அமையும். மொழியைக் கற்பதற்கும் மொழியி லுள்ள இலக்கியங்களைப் பயில் வதற்கும் பயன்படும் கருவிகளுள் எளிதானதும் இன்றியமையாததும் அகரமுதலி ஆகும். எனவே, அகர முதலி, மொழியின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக அமைந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் போன்ற வளரும் நாடுகளைச் சேர்ந்த மொழிகள் பல்வேறு புதுத்துறைகளில் வளர்ந்த மொழிகளைச் சார்ந்துதான் வளரவேண்டி இருக்கிறது; வளப்பத்தைப் பெருக்கிக் கொள்ளவும் வேண்டி இருக்கிறது. புதிய புதிய துறைகளைச் சார்ந்த புதுக் கண்டு பிடிப்புகளும் அவற்றுக்குரிய புதிய சொல்லாக்கங்களும் ஆங்கிலம், செர்மனி, பிரஞ்சு, சப்பானியம் முதலிய மொழிகளில், அன்றாடம் வழக்கிற்கு வந்துகொண்டே இருக்கின்றன. புதிய கருவிகளையும் புதிய பொருள் (subject) களையும் அவற்றிற்கு உரிய புதிய சொற்களையும் தமிழ் போன்ற மொழிகள் தழுவிக் கொள்ள வேண்டியது காலக்கட்டாயமாக அமைந்துள்ளது.

அயல்மொழிப் பொருளையோ கருவியையோ மக்கள் ஏற்கும்பொழுது அவற்றிற்குரிய சொல்லை ஏற்பது பற்றிய சிக்கல் உண்டாகிறது. இதனை இரண்டு வழிகளில் தீர்த்துக் கொள்ளலாம்.

1. அயல்மொழிச் சொல்லை அப்படியே ஏற்றுக்கொள்வது
2. அந்தந்த மொழிகளில் புதிய சொற்களைப் படைத்துக் கொள்ளுவது

வளராத மொழிகள் மூலச் சொற்களை அப்படியே ஏற்றுக் கொள்கின்றன. பிரஞ்சு முதலான வளர்ந்த மொழிகள் தத்தமக்குரிய புதிய சொற்களை அவ்வப்போது படைத்துக் கொள்ளுகின்றன. புதிதாகப் படைத்துக் கொள்ளுவதால் ஏற்படும் நன்மைகள்:

1. தத்தம் மொழிகளில் பழகிய மக்கள் தத்தம் மொழிகளில் புதுச்சொற்கள் அறிமுகம் ஆகின்ற பொழுது அவற்றை எளிதாக விளங்கிக் கொள்ள முடியும்

2. மொழி புதுப்புதுச் சொல்லாக்கங் களால் வளம் பெற்றுச் சொல் வளமை எய்தும்.

3. தத்தம் மொழிக்குரிய சொற்களைப் படைத்துக்கொள்வதன் மூலம் ஒரு மொழியும் மொழிக்கு உரியாரும் தத்தம் சொந்தக்காலில் நிற்கின்ற தன்னம்பிக்கையை, தன்மானத்தை, சார்பின்மையை எய்துவதில் பழக்கமாக முடியும்.

எனவே புதிய பொருள்கள் (subject) வருகிறபொழுது அவற்றுக் குரிய சொற்களைத் தமிழிலேயே ஆக்கிக் கொள்வதே விரும்பத்தக்கது. புதிய சொற்களைப் படைக்கிற பொழுது அவற்றை அவ்வப்பொழுது அகராதியில் ஏற்றுவது அவ்வக்கால அறிஞனின் கடமையாகிறது.

தமிழில் இது போன்ற முயற்சி எவ்வெவ்வாறு நடந்துள்ளது; அதன் கண் உள்ள சிக்கல்கள் எவை; அவற்றைத் தீர்ப்பது எவ்வாறு என்பவற்றை மானுடவியல் துறையை மையமாகக் கொண்டு சுருங்கிய அளவில் இக்கட்டுரை ஆராய்கிறது.

இவ்வாய்விற்கு மூன்று நூல்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டன. மிகயீல் நெசுதூர்க் எழுதி, சோவியத் நாட்டில் அச்சேற்றித் தமிழில் 1971-இல் வெளிவந்த 'மனித இனங்கள்' என்ற நூலில் கையாளப்பட்டுள்ள மானுடவியல் மொழிபெயர்ப்புக் கலைச் சொற்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டன (ப.216,217). அச் சொற்கள் டாக்டர் சு. சக்திவேல் வெளியிட்ட "மானுடவியல் கலைச் சொல் அகராதி"யிலும், டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் பதிப் பித்துச் சென்னைப் பல்கலைக் கழக வழி 1963-இல் வெளியிடப்பட்ட ஆங்கிலம்-தமிழ் சொற்களஞ்சியத்திலும் எவ்வாறு மொழி பெயர்க்கப்பட்டு அகர வரிசைப்படுத்தப்பட்டுள்ளன என்பதும் மொழிபெயர்ப்பிலும் அகர வரிசைப் படுத்தலிலும் நேர்ந்துள்ள சிக்கல்கள் எவை என்பதும் அறியப்பெற்று உரிய தீர்வுகளும் சுட்டப்படுகின்றன.

N - நெசுதூர்க்கின் - கலைச் சொல் வரிசை

A.C. - அ. சிதம்பரநாதச் செட்டியார் அகராதி

S - சக்திவேலுவின் மானுடவியல் கலைச்சொல்லகராதி மூன்றை-யும் ஒப்பிட்டதில் பின் வருவன தெளிவாயின:

1. மொழி ஆக்கம் செய்வதில் ஒருமைப்பாடு இல்லை. எனவே சொற்களைத் தமிழில் வரிசைப்படுத்துவதில் முரண்களும் குழப்பங்களும் நேர்ந்துள்ளன. சான்றாக Bio-Chemistry என்ற சொல்லை 'ஜீவரசாயனம்' என 'N' - மொழி பெயர்க்கிறார். A.C 'உயிர்வேதி இயல்' என்று மொழிபெயர்க்கிறார். அகர வரிசைப்படுத்தும் பொழுது இரண்டும் வேறு வேறு இடங்களில் இடம்பெற்றுப் பயன்படுத்து வோருக்குக் குழப்பத்தை ஏற்படுத்தும். Biology என்றும் (N & S) உயிர் நூல் என்றும் ( A.C) தமிழாக்கம் பெற்றுள்ளது. Logy

என்ற பின்னொட்டு தமிழில் 'இயல்' என்று மொழி பெயர்க்கப்படுவதில் ஒருமைப்பாடு இன்மையை இது காட்டுகிறது. Cranium என்ற சொல், கபாலம் என்றும் (N) மண்டை ஓடு, மூளை பொதிந்த குவளை (A.C) என்றும் தமிழாக்கம் பெறுகின்றன. Chauvinism என்ற சொல் இனவெறி (N) என்றும், குறுகிய வெறிகொண்ட நாட்டுப்பற்று என்றும் (C) பிறநாட்டுப் பழிப்பு (A.C) என்றும் தமிழாக்கம் பெறுகின்றன. Epich-antic fold என்ற சொல் இமை யோர மடிப்பு (N) என்றும் கண்ணிமையின் உட்புற மடிப்பு (S) என்றும் தமிழாக்கம் பெறுகின்றன. Fugenism என்ற சொல் இன மேம்பாடு இயல் என்றும் (N) இன ஆக்க மேம்பாட்டு இயல் என்றும் (AC) இனத் திருத்த இயல் (S) என்றும் தமிழாக்கம் பெற்றுள்ளன. (N). Genus என்ற சொல் சாதி என்றும் இனம் ஒன்றுக்கு ஒன்று நெருங்கியே தொடர்புடைய பல வகைகளுடைய முழுக்குழு, நிறைக் குழு என்றும் (AC) மொழியாக்கம் பெறுகின்றது.

Gene என்ற சொல், ஜீன் (N) என்றும் உயிர்மத்தின் இனமரபுக் கீற்று என்றும் (AC) நுண்ணுயிர் என்றும் (S) தமிழாக்கம் பெற்றுள்ளது.

Monogenesis என்ற சொல் ஒரு வழித் தோற்றக் கொள்கை (N) என்றும் பொதுப் பிறப்பு மரபு (AC) என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. Morphology என்ற சொல் உருவ அமைப்பியல் (N) என்றும் விலங்கு தாவர வடிவமைப்பியல் (AC) என்றும் உடல் அமைப்பு இயல் வெளித் தோற்ற உறுப்பியல் என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

Phylogeny என்ற சொல் இனக் குழுத்தோற்றம் (N) என்றும் விலங்கு அல்லது செடி வகையின் இன வரலாறு (AC) என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. Sphenoid என்ற சொல் ஆப்பு (N) என்றும் நெட்டுருளை என்றும் (AC) மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

"Prietal Bone என்ற சொல் உச்சிப் பொருத்து என்றும் (N) மண்டை ஓட்டின் உச்சிக்குப் பக்கங்களில் உள்ள எலும்பு இணைகள் (AC) என்றும் (N) மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

Tribe என்ற சொல் இனக்குழு (N) என்றும் குல மரபுக் குழு (AC) என்றும் பழங்குடி என்றும் (S) மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

மேலே கண்ட எடுத்துக்காட்டுச் சொற்களை ஆராய்ந்தால் ஓர் உண்மை தெளிவாகப் புலப்படும்.

மேற்கண்ட சொற்களைத் தமிழில் அகரவரிசைப்படுத்தும் போது ஒவ்வொருவரும் வேறு வேறு இடங்களில் அகர வரிசைப்படுத்தி இருப்பதை அறியலாம். ஒரே பொருளை உடைய சொல் வேறு வேறு இடங்களில் அகராதியில் இடம் பெறுகிறது. ஆங்கில வாசகனுக்கு

நேருகிற குழப்பம் தமிழ் வாசகனுக்கும் நேருகிறது. மொழி பெயர்ப்பில், தனியான, அனைவரும் ஒப்புக் கொள்ளும் பொது அமைப்பு இன்மையால் சொற் பயன்பாட்டிலும் குழப்பம் நேருகிறது.

2. ஆங்கில மூலச்சொற்கள் கலைச் சொல்லுக்குரிய சொற் செட்டுடன் சுருக்கமாக அமைந்துள்ளன. ஆனால் தமிழில் அமைந்துள்ள சொற்கள் பெரும்பாலும் தனிக் கலைச்சொல்லாக அமையாமல், சிறு தொடராகவும், சில சமயங்களில் நெடுந்தொடராகவும் அமைந் துள்ளன. சான்றாக Parietal என்ற சொல் உச்சிப்பிரிவு என்றும் (N) மண்டை ஓட்டின் உச்சிப்பக்கங்களின் எலும்பு (AC) என்றும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. Chauvanism என்ற சொல் இனவெறி (N) என்றும், குறுகிய வெறி கொண்ட நாட்டுப்பற்று (AC) என்றும் தமிழாக்கம் பெற்றுள்ளது. இம் மொழியாக்கங்கள் கலைச் சொல்லிற்குரிய சொற்செட்டைப் பெறாததோடு தமிழ் அகராதி களில் நெடுந்தொடர்களைக் கலைச்சொல் வரிசையில் இடம் பெறச் செய்வதில் துன்பத்தையும் தோற்றுவிக்கின்றன. சொற் செட்டோடு கூடிய கலைச் சொல்லாக அமையாமல் கலைச் சொற்கள் நீண்ட தொடராக விளக்கப்பட்டிருக்கும் சிறப் பின்மையை (AC) ஆங்கிலச் சொற்களஞ்சியத்தில் நிரம்பக் காணலாம். சொற்செட்டு முயற்சியைச் சக்திவேலுவின் மானிட வியல் அகராதியில் நிரம்பக் காணலாம்.

3. அனைத்துத் துறைகளிலும் முழுமையான பயன்பாட்டுக்கு வராமல் ஆங்கிலத்தைப் பெரும் பகுதி சார்ந்திருக்கும் தமிழ் போன்ற மொழியில் கலைச் சொற்களை, ஒருமைப் பாட்டுடன் பின்பற்றாத தமிழ் போன்ற மொழிகளில் தமிழ்ச் சொற்களை முன்னிறுத்தி அகர வரிசைப்படுத்தும் போது சிக்கல் நேருகிறது. ஆங்கில வழி பயின்றவன் ஆங்கிலத்தை முன்னிறுத்தி அகர வரிசைச் சொற்கள் அமையாமையால் ஒரு சொல்லுக்கு உரிய மொழி பெயர்ப்பைக் கண்டறிவதில் துன்பம் நேருகிறது. இத்துன்பம் சோவியத் நூலிலும் சக்திவேலுவின் கலைச்சொல் அகராதியிலும் முன்னிற்கிறது. இதனைத் தவிர்க்க நூலின் பின்னிணைவாக ஆங்கிலம்-தமிழ் என்ற வரிசையையும் கொடுத்துவிடுதலே வாசகன் பார்வையில் எளிதாக இருக்கும்.

4. ஒரு பொருள் (Subject) பற்றிய அகரமுதலி உருவாக்கப்படும் போது அப்பொருளில் உட் பிரிவுகளை யெல்லாம் பாகுபடுத்தி அந்தந்த உட்பிரிவுகளுக்கு உரிய அகர வரிசையைத் தனித்தனியாக அமைக்கும்பொழுது வாசகனுக்குத் துன்பம் உண்டாகின்றது. சான்றாக மானிடவியல் கலைச் சொல் அகராதி என்ற தலைப்பில் அமைந்த நூல் ஒருபொதுப் பொருள் பற்றிய அகரவரிசையில் அமையாமல் 1. தோற்றமானு டவியல் 2. சமூக மானிடவியல், 3. மானுட உடல்சார்ந்த அளவை, 4.

மொழியியல், 5. புறப்பொருளியல் 6. வரலாற்றுப் பழங்காலம், 7. ஆதிமதவியல், 8. மனிதச் சூழ்நிலை இயல், 9. உளவியல், 10. புள்ளிவிவர இயல் எனப் பத்து உட்பிரிவாக, ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனி அகரவரிசை பின்பற்றப்படுவதால் ஒரு சொல்லுக்குரிய தமிழாக்கத்தைப் பார்க்க விரும்பும் வாசகன் பத்துத் தலைப்புகளையும் தொடவேண்டியுள்ளது. இதனைத் தவிர்க்க வேண்டும் என்றால் உட்பிரிவு அடிப்படையில் அகர வரிசைப்படுத்தாமல் அனைத்தையும் ஒன்று சேர்த்து அகராதியை அமைத்தலே வாசகன் பார்வையில் மிகு பயன் தருவது. வேண்டுமானால் நூலின் பின் இணைப்பாக உட்பிரிவு, அடிப் படையில் மூலச்சொற்கள் மட்டும் அகர வரிசைப் படுத்தி அமைக்கலாம்.

5. ஆங்கில மொழியில் இருந்து தமிழாக்கம் செய்து அகரவரிசைப் படுத்தும்போது சில சிக்கல் எழுகிறது. சில சொற்களுக்கு ஆங்கிலத்தில் வேறுவேறு காலத்தில் வேறு வேறு எழுத்துக்கள் கையாளப் பட்டுள்ளன. சான்றாகச் சூழ்நிலை இயல் என்ற இயலுக்குரிய ஆங்கிலச் சொல் Ecology இக் காலத்தில் வழங்குகிறது. முன்பு Occology என்று இச்சொல் வழங்கி உள்ளது. சோவியத் அறிஞர் O வில் தொடங்கும் சொல்லை O வில் அகரவரிசைப்படுத்த AC 'E' இல் தொடங்கும் சொல்லை E வரிசையில் அகர வரிசைப் படுத்தி உள்ளார். ஆங்கில வாசகனுக்கு அல்லது ஆங்கிலம் அறிந்த தமிழ் வாசகனுக்கு இது குழப்பம் ஏற்படுத்தும் என்பது தெளிவு. இது போன்ற சொற்களை ஆங்கிலத்தை முன்னிறுத்தித் தமிழில் அகரவரிசைப் படுத்தும் போது இரண்டு இடத்திலும் ('O' வரிசையிலும் 'E' வரிசையிலும்) கொடுத்துவிடுதல் (Cross Reference) நல்லது.

இமையோர மடிப்பு என்ற பொருளைத் தரும் மானிடவியல் மூலச்சொல்லுக்கு இரண்டு வகை எழுத்து, வரிசைகள் அமைந்து குழப்பத்தை அளிக்கின்றன. சோவியத் அறிஞர் 'Epichantic fold' என்ற சொல்லையும் சக்திவேலு Epicanthic fold என்ற சொல்லையும் தொகுத்துள்ளார். ஒரே சொல்லுக்கு இரண்டு எழுத்து வரிசைகள் உள்ளமையால் இது போன்ற சொற்களையும் இரண்டு வரிசையிலும் (Cross Reference) கொடுத்துவிடுதல் நல்லது.

**ஆய்வுத்துணை நூல்**


1. சக்திவேல், டாக்டர். சு. **மானிடவியல் கலைச் சொல் அகராதி**, மணிவாசகர் நூலகம், சிதம்பரம் (ஆண்டுக்குறிப்பு இல்லை)

2. சிதம்பரநாதச் செட்டியார், டாக்டர். அ. **ஆங்கிலத் தமிழ்ச் சொற்களஞ்சியம்**. சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.5, 1963.

3. மிகயீல் நெசுதூர்க், **மனித இனங்கள்,** மீர் பதிப்பகம், சோவியத் நாடு, மாசுகோ, 1981.

4. ஜெயதேவ், சீஜே; இரகுபதி. மு, **பழங்காலப் பண்பாடும் பழங்குடிகள் பண்பாடும்,** தமிழ் நாடு அரசாங்கம், 1962.

தமிழ்க் கலை
தமிழ் 7 கலை 1, 2

# அகராதி ஆக்கப்பணியில் கணிப்பொறி

கா.செ. செல்லமுத்து

**முன்னுரை:** பதினேழாம் நூற்றாண்டில் தொழிற்புரட்சி தொடங்கியதன் பலனாகப் பற்பல பயன்மிகு கருவிகள் தொழிலகங்களில் புகுத்தப்பட்டன. பொருட்களை உருவாக்கவும் புதிய கருவிகளைப் படைக்கவும் பயன் படுத்தப்பட்ட இயந்திரங்கள் இன்று நமது வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் நிறைந்து பரவிப் புழக்கத்திலுள்ளன. தொழில் மற்றும் இயந்திரப் புரட்சி மட்டுமின்றி இன்றைய உலகம் செய்திக் குவியல் களின் அடிப்படையில் உருவான அறிவுப் புரட்சியிலும் பெரும்பங்கு வகிப்பதை இன்று நாம் காண்கிறோம். தொழிற்புரட்சியில் தோன்றிய பல கருவிகளில் மனிதனின் உள அறிவிற்கும் செயற்பாட்டிற்கும் ஒரு மாற்றாய் அமைந்த கருவி கணிப்பொறியாகும். கல்வி, ஆராய்ச்சி, தொழில், விண்வெளிப்பயணம், மருத்துவம், பொறியியல் போன்ற எண்ணற்ற துறைகளில் கணிப் பொறியின் சேவை அளவிடற்கரியது. அதே போன்று மொழியாய்வு - மொழியமைப்பு, இலக்கண இலக்கி யங்கள், மொழிபெயர்ப்பு போன்ற வற்றில் - கணிப்பொறியைப் பயன் படுத்துவதால் விளையும் பயன்கள் பலப்பல.

கணிப்பொறி தானாகச் சிந்தித்துச் செயல்படும் ஆற்றலற்றது; ஆனால் உரிய முறையில் கட்டளை யிடப்படும்பொழுது மிகப் பெரும் பணியைக்கூடச் சில விநாடிகளில் மிகவும் துல்லியமாகச் செய்து முடிக்கும் ஆற்றல் வாய்க்கப் பெற்றது. கணிப்பொறியின் வியத்தகு இவ் வாற்றலை மொழியில் மேற்கொள்ளப் படும் பல ஆய்வுத் திட்டங்களுக்குத் தக்கவாறு பயன்படுத்துதல் இயலும். இதனடிப்படையிலேயே தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஒரு சிறிய கணிப் பொறி நிறுவப்பட்டுக் கடந்த ஈராண்டு களுக்கு மேலாகப் பல மொழியாய்வுப் பணித் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. கணிப்பொறி வழி மொழியாய்வுத் திட்டங்களைப் பற்றிச் சுருக்கமாகவும், அகராதிப்பணியில் கணிப்பொறியைப் பயன்படுத்தும் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய முறைமை, அகராதிப் பணியில் கணிப் பொறியைப் பயன்படுத்தும் பொழுது எழும் சிக்கல்கள், அவற்றைத் தீர்க்கும் வழி போன்றவற்றைப் பற்றி விளக்க மாகவும் விவரித்தும் கூறுதலே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**கணிப்பொறி வழி மொழியாய்வுத் திட்டங்கள்:** கணிப்பொறியைத் தமிழ்

மொழியாய்விற்குப் பயன்படுத்தும் நோக்கமாகக் கீழ்க்கண்ட சில பணித்திட்டங்கள் கணிப்பு மையத்தில் மேற்கொள்ளப்பட்டு, செயற்படுத்தப் பட்டுள்ளன. அவைகளாவன:

1. **ஊர்நிலைச் செய்தி ஆய்வு**: மொழி, கிராமியக் கலைகள், கிராமப் பொருளாதாரம், உறவுமுறை, கோயில்கள் போன்றவற்றை ஆய்வு செய்யும் முகமாக இத்திட்டம் தஞ்சை மற்றும் கோவை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுக் கணிப்பொறி வழி செய்திகள் ஆய்வு செய்யப்பட்டன.

2. **தானியங்கி மொழிபெயர்ப்பு**: இஃது உருசிய மொழியிலிருந்து அறிவியல் கருத்துக்களைக் கணிப்பொறி வழி தமிழ் மொழிக்கு மொழி பெயர்ப் பதற்கான ஓர் ஆய்வுத் திட்டமாகும். இவ்வாய்வுத் திட்டத்தின் முதற்கட்டம் சிறப்பாக முடிக்கப்பெற்ற பின்னர், இரண்டாம் கட்டப்பணி தொடங்கப் பட்டுள்ளது.

3. **அறிவியல் கலைச்சொல் வங்கி**: சோதனை அடிப்படையில் இயற்பியல், கணிதம் மற்றும் இரசாயனப் பாடங்களுக்குத் தேவையான நூல் களைத் தமிழில் எழுதும்பொழுது கலைச்சொல் மிகவும் இன்றியமை யாதது எனவே கலைச்சொல் இல்லாக் குறையை நீக்கும் பொருட்டுக் கணிப்பொறியில் மாதிரிக்காக ஒரு கலைச்சொல் வங்கி உருவாக்கப் பட்டது. இதன் மூலம் கேள்வி, (Query) முறையில் கேட்கப்படும் ஒரு சொல் அல்லது சொல்தொகைகளுக்கு (word groups) நேரான சரியான தமிழ்ச் சொல் வழங்கப்படுகிறது. இம் முறையிலமைந்த அகராதி, தாய் மொழியில் நூல் எழுத விழையும் அறிவியலாளர்க்குத் தேவையான சொற்களுக்குரிய மொழி பெயர்ப்பை உடனுக்குடன் வழங்குவதால் அவர் களுக்கு மிகவும் பயன்படுகிறது.

4. **மொழிகளில் இலக்கணப் பாங்கை ஆய்தல்**: ஒரே மொழிக் குடும்பங் களிலுள்ள மொழிகளுக்கிடையே இலக்கண அமைப்பில் குறிப்பிடத் தக்கவாறு ஒற்றுமை இருப்பதையும் அதே சமயத்தில் வேற்று மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளுக் கிடையே இலக்கண அமைப்பில் பல வேறுபாடுகள் இருப்பதையும் உணரலாம். குறிப்பிட்ட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகளுக் கிடையே இலக்கணப் பாங்கு, மொழிவழக்கு, மொழியியல் அடிப் படையில் சில கருத்துக்கள் போன்ற வற்றைக் கணிப்பொறி வழி சிறப்பாகக் கண்டறியலாம்.

5. **இலக்கியங்களுக்குச் சொல்லடைவு**: இலக்கியங்களைக் கணிப்பொறி வழி ஆய்வு செய்யும்பொழுது ஆய்வாளர் களின் ஏராளமான நேரத்தை மீதப்படுத்துவதுடன் பெரிதும் பயன் படும் வகையில் சொல்லடைவு போன்ற பணிகளை மிகவும் துல்லியமாகக் கணிப்பொறி மூலம் செய்து முடிக்க இயலும். மேலும் சில குறிப்பிட்ட ஆய்வுப் பணிகளில் புதிய கருத்துக் களைக் கண்டறிய அளவிறந்த செய்திகளை உரையாகவோ பாடல் களாகவோ (Dating and authorship estimation) படித்து, சொல், எழுத்து போன்றவற்றை மிகச் சிறப்பாகப் பகுத்தாய்வு செய்யக் கணிப்பொறியால் முடியும். ஆனால் மனித முயற்சியால் இப்பணி செய்யப்பெறின் பல ஆண்டுகள் ஆவதுடன் பணியை

முடிக்க இயலாமற்கூடப் போகலாம். திருக்குறள் முழுவதும் கணிப்பொறியால் ஆய்வு செய்யப்பட்டுச் சொல்லடைவு, சொல், எழுத்துக்களின் நிகழ்வெண்ணிக்கை, யாப்பிலக்கணப் பாங்கு போன்றவை கண்டறியப் பட்டுள்ளன.

**6. கணிப்பொறி வழி உரைநடையாய்வு:** இப்பணித் திட்டத்தின்கீழ் நாள் தோறும் வெளிவரும் செய்தித் தாள்களின் உரைநடைப் போக்குக் கணிப்பொறிக்கு ஊட்டப்பெற்று மொழிநடை இலக்கணம், மொழியியல் கூறுகள், சொல் மற்றும் எழுத்துக் களின் நிகழ்வெண்ணிக்கை போன்ற வற்றைக் காணமுடிகிறது. இவை அச்சுத் தொழில் புரிவோர், மொழி யியல் வல்லுநர் மற்றும் செய்தி சேகரிப்போர் போன்றவர்களுக்குப் பேருதவியாக அமையும் எனலாம்.

மேற்கண்ட மொழியாய்வுத் திட்டங்கள் மற்றும் வேறுசில திட்டங்களைச் செயற்படுத்தியதன் அடிப்படையில் அகராதித் தொகுப்பு, சொற்களைச் செம்மையாக்கல், அகர நிரலமைவு போன்ற பணிகளில் கணிப்பொறி பெரும் பங்காற்ற இயலும் எனத் துணிந்து கூறலாம். இவை கீழ்க்கண்டவாறு விவரிக்கப் பட்டுள்ளன.

**அகராதியில் சொல்:** ஒரு மொழியின் இருபெறும் கூறுகளாக அமைவன சொற்றொடர் இலக்கணம் (Syntax)மற்றும் அதன் பொருண்மையாகும் (semantics ). ஒரு மொழியில் கையாளப்படும் உரைகள், வாக்கியங்கள் முதலியன எண்ணற்றவை எனலாம். தக்க சொற்களைக் கொண்டு பொருள் பொதிந்த சீரிய இலக்கணப் பாங்கில் கட்டப்படுவதே ஒரு வாக்கியமாகும். ஒரு மொழியின் அமைப்பைக் கட்டுப்படுத்தும் கருவியாக இலக்கணம் அமைகிற தென்றால் கருத்துக்களைச் சுமந்து மொழிக்கு உயிரூற்றாய் விளங்குவன பொருளைத் தரும் சொற்களெனில் மிகையன்று. சொற்றொடர் இலக்கணம் (Syntax) மற்றும் பொருண்மையைக் கொண்டு (semantics) ஒரு மொழி எங்ஙனம் அமைகிறது என்பதைக் கீழ்க்காணும் படம் மூலம் விளக்கலாம்.




படம்_1

**அகராதிகளின் வகைகள்:** அகராதியைப் பற்றி ஆராயும்பொழுது அதன், தன்மை, பயன்பாடு, அமைப்பு, மொழி ஆகியன கொண்டு அகராதிகளைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடலாம்.

**1. ஒரு மொழி அகராதி ( Monolingual Dictionary):** ஒரு மொழியில் அமைந்த பற்பல சொற்களுக்குப் பகுத்தமைந்த நிலையில் பொருள் விளக்கம், மற்றும் இலக்கணக் குறிப்புகளைக் கொண்டமைவன ஒரு மொழி அகராதிகளாகும்.

**2. இரு மொழி அகராதி ( Bilingual Dictionary) :** இவ்வகை அகராதிகள் ஒரு மொழியில் (Source language ) அமைந்த சொற்களுக்கு இலக்கு மொழியில் (Target Language) பொருள் தருதல்; மற்றும் அதன்

இலக்கணப் பாங்கு முதலியவற்றை உணர்த்துதல் போன்ற அமைப்பைப் பெற்றமைகின்றன. இவ்வகை அகராதிகள் மொழி கற்போர், மொழிபெயர்ப்போர் போன்றவர் களுக்குப் பெரிதும் பயனளிக்கின்றன. தமிழ்-ஆங்கிலம், ஆங்கிலம்-பிரஞ்சு முதலிய அகராதிகளை இதற்குரிய எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

3. **பன்மொழி அகராதிகள் (Multilingual Dictionaries)**

4. **வேற்று மொழியில் அறிவியல் கலைச்சொல்லகராதிகள்:** இவ்வகை அகராதிகள் தாய்மொழியில் அறிவியல் கட்டுரைகள் மற்றும் அறிவியல் நூல்களை உருவாக்க முனைவோர், தாய்மொழியில் அறிவியல் பாடங் களைப் புகட்ட விழைவோர் ஆகியோருக்குப் பேருதவியாய் அமையு மெனலாம். அடிப்படை அறிவியல் களான இயற்பியல், கணிதம், வேதியல், விலங்கியல், தாவரவியல் போன்ற துறைகளின் ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தமிழ்க் கலைச் சொற் களமைந்த அகராதிகளை இவ்வகைக்கு எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம்.

5. **தானியங்கி மொழிபெயர்ப்பிற்குரிய கணிப்பொறி அகராதிகள்:** ஒரு மொழியிலிருந்து வேறொரு மொழிக்கோ, பல மொழிகளுக்கோ கணிப்பொறி வழி மொழிபெயர்ப்புச் செய்யும்பொழுதும் இவ்வகை அகராதி கள் பெரிதும் பயன்படுகின்றன. வழக்கமாகப் பயன்படுத்தப்படும் அகராதிகளிலிருந்து இவை முற்றிலும் வேறுபட்ட நிலையில் உருவாக்கப் பெறும். ஏனெனில் இவை மொழிபெயர்ப்பின் தேவைக்கேற்பக் கணிப்பொறியால் புரிந்து கொள்ளப் பட்டு செயற்படுதலுக்கேற்ற இலக்கணம் மற்றும் பல இதரக் குறிப்புகளையும் கொண்டு அமைதல் மிகவும் இன்றியமையாததாகும். உலகெங்கணும் மேற்கொண்ட தானியங்கி மொழி பெயர்ப்பு முயற்சிகளுக்கேற்ப இவ்விதமான பல அகராதிகள் உருவாக்கப்பட்டுக் கணிப் பொறிகளில் பயன்படுத்தப்பட்டன. தானியங்கி மொழி பெயர்ப்பின் குறிப்பிட்ட பயன், மற்றும் அதில் பெரும் அகராதிகளைக் கொண்டு செயற்படுத்தலில் உள்ள சிக்கல்களைத் தீர்க்கும் நோக்கத்தில் துறைசார்ந்த கணிப்பொறி அகராதிகளும் (product oriented dictionaries) உருவாக்கப் பட்டுள்ளன.

கணிப்பொறிமூலம் அகராதிப் பணியைச் செயற்படுத்தும் முறையில் அமைந்துள்ள பயன்கள் மற்றும் அதன் சிக்கல்களைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு காணலாம்.

**அகராதிப்பணியில் - கணிப்பொறி ஒரு 'வரலாறு':** கணிப்பொறியின் வேகம் மிகவும் மகத்தானது. ஓரிரு நிமிடங்களில் பல்லாயிரம் சொற்களைப் படித்தறியவும் எழுதவும் புரிந்து கொள்ளவும் ஆற்றல் வாய்ந்த ஒரு கருவி கணிப்பொறியாகும். சொற்களைத் தக்கவாறு தெரிந் தெடுத்தல், அவற்றை அகர வரிசைப் படுத்துதல் போன்றவற்றில் வேகம் மட்டுமின்றி மிகுந்த துல்லியமும் பெற்றுச் செயற்படுவது கணிப் பொறியாகும். செய்திகளைச் சேகரித்தல், தொகுத்தல், பகுத்தல், ஆய்தல், அகர வரிசைப்படுத்துதல் போன்றவற்றில் கணிப்பொறியைப் பயன்படுத்துவதால் ஆய்வாளர்களின்

ஏராளமான நேரம் மிச்சப்படுத்தப் படுகிறது. இதனடிப்படையில் உலகின் ஆய்வு நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் அகராதிப் பணியில் கணிப்பொறியைப் பயன் படுத்திப் பெரும் வெற்றியைக் கண்டுள்ளன.

இரண்டாம் தலைமுறையைச் சார்ந்த கணிப்பொறிகள் மற்றும் செய்திப் பதிப்பறை (Unit Record Room) எனப்படும் வசதிகளைக் கொண்டு செய்திகள் 1955_65 களில் தொகுக்கப்பட்டன. துளை செய்யப் பட்ட அட்டைகள் மற்றும் துளை நாடாக்கள் அகராதிச் செய்திகளைப் பெருமளவில பதிவு செய்யப் பயன் படுத்தப்பட்டன. ஐரோப்பிய மொழிகளான உருசியன், பிரஞ்சு, செர்மன் மற்றும் ஆங்கில மொழி களுக்கான அகராதிப் பணிகளுக்கு மேற்கண்ட முறை பயன்படுத்தப் பட்டது. செய்திப் பதிப்பறைக் கருவிகளைக் கொண்டு சொற்களைப் பகுத்தல், நிரலாக்கல் மற்றும் அச்சிடுதல், திருத்தம் செய்தல் போன்ற பணிகள் சிறப்பாகச் செய்யப்பட்டன. 1970_இல் செர்மனியிலுள்ள சீமன்ஸ் (Siemens) என்ற நிறுவனம் தானியங்கி அகராதி தொகுக்கும் (Automatic Dictionary Compilation)பணியாக முதன் முதலாகக் கணிப்பொறியைப் பயன் படுத்தி ஒரு திட்டத்தைச் செயற் படுத்தியது. மிகவும் புகழ்வாய்ந்த ஆக்சுபோர்டு ஆங்கில அகராதியைத் தொகுக்கவும் திருத்தவும் கணிப்பொறி பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் (A Dictionary of the Older Scottish Tongue (DOST) என்ற அகராதிப்பணியில் 2000 இலட்சங்களுக்கும் மேலான சொற்க ளமைந்த உரைகளைப் படித்தறிந்து சொல் விளக்கங்களும் குறிப்புகளும் திரட்ட வேண்டியிருந்தது. இவை யன்றிப் பல்லாயிரம் தொகுதி களடங்கிய தேவை நோக்கீட்டு நூல்களைப் (Reference Books) படித்தறிந்து சொற்களைத் திருத்தம் செய்யவும் வேண்டியிருந்தது. இவற்றிற்குக் கணிப்பொறி தொகுத்தல் மற்றும் பிரித்து வகைப்படுத்தல் மற்றும் அகர நிரலாக்கல் போன்ற பணிகளில் பேருதவி செய்துள்ளது. இவையன்றிச் செருசலேமில் உரு வாக்கப்பட்ட ஈப்ரு மொழியில் அமைந்த அகராதிப் பணிக்கும் 1968_இல் கேம்பிரிட்க பல்கலைக் கழகத்தில் தொடங்கப்பட்ட அரபியச் சொல் அகர வரிசைப்படுத்தும் பணியிலும் கணிப்பொறி பயன் படுத்தப்பட்டு அகராதித் திட்டப் பணிகள் சிறப்பாக நடந்தேறியுள்ளன.

இவை போன்று உலகின் பல்வேறு ஆய்வு நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களிலும் 1960_இல் இருந்து மொழிபெயர்க்கும் பணிச் செனக் கணிப்பொறியைப் பயன் படுத்தப் பல ஆய்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆங்கிலம், உருசியன், பிரஞ்சு, செர்மன் மொழி களுக்கிடையே மொழி பெயர்க்கத் தானியங்கி மொழி பெயர்ப்புத் திட்டங்கள் பல செயற்படுத்தப் பட்டுள்ளன. SYSTRAN, CULT, GETA, LOGOS _ போன்ற அமைப்புக்களை இதற்கு எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம். தானியங்கி மொழி பெயர்ப்பிற்குச் செர்மனியில் கணிப்பொறி வழியாக செர்மன் - ஆங்கிலம் - உருசியன் அகராதி ஒன்று உருவாக்கப்பட்டது. இவ்வாய்வுத் திட்டங்களில் பயன்படுத்தப்பட்ட அகராதிகள் பொறிவழி மொழி

பெயர்ப்பிற்கேற்ப இலக்கணம் மற்றும் சொல்லுக்கேற்ற இலக்குமொழி (Target Language) மாற்றுச் சொல் போன்றவற்றைக் கொண்டமைந் திருந்தன. நடைமுறை அகராதிகளை விட அமைப்பிலும் பயன்பாட்டிலும் இவை வேறுபட்டிருப்பினும் கணிப் பொறி வழி, பெரும் அகராதிப் பணிகளை மிகவும் திறம்படச் செய்து முடிக்க இயலும் என்பதற்குப் பெருஞ்சான்றுகளாய் விளங்கின.

**தமிழகராதிப் பணியில் கணிப்பொறி:** பொதுவாக அகராதியில உள்ள ஒரு சொல்லை எடுத்துக்கொண்டால் அது கீழ்க்கண்ட தன்மைகளைப் பெற் றிருத்தல் இன்றியமையாததாகும்.

அ. சொல்லுக்கேற்ற உரிய விளக்கம்

ஆ. சொல்லின் வரையறுப்பு (Definition)

இ. சொற்றொடர் இலக்கணப் பாங்கு (Syntax)

ஈ. மொழியியல் அமைப்பும் ஒலிப்பும்

உ. மேற்கோள்கள்

ஊ. பயன்பாட்டமைப்பு

கணிப்பொறி வழி அகராதிப் பணியைச் செய்யும் திட்டத்தைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

1. சொல் தொகுப்பு - விளக்கம், சொற்றொடர் இலக்கணம், வரையறுப்பு.

2. இடுவரல் (input)

3. கணிப்பொறிவழித் தொகுப்பு - பகுப்பாய்வு, அகரநிரலாக்கல் முதலியன.

4. திருத்தம் (updating)

5. விடுவரல் (output)

எண் (1)-இல் கண்ட பணி அகராதிக்கலை வல்லுநர்களால் மிகுந்த கவனமும் முயற்சியும் கொண்டு செய்யப்பட வேண்டிய பணியாகும். பெரும்பாலும் சொற்கள் அட்டைகளில் எழுதித் தொகுக்கப் படுகின்றன. தேவையான விளக்கங்களும் சொல் வரையறுப்பும் வழங்கவேண்டியது முதல், மொழிப் பாங்கிற்கேற்பச் சொற்களைத் தொகுத்தளித்தல் வரை அகராதித் தொகுப்புப் பணியிலீடுபட்டிருப்பவர் களின் கடமையாகும். மேற்கண்டவாறு தொகுக்கப்பட்ட சொற்களைக் கணிப்பொறிவழி பகுத்தமைக்கும் முன்பு அவற்றை இடுவரல் (input) கருவிகளின் மூலம் கணிப்பொறியின் பதிவகத்தில் பதிவு செய்வதற்கேற்ப இடுவரல் (input) செய்தல் அவசிய மாகும். முன்னர் அட்டைத்துளைப் பொறி அல்லது நூதுளைத்தாள்நாடாப் பொறிகளின் துணைகொண்டு இப்பணி செயற்படுத்தப்பட்டது. தற்காலத்தில் கிடைக்கக் கூடிய நான்காம் காலக்கட்டக் கணிப்பொறி களில் தட்டச்சுப் பலகை போன்ற அமைப்பையும் மின்னணுத் திரை யையும் (Video screen) கொண்ட காட்சித்திரைகள் இடுவரல் பணிக்குப் பெரிதும் உதவுகின்றன. இந்திய மொழி களுக்கேற்ற வரிவடிவங்கள் கொண்ட இவ்வமைப்பு தற்பொழுது உருவாக்கப் பட்டு வருகிறது. எனவே தமிழ் அல்லது இந்திய மொழியில்

அமைந்துள்ள சொற்றொகுப்பைத் தட்டச்சுப் பலகை மூலம் தட்டச்சு செய்து கணிப்பொறியில் பதிவு செய்யத்தக்க வசதிகள் இக்காலத்தில் கிடைக்கின்றன.

தற்காலத்தில் நுண்ணியச்கிகள் (Micro Processors) எனப்படும் உறுப்பைக் கொண்டு உருவாக்கப்படும் கணிப்பொறிகள் மிகவும் திறனும் செயலாற்றலும் வாய்க்கப் பெற்றவை களாகும். அகராதியைப் பதிவுசெய்ய வேண்டுமெனில் அதிக அளவில் துணை நினைவகங்கள் (Auxiliary Memory) தேவைப்படும். மேற்கண்ட கணிப்பொறிகளில் கூட அகராதிக் கலைப் பணியைச் செயற்படுத்துதல் இயலும்; ஏனெனில் சுமார் 10,000 இலட்சம் குறிகளைப் பதிவுசெய்யும் கொள்ளளவு வாய்க்கப் பெற்றவை இக்கணிப் பொறிகளாகும். கணிப் பொறி வழி அகராதித் திட்டத்தின் செயற்பாட்டமைப்பு பீடம் 2-இல் காட்டப்பட்டுள்ளது.

தக்க வழியமைப்புகளை (Programs) வடிவமைப்பதன் மூலம் கணிப்பொறியில் பதிவு செய்யப் பட்டுள்ள முறையற்ற (Random) சொற்களான செய்தியைப் பகுத்தல், அகரவரிசைப் படுத்தல். சொல்லிலுள்ள எழுத்துப் பிழை மற்றும் இதரப் பிழைகளைத் திருத்துதல் போன்ற பணிகளைச் சிறப்பாகச் செய்யலாம். இம்முறையில் தேவைப்படும்போது புதிய சொற்களைச் சேர்க்கவும் தேவையற்ற சொற்களைத் தக்கவாறு மாற்றவும் அல்லது முழுதும் நீக்கவும் மிகவும் வசதியேற்பட்டுள்ளது.

கணிப்பொறியில் பதிவு செய்யப் பட்டுத் தொகுத்துப் பகுத்த பின்னர் அகரவரிசைப்படுத்திய சொற்கள் விடுவரல் (Output) கருவிகளான அச்சுப்பொறி (printer) அல்லது மின்னணுத் தட்டச்சுக் கருவிகள் மூலம் விடுவரலாகப் (output) பெறப்படுகின்றன. இடுவரல் கருவியைப் போன்றே ஆங்கிலம் தவிர மற்ற மொழிகளிலமைந்த அகராதியை உரிய மொழிகளில் பெற அம்மொழிகளுக் கேற்ற எழுத்துக்களடங்கிய அமைப்பை உருவாக்குதல் அவசியமாகிறது.

**கணிப்பொறி வழி அகராதித் திட்டத்தின் பயன்கள்:**

- புதிய சொற்கள் மற்றும் வேறுமொழியிலமைந்த சொற்களைச் சேர்த்தல் மிகவும் எளிது. வழக்கமான அகராதிப் பணியில் இது மிகவும் கடினமாகும்.
- காலத்தின் தேவைக்கேற்பப் புதிய செய்திகளைக் கணிப்பொறிப் பதிவிலிருந்து பெறல் இயலும்.
- இம்முறைமூலம் பல்வேறு மொழிகளுக்கிடையே அமைந்த தொழில்நுட்ப அகராதிகளை உருவாக்குதல் சாத்தியமாகிறது.
- தேவையான சொற்களைப் பெறுதல் மற்றும் திருத்தங்களைச் செய்தல் மிகவும் சுலபம்.
- தேவையானபொழுது அச்சடிக்கப் பட்ட அகராதிப் படிகளைப் பெற முடியும்.
- இவ்வகை அகராதிகள் மொழி பெயர்ப்பாளர்களாலும் பயன் படுத்தப்படுவதால் அகராதிக்




படம் - 2

கணிப்பொறி வழி அகராதி செயற்பாட்டுத்திட்டம்

கலைஞர்கள் மட்டுமின்றி மொழி பெயர்ப்பாளர்களாலும் சொற்கள் திருத்தம் செய்யப்பட்டு அகராதி செம்மைபெற வாய்ப்பேற்படுகிறது.

கணிப்பொறியால் படித்தறியும் விதத்தில் இவ்வகை அகராதிகள் அமைவதால் அகரவரிசைப் படுத்துதல் மிகவும் விரைவாகவும் எளிதாகவும் செய்து முடிக்கப் பெறுகிறது.

மொழியைக் கற்பவர்க்கு மிகவும் பயனுள்ள கருவியாக இவ்வகையில் செயற்படுத்தப்பட்ட அகராதிகள் அமைகின்றன.

மனித உழைப்பால் பல வருடங்கள் தொகுத்தும் பகுத்தும் வகைப் படுத்தியும் வந்த பணி கணிப்பொறி மூலம் மிகவும் விரைவில் செய்து முடிக்கப்பெறுவதால் மிகுந்த பொருட்செலவு தவிர்க்கப்படுவதுடன் காலமும் மிச்சப்படுகிறது.

- சொற்களின் அமைப்பு முறையை ஆய்தல், தாய்மொழியில் குறிப்பாகத் தொழில் நுட்பத் துறையில் புதிய சொற்களை உருவாக்குதல் போன்றவற்றிற்கு இவ்வகை அகராதிகள் பெரிதும் துணை நிற்கின்றன.

- தானியங்கி மொழிபெயர்ப்பு மற்றும் மொழியியல் ஆய்விற்கு இவ்வகை அகராதிகள் பெரிதும் உதவுகின்றன.

**கணிப்பொறி வழி அகராதியின் வரம்பு:** முன்பே கூறியவண்ணம் கணிப்பொறி தானாகச் சிந்தித்துச் செயற்படும் திறன் அற்றது. ஆகையால் சொற்களைத் தொகுத்தல், விளக்க மெழுதுதல், சொற்றொடர் இலக்கணம் வகுத்தல், பயன்பாட்டு நடை மற்றும் வரையறுப்புப் போன்றவற்றை அகராதிக்கலை வல்லுநர்கள் மட்டுமே செய்தல் இயலும். இவை போன்ற திட்டங்களில் கருவியைப் பயன்படுத்த ஏற்ற பணி நிலைகளான (project work stage) அகரவரிசைப் படுத்தல், பகுத்தும் தொகுத்தும் வகைப்படுத்தல், திருத்தம் செய்தல் போன்றவற்றில் மனித உழைப்பைச் செலவு செய்தல் அவசியமில்லை. அறிவாக்கப் பணிகள் (Creative Process) தவிர மற்ற பணிகளைக் கணிப் பொறியின் துணை கொண்டு மிகவும் சிறப்பாகவும், செம்மையாகவும் செயற்படுத்துதல் இயலும்.

**முடிவுரை:** இன்றைய உலகில் மொழி ஆய்வில் கணிப்பொறி எண்ணற்ற பல பணிகளைச் செய்து வருகிறது. பொதுவாக அகராதிப் பணி மனித உழைப்பில் வழக்கமான முறையில் செய்யப்பெறுதலால் பல ஆண்டுக் காலம் செலவாகும். இந் நிலையைத் தவிர்க்கவும் குறிப்பிட்ட காலத்திற்குள் அகராதித் திட்டத்தைச் சிறப்பாகச் செய்து முடிக்கவும் காலத்தின் தேவைக்கேற்பப் பயழ பயன்பாட்டின் அவசியம் கருதிப் புதிய தொரு செயல்முறையைப் பின்பற்றுதல் மிகவும் இன்றியமையாதது. இவற்றினடிப்படையில் தக்கதொரு அமைப்பைக் கணிப்பொறியில் உருவாக்கி அகராதித் திட்டப் பணியை மிகவும் திறம்படச் செய்து முடிக்கவும் பயன்படுத்தவும் இயலும்.

## துணை நூல்கள்


கா.செ.செல்லமுத்து, கணிப்பொறி ஒருங்கும் பேசிக் மொழியும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், தமிழ்நாடு.

K.C.Chellamuthu, K.Rangan and K.Murugesan (Dec. 1984) Tamil University Machine Translation System (TUMTS) Thanjavur, Tamil University.

Walter Sedelow, A. and Sally Yeates Sedelow. (1979) Trends in Linguistics Studies and Monographs 5- Computers in Language Research, Germany : Mouton publisher.

Wisbey, R.A. (ed), (1971), The Computer in Literary and Linguistic Research London: Cambridge University.

National Technical Information Service (NTIS) (1964 May, 1981) Machine Translation - Citations from NTIS data base USA: NTIS.

Mathias, J. (ed) (1978). Computer Suppcrt to Translation - Proceedings of FBIS Seminar, May 1978, USA: Foreign Broadcast Information Service.

National Technical Information Service (NTIS), (1977). Machine-Assisted Translation in West Germany, USA: NTIS.

தமிழ்க் கலை
தமிழ் 7, கலை 1,2

# தமிழக வரலாற்று உருவாக்கம் - சில சிந்தனைகள்

கு. வெ. பாலசுப்பிரமணியன்

தமிழனுக்கு எல்லாம் உண்டு, வரலாறு மட்டும் இல்லை என்று வேடிக்கையாகக் கூறப் படுவதுண்டு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கிய இலக்கண நூல்களைப் பெற்றிருக்கும் ஒரு மொழியில் காலக்கோவையோடு கூடிய ஒரு வரலாறு இல்லை. ஆனால் "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்த குடி" என்று உணர்ச்சி நிலையிற் கூறப்பெற்ற இலக்கிய மொழிகளுக்கும் வரலாற் றிற்கும் வேறுபாடறியாமல் பழமை பேசிப் பெருமையுற்றிருந்த கால நிலையில் ஐரோப்பிய அறிஞர்கள் தென்னிந்திய மக்கள் வரலாற்றையும் திராவிட மொழிகளின் வரலாற் றையும் ஆராய்ந்து பல உண்மைகளை எடுத்துக் கூறினர். வின்செண்ட் ஸ்மித் தென்னாட்டின் வரலாறு அதற்குரிய முழுமையான நிலையில் எழுதப்படாத குறையை எடுத்து மொழியும் வரை யாராலும் அஃது உணரப்படவில்லை. வட இந்தியாவின் பிராகூய் மொழிக்கும் தென்திராவிட மொழிகளுக்கும் அமைந்த உறவுநிலை குறித்து அறிஞர் கால்டுவெல் செய்துள்ள ஆராய்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். ஈராசுப் பாதிரியாரும் சர் ஜான் மார்ஷலும் திராவிட இன வரலாற்றுக்குரிய அடித்தளங்களைக் காட்டியவர்கள் என்பதில் ஐயமில்லை. அறிவு, ஆராய்ச்சி என்ற வகையில் தொடர்ந்து மிக ஆழமாகவும் அகலமாகவும் சென்றிருக்க வேண்டிய அவ்வின வரலாற்று ஆய்வு வெறும் உணர்ச்சி நிலையில் குறுகிய வட்டத்தைத் தமிழக வரலாற்று உருவாக்கத்தை மேற்கொண் டிருப்போர் சிந்திக்க வேண்டும். வெள்ளையராட்சி நம்மை அடிமைப் படுத்தி உரிமையற்றவராய் ஆக்கி யிருந்தது எனினும், அக்கால அரசு முயற்சியில் உருவான கல்வெட்டுத் தொகுதிகளையும் நில இயல் அகராதிகளையும் (Gazetteers) கையேடு களையும் (Manuals) நாம் இன்றும் போற்றிப் பாதுகாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரை இவற்றில் பல மறு அச்சைச் சந்திக்காமல் இருக்கின்றன என்பது அரசு சிந்தித்தற்குரிய ஒன்றாகும். ஹீல்ஷ், சீவெல் போன்றோரின் பணியை இந்திய வரலாறு எழுதும் எவரும் மறந்துவிட முடியாது. ஆயினும் எச். எம். இலியட் என்ற ஆங்கில

வரலாற்றாசிரியர் இந்தியக் குடிமக்கள் மென்மையும் நடுவ நிலைமையும் உடைய பிரிட்டிஷ் ஆட்சியில் எண்ணற்ற நன்மைகள் அடைந்திருப்பதை உணர்ந்திருக் கின்றனர்" என்று கூறும் வகையில் வரலாறு அவர்களுக்குச் சார்பாக எழுதப் பெற்றதையும் மறுப்பதற் கில்லை. இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றையே அவர்கள் மக்கள் இயக்கச் செயலாகக் காட்டவில்லை என்பதும் கருதுதற்குரியது.

**எது வரலாறு**

"மன்னர்களின் பிறந்த இறந்த ஆண்டுகளை நினைவில் வைத்திருப் பதை வரலாற்றாசிரியனின் கடமை என்றால் நான் வரலாற்றாசிரியன் இல்லை"

என்று கூறுவார் ஜவஹர்லால் நேரு.

"முன்போல் இன்றும் வரலாற்று நூல்களில் அரச பரம்பரைகளும் அவைகளுக்குள் ஏற்பட்ட போராட்டங்களும் மிக விரிவாக எடுத்துக் கூறப்படுகின்றன. ஆயினும் அம்மட்டிலும் வரலாறு அடங்கி விடாது. உற்று நோக்கினால் வரலாற்றில் அடங்கும் விஷயங் களுக்கு எல்லையே இல்லை. மனிதர்கள் செய்து வந்த ஒவ்வொரு செயலும், மனத்தால் கருதிய ஒவ்வொரு எண்ணமும் கூட நாம் அவற்றைச் சரிவர தெரிந்து கொள்வதற்கு வேண்டிய ஆதாரங்கள் இருந்தால் வரலாற் றிற்கு ஏற்ற பகுதியாக அமைக்க முடியும். அரசியல் திட்டங்களும் கோட்பாடுகளும் மதக்கொள்கை களும் வேதாந்த சித்தாந்தங் களும், விவசாயம், கைத்தொழில் வாணிகம் முதலியவைகளும் மனிதர்களுடைய ஊண், உடை, நடத்தை, விளையாட்டு முறைகள் முதலியவை எல்லாம் வரலாற்றில் அடங்கும். ஆனால் வரலாற் றாசிரியன் கூறும் ஒவ்வொரு விஷயத்திற்கும் அவன் கையாளும் அந்தந்தக் காலத்து மூலங்களில் தகுந்த ஆதாரமிருக்க வேண்டும்"

என்று வரலாற்றாசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி கூறுவர்.

இந்த அடிப்படையில் தமிழக வரலாறு அரச, சமுதாய, நாகரிக, பொருளாதார, பண்பாட்டு வரலாறாக உருவாக்கப்பட வேண்டும். இரண் டாயிரம் ஆண்டுக்கால இலக் கியங்கள், குகைக் கல்வெட்டுக்கள், கோயிற்சாசனங்கள், பழமையான நாணயங்கள், நடுகற்கள், ஈமப்புதை குழிகள், முதுமக்கள்தாழிகள், கட்டட எச்சங்கள் ஆகியன தமிழகத்தின் வரலாற்றில் ஒளிக்கதிர் வீசும் வைரமணிகள். இலக்கியங்கள் கூறும் செய்திகளைப் பிற சான்றாதாரங்கள் கொண்டு உறுதி செய்துகொள்ளுதல் மிக இன்றி யமையாததாகும். அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப் பெற்ற புகழூர்க் கல்வெட்டு பதிற்றுப்பத்துக் கூறும் சேர அரசவழியைக் குறிக்கும் ஒரு வரலாற்று மூலமாகத் திகழ்கிறது. அதியமான் பெருவழியும் காவதங்குறிக்கும் சாலைக்கற்களும் புறநானூற்றுப் பாடற் பகுதிகளுக்குரிய பின்னணியைத் தெளிவுபடுத்தும் அரிய வரலாற்று மூலங்களாகும். இத்தகைய சான்றுகள் பலவற்றைக் கொண்டு சங்க இலக்கியத்தில் கூறப்பெறும் வரலாற்று நிகழ்ச்சிகளை

மீட்டுருவாக்கம் செய்து காண வாய்ப்பிருக்கிறது.

**தமிழக வரலாற்று உருவாக்கம் இதுவரை:** தமிழர்கள் பின்வரும் தலைமுறையினர்க்குத் தம் காலத்திற்கு முன் நிலவிய வரலாற்று எச்சங்களைப் பேணிப் பாதுகாத்து வைக்கும் உணர்ச்சி அற்றவராய் இருந்தனர் என்பது வெளிப்படை. இதிகாசம், புராணம், இலக்கியம் நாட்டுப்புறக் கதை ஆகிய இவை ஒவ்வொன்றும் கூட்டுக்கலவை நிலையிலிருந்து தத்தமக்கு உரிய எல்லையில் பிரிந்து வழங்கும் நிலையைப் பிறமாநிலங்கள் தமிழகத்திற்கு முன்பே பெற்று விட்டன. பாணகவியின் ஹர்ஷ சரிதம், பில்ஹணரின் விக்கிரமாங்க தேவ சரிதம், பம்பனின் பாரதம், ரன்னனின் கதாயுத்தம், கல்ஹணரின் ராஜதரங்கிணி ஆகிவற்றை எல்லாம் முழுவரலாற்றுத் தன்மை உடையன என்று ஒப்புக்கொள்ள இயலாவிடினும் அவற்றிலுள்ள வரலாற்றுத் தன்மைகளைப் புறக்கணிக்க இயலாது. ஆனால் தமிழில் பழமைமிக்க சங்க இலக்கியங்களில் கற்பனை கலவாத தன்மை நவிற்சியில் வரலாற்றுச் செய்திகளைப் பரணர், மாமூலனார், நக்கீரர் ஆகிய புலவர்கள் பாடியுள்ளனர். ஆனால் இவர்கள் தரும் செய்திகளைக் கோவைப்படுத்திக் கொள்ள இயலவில்லை. கலிங்கத்துப் பரணியில் இராச பாரம்பரியம் ஒருவகையான வரலாற்று முயற்சியே எனினும் இலக்கியம் என்ற நிலையில் இவ்வரலாற்றுப் பகுதி புராணக் கூறுகளோடு கலந்த நிலையில் பாடப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் 1895-ஆம் ஆண்டு அளவில் அறிஞர் கனகசபைப்பிள்ளை ஆங்கிலத்தில் எழுதிய **ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்** என்னும் நூல் தமிழக வரலாற்று உருவாக்க முயற்சியில் ஒரு சிறந்த படைப்பு ஆகும். எனினும், இந்நூல் பெரும்பாலும் இலக்கிய ஆதாரங்களின் அடிப்படையிலேயே எழுதப் பட்டது என்பதனை எண்ணுதல் வேண்டும். 1924-இல் சத்தியநாதய்யர் அவர்களாலும் கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களாலும் **மதுரை வரலாறு** எழுதப் பெற்றிருக்கிறது. இத்தமிழ்ப் பெருநகரின் ஆட்சி வரலாறு எழுதப்படுவதற்குப் பல்லாண்டுகள் முன்னரே மௌரிய, குப்த, ஹர்ஷ, சுல்தானிய, மொகலாய, பிரிட்டிஷ் வரலாறுகள் உருவாகத் தொடங்கிவிட்டன. கி.பி. 1900 அளவிலேயே இராபர்ட் சீவெல் அவர்களால் விஜயநகரப் பேரரசின் வரலாறு வெளிக் கொணரப் பட்டிருக்கிறது. விஜயநகரப் பேரரசின் வரலாறு மதுரை நாயக்கர் வரலாற்றையும் தெளிவு படுத்தியது. 1917-இல் கே. வி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் எழுதிய **பழந் தக்காண வரலாற்று வரைவுகள்** தென்னகத்தைப் பற்றிய ஓர் அரிய வரலாற்று முயற்சியாகும். எனினும் தொடக்கம் முதலான தமிழக வரலாறு உருவாக்கம் 1929 வரையில் விரிவாக எழுதும் முயற்சி இல்லை. 1929-இல் வெளிவந்த அறிஞர் பி. டி. சீனிவாச ஐயங்காரின் கி. பி. 600 வரையிலான **தமிழர் வரலாறு** என்னும் ஆங்கில நூல் மிகக் குறிப்பிடத்தக்க ஒரு சாதனையாகும். இன்றுவரை தமிழக வரலாற்று மற்றும் இலக்கிய ஆராய்ச்சி

யாளர்களில் பலரும் இந்நூலை மேற்கோள் காட்டாமல் செல்வ தில்லை. இந்நூலில் பிறநாட்டுத் தொடர்புகள், வணிக முயற்சிகள், பழக்க வழக்கங்கள் ஆகியனவும் தரப்பட்டுள்ளன. 1929_ஆம் ஆண்டி லேயே நீலகண்ட சாஸ்திரியார் எழுதிய கி. பி. 16_ஆம் நூற்றாண்டு வரையிலான **பாண்டியர் வரலாறு** வெளிவந்தது. இந்நூலில் இவர் பாண்டியர் வரலாற்றை ஒரு தொடர்ச்சியான அறிவியல் நெறியில் இதுகாறும் யாரும் எழுதவில்லை எனக் குறிக்கின்றார். 1930_இல் வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர் ஆங்கிலத்தில் எழுதிய **தமிழ் இலக்கிய வரலாற்றில் சில பார்வைகள்** என்ற நூலில் பண்டைக்கால நீதி, ஆட்சி, போர் முறை, திருமணம், சிற்றூர் வாழ்க்கை, இசை, நாட்டியம் பற்றிய இலக்கிய அடிப்படையிலான செய்திகள் தரப்படுகின்றன. 1935 - இல் நீலகண்ட சாஸ்திரியார் சோழர் வரலாற்றை எழுதியுள்ளார். இந் நூலின் பல வடிவுகளை அரிய கல்வெட்டுச் செய்திகள் கொண்டும் இலக்கியப் பகுதிகள் கொண்டும் சதாசிவப் பண்டாரத்தார் மாற்றி யமைத்துப் பிற்காலச் சோழர் வரலாறு என்ற நூலின் பகுதிகளை வெளியிட்டுள்ளார். இவையன்றித் தமிழகத்தில் **பல்லவர் வரலாறு,** ஆட்சி பற்றிய கோபாலன், மீனாட்சி ஆகியோரின் நூல்களும் 1937_இல் கே. ஜி. சேஷய்யர் எழுதிய **சங்க காலச் சேரர்** பற்றிய நூலும் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியின் **தென்னிந்திய வரலாறும்** குறிப்பிடத் தக்க வரலாற்று நூல்களாகும். தென்னிந்திய, தமிழக வரலாற்று உருவாக்கத்தில் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி அவர்கள் உழைப்பை எவரும் மறுக்க முடியாது.

வரலாற்று வரைவியலில் சமூகவியலுக்கு இன்றியமையாத இடமுண்டு. அறிஞர் டாயின்பி ஒவ்வொரு நாகரிகமும் மனிதன் தன் சூழ்நிலையின் அறைகூவலுக்குப் பதிலாகச் செய்யும் முயற்சியின் பயனாக ஏற்படுகிறது என்றும் ஒவ்வொரு நாகரிகத்தின் சிறப்பியல் பண்புகளும் அந்தச் சூழ்நிலை வேற்றுமையால் ஏற்படுவன என்றும் இம்மாதிரி நாகரிகங்கள் இருபதுக்கும் மேற்பட்டன என்றும் கூறுகிறார். ஆகவே, ஒரு சமூகத்தின் நாகரிக வரலாறு நாட்டு வரலாற்றின் இன்றியமையாத பகுதியாகும். அரச வரலாறு, ஆட்சியியல் வரலாறு, நாகரிக வரலாறு, பொருளியல் வரலாறு என்ற பல கூறுகளையும் கால வரன்முறையில் நாட்டு வரலாற்றுக்குள் அடங்குமாறு எழுதுதல் இன்றைய தேவையாகும். கே. வி. சுப்பிரமணிய ஐயர், சிவராஜபிள்ளை, வி.ஆர்.இராமச்சந்திர தீட்சிதர், பி. டி. சீனிவாச ஐயங்கார், கே.கே.பிள்ளை, மயிலை சீனி.வேங்கடசாமி, டி.வி. மகா லிங்கம், சதாசிவப் பண்டாரத்தார், மா.இராசமாணிக்கனார், தேவநேயப் பாவாணர், நா. சுப்பிரமணியன், க. த. திருநாவுக்கரசு ஆகியோர் இத்துறையில் ஈடுபட்டு முன்னோடி களாகக் கொள்ளத்தகும் நூல்களை இயற்றியுள்ளனர். இவர்களின் நூல்கள் தமிழக வரலாற்று உருவாக்கத்திற்குப் பெரிதும் துணை புரியக்கூடியன.

**தமிழக வரலாற்று உருவாக்கம் இனிச் செய்ய வேண்டியன:** 1970_ஆம்

ஆண்டில் அன்றைய தமிழக அரசின் ஆர்வ அடிப்படையில் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் பேராசிரியர் மு. வரதராசன் அவர்கள் தலைமையில் தமிழ் நாட்டின் வரலாற்றை ஆறு தொகுதிகளாக வெளியிடத் திட்ட மிட்டது. ஐந்து ஆண்டுகளுக்குப் பின் 248 பக்க அளவில் முதற்பகுதி தொல் பழங்காலம் என்ற காலப் பகுதியைக் குறித்த வரலாறாக வெளியிடப் பெற்றது. இந்நூல் வெளியீட்டிற்கு எடுத்துக் கொண்ட காலம் மிகவும் அதிகமானது என்பதில் ஐயமில்லை. அதற்குப் பின் நீண்ட காலம் கழித்து 1983-இல் மாற்றியமைக்கப் பெற்ற வரலாற்றுக் குழுவினர் 1134 பக்கங்கள் கொண்ட இரு பகுதிகளில் **சங்க காலம் அரசியல், சங்க காலம் வாழ்வியல்** என்ற நூல்களை வெளியிட்டுள்ளனர். 2381 சங்கப் பாடல்களும் பல்வேறு கல்வெட்டு களும் செப்பேடுகளும் அகழ்வுகளும் நூல் ஆராய்ச்சிகளும் கிடைக்கின்ற காலச்சூழலில் அவற்றை அடிப்படையாகக் கொண்டு சங்க கால வரலாறு இன்னும் பெரிய அளவில் எழுதப்பட்டிருக்க வேண்டும். அகப் பாடல்களிலும் புறப் பாடல்களிலும் வழங்கும் வரலாற்றுச் செய்திகள் அனைத்தும் தொகுக்கப் பட்டிருக்க வேண்டும். பாரதிய வித்யா பவனத்தினர் இந்திய மக்களின் வரலாறும் நாகரிகமும் என்னும் தலைப்பில் 1951-இல் தொடங்கி 1969-இல் ஒன்பது தொகுதிகளாகப் பதிப்பித்துள்ள நூல் வரிசையினைத் தமிழக அரசின் முயற்சியோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகப்பெரிய வேறு பாடு தெரியவே செய்கிறது. ஆர். சி. மஜும்தார் அவர்களைத் தலைவராகக் கொண்டு வேதகாலம் தொடங்கி விடுதலைக் காலம் வரையிலான இந்திய வரலாற்றை இந்திய தேசிய உணர்ச்சியோடும் நடுவுநிலை வரலாற்றுப் பார்வையோடும் படைத் தளித்திருப்பதில் அறிஞர் கே. எம். முன்ஷியின் பங்களிப்பு விழுமியதாகும். இராமகிருஷ்ண மடத்தின் பண்பாட்டு வரலாற்றுத் தொகுதிகளும் இவற்றோடு சேர்த்து எண்ணத்தக்கன. அறிஞர் முன்ஷி தம் வரலாற்று நூல் வரிசையின் முதற்பகுதி முன்னுரையில் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"என்னுடைய படிப்பின் தொடர்ச்சி யில் இந்திய வரலாறு முழுமை யோடு எழுதப்படாததையும் அதன் நீண்டகாலத் தேவை யையும் உணர்ந்தேன். இந்தி யாவின் இறந்த காலத்தை அதன் புதல்வர்கள் எடுத்து விளக்குவது மட்டுமின்றி அதன் ஆன்மாவை இந்தியர்கள் காணுமாறு வெளிநாட்டவரும் காணவேண்டும் என்ற வேட்கை யில் ஒரு விரிவான வரலாறு எழுத நான் பல ஆண்டுகளாகத் திட்டமிட்டேன். வரலாறு என்பது ஒரு நாட்டில் வாழும் மக்களின் கதை. அது காலந்தோறும் மக்கள் வாழ்ந்த வாழ்வையும் அவர்களின் மரபு களைத் தெளியக் காட்டும் சாதனைகளையும் குறித்ததாகும். நிலத்தின் புற அமைப்பு, பொருளாதார நிலை, அரசியல் மாற்றம், சமூக நிறுவனம், இலக்கிய, கலை குறித்த செயல்கள், மக்கள் கூட்டத்தின் சிந்தனையின் அடிப்படையிலான செயற்பாடுகள், மக்கள் ஒத்துக்

கொள்கின்ற அல்லது மறுக்கின்ற சமூகத் தகவுகள் ஆகியன எல்லாம் வரலாற்றின் உள்ளே அடங்கும். ஆகவே, வரலாறு என்பதன் இன்றியமையா நோக்கமே ஒரு நாட்டில் வாழும் மக்கள் காலந்தோறும் கொண்டிருந்த சமூக மதிப்புகளை வெளிக் கொணர்வதும் அவர்களின் பலதரச் செயற்பாடுகளின் வழியே அவர்களின் ஒருமித்த உள்ளப் பாங்கை எடுத்துரைப்பதும் ஆகும். அத்தகைய இந்திய வரலாறு இனிமேல்தான் எழுதப் பட வேண்டும்.

இந்த வகையில் தமிழக வரலாறும் இடைவெளி அற்றதாக ஒரு முழுமையான கோவை முயற்சியாக அமைதல் வேண்டும். ஆனால் இதுகாறும் வந்துள்ள நூல்கள் நமக்குக் கட்டுரைத் தொகுப்புகளாகவே காணக் கிடக்கின்றன. தமிழக வரலாற்றில் தொல் பழங்காலத்திற்கும் சங்க காலத்திற்கும் இடையிலான ஓர் இன்றி யமையாத காலப்பகுதியை மீட்டுரு வாக்க முயற்சியில் இந்நூல்கள் பெரிய அளவில் சிந்திக்கவில்லை. இந்தக் காலப்பகுதியில் ஏற்பட்ட இரு பெரு நாகரிகங்களின் தோற்றம், வளர்ச்சி, வேறுபாடு, கலப்பு, போராட்டம் ஆகியன குறித்து மிக விரிவாக ஆராயப்பட்டிருக்க வேண்டும். தொல்காப்பியப் பொருளதி காரமும் சங்கப் பாடல்கள் பலவும் பழைய இனக்குழு மக்களின் வாழ்க்கைக் கூறுகளை எடுத்துக் காட்டுகின்ற நிலையை இந்நூல் களில் விரிவாகச் சிந்தித் திருக்கலாம் இந்நூல்கள் இதற்குமுன் வெளிவந்த பல கட்டுரைகளின், பல நூல்களின் சாரத்தைத் தொகுத்துக் கூறும் அளவில் பெரும்பாலும் அமைந்திருக்கின்றன. தொல்காப்பியம் கூறும் செய்திகளையும் அறுநூறு ஆண்டுகாலச் சங்க இலக்கியம் கூறும் செய்திகளையும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டினவாகிய திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகியன கூறும் செய்திகளையும் வேறுபாடு இல்லாத ஒரே நாகரிகச் சமுதாய வரம்பிற்குள் அடைத்து அவற்றின் பொழிப்புரை போலச் செய்திகளைத் தருதல் ஒரு நூலின் வரலாற்றுக் கண்ணோட்டத்திற்கு உரியது இல்லை என்பதை எண்ணல் வேண்டும். இனக்குழு மக்களின் திரட்சியிலிருந்து பிரித்தறிய முடியாத வாழ்க்கையினை உடைய மன்னனையும் செல்வ உயர்ச்சியால் குடி மக்களிடமிருந்து பிரித்தறியப்பட்ட வேந்தனையும் சங்ககால முற்பகுதி வரலாறு காட்டுகின்றது. மன்னனை ஏற்கும் இனக்குழுவினர் வேந்தனை ஏற்கவில்லை. இந்நிலையில் இவ்விரு அரச மரபுகளின் தோற்றம், வளர்ச்சி ஆகியன குறித்தெல்லாம் அறிஞர் எண்ணுதல் வேண்டும். அறிஞர் குழு ஆறு தொகுதிகள் எனச் சுருக்கிக் கொள்ளாது மேலும் பல தொகுதிகளாக அடுத்துவரும் காலப் பகுதிகளைக் குறித்து விரிவாக எழுதுதல் வேண்டும்.